தெய்வயானையம்மை
திருமணப்படலம்

— உரையுடன் —



ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர்

விலை ரூபாய் 1 4 0

பிரகடனபத்திரம்

கந்தபுராணம் செய்யுள்—(2 - பாகங்கள்) **விலை ரூ. 8.**

சிவபுராணங்களிற் சிறந்தது. இன்சுவை அளிப்பது. பக்தியை விளைவிப்பது தினந்தோறும் பாராயணத்திற் குரியது. இந்நூலை ஒருவர் முறையாகப் படித்தால் எல்லா விஷயங்களையும் அறிந்த பண்டிதராவர். இது முதன்முதல் நாவலரால் அச்சிடப்பட்டது.

கந்தபுராண வசனம் **விலை ரூ. 5.**

இதன் ஒரு சிறு பகுதியே நாவலரால் எழுதப்பட்டது. மற்றப் பகுதிகளெல்லாம் அவர் மாணவர்வழி வந்தவர்களால் பூர்த்திசெய்யப்பட்டன.

பெரியபுராண சூசனம் **விலை ரூ. 0 12.**

பெரிய புராணத்திலுள்ள சாத்திரக் கருத்துகளை விளக்குவது. இது முடிவுபெறுமற்போனது வருந்தத்தக்கதே.

பெரியபுராண வசனம் **விலை ரூ. 2 12.**

இவ்வசனம்தான் முதலில் உண்டாயது. தமிழ் வசன நடைக்கு இது வழிகாட்டியாயுள்ளது. இலங்கையிலுள்ள தமிழ்ப் பாட்சாலைகளில் பாடபுத்தகங்களுள் ஒன்றாக நிலவுவது. பின்னல் பலவசனம் வந்தும் இதற்குள்ள மதிப்பு அலாதியானது.

திருவிளையாடற்புராண வசனம் **விலை ரூ. 2.**

வசன நடையில் சிறந்தது. திருவாலவா யுடையாரின் 64 - திருவிளையாடல்களையும் கூறுவது.

சேதுபுராணம் **விலை ரூ. 2.**

இராமேசுவரத்தின் மகிமையைக் கூறுவது. நிரம்பவழகிய முனிவர் பாடியது. சைவசித்தாந்தக் கருத்துகளை உடையது; பண்டிதர்களுக்கு உற்றது. இராமநாதபுர சமஸ்தான அதிபராயிருந்த பொன்னுச்சாமி தேவர் வேண்டியபடி நாவலர் அச்சிட்டது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.

உ

சிவமயம்.

தெய்வயானையம்மை திருமணப்படலம்

(கந்தபுராணம்)

உரையுடன்.

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத்

தருமபரிபாலகர்

ச. பொன்னுஸ்வாமி அவர்களால்

சென்னை:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிடப்பட்டது.

மன்மத, ஆவணி.
ஆகஸ்டு, 1955.

விலை ரூபாய் 1 4 0.

வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலைத் தெரு, சென்னை.

பதிப்புரை

மூவிருமுகங்கள்போற்றி முகம்பொழிகருணைபோற்றி
ஏவரும்துதிக்கநின்ற இராறுதோள்போற்றிகாஞ்சி
மாவடிவைகுஞ்செவ்வேள் மலரடிபோற்றியன்னான்
சேவலுமயிலும்போற்றி திருக்கைவேல்போற்றிபோற்றி.

சிவபுராணங்களுள் தமிழிற் சிறந்தவை சிவபிரானது முக்கண்ணாகத் துலங்கும் பெரிய புராணம், கந்த புராணம், திருவிளையாடற் புராணம் என்பவையாம். இம்மூன்றனுள் மிகவும் பரந்து பெருங்காப்பியக்கடலாய் நிலவுவது தமிழ்க் கந்தபுராணமே. இதன் செய்யுட்கள் 10000 - க்கு மேலனவாம். இது பொருளாலும் அகலத்தாலும் தமிழ் நூல்களிற் சிறந்தது பெருங்காப்பிய இலக்கணங்கள் உவமாலங்காரங்கள் பொருந்தியது. அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கையும் விளக்கி அவற்றை அடையும் வழியையும் சாதனத்தையும் காட்டுவது. பெரிய புராணத்தைப்போல சிவபிரானது திருவருட்சிறப்பையும் சிவனடியாரது திருவருட் சிறப்பையும் சிவனடியாரது அன்புத்திறத்தையும் கூறுவது. தேவாரம், திருவாசகம்போல் பக்தி விளைவிக்கும் தோத்திரப்பாக்கள் நிரம்பப்பெற்றது. திருக்கோவையார்போல பொருளிலக்கணத்திற்கு இலக்கியமாக ஆன்ம ஈடேற்றமுறையை ஒருங்கே கூறுவது. சாத்திர நூலாகிய சிவஞானசித்தியாரைப்போல் சைவசமய உண்மையை நாட்டிப் புறச்சமயங்களைக் கண்டிப்பது. ஆயினும் சிவோபாசனையின் பெருமையையும் சிவநிந்தையின் கொடுமையையும் உயிர்கள் முத்தி அடையும் முறைமையையும் விளக்குதலே நோக்கமாகக்கொண்டது.

இத்தகையச் சிறந்த தமிழ்ப்புராணம் திருக்கலியாணப் படலம், தெய்வயானையம்மை திருமணப்படலம், திருமணப்

படலம், வள்ளியம்மை திருமணப்படலம் என்னும் நான்கு மணப்படலங்களை முதலிலும் இடையிலும் கடையிலும் கொண்டிருப்பது மங்களகரத்தைப் போற்றியதெனலாம். கந்தசட்டி விரதமுடிவில் வள்ளியம்மை திருமணப்படலத்தை எல்லோரும் படனஞ்செய்வது தொன்றுதொட்டுள வழக்கம். தெய்வயானையம்மையாரும் வள்ளியம்மையாரைப் போல் பிறிதோர்சத்தி (கிரியா) யாதலால் அவரது திருமணப்படலமும் படனத்துக்கு உரியதே. அதுவும் 268 விருத்தங்களைக்கொண்டு மற்றையதைப்போல் சிறப்புள்ளதைப் படித்தறியலாம். இத்திருமணப்படலத்திற்கும் யாழ்ப்பாணத்து வல்லுவெட்டித்துறை ச. வயித்தியலிங்க பிள்ளை விரிவுரை எழுதியுளார். அது பல ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் சைவாபிமானிப் பத்திராதிபர் பொ. ஞானசபாபதிப்பிள்ளையால் அச்சிடப்பட்டது. அப்பிரதிகள் இப்போது கிடைப்பது அருமையானதால் உரை நூலை மறையாதபடி காப்பாற்றவேண்டுமென்னும் ஆசையே அதனை இப்போது அச்சிடச்செய்தது. இதை நாவலர் அச்சுக்கூடப்பிரசுரமாக ஏற்று உதவிபுரிந்த சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகராகத்திகழும் எனது நண்பர் ச. பொன்னுஸ்வாமி அவர்களுக்கு மிகவும் கடப்பாடுடையேன். குகதாசர்கள் அச்சிவதொண்டரை வாழ்த்தி இந்நூலை வாசித்துப் பலன் அடைவார்களாக.

கையிலார் கைகள்பெற்றும் காலிலார் கால்கள்பெற்றும்
மொய்யிலார் மொய்கள்பெற்றும் மூங்கைகள் மொழியைப்பெற்றும்
மையல்சேர் குருடரானோர் வாள்விழி பெற்றுஞ்சென்றார்
ஐயன்மேனுள்ளம் வைத்தார்க்கு அனையதே அரிதுமாதோ.

திருமயிலை,
மன்மத
ஆவணிமூலம்.

சே. வெ. ஜம்புலிங்கம்.

நூலாசிரியர் சரித்திரக் குறிப்பு.

கந்தபுராணத் தமிழாசிரியராகிய **கச்சியப்பசிவாசாரியர்** காஞ்சிபுரத்தில் ஆதிசைவகுலத்தில் 800 ஆண்டுகளுக்குமுன் விளங்கியவரென்ப. இவர் வடமொழி தென்மொழி ஆகிய இருமொழியுங் கற்றுச் சிறந்தவர். வேத சிவாகமங்கள் சமயசாத்திரங்கள் இலக்கண இலக்கியங்கள் திரிபற உணர்ந்தவர். இவருடைய பாடல்கள் இனிமை பயப்பன. குமரவேள் அருள்பெற்றவராதலால் இவரது புராணத்தைக் கிரமமாக அன்போடு படிப்பவர் கேட்பவர் குமாரக்கடவுளின் பத்தியும், விரும்பிய வரசித்தியும் பரமுத்தியும் பெறுவரென்பது உண்மை. இவரது சரித்திர விரிவை கந்தபுராணத்தில் (நாவலர் பதிப்பு) காணலாம்.

கந்தபுராணம் முதலில் அச்சிடப்பட்டது **ஆறுமுக நாவலரவர்களாலேதான்.** அது நிகழ்ந்தது 1869 - ம் ஆண்டில். 10,346 பாடல்களை ஏட்டுச் சுவடியிலிருந்து எடுத்துச் சரிப்படுத்தி வசதி சிறிதும் இல்லாத 90 ஆண்டுகளுக்கு முன் நாவலர் தனிமையாகப் பிரசுரித்தது முருகப்பெருமான் திருவருளாலேயாம். இக்காலத்தில் புராணங்களைச் சிலர் புறக்கணிக்கின்றனர். புராணத்தைப்பற்றி நாவலர் கூறியிருப்பதை அவர்கள் சிந்திப்பார்களாக :—

"பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது. உலகத்தினது தோற்றமும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளுமாகிய இவ்வைந்தையுங் கூறுதலால் புராணம் பஞ்சலக்கணம் எனவும் பெயர் பெறும். இதிகாசமும் புராணத்துள் அடங்கும்."

உரையாசிரியர் சரித்திரக்குறிப்பு

இயற்றமிழ்ப் போதகாசிரியர் ச. வயித்தியலிங்க பிள்ளை 1843 - ம் ஆண்டில் யாழ்ப்பாணம் வல்லுவெட்டித் துறையில் பிறந்தவர். தந்தையார் சங்கரர் என்பார். இவர் உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவரிடம் தமிழ் நூல் களைக் கற்றறிந்தவர். தமிழிலும் சம்ஸ்கிருதத்திலும் பாண்டித்தியமுடையவர். சைவசமய சாத்திரங்களில் பயிற்சியுடையவர். சைவப்பிரசாரத்தின் பொருட்டு "சைவாபிமானி" என்னும் பத்திரிகையை நடாத்தியவர். சென்னையில் சிலகாலம் தங்கியிருந்தபோது தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களை அச்சிட்ட சி. வை. தாமோதரம்பிள்ளையவர்களின் மதிப்பைப்பெற்றவர். எனது நண்பராயிருந்த மட்டக்களப்பு வித்துவான் ச. பூபாலபிள்ளையின் ஆசிரியருள் ஒருவராயிருந்தவர். பூபாலபிள்ளை பாடிய சோமவாரவிரத மகிமையைக்கூறும் சீமந்தனி புராணம் இவரது பார்வையிலேயே சென்னையில் 1894-ம் ஆண்டில் அச்சிடப்பட்டது.

இவ்வுரையாசிரியர் இயற்றிய வேறு நூல்களாவன:— கந்தரலங்காரவுரை, கல்வளையந்தாதியுரை, வள்ளியம்மை திருமணப்படலவுரை முதலியன.

இவர் 1900 - ம் ஆண்டில் இறந்தனர் என்ப.

பிறையணி சடைமுடிப் பிரான்தன் காதைகள்
இறையுமோர் மறுவில யாவு மேன்மையே
மறைபல சான்றுள வாய்மையே யவை
அறிஞர்க ளுடியே யவற்றைக் காண்கவே

கந்தபுராணத்திலுள்ள

சில தோத்திரப் பாசுரங்கள்

அருவமும் உருவுமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணைகூர்முகங்களாறுங் கரங்கள்பன்னிரண்டுங்கொண்டே
ஒருதிரு முருகன்வந்தாங் குதித்தனன் உலகமுய்ய.

ஏவர்தம் பாலுமின்றி எல்லைதீ ரமலற்குள்ள
மூவிருகுணனுஞ் சேய்க்கு முகங்களாய் வந்ததென்னப்
பூவியல் சரவணத்தண் பொய்கையில் வைகும்ஐயன்
ஆவிகளருளு மாற்றா லறுமுகங் கொண்டானன்றே.

மறைகளின் முடிவால்வாக்கால் மனத்தினாலளக்கொணாமல்
நிறைவுடன் யாண்டுமாகி நின்றிடும் நிமலமூர்த்தி
அறுமுக உருவாய்த்தோன்றி அருளொடு சரவணத்தின்
வெறிகமழ் கமலப்போதின் வீற்றிருந் தருளினானே.

ஏலவார் குழலிறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
ஞாலமேலுறு மிரவொடு பகலுக்கு நடுவாய்
மாலையான தொன்றழிவின்றி வைகு மாறொக்கும்.

ஆதலி னமதுசத்தி யறுமுக னவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழவி போல்வான் யாவையு முணர்ந்தான் சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினர்க் கருளவல்லான்.

கந்தநம ஐந்துமுகர் தந்த முருகேசநம கங்கையுமைதன்
மைந்தநம பன்னிரு புயத்தநம நீபமலர் மாலைபுனையும்
தந்தைநம ஆறுமுக ஆதிநம சோதிநம தற்பரமதாம்
எந்தைநம என்றுமிளையோய்நமகுமாரநமஎன்றுதொழுதார்.

முழுமதியன்னவாறு முகங்களு முந்நான்காகும்
விழிகளினருளும் வேலும் வேறுள படையின்சீரும்
அழகிய கரமீராறும் அணிமணித் தண்டையார்க்கும்
செழுமல ரடியுங்கண்டான் அவன்தவஞ் செப்பற்பாற்றோ.

வீறுகேதனம் வச்சிரமங்குசம் விசிகம்
மாறிலாதவே லபயமே வலமிடம்வரதம்
ஏறுபங்கய மணிமழுத் தண்டுவில்விசைந்த
ஆறிரண்டுகை யறுமுகங்கொண்டு வேளடைந்தான்.

ஈசனே யவனுடலான் மதலையாயினன்காண்
ஆசிலாவவன் அறுமுகத்துண்மையா லறிநீ
பேசிலாங்கவன் பரனொடு பேதகனல்லன்
தேசுலா வகன்மணியிடைக் கதிர்வருதிறம்போல்.

தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுனுற்றால்
தூயவராகி மேலைத்தொல்கதி யடைவரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட்செய்த
மாயையின் மகனுமன்றோவரம்பிலா அருள்பெற்றுய்ந்தான்.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானைதன் னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீ ரடியா ரெல்லாம்.

உ

கணபதிதுணை

கந்தபுராணம்

தெய்வயானையம்மை

திருமணப்படலம்

மூலமும் உரையும்

காப்பு

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயக
னகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

நூல்

காய்ந்திடு தம்பகை கடந்து பொன்னகர்
வேந்தியன் முறையருள் வேற்கை வீரற்குக்
கூந்தலஞ் சிறுபுறக் குஞ்சரந் தனை
யீந்திட மகபதி யிதயத் தெண்ணினன்.

இதன்பொருள். மகபதி - இந்திரனானவன், காய்ந்திடு தம் பகை கடந்து பொன்னகர் வேந்து இயல்முறை அருள் வேல் கை வீரற்கு - (தம்மை) வெகுண்ட தம் பகைவராகிய சூரபன்மனாதியவசுரரை யழித்துத் (தனக்குப்) பொன்னகரத்து அரசியன்முறையைத் தந்தருளிய வேலா

யுதத்தைத்தரித்த திருக்கரத்தினையுடைய வீரராகிய சுப்பிரமணியப்பெருமானுக்கு, கூந்தலம் சிறுபுறக் குஞ்சரந் தனை ஈந்திட இதயத்து எண்ணினன் - அளகத்தைக் கொண்ட எருத்தத்தையுடைய தெய்வயானையம்மையாரைக் (கன்னிகாதானமாகக்) கொடுக்கத் (தன்) மனத்தில் நினைத்தான். என்றவாறு.

தம்மையென்னுஞ் செயப்படுபொருள் அவாய்நிலையால் வருவிக்கப்பட்டது. தேவர்க்கு அசுரர் குலப்பகைவரென்பது தொனிக்கத் தம்பகையெனப்பட்டது. பகை, குணவாகுபெயர். கடத்தல், தாண்டுதல்; ஈண்டு அழித்தல். கூந்தல் ஈண்டுசுருளா முடித்த கூந்தல். அம் சாரியை. அழகெனினுமமையும். ஐராவதயானை வளர்த்தமைபற்றி அம்மையார் தெய்வயானை யென்னுந் திருநாமம் பெற்றாரென்க. (1)

விருத்தம தாகுமிவ் விழைவை யிந்திரன்
றிருத்தகு மாலயன் றேவர் தேர்வுற
வுரைத்தனன் வினவலு முவகை பெற்றுநின்
கருத்துநன் றெனக் கழறன் மேயினர்.

இ - ள். இந்திரன் விருத்தமது ஆகும் இவ்விழைவை திருத்தரு மால் அயன் தேவர் தேர்வுற உரைத்தனன் வினவலும் - அவ்விந்திரனுனவன் றூதனமாகிய இவ்வெண்ணத்தை அழகுதகுந்த திருமாலும் பிரமதேவருந் தேவர்களும் உணர்தலுறவுரைத்து (இவ்வெண்ணம் நன்றோ அன்றோ உரையினென) வினவுதலும், உவகை பெற்று நின் கருத்து நன்றால் எனக்கழறன் மேயினர் - (அவர்கள் அவ்வார்த்தையைக் கேட்டவுடன்) மகிழ்ச்சிபெற்று நினதெண்ணம் நன்று என்று சொல்லுதலுற்றார். எ - று.

அது பகுதிப்பொருள் விகுதி. விழைவு, ஆசைப்பெருக்கம்; ஈண்டு அதனை விளைவித்த எண்ணம்; இது காரியத்தைக் காரண

னாக உபசரித்ததென்க. உரைத்தனன் என்னும் வினைமுற்று வினையெச்சப் பொருளானது. ஆல் அசை. (2)

பன்னிரு மொய்ம்புடைப் பகவன்பாற் படப்
பின்னலஞ் சுரிகுழற் பிடியும்பொய் கைவாய்
முன்னுற வருந்தவ முயன்று வைத்தன
னின்னுழி யதன்பய னெய்திற்றே கொலாம்.

இ - ள் பின்னலஞ்சுரிகுழல் பிடியும் - பின்னலாகிய சுரித்த கூந்தலினையுடைய தெய்வயானையம்மையும், பன்னிரு மொய்ம்புடைப் பகவன் பால் பட முன்னுற அரும் தவம் பொய்கை வாய் முயன்று வைத்தனன்-பன்னிரண்டாகிய திருப்புயங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான்பாற் சேரும்படி முன்னே அருமையாகிய தவத்தைச் சரவணதடாகத்தின்கண்ணே செய்துவைத்தாள், இன்னுழி அதன் பயன் ஏ எய்திற்று கொலாம் - இங்ஙனம் அத்தவப் பயனே யடைந்ததுபோலும். எ - று.

அம் சாரியை. பிடியும் என்பதிலும்மை உயர்வு சிறப்போடு சுப்பிரமணியப்பெருமானுக்கு நீ கன்னிகாதானஞ் செய்யத்தக்க நல்வினையை முன்னேமுயன்று வைத்தனையன்றி யென்று பொருள்படுதலான் எச்சவும்மையென்க. பகம் என்பதற்கு, ஐசுவரியம் வீரியம் புகழ் திரு ஞானம் வைராக்கியம் என்னும் ஆறு பொருளுமுண்மையால் பகவன் அவ்வாறு குணங்களையுமுடையோனெனத் தொனித்தலுணர்க. இன்னுழி இவ்வுழி யென்பதன்மரூஉ. ஏகாரம் பிரித்துக்கூட்டப்பட்டது. கொல் கொலாம் என ஈறு விகாரப்பட்டது. (3)

கயலுறழ் விழியுடைக் கடவுள் யானையை
வியல்வரை யெறிந்திடு வேற்கை யண்ணலுக்
கியல்புளி வதுவையா லீதற் கிவ்விடை
முயலுதி கடிதென மொழிந்து வைகினர்.

இ - ள். வியல் வரை எறிந்திடு வேல் கை அண்ணலுக்கு - பெரிய கிரவுஞ்சகிரியைக் கிழித்த வேற்படையைத் தரித்த திருக்கரத்தினையுடைய பெருமையிற் சிறந்த சுப்பிரமணியப்பெருமானுக்கு, இவ்விடை - இங்ஙனம், கயல் உறழ்விழியுடைக் கடவுள் யானையை இயல்புளி வதுவையால் ஈதற்கு - கயன்மீன்போலுங் கண்ணினையுடைய தெய்வயானையம்மையை இயல்பாகிய விவாகமுறையாற் கொடுத்தற்கு, கடிது முயலுதி என மொழிந்து வைகினர் - விரைவின் முயல்வாயென்று சொல்லியிருந்தார்கள். எ-று.

கயல் பிறழ்ச்சித்தொழிலாலும் வடிவுப்பண்பாலும் விழிக்குவமையானதென்க. இயல்புளி வதுவை, இயல்பின்கணுள்ளதாகிய வதுவை; அது பிரமமன்றல்; பிரமசாரியாய்த் தக்கானுமாயிருப்பவனுக்கே கன்னிகையைக் கொடுப்பது இயன்முறையாதலினென்க. ஈண்டு இயல்பு பெருவழக்கு. எண்வகை மன்றல்களுள் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் என்னு மூன்றுங் கன்னிகையை மற்றோர் கோட்பாடுபற்றிக் கொடுக்குமன்றல்களாதலினாலும், காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என்னும் நான்குங் கன்னிகையைக் குரவர்கொடுத்தலின்றி நிகழுமன்றல்களாதலினாலும், அவை சிறுபான்மையவாய் இயற்கைக்கு மாறான மன்றல்களாயின வென்பது. வதுவை ஆகுபெயர். (4)

மற்றது போழ்தினின் மகத்தின் செம்மலோ
ரொற்றனை நோக்கியே யொல்லை மேருவாம்
பொற்றையின் மனைவியைப் புதல்வி தன்னுட
னிற்றையில் விளித்தனை யேகு நீயென்றான்.

இ - ள். மற்றது போழ்தினின் மகத்தின் செம்மல் ஓர் ஒற்றனை நோக்கியே - அச்சமயத்தில் வேள்விக்கு வேந்தனாகிய இந்திரன் ஒரு தூதுவனைப் பார்த்து, நீ மேரு ஆம் பொற்றையில் மனைவியைப் புதல்விதன்னுடன் இற்றையில் ஒல்லை விளித்தனை ஏகு என்றான் - நீ மேருவாகிய

மலையிலிருக்கின்ற (எனது) மனைவியைப் புத்திரியோடு இன்றைக்கு விரைவில் அழைத்துவருவாயென்று சொன்னான். எ - று.

மற்று அசை. போழ்து பொழுதின்மரூஉ. அது ஈண்டு அகரச்சுட்டுப்பொருடந்து நின்றது. எ அசை. விளித்தனை யென்னும் வினைமுற்று வினையெச்சமானது. (5)

என்றலுந் தூதுவ னிசைந்து மேருவிற்
சென்றனன் புலோமசைத் தெரிவை முன்புபோய்
நின்றனன் வணங்கின னினது சிந்தைபோ
லொன்றிய கேளென வுரைத்தன் மேயினன்.

இ - ள். என்றலும் தூதுவன் இசைந்து - என்று (இந்திரன்) சொல்லவும் அத்தூதுவனிசைந்து, மேருவில் சென்றனன்-மேருகிரியிற் சென்று, புலோமசைத் தெரிவை முன்பு போய் நின்றனன் - இந்திராணியாகிய மகடூஉவுக்கு முன்னர்ப்போய் நின்று, வணங்கினன் - வணங்கி, நினது சிந்தை போல் ஒன்றிய கேள் என உரைத்தல் மேயினன் - (எங்களரசியே) நின்னுடை எண்ணம்போல நிகழ்ந்தன வற்றைக் கேளாயென்று சொல்லலுற்றான். எ - று.

என்றல் சொல்லென்னுஞ் சொலெஞ்சியசொல்லெச்சம். நின்றனனாதிய மூன்று வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. சிந்தை ஆகுபெயர். (6)

மாண்டனன் வெய்யசூர் மதலை தன்னொடு
சேண்டொட ரமரருஞ் சிறையி னீங்கினா
ராண்டலை யுயர்த்தவ னனிகந் தன்னொடு
மீண்டனன் றிருப்பரங் குன்ற மேயினன்.

இ - ள். வெய்ய சூர் மாண்டனன்-கொடிய சூரபன்மனழிந்தான், மதலைதன்னொடு சேண் தொடர் அமரரும்

சிறையின் நீங்கினார் - (நின்னுடைய) புத்திரனாகிய சயந்தனோடு உயர்ச்சிபொருந்திய தேவர்களுஞ் சிறையினின்றும் நீங்கினார்கள், ஆண்டலை உயர்த்தவன் அனிகந்தன்னொடு மீண்டனன் திருப்பரங்குன்றம் மேயினான் - கோழிக்கொடியை யுயர்த்திய சுப்பிரமணியப்பெருமான் சேனையோடு (மகேந்திரபுரியைவிட்டு) மீண்டு திருப்பரங்குன்றத்திற் சேர்ந்தருளினார். எ - று.

ஆண்டலை ஆகுபெயர். மீண்டனன் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (7)

நின்றிட வனையது நினது நாயக
னுன்றனை மகளொடு மொல்லை யிற்பரங்
குன்றிடை யிருக்கையிற் கொண்டு செல்கென
வின்றெனை விடுத்தன னேகு நீயென்றான்.

இ - ள். அனையது நின்றிட - அது நிற்க, நினது நாயகன் மகளொடும் உன்றனை பரங்குன்றிடை இருக்கையில் ஒல்லையில் கொண்டு செல்கென எனை இன்று விடுத்தனன் - நின்னுடைய நாயகனாகிய இந்திரன் மகளாகிய தெய்வயானையம்மையாரோடு நின்னைத் திருப்பரங்குன்றத்தினுள்ள (தனது) கோயிலில் விரைவில் (அழைத்துக்) கொண்டு வருவாயென்று என்னை இன்று விடுத்தான், (ஆதலால்) நீ ஏகு என்றான் - நீ செல்லுவாயென்று சொன்னான் (அத்தூதுவன்). எ - று.

அனையது அது என்னுஞ் சுட்டுப்பெயர்ச் சொல்லின்மரூஉ. செல்க என்னும் வியங்கோள்வினையின் இறுதியகரங்கெட்டது.

அம்மொழி வினவலு மணங்கி னல்லவள்
விம்மித முற்றனள் விழும நீங்கினா
ளெம்மையு மில்லதோ ரின்ப மெய்தினாள்
கொம்மென வெழுந்தனள் குமரி தன்னொடும்.

இ-ள். அம்மொழி வினவலும்-(அத்தூதுவன்கூறிய) அவ்வார்த்தையைக் கேட்டலும், அணங்கின் நல்லவள் விம்மிதம் உற்றனள் - தெய்வப்பெண்களுள் நல்லவளாகிய இந்திராணி அற்புதமடைந்தாள், விழுமம் நீங்கினள் - துன்பமும் நீங்கினள், எம்மையும் இல்லது ஓர் இன்பம் எய்தினள் - எப்பிறப்பிலும் (அடைதல்) இலதாகிய ஓரின்பமுமடைந்தாள், (அங்ஙனமாயவள்) குமரிதன்னொடும் கொம்மென எழுந்தனள் - மகளாகிய தெய்வயானையம்மையாரோடும் விரைவிலெழுந்தாள். எ - று.

அழியாமையும் வச்சிரயாக்கையும் பெற்ற சூரனைச் சுப்பிரமணியப்பெருமான் அழித்ததுபற்றி விம்மிதமும் தனது புத்திரனுதியர்கள் சிறையினின்று நீங்கியதுபற்றி விழுமநீங்கலும் பல யுகங்களினுஞ் சிறிதுமொழியாத துன்பநீங்கியதாலும் தாம் இனி ஒருகாலுமரசியலைப் பெறுதலில்லையென்றெண்ணியதற்கு மாறாய் அரசியலைப்பெற்றமையாலும் எம்மையும் இல்லதோரின்பமும் எய்தினளென்க. (9)

புடையுற வணங்கினர் போற்றி மேருவி
னிடையுறு புலோமசை யேம மாகியே
யடலயி ராவத வானை மேற்கொடு
மடமக டன்னொடும் வானத் தேகினள்.

இ-ள். அணங்கினர் போற்றி புடை உற - தெய்வமகளிர் துதித்துப் பக்கத்திற்பொருந்த, மேருவினிடை உறு புலோமசை - மேருகிரியினிடத்துப் பொருந்திய இந்திராணி, மடமகள் தன்னொடும் அடல் ஐராவதவானை மேற்கொடு ஏமம் ஆகி வானத்து ஏகினள் - மடமையையுடைய மகளாகிய தெய்வயானையம்மையாரோடும் வலியையுடைய ஐராவதயானையின்மீதிவர்ந்து இன்பமாகி ஆகாயவழியிற்சென்றாள். எ - று.

மடம், பேதைமை, அது மகளிர்க்குரிய நாற்குணத்தொன்று. உபலக்கணத்தான் ஒழிந்த குணங்களுங் கொள்ளப்படும். வானம் ஆகுபெயர். (10)

பொருப்பினுண் மேலதாய்ப் புவியிற் பேர்பெறுந்
திருப்பரங் குன்றிடைச் சென்று தேவர்கோ
னிருப்பதோர் மந்திரத் தெய்தி வைகினுண்
மருப்பிரண் டுடையதோர் வாரணத் துடன்.

இ-ள். மருப்பு இரண்டு உடையது ஓர் வாரணத்துடன் - தனங்களாகிய கொம்பிரண் டுடையதொரு யானையோடு, (இந்திராணியானவள்) பொருப்பினுள் மேலதாய் புவியில் பேர் பெறும் திருப்பரங்குன்றிடைச் சென்று - மலைகளுண் மேலதாகிப் பூமியிற் புகழ்பெற்ற திருப்பரங் குன்றத்தின்கட் சென்று, தேவர்கோன் இருப்பதோர் மந்திரத்து எய்தி வைகினுள் - தேவேந்திர னிருப்பதாகிய கோயிலைச் சார்ந்திருந்தாள். எ - று.

முக்காலத்தினும் நிகழ்வதை எதிர்காலத்தாற் கூறுவது தமிழ்வழக்காதலின் இருப்பதோர் மந்திரமெனப்பட்டதென்க. ஓர் அசை. தனமாகிய உபமேயத்தைச் சொல்லாமல் அதனை மருப்பாகிய உபமானச்சொல்லால் உரைத்தமையின் உருவக வுயர்வு நவிற்சியணி. அங்ஙனம் அலங்காரப்படுத்தியதற் கேற்ப அம்மையாரை மருப்பிரண் டுடையதோர் வாரணமென்றுரைென்க.

உறையுமவ் வெல்லையி லுயர்ம கேந்திரச்
சிறையினு மகன்றிடு தெய்வத் தையலா
ரிறைவியைப் பெற்றன மியாமுய்ந் தோமெனு
முறைமுறை வணங்கினர் முகிழ்த்த கையினர்.

இ-ள். உறையும் அவ்வெல்லையில் - (இந்திராணியானவள் அங்ஙனம்) இருக்கின்ற அச்சமயத்தில், உயர் மகேந்திரச் சிறையினும் அகன்றிடு தெய்வத் தையலார்

உயர்வாகிய மகேந்திரபுரியிற் சிறையினின்றும் நீங்கிய தெய்வமகளிர்கள், இறைவியைப் பெற்றனம் யாம் உய்ந்தோம் என முகிழ்த்த கையினர் முறை முறை வணங்கினர் - (எங்கள்) அரசியைப்பெற்றேம் (ஆதலின்) யாம் உய்ந்தேமென்று கூப்பிய கரத்தினராய் முறை முறையே வணங்கினார்கள். எ - று.

சிறை, ஈண்டுச்சிறைச்சாலையன்று; மகேந்திரபுரியில் அசுரர் மாளிகைகளில் ஏவற்றொழில் செய்துகொண்டிருந்தமையின் சிறைப்பட்டிருத்தலென்க. முறை முறை வணங்கல், முன் வணங்கத்தக்கவர்கள் முன்னும் பின் வணங்கத்தக்கவர்கள் பின்னுமாய் வணங்குமுறைப்படி வணங்கல்; இங்ஙனம் வருவது அடுக்குமொழியன்று. (12)

சேணுறு மெழிலிவாய் திறந்த மின்னுவைக்
காணுறு கின்றதோர் கலாப மஞ்ஞைபோன்
மாணுறு புலோமசை வரலு மாதரா
ரேணுறு கின்றன ரேமம் பெற்றுளார்.

இ - ள். சேண் உறும் எழிலி வாய் திறந்த மின்னுவைக் காணுகின்றதோர் கலாபம் மஞ்ஞை போல் - வானத்திற்பொருந்திய மேகம் வாய்திறந்த மின்னலைக் காணுகின்றதாகிய தோகையையுடைய மயில்போல, மாண் உறு புலோமசை வரலும் - மாட்சிமை மிகுந்த இந்திராணி வருதலும், மாதரார் ஏமம் பெற்றுளார் ஏண் உறுகின்றனர் - அத்தேவஸ்திரீகள் இன்பம் பெற்றுளாராகி நிலைமையைப் பொருந்துகின்றார்கள். எ - று.

மேகம் வாய்திறத்தலால் உண்டாகுமின்னலை வினைமுதலுக்கும் வினைக்குமுள்ள ஒற்றுமைகருதி வாய்திறந்த மின்னெனப்பட்டது. ஓர் அசை. மின்னலைக் காண்கின்ற மயில் இன்பமடைந்து இரைகவர்தலாதிய தொழில்களிற் செல்லாது

அதனையே நோக்கி நின்றுடுதல்போல இந்திராணியைக்கண்ட தேவஸ்திரீகளும் இன்பம்பெற்றுளராய்ப் பிறதொழில்விற்செல்லாது அவளையே நோக்கி நிற்றலின் எனுறுகின்றனரெனப் பட்டது. இச்செய்யுள் உபமானமும் உபமேயமும் பொதுத் தன்மையும் உவமையுருபும் விரிக்கப்பெற்றமையின் விரியுவமையணி. (13)

கண்டனன் மதலையைக் கருணை யாற்றழீஇக்
கொண்டனன் மகிழ்ந்தனள் கொங்கை பாலுக
விண்டனள் கவற்சியை வெறுமை யுற்றுளோர்
பண்டுள பெருநிதி படைத்த பான்மைபோல்.

இ - ள். வெறுமை உற்றுளோர் பண்டு உள பெருநிதி படைத்த பான்மைபோல் - (இடையிற் றமது செல்வத்தையிழந்து) இலம்பாட்டைப் பொருந்தினவர்கள் முற்காலத்தில் (தமதாகி)யுள்ள அப்பெருநிதியைப் (பிற்காலத்துப்) பெற்றதன்மைபோல, மதலையைக் கண்டனள் - (பன்னெடுங் காலமாகச் சிறைப்பட்டிருந்தமையாற் காணப் படாதிருந்த) தனது புத்திரனாகிய சயந்தனைக்கண்டு, கருணையால் தழீஇக்கொண்டனள்-கருணையினாலே தழுவிக் கொண்டு, மகிழ்ந்தனள் - உவகையுற்று, கொங்கை பால் உக கவற்சியை விண்டனள் - (தன்) தனங்களினின்றும் பால் சொரியக் கவற்சியை (உள்ளத்தினின்றும்) நீங்கினாள். எ - று.

கண்டனளாதிய மூன்றுவினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. கருணை, ஈண்டுப் பேரன்பு. இதுவும் விரியுவமையணி.

ஆடுறு பசியினோ ராக்கங் கண்டுழி
நீடுறு முவகையா னிறைவு பெற்றென
மாடுறு புலோமசை வடிவங் காண்டலுங்
கூடினர் தன்மையுங் குரிசி லெய்தினன்.

இ - ள். ஆடுறு பசியினோர் ஆக்கம் கண்டுழி நீடுறும் உவகையால் நிறைவு பெற்றென - (இரந்துண்டற்காக எங்கும்) அலைதலுறுகின்ற பசியினையுடையோர் (தமக்கே யுரியதாகத் தக்க) செல்வத்தைக் கண்டவிடத்தே மிகுதலுறுகின்ற மகிழ்வினாலே திருப்தியடைந்தாற்போல, குரிசில் மாடு உறு புலோமசை வடிவம் காண்டலும் கூடினர் தன்மையும் எய்தினன் - இந்திரனானவன் அவ்விடத்திற் பொருந்திய இந்திராணியினுடைய வடிவத்தைக் காண்டலும் புணர்ந்தவர் தன்மையையு மடைந்தான். எ - று.

கண்டவுழி எனற்பாலது கண்டுழி என்றும் பெற்றாலென எனற்பாலது பெற்றென என்றுந் தொகுக்கும்வழித் தொகுக்கப்பட்டன. பசிவருத்தத்தால் மிக வருந்தியலைந்து திரிகின்றவர்கள் தமக்கே யுரியதாகத் தக்க புதையற் பொன்னாகிய செல்வத்தைக் கண்டபொழுதே அச்செல்வத்தை அனுபவித்தலாலாகிய இன்பம் போலு மின்பத்தைய மடையுமாறுபோல நெடுநாளாக இந்திராணியைப் புணரும் போகமின்றி மிக வருந்தியிருந்த இந்திரன் அவளைக் கண்டவுடனே புணர்ச்சியால் வரும் பெரும்போகம் போலும் இன்பத்தையுமடைந்தானென்றவாறு. உம்மை காட்சியாலாகுமின்பமேயன்றி என்று பொருள்படுதலின் எச்சவும்மை.

வேறு

அப்போது வானோர் குழுவோடயி ராணி கேள்வன்
செப்போது கொங்கை மகடூஉமணஞ் செப்பன் முன்னி
யொப்போது நீர்மை யிலதாமொரு வன்க மூற்கே
கைப்போது தூவிப் பணிந்தேத்திக் கழற லுற்றான்.

இ - ள். அப்போது வானோர் குழுவோடு அயிராணி கேள்வன் செப்பு ஒது கொங்கை மகடூஉ மணம் செப்பல் முன்னி - அப்பொழுது தேவர் கூட்டத்தோடு இந்திராணி

அதனையே நோக்கி நின்றுடுதல்போல இந்திராணியைக்கண்ட தேவஸ்திரீகளும் இன்பம்பெற்றுள்ளராய்ப் பிறதொழிலிற்செல்லாது அவளையே நோக்கி நிற்றலின் எனுறுகின்றனரெனப் பட்டது. இச்செய்யுள் உபமானமும் உபமேயமும் பொதுத் தன்மையும் உவமையுருபும் விரிக்கப்பெற்றமையின் விரியுவமை யணி. (13)

கண்டனள் மதலையைக் கருணை யாற்றழீஇக்
கொண்டனள் மகிழ்ந்தனள் கொங்கை பாலுக
விண்டனள் கவற்சியை வெறுமை யுற்றுளோர்
பண்டுள பெருநிதி படைத்த பான்மைபோல்.

இ - ள். வெறுமை உற்றுளோர் பண்டு உள பெரு நிதி படைத்த பான்மைபோல் - (இடையிற் றமது செல்வத்தையிழந்து) இலம்பாட்டைப் பொருந்தினவர்கள் முற்காலத்தில் (தமதாகி)யுள்ள அப்பெருநிதியைப் (பிற் காலத்துப்) பெற்றதன்மைபோல, மதலையைக் கண்டனள் - (பன்னெடுங் காலமாகச் சிறைப்பட்டிருந்தமையாற் காணப் படாதிருந்த) தனது புத்திரனுகிய சயந்தனைக்கண்டு, கருணையால் தழீஇக்கொண்டனள்-கருணையினுலே தழுவிக் கொண்டு, மகிழ்ந்தனள் - உவகையுற்று, கொங்கை பால் உக கவற்சியை விண்டனள் - (தன்) தனங்களினின்றும் பால் சொரியக் கவற்சியை (உள்ளத்தினின்றும்) நீங்கினுள். எ - று.

கண்டனளாதிய மூன்றுவினைமுற்றுக்கள் வினையெச்சங்க ளாயின. கருணை, ஈண்டுப் பேரன்பு. இதுவும் விரியுவமையணி.

ஆடுறு பசியினோ ராக்கங் கண்டுழி
நீடுறு முவகையா னிறைவு பெற்றென
மாடுறு புலோமசை வடிவங் காண்டலுங்
கூடினர் தன்மையுங் குரிசி லெய்தினன்.

இ - ள். ஆடுறு பசியினேர் ஆக்கம் கண்டுழி நீடுறும் உவகையால் நிறைவு பெற்றென - (இரந்துண்டற்காக எங்கும்) அலைதலுறுகின்ற பசியினையுடையோர் (தமக்கே யுரியதாகத் தக்க) செல்வத்தைக் கண்டவிடத்தே மிகுத லுறுகின்ற மகிழ்வினலே திருப்தியடைந்தாற்போல, குரிசில் மாடு உறு புலோமசை வடிவம் காண்டலும் கூடினர் தன்மையும் எய்தினன் - இந்திரனவன் அவ் விடத்திற் பொருந்திய இந்திராணியினுடைய வடிவத்தைக் காண்டலும் புணர்ந்தவர் தன்மையையு மடைந்தான். எ - று.

கண்டவுழி எனற்பாலது கண்டுழி என்றும் பெற்ருலென எனற்பாலது பெற்றென என்றுந் தொகுக்கும்வழித் தொகுக்கப் பட்டன. பசிவருத்தத்தால் மிக வருந்தியலைந்து திரிகின்றவர்கள் தமக்கே யுரியதாகத் தக்க புதையற் பொன்னுகிய செல்வத்தைக் கண்டபொழுதே அச்செல்வத்தை அனுபவித்தலாலாகிய இன்பம் போலு மின்பத்தையு மடையுமாறுபோல நெடுநாளாக இந்தி ராணியைப் புணரும் போகமின்றி மிக வருந்தியிருந்த இந்திரன் அவளைக் கண்டவுடனே புணர்ச்சியால் வரும் பெரும்போகம் போலும் இன்பத்தையுமடைந்தானென்றவாறு. உம்மை காட்சி யாலாகுமின்பமேயன்றி என்று பொருள்படுதலின் எச்சவும்மை.

வேறு

அப்போது வானேர் குழுவோடயி ராணி கேள்வன்
செப்போது கொங்கை மகடூஉமணஞ் செப்பன் முன்னி
யொப்போது நீர்மை யிலதாமொரு வன்க ழற்கே
கைப்போது தூவிப் பணிந்தேத்திக் கழற லுற்றுன்.

இ - ள். அப்போது வானேர் குழுவோடு அயிராணி கேள்வன் செப்பு ஒது கொங்கை மகடூஉ மணம் செப்பல் முன்னி - அப்பொழுது தேவர் கூட்டத்தோடு இந்திராணி

கணவனாகிய இந்திரனானவன் செப்பை (உபமானமாகச்) சொல்லுகின்ற தனங்களையுடைய (தன்) மகளாகிய தெய்வயானையம்மையாரின் திருமணத்தைக் (குறித்துச்) சொல்லுதற்கு முற்பட்டு, ஒப்பு ஓதும் நீர்மை இலதாம் ஒருவன் கழற்கே கைப் போது தூவிப் பணிந்து ஏத்திக் கழறல் உற்றான் - உவமைசொல்லுந் தன்மையில்லையாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடியிற் கையிற்பொருந்திய மலர்களைத் தூவி வணங்கித் துதித்துக் கூறலுற்றான். எ - று.

ஞாணிகேள்வன் என்றதற்கு, இந்திரன் (சென்று) என்றொருசொல் வருவித்துரைத்து முன்னி என்பதற்கு, நினைத்து எனப் பொருள்கொள்ளினுமமையும். மணத்தைக் குறித்துச் சொல்லல் சுப்பிரமணியப்பெருமானைத் திருமணஞ் செய்தருளும் படி சொல்லுதல். (16)

கன்னின்ற மொய்ம்பி னவுணக்களை கட்டல் செய்தா
யிந்நின்ற தேவர் சிறைமீட்டனை யென்ற னக்கு
முன்னின்ற தொல்சீர் புரிந்தாயது முற்று நாடிச்
செய்ந்நன்றி யாகச் சிறியேன்செயத் தக்க துண்டோ.

இ - ள். கல் நின்ற மொய்ம்பின் அவுணக்களை கட்டல் செய்தாம் - (தேவராகிய நெற்பயிரை வளர்த்தற்கு) மலை போல உயர்ந்திருக்கின்ற புயத்தினையுடைய அசுரராகிய களைகளைக் கட்டல் செய்தருளினீர், நின்ற இ தேவர் சிறை மீட்டனை - (இங்ஙனம்) நிற்கின்ற இத்தேவர்களைச் சிறைச் சாலையினின்றும் நீக்கியருளினீர், என்றனக்கு முன் நின்ற தொல் சீர் புரிந்தாய்-எனக்குப் பண்டுநிலைபெற்ற பெருமையாகிய செல்வத்தைத் தந்தருளினீர், அது முற்றும் நாடிச் சிறியேன் செய்ந்நன்றி ஆகச் செயத்தக்கது உண்டோ - அச்செயல் முழுவதையும் ஆராய்ந்து (தேவரீருக்குச்)

சிறியேன் செய்ந்நன்றியாகச் செயத்தக்கதுமுண்டோ. எ - று.

கன்னின்ற என்றதற்கு, மலையின்றன்மை நிலைபெற்றவென்றுரைப்பினுமமையும், ஈண்டுக் கல் ஆகுபெயர். கட்டல், பிடுங்கல். அசுரக்களைகட்டல்செய்தாய் என்றதனால் தேவராகிய நெற்பயிரை வளர்த்தற்கு என்பது வருவிக்கப்பட்டது. அசுரரைக் களையாக உருவகித்தது ஏகதேசவுருவகத்தின்பாற்படும். சிறை ஆகுபெயர். தொல், பழமை; ஈண்டுப்பெருமை. ஓகாரம் எதிர்மறைப்பொருட்டு. (17)

முந்தே தமியேன் பெறுமங்கையிம் மொய்வ ரைக்கண்
வந்தே யமர்வா ளவடன்னை வதுவை செய்து
கந்தே புரைநின் பெருந்தோளிற் கலத்தி யாங்க
ளுய்ந்தே பிறவிப் பயன்பெற்றன மோங்க வென்றான்.

இ - ள். முந்தே தமியேன் பெறு மங்கை மொய் இவரைக்கண் வந்தே அமர்வாள் - முன்னேதமியேன்பெற்ற புத்திரியானவள் பெருமையாகிய இம்மலையின்கண்வந்திருக்கின்றாள், யாங்கள் உய்ந்தே பிறவிப் பயன் பெற்றனம் ஓங்க - யாங்கள் உய்தலடைந்து இப்பிறவியாலாகியபயனைப் பெற்று உயர்ச்சியுற, அவள்தன்னை வதுவை செய்து நின் கந்தே புரை பெருந் தோளிற் கலத்தி என்றான் - அவளைத் திருமணஞ் செய்தருளித் தேவரீருடையதூணையே நிகர்த்த பெருமையாகிய புயத்திற் கலந்தருள்வீரென்றான் (இந்திரன்.) எ - று.

ஏகாரங்களில் முன்னையவிரண்டும் பின்னையதும் அசைநிலை. ஏனையது பிரிநிலை. அமர்வாள் என்றது இயல்பினின்வருங் காலவழுவமைதி. தன்னையும் அத்திருமணத்தைக்காணும் ஏனையரையுமடக்கி யாங்கள் என்றானென்பது; அத்திருமணத்தைக் காண்பார்யாவரும் பேரின்பம்பெறுதல் உண்மையாதலினென்க. (18)

என்னுந் துணையி லமரேசனை யெந்தை நோக்கி
யந்நங்கை தானுமிக நோற்றன ளாத லானீ
முன்னும் படியே மணநாளை முடித்து மென்னத்
தன்னுங் கடந்த மகிழ்வெய்தித் தருக்கி நின்றான்.

இ - ள். என்னுந் துணையில் அமரேசனை எந்தை நோக்கி - என்று சொல்லியகாலையில் அவ்விந்திரனை எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமான் பார்த்து, அந் நங்கைதானும் மிக நோற்றனள் ஆதலால் - அந்நங்கையும் (எம்மை மணம் புரியவேண்டிப் பண்டு) மிகவுந் தவஞ் செய்தனளாதலினாலே, நீ முன்னும்படியே நாளை மணம் முடித்தும் என்ன - நீ எண்ணியபடியே நாளைக்கு (அவளைத்) திருமணஞ்செய்வோ மென்று திருவாய் மலர்ந்தருள, தன்னுங் கடந்த மகிழ்வு எய்தித் தருக்கி நின்றான் - தன்னினுங் கடந்த மகிழ்வடைந்து மதர்ப்புற்று நின்றான் (இந்திரன்.) எ - று.

எந்தை எமது தந்தையென்றதன் மரூஉ. உம்மை நீ எம்மை வேண்டிக்கொள்வதன்றி என்றபொருள்படுதலின் எச்சவும்மை. தன்னிலுங்கடந்தமகிழ்வு தன்னுடையமனத்தை அவசமாக்கு மகிழ்வு. (19)

வடிக்கொண்ட வொள்வேற் படைநம்பிதன் வார்க ழற்கான்
முடிக்கொண் டடியேஞ் சிறந்தேங்கண் முதல்வ வென்னாக்
கடிக்கொண்ட வாய்தற் புடைவந்து கணிப்பில் காத
நொடிக்கொண்ட போழ்திற் படர்துதரை நோக்கி னானால்.

இ - ள். வடிக் கொண்ட ஒள் வேற்படை நம்பிதன் வார் கழல் கால் முடிக்கொண்டு - கூர்மையைக்கொண்ட ஒள்ளியவேலாயுதத்தைத்தரித்த சுப்பிரமணியப்பெருமானுடைய நெடிய கழலையணிந்த திருவடிகளைச் சிரசின்மீது

கொண்டு, முதல்வ அடியேங்கள் சிறந்தேம் என்று - (யாவர்க்கும்) முதலானவரே (தேவரீர் திருவருளைப் புரிந்தமையால்) அடியேமாகிய யாங்கள் உயர்ச்சியுற்றேமென்று கூறி, கடிக் கொண்ட வாய்தல் புடை வந்து கணிப்பு இல் காதம் கொடிக் கொண்ட போழ்தில் படர் தூதரை நோக்கினனால் - காவலைக் கொண்ட வாயிலின்கண் வந்து அளவில்லாத காதவழியை கொடிப்பொழுதிற் செல்லவல்ல தூதுவர்களைப் பார்த்தான் (அவ்விந்திரன்). எ - று.

கள் விகுதிபிரித்துக்கூட்டப்பட்டது. கொடிக்கொண்ட போழ்து, கொடித்தலினளவைக்கொண்டபொழுது. கொடி ஆகு பெயர். ஆல் அசை. (20)

முன்னாகி யுள்ள பலதூதர் முகத்தை நோக்க
வன்னா ரெவருந் தொழுதேபொன் னடிவ ணங்கி
யெந்நா யகனே தமியேஞ்செய்வ தென்கொ லென்னப்
பொன்னா டுடையா னிஃதொன்று புகல லுற்றான்.

இ - ள். முன் ஆகி உள்ள பல தூதர் முகத்தை நோக்க - (தன்) முன்னாகி நிற்கின்ற பல தூதுவருடைய முகங்களைப் பார்க்க, அன்னார் எவருந் தொழுதே பொன் அடி வணங்கி எம் நாயகனே தமியேம் செய்வது என்கொல் என்ன - அவர்கள் யாவருங்கும்பிட்டுப் பொன்போலும் பாதங்களை வணங்கி எங்களரசனே தமியேமாகிய யாங்கள் செய்வதியாது என்றுகேட்க, பொன் நாடு உடையான் இஃது ஒன்று புகலல் உற்றான் - பொன்னகரத்தையுடையனாகிய இந்திரன் ஈதொன்று சொல்லலுற்றான். எ - று.

அன்னார் அவரென்பதன்மரூஉ. தொழுதல், கும்பிடுதல்; அது கைகூப்பல். தமியேம் என்றது ஈண்டு நின்னையன்றி வேறு பற்றுக்கோடில்லேமென்னும் பொருட்டு. கொல் அசை. (21)

மூவர்க்குண் மேலோன் கிரிசேர் முசுகுந்த னாதிக்
காவற் கடவுட் டலைவர்க்குங் ககன மேவுந்
தேவர்க்கு மேனைத் திசையோர்க்கு முனிவ ராயோ
ரேவர்க்கு மெந்தை மணநாளை யெனச்சொல் வீரால்.

இ - ள். மூவர்க்குள் மேலோன் கிரி சேர் முசுகுந்தன் ஆதிக் கடவுள் காவல் தலைவர்க்கும் - மும்மூர்த்திகளுக்குள் மேலவராகிய சிவபெருமானுடைய கைலாயகிரியைச்சேர்ந்த முசுகுந்தன் முதலாகிய தெய்வத்தன்மையை யுடைய (பூலோக) பரிபாலனஞ்செய்யும் அரசர்களுக்கும், ககனம் மேவும் தேவர்க்கும்-ஆகாயலோகங்களிற்பொருந்துந் தேவர்களுக்கும், ஏனைத் திசையோர்க்கும் - மற்றைத்திக்குகளிலுள்ளவர்களுக்கும், முனிவராயோர் ஏவர்க்கும் - முனிவரானவர்கள்யாவருக்கும், நாளை எந்தை மணம் எனச்சொல்வீரால் - நாளைக்கு எந்தையாகிய சுப்பிரமணியப் பெருமானுக்குத் திருக்கல்யாணமென்று சொல்லுவீர். எ - று.

மும்மூர்த்திகள் அயன் அரி அரன். முற்சனனத்திற் கைலாயகிரியிலே முசுவாயிருந்ததுபற்றி மூவர்க்குண்மேலோன் கிரிசேர் முசுகுந்தனென்றார். காவற்றலைவராது நீற்குண நற் செய்கைகள் உலகபாலருருவாய்நின்று உலகத்தைக்காத்தலின் காவற்கடவுட்டலைவர்க்கும் என்றார். ககனம் ஆகுபெயர். தேவர், ஈண்டுத்தேவகதியைச்சார்ந்தவர்யாவருமென்க. திசையோரும் அத்தேவகதியினரேயாம். ஆல் அசை. (22)

கந்தக் கடவுண் மணத்தன்மை கழறி வல்லே
யிந்தப் பொருப்பி னிடையாவரு மீண்டும் வண்ணந்
தந்திட் டிடுங்க ளெனவாசவன் சாற்ற லோடு
மந்தக் கணத்திற் றெழுதொற்ற ரகன்று போனார்.

இ - ள். கந்தக் கடவுள் மணத் தன்மை கழறி வல்லே இந்தப் பொருப்பினிடை யாவரும் ஈண்டும் வண்ணம்

தந்திட்டிடுங்கள் எனவாசவன் சாற்ற லோடும் - சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கல்யாணத்தின் தன்மையைச் சொல்லி விரைவில் இத்திருப்பெருங்குன்றத்தின்கண் யாவருஞ்சாரும்படி (அவர்களைக்) கொணர்ந்திடுவீரென்று இந்திரன் சொல்லுதலும், ஒற்றர் அந்தக்கணத்தில் தொழுது அகன்று போனார் - அத்தூதுவர்கள் அப்பொழுதே (அவ்விந்திரனை) வணங்கி (அவ்விடத்தை) நீங்கிச்சென்றார்கள். எ - று.

கந்தக்கடவுள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; கந்தன் சிறப்புப்பெயர். கடவுள் பொதுப்பெயர். யாவரும் மேலே சொல்லிய அரசாதியோர் யாவரையுமென்க. (23)

வேறு

போனபொழு திற்புலவர் செம்மல்புலன் மிக்க
வானவர்கள் கம்மியனை வல்லையில் விளித்துக்
கானமர் கடம்புபுனை காளைதன் மணத்துக்
கானசெயன் முற்றுற வமைத்தியிவ னென்றான்.

இ - ள். போன பொழுதில் - (அத்தூதுவர்கள்) சென்றகாலையில், புலவர் செம்மல் புலன் மிக்க வானவர்கள் கம்மியனை வல்லையில் விளித்து - தேவர்க்கு அரசனாகிய இந்திரன் அறிவின்மிகுந்த தேவத்தச்சனாகிய விசுவகன்மாவை விரைவில் அழைத்து, கான் அமர் கடம்பு புனை காளைதன் மணத்துக்கு ஆன செயல் முற்றுற இவண் அமைத்தி என்றான் - நறுமணம் பொருந்திய கடப்பமலர் மாலையையணிகின்ற காளையாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருமணத்துக்கு (வேண்டுவ) தான காரியங்கள் யாவற்றையும் இங்ஙனம் இயற்றுவாயென்றான். எ - று.

கடம்பு ஆகுபெயர். காளை இளமையையுடையர் என்பதைக் குறித்துநின்றது. செயல் செயலாலாகுங் காரியம். (24)

புலவன துளங்கொடு பொருப்பினொரு சாரி
னிலமிசை வரைப்பக னிதிக்கொடு விதித்துக்
குலமணி குயிற்றிநனி கோலம தியற்றி
வலனுயர் சிறப்பினொரு மண்டப மமைத்தான்.

இ-ள். புலவனது உளங் கொடு பொருப்பின் ஒரு சாரில் மிசை நிலம் வரைப்பு அகல் நிதிக்கொடு விதித்து - இந்திரனுடைய எண்ணப்படி அத்திருப்பரங்குன்றின் ஒரு சார்பிலே மேலாகிய இடத்தில் எல்லை நீங்கிய பொன் கொண்டியற்றி, குலம் மணி குயிற்றி நனி கோலமது இயற்றி - (நல்ல) சாதியாகிய அரதனங்களையழுத்தி மிக அழகைச்செய்து, வலன் உயர் சிறப்பின் ஒரு மண்டபம் அமைத்தான் - மேலாகவுயர்ந்த சிறப்பினையுடைய ஒரு மண்டபத்தைச் செய்தான் (அத்தேவகம்மியன்). எ - று.

உளம் ஆகுபெயர். மண்டபத்தை இயற்றுமிடத்து ஒரு பொருளால் ஒருவாறு செய்துமுடித்து அதன்மீது ஒப்பனை செய்வதே முறைமையாதலின் முன்னர் நிதிகொடுவிதித்து எனப் பட்டது. குலமணி உதயகிரியிற் சிந்தூரவருவியாரூடப் பெற்றுப் பதினறுயுகம்வரையி லொளியேறி அவ்வொளியா லிருளையோட்டவல்ல மாணிக்கம் இந்திரநீலம் சூரியகாந்தம் ஆதியன. (25)

மேலைநில முற்றுற விதானவகை போக்கி
மாலையொடு பல்கவரி வான்றுகில்க டூக்கி
யாலய நனந்தலையி லாறுமுகன் வைக
நூலின்முறை நாடியொரு நோன்றவி சமைத்தான்.

இ-ள். மேலை நிலம் முற்றுற விதான வகை போக்கி - மேலிடமுழுதும் மேற்கட்டி வகையைச்செய்து, மாலையொடு பல் கவரி வான் துகில்கள் தூக்கி - மாலைகளும் பல

வாகிய சாமரங்களும் பெருமையாகிய கொடிகளுந் தூக்கி, ஆலயம் நனந்தலையில் ஆறுமுகன் வைக நூலின் முறை நாடி ஒரு நோன் தவிசு அமைத்தான் - அக்கோயிலின் நடுவே ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் இருந்தருளுதற்குச் சிற்பநூலின்முறையே ஆராய்ந்து ஒரு பெருமையாகிய ஆசனத்தை இயற்றினன் (அத்தேவ கம்மியன்). எ - று.

விதானவகை, பலநிறமும் பலசெயலுமுடையமேற்கட்டி. மேற்கட்டியை நீளவிரித்துக்கட்டுதலாற் போக்கி என்முர். ஒரு எண்ணுடு. வைக என்னுஞ் செயவெனெச்சம் ஈண்டு காரியப் பொருட்டு. (26)

வேதநெறி தந்திடு விசாகனயல் வந்த
மாதவன் விரிஞ்சன்முதல் வானவர்கள் யாரு
மேதிலரும் வைகவியல் கின்றவிடை தோறு
மாதனம் வரம்பில வமைத்தன னிமைப்பில்.

இ - ள். வேத நெறி தந்திடு விசாகன் அயல் வந்த மாதவன் விரிஞ்சன் முதல் வானவர்கள் யாரும் ஏதிலரும் வைக - (உலகத்தில்) வேதநெறியைத் தந்தருளிய சுப்பிரமணியப்பெருமானுக்குப் பக்கத்தில் வரும் அரியும் அயனும் முதலாகிய தேவர்கள் யாவரும் மற்றையோரும் இருத்தற்கு, இயல் கின்ற இடை தோறும் வரம்பு இல ஆதனம் இமைப்பில் அமைத்தனன் - ஏற்ற இடந்தோறும் அளவில்லாதனவாகிய ஆசனங்களையும் இமைப்பொழுதிலியற்றினன் (அத்தேவகம்மியன்). எ - று.

அகத்தியமுனிவருக்கு உணர்த்தி அவர் வாயிலாக உலகில் அந்நெறியைப் பரப்பியருளியதால் வேதநெறிதந்திடு விசாகனென்முர். சூரனுதியவசுரர்களாலே திறம்பியவேதநெறியை அவர்களையழித்துத் திறம்பாதிருத்தியதுபற்றிக் கூறினுரெனினு

மலைமடம். வந்த இயல்பினின் வருங்கால வழுவமைதிக்கிளவி. இங்ஙனம் வருவனவற்றையெல்லா முய்த்துணர்க. ஏதிலர், வீரவாகுதேவராதியோரும் முனிவரும் முசுகுந்தனாதியவரசரும் பிறருமென்க. இயல்கின்றவிடம், அவரவரிருத்தற்குத் தக்கதக்க விடம். (27)

மன்றல்பயில் கின்றவது வைக்களன் மருங்கிற்
குன்றுபுரை பல்சிகர கோபுரம் வகுத்தா
னன்றிமணி மண்டப மளப்பில வமைத்தா
னின்றியமை யாப்பொதுவு மெண்ணில விழைத்தான்.

இ - ள். மன்றல் பயில்கின்ற வதுவைக் களன் மருங்கில் குன்று புரை பல் சிகர கோபுரம் வகுத்தான் - திருக்கல்யாணஞ் செய்கின்ற திருமணச்சாலையின்பக்கத்தே மலையைநிகர்த்த பலவாகிய முடிகளையுடைய கோபுரத்தையுமியற்றினன், அன்றி அளப்பு இல மணி மண்டபம் அமைத்தான் - (அஃது) அன்றி அளவிடுதலில்லாதனவாகிய அரதனமண்டபங்களையும் இயற்றினன், இன்றியமையா என் இல பொதுவும் இழைத்தான் - இன்றியமையாத எண்ணில்லாதனவாகிய அம்பலங்களையும் இயற்றினன் (அத்தேவகம்மியன்). எ - று.

இன்றியமையாத என்னும் எதிர்மறைப்பெயரெச்சத் திறுதி கெட்டது. உம்மை உயர்வுசிறப்போடு எண்ணுப்பொருளையும் எச்சப்பொருளையுந் தந்துநின்றது. (28)

காலம்வரை யாதுகரு துற்றபொழு தெல்லாஞ்
சாலவெவர் கண்ணுநனி தம்பயன் வழங்குஞ்
சோலைமலர் வாவிகள் சுனைத்தொகை தொகுத்தா
னேலும்வது வைக்குரிய வேனவு மளித்தான்.

இ - ள். காலம் வரையாது கருதுற்ற பொழுது எல்லாம் - காலம் வரையாமல் எண்ணியபொழுதெல்லாம்,

எவர்கண்ணும் தம் பயன் சால் நனி வழங்குஞ்சோலை மலர் வாவிகள் சுனைத் தொகை தொகுத்தான் - எவர்க்குந் தம் பயனை அதிகந்தருஞ் சோலைகளையும் மலர்வாவிகளையுஞ் சுனைக் கூட்டத்தையும் இயற்றினன், எலும் வதுவைக்கு உரிய எனவும் அளித்தான் - (ஆண்டுப்) பொருந்துந் திருமணத்துக்குரிய மற்றைப்பொருள்களையும் இயற்றினன் (அத்தேவகம்மியன்). எ - று.

உலகத்திலுள்ள மரங்கள் கொடிகள் புதல்களாகியவை கார்காலமாதிய பெரும்பொழுதுகளிலும் காலை யாதிய சிறுபொழுதுகளிலும் ஒவ்வொருகாலத்திற் றத்தம் பயனைக்கொடுப்பன. அவைபோலாது எக்காலத்துந் தம்பயனைக் கொடுக்கவல்லன் என்பார் காலம்வரையாது கருதுற்றபொழுதெல்லாந் தம்பயன் வழங்கும் என்றும் உலகத்திலுள்ள மரங்களாதியவை தம்பயனைக் கொடுக்கக்குறைவுறும். அவை அங்ஙனங் குறைவுறுவென்பார் எவர்கண்ணுஞ் சாலசனிவழங்கும் என்றுங் கூறினரென்க. சால நனி ஒருபொருட்பன்மொழி. பயன்வழங்கல், தளிர் பூ காய் பழங்களிற்றத்தமக்கேற்பது கொடுத்தல். மலரைச் சுனைக்குங்கூட்டுக. வாவி பெருநீர்நிலை. சுனை சிறுநீர்நிலை. தொகுத்தல், ஈண்டு அதிகமாக வியற்றல். வதுவைக்குரிய எனவும் என்றது அட்டமங்கலம் ஆதியன. (29)

அவ்வகை யெலாம்புலவ னங்ஙனம் வகுப்பச்
செவ்விது தெரிந்துவகை செய்தமரர் செம்மல்
மெய்வதுவை யாற்றும்வழி வேண்டுகர ணங்க
ளெவ்வெவையு மங்கவனெ ரிமைப்பில்வரு வித்தான்.

இ - ள். புலவன் அவ்வகை எலாம் அங்ஙனம் வகுப்ப - அத்தேவகம்மியன் அவ்வகையே (வேண்டுவன) எல்லாவற்றையும் அவ்வாறியற்ற, அமரர் செம்மல் செவ்விது தெரிந்து உவகை செய்து - தேவர்க்கரசனாகிய இந்திரன் (அவற்றைச்) செவ்விதாகக்கண்டு மகிழ்ச்சிகொண்டு, மெய்

வதுவை ஆற்றும்வழி வேண்டு கரணங்கள் எவ்வெவையும் ஓர் இமைப்பில் அங்கண் வருவித்தான் - மெய்ம்மையாகிய திருமணஞ்செய்யுமிடத்துவேண்டும் உபகரணங்கள் எவற்றையும் ஓரிமைப்பொழுதில் அங்ஙனம் வருவித்தான். எ-று.

வதுவையாற்றும்வழி வேண்டுமுபகரணங்கள் பால் நெய் தேன் பழமாதியவும் தருப்பை சமித்து ஆதியவும் என்க. (30)

தேவர்முதல் வன்றனது செய்கையிது நிற்க
ஏவல ரிசைத்திடலு மிவ்வதுவை காணக்
கோவியல் புரிந்தமுசு குந்தனெனு நேமிக்
காவலன் வரும்பரிசு கட்டுரைசெய் கிற்பாம்.

இ-ள். தேவர் முதல்வன்றனது இது செய்கை நிற்க-தேவர்களுக்கு முதல்வனாகிய இந்திரனது இச்செயல் நிற்க, ஏவலர் இசைத்திடலும் கோ இயல்புரிந்த முசுகுந்தன் எனும் நேமிக் காவலன் - (அவ்விந்திரனுடைய) தூதுவர்கள் (சுப்பிரமணியப் பெருமானுடைய திருமணத் தன்மையைக்) கூறுதலும் அரசியலைச் செய்கின்ற முசுகுந்தனென்னும் பூமிக்கரசனானவன், இவ் வதுவை காண வரும் பரிசு கட்டுரைசெய்கிற்பாம் - இத்திருக்கல்யாணத்தைத் தரிசிக்கும்படி வருந்தன்மையைக் கூறுவாம். எ - று.

இது என்பது ஈண்டுச் சுட்டுமாத்திரையாக நின்றது. செய்கையாகிய இதுவெனினுமமையும். அரசியலைப் புரிதலாவது கல்விகேள்விகளானாய அறிவுடையனாகியும் அமைச்சு நாடு அரண் பொருள் படை நட்பு என்னும் அங்கங்களையுடையனாகியுமிருந்து பகைவரையழித்தலுந் திறைகோடலுந் தன்னுடிதலையளித்தலும் ஆதியவற்றாற் பொருள்களைமேன்மேலு முளவாக்கி அவற்றை ஒருவழித்தொகுத்துப் பகைவர் கள்வர் சுற்றத்தார் வினைசெய்வார் ஆதியர் கொள்ளாமற்காத்து அங்ஙனங் காத்தபொருளை அறம் பொருள் இன்பங்களின்பொருட்டு விடுத்தலாதிய செயலைப் புரிதலென்க. நேமிக்காவலன் சக்கரவர்த்தியெனினுமமையும். ()

கல்லருவி தூங்குகயி லைப்பொழிலின் மேனா
ளல்லுறழ் மிடற்றவனு மம்பிகையு மாக
வெல்லையின் மகிழ்ச்சியொ டிருப்பமுசு வீட்டம்
வில்லுவ மரந்தொறும் வியன்சினையி லுற்ற.

இ - ள். மேல் நாள் - முன்னை நாளிலே, கல் அருவி தூங்கு கயிலைப் பொழிலில் அல் உறழ் மிடற்றவனும் அம்பிகையும் ஆக எல்லை இல் மகிழ்ச்சியோடு இருப்ப - கல்லென்னும் ஒலியையுடைய அருவி பொழிகின்ற கைலாய கிரியிலுள்ள சோலையிலே இருளைநிகர்த்த திருமிடற்றினையுடைய சிவபெருமானும் உமாதேவியாருமாக முடிவில்லாத களிப்புடனிருக்க, முசு ஈட்டம் வில்லுவ மரந்தொறும் வியன் சினையில் உற்ற - முசுக்கூட்டங்கள் (ஆண்டுள்ள) வில்வமரந்தோறும் பெரிய கொம்பர்களிலிருந்தன. எ - று.

கல், ஒலிக்குறிப்பு. ஆக என்றது மற்றொருவருமின்றி என்னும் பொருளைத்தந்தது; இது ஓரிடைச்சொல். ஒடு அடைமொழிப் பொருளினின்றது. (32)

முற்றுணர் கருத்தின்முனி வோர்களென முள்காந்
துற்றிடு முசுக்கலையு ளொன்றிருவர் மீது
மற்றொருவில் வத்திலை வரம்பில பறித்துத்
துற்றிடுவ தென்னநனி தூர்த்துலதை யன்றே.

இ - ள். முற்று உணர் கருத்தின் முனிவோர்கள் என முள்காந்து உற்றிடு முசுக்கலையுள் ஒன்று - முற்றுணர்ந்த மனத்தினையுடைய முனிவர்களைப்போல மௌன முற்று (அங்ஙனம்) இருக்கின்ற முசுவினங்களுளொன்று, மற்றொரு வில்வத்து இலை வரம்பு இல பறித்துத் துற்றிடுவது என்ன - ஒரு வில்வமரத்தினிலைகளளவில்லாதனவற்றைப் பறித்துக் குவிப்பதுபோல, இருவர்மீதும் நனி தூர்த்-

துளது - உமாமகேசுவரராகிய அவ்விருவர்மீது மிகவுந் தூர்த்தது. எ - று.

முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. முற்றுணர்தல், நாத முதற் பிருதிவியீறான தத்துவங்களின்றன்மைகள் யாவற்றையு முணர்தல். தத்துவஞானமுடையவர் அறிவினாலே சிவத்தைத் தரிசித்துப் பேரின்பமடைந்து மௌனமுற்றிருப்பதுபோல அம்முசுக்கலைகளும் அவர்களைத் தரிசித்து இன்பமுற்று மௌன மாயிருந்தன என்றவாறு. மற்று ஐ அன்று எ அசைகள். தூர்த்தல், நிரப்புதல். (33)

தூர்த்ததொரு காலைதனிற் சுந்தரி பொருவளாய்ச்
சீர்த்திடலு மாங்கவள் செயற்கைதனை யண்ணல்
பார்த்துநமை யீண்டுவழி பட்டுளது தன்னை
வேர்த்திடுவ தென்னிது விடுத்தியினி யென்றான்.

இ - ள். தூர்த்ததொரு காலைதனிற் சுந்தரி பொருளாய் சீர்த்திடலும் - (அம்முசுக்கலை அங்ஙனந்) தூர்த்த லான காலையில் உமாதேவியார் பொருதவராய் வெகுளவும், ஆங்கவள் செயற்கைதனை அண்ணல் பார்த்து - அவருடைய செயலைச் சிவபெருமானோக்கி, ஈண்டு நமை வழிபட்டுளது தன்னை வேர்த்திடுவது என் இனி இது விடுத்தி என்றான் - இங்ஙனம் எங்களை வழிபாடு செய்துகொண்டிருப்பதாகிய முசுக்கலையை (நீ) வெகுளுவதென்னை? இனி இவ்வெகுட் சியை விடுவாயென்று திருவாய்மலர்ந்தருளினர். எ - று.

தூர்த்தது தொழிற்பெயர். ஒரு அசை; ஓர் என்பதன் றிரிபு. ஆங்கவள் ஒரு சொல். (34)

என்றிடலு மம்பிகை இகற்சின மிலாளாய்
நன்றருள் புரிந்திடலு ஞானவடி வானோன்
வன்றிறன் முசுக்கலை மனத்திரு ளகற்றி
யொன்றியபர் வாலுணர் வொருங்குதவி னனல்.

இ - ள். என்றிடலும் அம்பிகை இகல் சினம் இலாளாய் நன்று அருள் புரிந்திடலும் - என்று (சிவபெருமான்) திருவாய் மலர்ந்தருளவும் அவ்வுமாதேவியார் கோபமில்லாதவராய் நன்மையாகிய திருவருளைச் செய்யவும், ஞானவடிவு ஆனோன் வல் திறல் முசுக்கலை மனத்து இருள் அகற்றி ஒன்றி அமர் வால் உணர்வு ஒருங்கு உதவினனால் - ஞான வடிவாகிய சிவபெருமான் வலிய அம்முசுக்கலையினது மனத்திலுள்ள அவிச்சையைநீக்கி (அதனிடத்துப்) பொருந்தியிருக்கும் மெய்யறிவை ஒரு சேரக்கொடுத்தருளினர். எ - று.

வன்றிறல் ஒரு பொருட்பன்மொழி. இன்னதன்மைத்தெனஒருவராலுங் கூறப்படாமையின் அவிச்சையை இருளென்றார். அனாதியே ஆன்மாவிடத்துள்ள வாலறிவு மலத்தான் மறைக்கப்பட்டு நீங்காதிருத்தல்பற்றி ஒன்றியமர்வாலுணர் வென்றார் உதவுதல், ஈண்டு மலமறைப்பை நீக்கித் தன்னியல்பை விளக்கல். ஆல் அசை. ஞானவடிவானோனென்னும் விசேஷியம்மனத்திருளகற்றி வாலுணர்வொருங்குதவ வல்லனென்பதை உட்கொண்டிருத்தலால் இது கருத்துடையடைகொளியணி. (35)

மெய்யுணர்வு சேர்தலும் வியன்சினையி னின்று
மொய்யென விழிந்துமுசு வுட்குவர லெய்தி
ஐயனையு மாய்தனையு மார்வமொடு தாழ்ந்து
பொய்யடிய னேன்பிழை பொறுத்திரென லோடும்.

இ - ள். முசு - அம்முசுக்கலையானது, மெய் உணர்வு சேர்தலும் உட்கு வரல் எய்தி - (தனக்கு) மெய்யறிவு வருதலும் அஞ்சுதல் வருதலைப்பெற்று, வியன் சினையில் நின்றும் ஒய்யென விழிந்து - பெருமையாகிய (அவ்வில்வ மரத்தின்) கொம்பரினின்றும் விரைவிலிறங்கி, ஐயனையும் ஆய்தனையும் ஆர்வமொடு தாழ்ந்து - பரமபிதாவும் மாதாவுமாகிய சிவபெருமானையும் உமாதேவியாரையும் அன்போடு

வணங்கி, பொய் அடியனேன் பிழை பொறுத்திர் எனலோடும் - பொய்ம்மையாகிய அடியேனது பிழையைப் பொறுத்தருள்வீரென்று கூறுதலும். எ - று.

ஒய்யென விரைவுக்குறிப்பு. (36)

பிழையிதென வச்சமொடு பேசலெமை யீண்டே
விழுமியதோர் கூவிளையின் மெல்லிலைக ளிட்டு
வழிபடல் புரிந்தனை மனுக்குல முதித்து
முழுதுலகை யாளுகென முன்னவன் மொழிந்தான்.

இ - ள். இது பிழை என அச்சமொடு பேசல் - இது பிழையென்று அச்சத்தோடு கூறுதே, ஈண்டே விழுமியதோர் கூவிளையின் மெல் இலைகள் இட்டு எமை வழிபடல் புரிந்தனை - இங்ஙனஞ் சிறந்த வில்வத்தினது மென்மையாகிய இலைகளைத் தூவி எம்மை வழிபாடுபுரிந்தாய், (ஆதலால்) மனுக்குலம் உதித்து உலகு முழுதை ஆளுக என முன்னவன் மொழிந்தான் - மனுச்சக்கரவர்த்தியுடைய குலத்திற் பிறந்து உலகமுழுவதையும் ஆளக்கடவாயென்று (யாவர்க்கும்) முன்னவராகிய சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார். எ - று.

பேசல் எதிர்மறை யேவலொருமை வினைமுற்று. ஏ ஒர் அசைகள். மனுகுலமெனற்பாலது மனுக்குலமென விரிக்கும்வழி விரிந்தது. மானுடகுலமெனினுமமையும். மனுச்சக்கரவர்த்தி சூரியகுலத்தரசன். ஐயுருபு பிரித்துக்கூட்டப்பட்டது. முற்றும்மை விகாரத்தாற்றொக்கது. ஆளுக என்னும் வியங்கோளிறுதிகெட்டது. (37)

வேறு

அம்மொழி தேர்தலு மாயதோர் கள்வன்
கைம்மிக லுற்ற கலங்கலு ரெய்தி
விம்மி யிரங்கி விதிர்ப்பொ டெழுந்தே
யெம்மிறை வற்றொழு திவ்விவை செப்பும்

இ - ள். அம்மொழி தேர்தலும் ஆயதொர் கள்வன் - அத்திருவார்த்தையை உணர்தலும் அம்முசுக்கலையானது, கைம்மிகல் உற்ற கலங்கு அளுர் எய்தி விம்மி இரங்கி விதிர்ப்பொடு எழுந்தே எம் இறைவன் தொழுது - அதிகப் படுதலுற்ற கலங்குகின்ற துன்பமடைந்து பொருமி இரங்கி நடுக்கத்தோடெழுந்து எமதிறைவராகிய சிவபெருமானை வணங்கி, இவ்விவை செப்பும் - இவற்றைச் சொல்லும். எ - று.

சத்தமாதிய புலன்கள் பொறிவழிச்சென்று மனத்திற்சார அதனுல் அவற்றை ஆன்மா உணர்தல்பற்றித் தேர்தலும் என்று ரென்க. ஆயது அது என்னுஞ்சுட்டுப் பெயரின்மருஉ; அது ஈண்டுச் சுட்டுமாத்திரையா நின்றது. ஒர் எ அசைகள். கைம்மி கல் ஒருசொல். இவ்விவை என்றதில் இ சுட்டுப்பொருளைத்தர இவை பெயர் மாத்திரையாநின்றது. (33)

நுங்களை வைகலும் நோக்கி யுவப்பா
யிங்குறை கின்ற திகந்து நிலம்போய்
மங்குறு செல்வ வலைப்படு வேனே
லெகாள் பிரான்பினை யெங்ஙன முய்கேன்,

இ - ள். நுங்களை வைகலும் நோக்கி உவப்பாய் இங்கு உறைகின்றது இகந்து - (பரமபிதாவுமாதாவுமாகிய) உங்களை எந்நாளும் பார்த்து மகிழ்ச்சியாய் இங்ஙனம் இருக்கின்றதைவிட்டு, நிலம் போய் மங்கு உறு செல்வ வலைப் படுவேனேல் - பூமியிற்சென்று (பிறந்து) அழிதலுறு கின்ற செல்வமாகிய வலையிற்படுவேனுயின், எங்கள் பிரான் பினை எங்ஙனம் உய்கேன் - எங்களிறையவரே (அடியேன்) பின்னெவ்வாறுய்வேன். எ - று.

உம்மை முற்றும்மை. உறைகின்றது தொழிற்பெயர். மங்கு முதனிலைத் தொழிற்பெயர். வலைப்படுவேனேல் என்றது தன்மை

யொருமை வினைமுற்றினிறுதியில் எல் என்னுந் தெரிநிலைவினையெச்சவிகுதிபுணர்ந்து வினையெச்சக் கிளவியாய் நின்றது. அங்ஙனமே வினைமுற்றுக்கள் எனின் ஆயின் எனும் என்னுந் தெரிநிலை வினையெச்சவிகுதிகளோடும் புணர்ந்து வினையெச்சக் கிளவிகளாய் நிற்குமென்க. பிரான் அண்மைவிளியாதலின் இயல்பாநின்றது. பின்னை பினையென னகரந்தொகுத்துநின்றது. உய்கேன் என்னுந் தன்மையொருமை வினைமுற்று உய் என்னும் பகுதியும் தன்மை யொருமையையும் எதிர்காலத்தையுமுணர்த்துங் குவ்விகுதியும்பெற்று அதன்மீது விகுதிமேல் விகுதியாக என் விகுதியும்பெற்று முடிந்தது. (39)

என்னலு மன்னதை யெம்மிறை கேளா
நின்னுள நன்று நிலத்திடை வைகி
பின்னிவண் மீள்குதி பேதுற லெய்தி
முன்னலை யாது முசுக்கலை யென்றான்.

இ - ள். என்னலும் அன்னதை எம் இறை கேளா - என்று சொல்லுதலும் அவ்வார்த்தையை எமதிறைவராகிய சிவபெருமான் கேட்டு, முசுக்கலை-முசுக்கலையே, நின் உளம் நன்று - நின்னுடைய எண்ணம் நல்லது, நிலத்திடைவைகிப் பின் இவண் மீள்குதி - பூமியின்கண்ணே (அங்ஙனம்) இருந்து பின்னர் இங்ஙனந் திரும்பிவருவாய், பேதுறல் எய்தி யாதும் முன்னலை என்றான் - உளம் வேறுபடுதல் அடைந்து யாதுமெண்ணுதேயென்று திருவாய்மலர்ந்தருளினார் (சிவபெருமான்.) எ - று.

அன்னது அது வென்னுஞ் சுட்டுப்பெயரின்மரூஉ. உளம் ஆகுபெயர். மீள்குதி முன்னலை இவ்விரண்டும் ஏவல் வினைமுற்று. யாது என்னும் வினுப்பெயர் ஈண்டு அற்பம் என்னும் பொருடந்து நின்றது. யாதும் முன்னலை என்றதற்கு மிகநினையாதிருத்தலன்றி அற்பமும் நினையாதேயென்று பொருள்படுதலின் எச்சவும்மை முசுக்கலை அண்மைவிளியாதலின் இயல்பானது.

பொய்ம்மறை யான புலாலுடல் போற்றி
யம்மையில் வாழ்விடை யற்ற முறாமே
யிம்முக னோடுற வெற்கரு ளென்னு
மெய்ம்முசு வின்கலை வேண்டிய தன்றே.

இ - ள். பொய் மறை ஆன புலால் உடல் எய்தி அம்மையில் வாழ்விடை அற்றம் உறாமே - மலங்களை மறைப்பதாகிய ஊனுடலையடைந்து அப்பிறப்பில் வாழ்ந்த விடத்து (யான்) மறதியுறாமல், இம்முகனோடு உற எற்கு அருள் என்னு மெய் முசுவின்கலை வேண்டியதன்றே - இந்த முகத்தோடிருக்க எனக்கருள் புரிவீரென்று மெய்ம்மையாகிய முசுக்கலையானது வேண்டிக்கொண்டது. எ - று.

உடலின்மேலிடத்துள்ள மெய்யழகு உள்ளிடத்துள்ள இரத்தமாதிய மலத்துக்கு இல்லாமைபற்றி அம்மலத்தைப் பொய் யென்றாரென்பது. மறை முதனிலைத்தொழிற்பெயர். அற்றம், சோர்வு; ஈண்டு மறதி. உறாமே மேஈற்று எதிர்மறைவினையெச்சம். இம்முகனோடுற என்றது இந்த முகம்போலு முகத்தோடிருக்க என்றபடி. அருள் ஆய்விகுதி புணர்ந்துகெட்ட ஏவல் வினைமுற்று. சிவபெருமானால் மெய்யுணர்வருளப் பெற்றமையின் மெய்ம்முசுவின்கலை என்றார். இன் அல்வழிச்சாரியை. அன்றும் ஏயும் அசைகள். (41)

அற்றமி லவ்வர மைய னளிக்கப்
பெற்றருள் கொண்டு பெருங்கயி லாயப்
பொற்றை யகன்று பொருக்கென விம்பர்
மற்றோர் கணத்தினில் வந்தது மன்னே.

இ - ள். அற்றம் இல் அவ்வரம் ஐயன் அளிக்கப் பெற்று - குறைவின்மையாகிய அவ்வரத்தைச் சிவபெருமான் கொடுக்கப்பெற்று, அருள்கொண்டு - அன்புகொண்டு, மற்றோர்கணத்தினில் பெரும் கயிலாயப்பொற்றை அகன்று

பொருக்கென இம்பர் வந்ததுமன்னோ - ஒருகணப் பொழுதினிற் பெருமையாகிய கயிலாயகிரியை நீங்கி விரைவிலே இப்பூமியில் வந்தது (அம்முசுக்கலை.) எ - று.

அற்றம் மெலிவு; ஈண்டுக்குறைவு. அருள் ஈண்டு அன்பு; இது "அருளென்னுமன்பீன்குழவி" என்றமையின் காரணத்தைக் காரியமாகவுபசரித்ததென்பது. பொருக்கென விரைவுக் குறிப்பு. மற்றும் மன்னும் ஒவும் அசைகள். (42)

ஆரஞர் மூழ்கியு மாக்க மிழந்தும்
வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித்
தாரணி யாளரிச் சந்திர னென்போ
னோர்மரு மானென வேயுதித் தன்றே.

இ - ள். ஆர் அஞர் மூழ்கியும் ஆக்கம் இழந்தும் வாரி சுருங்கியும் வாய்மை நிறுத்தித் தாரணி ஆள் - நிறைந்த துன்பக் (கடலுள்) மூழ்கியுந் (தன்) செல்வத்தையிழந்தும் வருவாய் சுருங்கியும் மெய்ம்மையை நிலைநிறுத்திப் பூமியையரசாண்ட, அரிச்சந்திரனென்போன் ஓர் மருமான் எனவே உதித்தன்றே - அரிச்சந்திரனென்பவனது ஒரு வழித் தோன்றலாகத் தோன்றியது (அம்முசுக்கலை). எ - று.

ஆரஞர், பொறுத்தற்கரிய துன்பமெனினுமமையும்; அது மனைவியையும் மகனையும் விற்றலாதியவற்றால் வருந்துன்பம். மூழ்கியும் என்றதற்கேற்பத் துன்பக்கடலென்றுமென்க. கௌசிக முனிவரதெண்ணப்படி ஒரு பொய் சொல்லின் ஆரஞர்மூழ்கலாதியவை வாராவென்பதையுணர்ந்தும் அவரால் அவையெல்லாம் வருவதைக் கண்டும் அனுபவித்தும் அசையாது வாய்மையாகிய பேரறத்தை நிறுத்தினவன் என்பார் ஆரஞர்மூழ்கியும்... தாரணியாளரிச்சந்திரன் என்றார். ஏ இரண்டும் அசைகள். (43)

மாமுக மேமுசு மற்றுள வெல்லாங்
காமரி லேர்தரு காட்சிய தாகிக்
கோமுறை சேர்முசு குந்த னெனுவோர்
நாம வியற்பெயர் நண்ணிய தன்றே.

இ - ள். மா முகமே முசு - பெருமையாகிய முகமே முசுவடிவம், மற்றுள எல்லாம் காமரில் ஏர் தரு காட்சியது ஆகி - பிறிதாகியுள்ள உறுப்புக்களெல்லாம் மன்மதனினும் அழகைச் செய்கின்ற தோற்றமாகி, கோ முறை சேர் முசுகுந்தன் எனு ஓர் இயல் பெயர் நாமம் எண்ணியது - இறைமாட்சி சேர்ந்த முசுகுந்தனென்று ஒரு இயற்பெயராகிய நாமதேயத்தை யடைந்தது (அம்முசுக்கலை). எ - று.

ஏகாரம் பிரிநிலை. முசு ஆகுபெயர். காமர் உயர்வினால் வந்த பால்வழுவமைதி. இயற்பெயர் நாமம் இருபெயரொட்டுப்பண்புத்தொகை. நாமவியற்பெயர் என்றதற்கு தனது சாதிப் பெயரை யுடைய வியற்பெயரெனினுமமையும். அன்றும் ஏயும் அசைகள்.().

ஆய வழிப்படு மம்முசு குந்தன்
றூய பொலன்முடி தொன்முறை சூடி
மாயிரு ஞால வளாகம துள்ள
தேய மெலாமொர் செகிற்கொடு காத்தான்.

இ - ள். ஆய வழிப் படும் அம்முசுகுந்தன் - அவ்வழியிற்றோன்றிய அந்த முசுகுந்தனனவன், தூய பொலன் முடி தொல் முறை சூடி - தூய்மையாகிய பொற்கிரீடத்தைப் பழைமையாகிய முறைப்படி தரித்து, மா இரு ஞால வளாகமது உள்ள தேயம் எலாம் ஓர் செகில் கொடு காத்தான் - பெருமையாகிய பூமண்டலத்திள்ள தேயங்களெல்லாவற்றையும் ஒருதோண்மேற்கொண்டு காவல்செய்தான். எ - று.

ஆய அகரச்சுட்டின்மரூஉ. வழி, குலம். முடி தொன்முறை சூடல் முனிவராராகிய பெரியோர்கள்கூடி விசேஷதீர்த்தங்களால் அபிஷேகித்து முடிதரிக்கப்பெறுதல். மா இரு ஒருபொருட் பன்மொழி. வளாகம், வளைந்தவிடம். தீக்கொளுவுவார் நஞ்சிடுவார் கருவியிற்கொல்வார் கள்வர் ஆறலைப்பார் சூறைகொள்வார் பிறனில் விழைவாராதிய கொடியவர்களால் வருந்துன்பங் களைத லாகிய பாரத்தை தேயங்களிலுள்ளார் தாங்காது சுகமுறத்தானே தாங்கிக் காப்பவனென்பார் தேயமெலாமொர் செகிற்கொடு காத்தானென்றார். (45)

ஒவறு சீர்க்கரு வூரிடை மேவிக்
கோவிய லோம்புறு கொள்கைய னாகித்
தேவரை யேவல்கொள் சீர்கெழு சூரன்
காவலி னாணை கடக்கல னுற்றான்.

இ-ள். ஓ அறு சீர்க் கருவூரிடை மேவிக் கோ இயல் ஓம்பு உறு கொள்கையன் ஆகி - ஒழிதலில்லாத சிறப்பினையுடைய கருவூரென்னு நகரத்தின்கட் சார்ந்து அரசியலைக் காத்தலுறுகின்ற கோட்பாடுடையனாகி, தேவரை ஏவல் கொள் சீர் கெழு சூரன் காவலின் ஆணை கடக்கலன் உற்றான் - தேவர்களை யேவல்கொண்ட புகழையுடைய சூரபன்மனது காவலாகிய ஆணையைக்கடவாதிருந்தான் (அம்முசுகுந்தன்). எ - று.

ஓ ஓம்பு இவ்விரண்டும் முதனிலைத்தொழிற்பெயர்கள். இன் அல்வழிச்சாரியை. கடக்கலன் என்னும் எதிர்மறைவினைமுற்று வினையெச்சமானது. (46)

சொற்றிறன் மேதகு சூரெனும் வெய்யோ
னுற்றிடும் வைப்பினி லோரிடை தன்னின்
மற்றொ ரிளம்பிறை வைகிய வாபோற்
கொற்றவ னமுசு குந்த னிருந்தான்

இ-ள். சொல் திறல் மேதகு சூர் எனும் வெய்யோன் உற்றிடு வைப்பினில் ஓர் இடை தன்னில் - (புகழ்ந்து) சொல்லப்படுகின்ற வலிமையிற் சிறந்த சூரபன்மனாகிய சூரியன் இருக்கின்றபூமியிலே ஓரிடத்தில், மற்று ஓர் இளம் பிறை வைகியவாபோல் - பிறிதோர் இளம்பிறையானது இருந்தவாறுபோல, கொற்றவன் ஆம் முசுகுந்தன் இருந்தான் - அரசனாகிய முசுகுந்தனிருந்தான். எ-று.

வைகியவாறுபோலெனற்பாலது வைகியவாபோலெனத் தொகுத்தது. சூரியனாலே இளம்பிறை ஒளிமழுங்கியிருத்தல் போலச் சூரபன்மனால் வன்மைகுறைந்திருந்தானென்க. (47)

சூரனை யெந்தை தொலைத்தது கேளா
வாரஞர் நீங்கி யருஞ்சிறை பெற்ற
மேருவ தென்ன வியன்மிடல் பெற்றுச்
சீரிறை மாட்சி செலுத்தி யமர்ந்தான்.

இ-ள். எந்தை சூரனை தொலைத்தது கேளா-எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமான் சூரனை அழித்தருளியதைக் கேள்வியுற்று, ஆர் அஞர் நீங்கி அரும் சிறை பெற்ற மேருவது என்ன வியன் மிடல் பெற்று - நிறைந்த துன்பம் நீங்கி அருமையாகிய சிறையினைப்பெற்ற மேருகிரியைப் போலப் பெருமையாகிய வலியினைப்பெற்று, சீர் இறை மாட்சி செலுத்தி அமர்ந்தான் - சிறந்த இறைமாட்சியை நடத்திக்கொண்டிருந்தான் (அம்முசுகுந்தன்). எ-று.

மேருகிரி, இந்திரனுடைய வச்சிராயுதத்தால் முன்னுள்ள சிறையிழந்தமையின் இவ்வரசன் சூரபன்மனாலே முன்னுள்ள பெருவலி யிழந்திருந்தானென்றும் மலைகளுட்சிறந்த மேருகிரியை யுவமையாக்கினமையின் இவ்வரசன் அரசர்கள் யாவரினு மேன்மையுற்றவனென்றுந் தொனித்தலுணர்க. (48)

வேறு

அமரு மெல்லையி னரசன் முன்னரே
யிமைய வர்க்கிறை யேவு தூதர்போய்க்
கமல மன்னபொற் கழல்கள் வாழ்த்தியே
தமது வன்மையாற் சாற்றன் மேயினர்

இ - ள். அமரும் எல்லையின் அரசன் முன்னரே - (அங்ஙனம் இருக்குங்காலையில்) அவ்வரசனுக்கு முன்னே, இமையவர்க்கு இறை ஏவு தூதர் போய் - தேவர்கட்கரசனாகிய இந்திரன் விடுத்த தூதுவர்சென்று, கமலம் அன்ன பொன் கழல்கள் வாழ்த்தியே - (அவனுடைய) தாமரை மலரை நிகர்த்த அழகிய பாதங்களை வாழ்த்தி தமது வன்மையால் சாற்றல் மேயினர் - தமது உரை வன்மையினாலே சொல்லலுற்றார். எ - று.

ஏகாரங்கள் அசைநிலைகள். கமலம் ஆகுபெயர். (49)

உனது நண்பனு யுறுபு ரந்தரன்
றனது தூதர்யாந் தாவில் சீர்பெறீஇ
நினது சுற்றமு நீயும் வாழிகே
ளினிது மங்கல மிசைப்ப வெய்தினேம்.

இ - ள். உனது நண்பனுப் உறு புரந்தரன்றனது தூதர் யாம் - (அரசனே) நினது நண்பனுயிருக்கின்ற இந்திரனுடைய தூதர்யாம், நினது சுற்றமும் நீயும் தாவு இல் சீர் பெறீஇ வாழி - நினது சுற்றத்தாரும் நீயுங்கெடுதலில்லாத செல்வம்பெற்று வாழ்க, கேள் - (யாம் உரைக்க வந்ததைக்) கேளாய், இனிது மங்கலம் இசைப்ப எய்தினேம் - இனிதாகிய (ஒரு) மங்கலத்தை உரைக்க வந்தேம். எ - று.

னது சுற்றமும்வாழி நீயும்வாழியென முடிக்க; வியங்கோள் வினை மூவிடங்கட்கும் பொதுவாயினும் அவ்விடங்களில் தனியே தனியே ஒவ்வோரிட வினையாய்முடிவதாகலின் ஈண்டு முன்னிலை வினையாய் முடிந்ததெனக்கொண்டு "முன்னிலை கூடிய படர்க்கையு முன்னிலை" என்ற ஓத்தின்படி ஒருமுடிபாக்கினு மமையுமென்க. இனிது மங்கலம் என்றதனானே, உயர்வொப்பில்லாத சிறந்தமங்கலம் என்பதுபெற்றாம். (50)

அடாத தீமைசெய் தமரர் தஞ்சிறை
விடாத சூரனை வீட்டி வேலவன்
வடாது பூமிவாய் வந்து கூடலின்
குடாது சேர்பரங் குன்றில் வைகினான்.

இ - ள். வேலவன் - வேலாயுதத்தை யுடையராகிய சுப்பிரமணியப்பெருமான், அடாத தீமை செய்து அமரர் தம் சிறை விடாத சூரனை வீட்டி - செய்யத்தகாத தீமையைச் செய்து தேவச்சிறையை விடுக்காதிருந்த சூரபன்மனை அழித்து, வடாது பூமிவாய் வந்து கூடலின் குடாது சேர்பரங்குன்றில் வைகினான் - (அச்சூரனுடைய நகரத்துக்கு) வடதிசையிலுள்ளதாகிய நிலத்தின்கண் வந்து மதுரையின் மேற்றிசை நிலத்திற்சேர்ந்த திருப்பரங்குன்றத்திற் றங்கியருளினார். எ - று.

அடாததீமை தேவர்களைக்கொண்டு மீன்சுமப்பித்தலாதியவை. பலயுகங்களினும் நீங்காதிருந்தமைபற்றி அமரர்தஞ்சிறையென்றார். அமரருக்குச் சிறையைச் சம்பந்தப்பொருளாக்கினாரென்க. சிறை சிறைப்பட்டிருத்தல். மகேந்திரபுரி கடலின்கண்ணதாகலின் வடாதுபூமிவாய்வந்தென்றார். வடாது வடதிசையிலுள்ளதென் பதன் மரூஉ; குடாதும் அங்ஙனமென்க. வடாது பூமி இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (51)

கொற்ற வேற்படைக் குமரற் கிந்திரன்
றெற்றெனத் தருந் தெய்வ யானையை
யிற்றை சென்றபி னீகின்றா னிது
சொற்றிடும் படு தூண்டினா னெமை.

இ - ள். இந்திரன் - இந்திரனானவன், தரும் தெய்வ யானையை - (தான்) பெற்ற தெய்வயானையம்மையாரை, கொற்ற வேல் படைக் குமரற்கு - வெற்றியையுடைய வேற்படைக்கலத்தைத் தரித்த சுப்பிரமணியப்பெருமானுக்கு, இற்றை சென்ற பின் தெற்றென ஈகின்றான் - நாளைக்கு நிச்சயமாகக் கன்னிகாதானஞ்செய்வான், இது சொற்றிடும்படி எமை தூண்டினான் - இம்மங்கலத்தை (நினக்கும் பிறர்க்கும்) உரைக்கும்படி எம்மைவிடுத்தான். எ - று.

தெற்றெனவு, தெளி; ஈண்டு நிச்சயம். ஈகின்றான் தெளிவு பற்றிவந்த காலவழுவமைதி. (52)

மாறிலாத வவ் வதுவை காணநீ
யீறில் சேனையோ டெழுந்து தென்றமிழ்க்
கூறு சீர்ப்பரங் குன்றந் தன்னிடைச்
சேறி யாலெனாச் சிலத ரோதினார்.

இ - ள். மாறு இலாத அவ்வதுவை காண - உவமையில்லாத அத்திருக்கலியாணத்தைக் காண, நீ ஈறு இல் சேனையோடு எழுந்து - நீ முடிவில்லாத சேனைகளோடெழுந்து, தென் தமிழ்க் கூறு சீர்ப் பரங்குன்றந் தன்னிடைச் சேறியால் எனாச் சிலதர் ஓதினார் - இசையையுடைய தமிழ்ப்பாக்களாற் கூறுகின்ற புகழையுடைய திருப்பரங்குன்றத்தின்கட் செல்லாயென்று அத்தூதுவர்கள் சொன்னார்கள். எ - று.

தமிழ்போல வெண்பா ஆதிய பாக்களும் அவற்றைச் சார்ந்த துறை தாழிசை விருத்தமாகிய பலவகைப் பாவினங்களும் பிறவுமாகிய ஓசை விகற்பங்களெல்லாம் பிறபாஷைகளினிடத்தின்மையிற் றென்றமிழென்முர். தமிழ் ஆகுபெயர். முத்தமிழ்ச்சங்கந் தழைத்தினிதோங்கிய மதுரையைச் சார்ந்திருத்தல்பற்றி தமிழ்கூறுசேர்ப்பரங்குன்று என்முர். ஆல் அசை. (53)

ஓத வன்னவ னுவகை சிந்தையின்
மீது பொங்குற மெய்ப விர்த்தெழீஇத்
தூத ரைத்தழீஇச் சோப னம்மிதற்
கேது மில்லையா லீயுமா றென்றுன்.

இ - ள். ஓத - (அத்தூதர்கள் அங்ஙனங்) கூற, அன்னவன் சிந்தையின்மீது உவகை பொங்கு உற மெய் பனித்து எழீஇ - அவ்வரசன் மனத்தின்மீது சந்தோஷம் அதிகரித்தலுறத் தேகம் நடுக்குற்றெழுந்து, தூதரைத் தழீஇ - அத்தூதரைத்தழுவி, சோபனம் இதற்கு ஈயும் ஆறு ஏதும் இல்லையால் என்றுன் - (நீவிர் கூறிய) சோபனமாகிய இதற்குக் கொடுக்குந் தன்மையாகிய பொருள்யாது மில்லையென்றுன். எ - று.

அன்னவன் அவன் என்பதன் மரூஉ. பொங்கு முதனிலைத் தொழிற்பெயர். பொங்குற ஒருசொல்லெனினுமமையும். தன்னிலுங்கடந்த உகவைநிறைதலினுலே தழுவத்தகாத தூதரைத் தழுவினுனென்பது. சோபனம் சந்தோஷம். ஆல் அசை. ஆறு ஆகுபெயர். சோபனங் கூறுந் தூதருக்கு அதனைக் கேட்பதனுலாகு மகிழ்ச்சியளவாகப் பரிசளித்தல் கடன். இச்சோபனங் கேட்டதனுலாகிய மகிழ்ச்சிக்கு அளவின்மையின் ஈயும்பரிசும் அளவின்மையாதல் வேண்டும்; ஆகவே அளவினையுடையபொருள் ஆதிய அமையாமையின் ஏது மில்லையாலீயுமா றென்றுனென்பது.

ஈண்டை மாநிதி யாவு நல்குகோ
காண்ட குங்குடை கவரி நல்குகோ
வாண்டி ருந்தவென் னரசு நல்குகோ
வேண்டு கின்றதென் விளம்பு வீரென்றான்.

இ - ள். ஈண்டை மா நிதி யாவும் நல்குகோ - இங்ஙனமுள்ள பெருமையாகிய திரவியம் யாவற்றையுந் தருகவோ, காண் தகும் குடை கவரி நல்குகோ - அழகு தகுந்த வெண்கொற்றக்குடையையுஞ் சாமரத்தையுந் தருகவோ, ஆண்டு இருந்த என் அரசு நல்குகோ - (யான்) ஆண்டுகொண்டிருக்கின்ற எனது அரசினைத்தருகவோ, வேண்டுகின்றது என் விளம்புவீர் என்றான்-(நீவிர்) விரும்புகின்றதியாது கூறுவீர் என்றான் (அவ்வரசன்). எ - று.

ஈண்டை ஐகாரச்சாரியையை இறுதியிற்பெற்ற மென்றொடர்க் குற்றுகரமொழி. அரசன் அச்சோபனங்கூறிய தூதருக்கு கொடுக்கத்தக்க பொருளொன்று மில்லையென்று முன்னருரைத்துப் பின்னரிங்ஙனங் கூறியது அங்ஙனமாக இல்லையாயினும் உள்ளனவற்றைக் கொடுத்தல்வேண்டும்; கொடுக்காதொழியின் வாளா உபசாரங்கூறினனென்று அவர் கருதவுங்கூடுமாதலினென்பது. நல்குகோ என்பது நல்குக என்னும் வியங்கோள் வினைமுற்றி னிறுதி அகரங்கெட ஓகாரவினை வெழுத்துப் புணர்ந்தது. (55)

கோதில் சீர்முசு குந்த னிந்தவா
றோது மெல்லையி னுவகை யுற்றவ
னாத ரத்தின தளவை நோக்கியே
தூதராயினோர் வியந்து சொல்லுவார்.

இ - ள். கோது இல் சீர் முசுகுந்தன் இந்தவாறு ஓதும் எல்லையில் - குற்றமில்லாத புகழினையுடைய அம்முசுகுந்தராசன் இவ்வாறு கூறுங்காலையில், அவன் ஆதரத்தி

னது அளவை நோக்கியே - அவனுடைய ஆசையினது அளவைப்பார்த்து, தூதராயினோர் உவகை யுற்று வியந்து சொல்லுவார் - அத்தூதரானவர் மகிழ்ச்சிமிகுந்து வியந்து கூறுவார். எ - று.

சூரபன்மனுதியர்க்குள்ள குற்றத்தோடுகூடிய புகழ்போலன் றென்பார் கோதில் சீரென்றார். இந்த இசாச்சுட்டின்மருஉ. நோக்கல் ஈண்டு உள்ளத்தாலுணர்தல். (56)

சொல்வி னைப்படுந் தூதர்க் கிவ்வெலா
மொல்வ தன்றிவை யுதவிற் றொக்குமால்
வல்வி ரைந்துநீ வாச வன்முனஞ்
செல்வ தேயெனச் செப்பிப் போயினர்.

இ - ள். சொல் வினைப்படும் தூதர்க்கு இவ்வெலாம் ஒல்வது அன்று - (ஓரரசன் சொல்லுஞ் சொற்களை அவன தேவலின்படி) சொல்லுந் தொழிலிற்பட்ட தூதராயி னோர்க்கு (நீ தருகவென்று கூறிய) இவையெல்லா மிசைவ தல்ல, நீ வல் விரைந்து வாசவன் முனம் செல்வதே இவை உதவிற்று ஒக்குமால் எனச் செப்பிப் போயினர் - நீ மிக விரைந்து (எமது தலைவனாகிய) இந்திரனுக்கு முன்னர்ச் செல்வதே இவற்றைத் தந்ததுபோலுமென்று கூறிச்சென் றார் (அத்தூதர்). எ - று.

அன்று என்னும் வினைக்குறிப்புமுற்று உண்டு என்பது போல ஐம்பால் மூவிடங்களினும் வருவதொன்றாகலின் ஈண்டு அஃறிணைப் பலவின்பாலினின்றது; இங்ஙனம்வருவது அஃறிணை ஒன்றன்பாற் படர்க்கை வினைக்குறிப்புமுற்றாகிய அன்று அன் றென்க. உதவிற்று தொழிற்பெயர். ஆல் அசை. ஏகாரம் பிரிநிலை. (57)

போய தூதுவர் புவியின் மன்னவ
ராயி னோர்க்கெலா மாறு மாமுகச்
சேய வன்மணஞ் செப்பி மாதிர
மேயி னோர்க்குமிங் கிதுவி ளம்பினர்.

இ - ள். போய தூதுவர் - சென்ற தூதர்கள், மா ஆறு முகச் சேயவன் மணம் புவியில் மன்னவராயினோர்க்கு எலாம் செப்பி - பெருமையாகிய ஆறு திருவதனங்களை யுடைய சுப்பிரமணியப்பெருமானது திருமணத்தைப் பூமியிலுள்ள அரசராயினர்க்கெல்லா முரைத்து, மாதிரம் ஏயினோர்க்கும் இங்கிது விளம்பினர் - திக்குகளிலிருப்பவர் களுக்கும் இதனைக்கூறினர். எ - று.

உம்மை எச்சவும்மை. இங்கிது ஒருசொல். (58)

அகல்வி சும்பிடை யல்க லும்படர்
பகல வன்முதற் பகவர் யாவர்க்கு
மிகலின் மாதவ ரெவர்க்கு மிச்செயல்
விகல மின்றியே விளம்பி யேகினர்.

இ - ள். அகல் விசும்பிடை அல்கலும் படர் பகலவன் முதல் பகவர் யாவர்க்கும் - அகன்ற ஆகாயத்திலே நாடோறுஞ் செல்லுகின்ற சூரியன் முதலாகிய கடவுளர் யாவர்க்கும், இகல் இல் மாதவர் எவர்க்கும் இச்செயல் விகலம் இன்றியே விளம்பி ஏகினர் - உவமையில்லாத முனிவர் யாவர்க்கும் இத்திருமணச்செயலை வேறுபாடின்றி உரைத்துச் சென்றார் (அத்தூதர்). எ - று.

அல்கலும் என்றதிலும்மை முற்றும்மை. யாவர்க்கும் எவர்க்கும் என்பவற்றினும்மைகள் எச்சவும்மையோடு முற்றும்மைகள். ஏகாரம் அசை. (59)

வேறு

ஆய காலையின் முசுகுந்த னப்பதி தன்னின்
மேயி னர்களுந் தன்பெருஞ் சேனையும் வேற்கை
நாய கன்மணங் காணிய முன்னரே நடப்பான்
பாய்ம தக்கரி மிசைமுர சறைந்திடப் பணித்தான்.

இ - ள். ஆய காலையில் முசுகுந்தன் - அச்சமயத்தில் முசுகுந்தனானவன், அப்பதிதன்னின் மேயினர்களும் தன் பெரும் சேனையும் வேல் கை நாயகன் மணம் காணிய முன்னரே நடப்பான் - அந்நகரத்தில் இருப்பவர்களுந் தனது பெருமையாகிய சேனைகளும் வேலாயுதத்தை யேந்திய திருகரத்தினையுடைய சுப்பிரமணியப்பெருமானது திருமணத்தைக் காணுதற்கு முன்னரே நடக்கும்படி, பாய் மதக் கரி மிசை முரசு அறைந்திடப் பணித்தான் - பாய்கின்ற மதத்தையுடைய யானையின்மீது முரசறைந் திடும்படி கட்டளையிட்டான். எ - று.

ஆய அகரச்சுட்டின்மரூஉ. ஏ அசை. (60)

அந்த நீர்மையை வள்ளுவ னகன்கரு வூரிற்
றந்தி யின்மிசை யேறியே தனிமுர சறைந்து
முந்து சீர்க்கம லாலயத் தரன்விழா மொழிந்தே
யிந்தி ரன்றிரிந் திடுதல்போற் றிரிந்தன னிசைத்தான்.

இ - ள். முந்து சீர்க் கமலாலயத்து அரன் விழா மொழிந்தே இந்திரன் திரிந்திடுதல் போல் - முதன்மையுற்ற சிறப்பினையுடைய திருவாரூரின்கண்ணே சிவபெருமானுடைய திருவிழாவைக்கூறி இந்திரனானவன் திரிதல் போல, வள்ளுவன் அகன் கருவூரில் தந்தியின்மிசை

ஏறியே - வள்ளுவனானவன் அகன்ற கருவூரின்கண்ணே யானையின்மீதேறி, தனி முரசு அறைந்து - ஒப்பற்ற முரசப் பறையையடித்து, அந்த நீர்மையை இசைத்தான் திரிந்த னன் - அத்தன்மையான வார்த்தையைக் கூறித்திரிந்தான். எ - று.

அந்த அகரச்சுட்டின்மரூஉ. மேல்வரும் இன்னோரன்ன மரூஉ மொழிகளையுய்த்துணர்க. நீர்மை ஆகுபெயர். வள்ளுவன் புலையரைச்சார்ந்த வோரிழிந்தசாதியான். அகன் அகலென்பதன் மரூஉ. ஏகாரம் இரண்டும் அசைநிலைகள். அரசன்பணியை விளக்குவதாகலிற் றனிமுரசெனப்பட்டது. கமலா ஆலயம் கமலாலயம் எனப்புணர்ந்தது வடமொழித் தீர்க்கசந்தி. இந்திரன் தனது நண்பனாகிய முசுகுந்தனுக்குத் தான்பூசித்த கட்வுட்டிரு உருவைக்கொடுத்த பாவத்தினாலே புலையனாகி யானையின்மீ திவர்ந்துவந்து கமலாலயத்திற் திருவிழாக்களைக்கூறி முரச றைந்து திரிந்தானென்பது. இந்திரனை பிறப்பிற்றானே புலையன் வடிவமாகியதுபற்றி இந்திரன் றிரிந்திடுதல்போலென்றார். இசைத்தானென்னும் வினைமுற்று வினையெச்சமானது. (61)

வேறு

ஆனதோர் பொழுதிலந் நகரின் மாக்களுஞ்
சேனையின் வெள்ளமுந் திசைக ளின்புறம்
போனதோர் பெரும்புறப் புணரிக் கேகுறு
மேனைய கடலென வெழுத லுற்றவே.

இ - ள். ஆனதோர் பொழுதில் அந்நகரின் மாக்களும் சேனையின் வெள்ளமும் - அப்பொழுதில் அந்நகரத்திலுள்ள மனிதருஞ் சேனையாகிய வெள்ளமும், திசைகளின் புறம் போனதோர் பெரும் புறப் புணரிக்கு ஏகுறும் ஏனையகடல் என எழுதல் உற்றவே - திசைகளின் புறம்போனதாகிய பெரிய புறவாழிக்குச்செல்லும் மற்றைய கடல்களைப்போல எழுதலுற்றன. எ - று.

ஓர் இரண்டும் அசைகள். இன் அல்வழிச்சாரியை. திசைகளின் புறத்தேயுள்ளதைப் புறம்போனதென்றது மரபுவழுவமைதி. அண்டச்சுவர்காறுந் திசைகளினிடம் உளவாயினும் புறவாழி திக்குப்பாலகர்களுடைய நகரங்களுக்கு அப்பாற்பட்டது பற்றித் திசைகளின் புறம்போனதோர் பெரும்புறப்புணரியென்றார். ஏனைய கடல்கள் உவர்க்கடலாதிய எழுமென்க. ஈராயிர வெள்ளம் பூத சைனியங்களும் இலக்கத்தொன்பது வீரரும் முப்பத்துமுக்கோடி தேவரும் பிறருங்கூடிய கூட்டமிகப் பெரிதாதலின் அதனைப் பெரும்புறப் புணரியென்னு முவமையாற் சுட்டினார். ஏகாரம் அசை. (62)

எண்டிசை யாற்றுவ விபங்க ளாதலி
னண்டமுந் தாங்குவா னயன்ப டைத்தென
விண்டொட நின்றிடும் வேழ மெண்ணில
கொண்டல்கள் சூழிபோற் குலவச் சென்றவே.

இ - ள். எண்டிசை ஆற்றுவ இபங்கள் ஆதலின் - எட்டுத்திக்குகளையுந் தாங்குவன யானைகளாதலினாலே, அண்டமும் தாங்குவான் அயன் படைத்தென - அண்டத்தையுந் தாங்கும்படி பிரமதேவர் சிருட்டித்ததுபோல, விண் தொட நின்றிடும் எண் இல வேழம் - ஆகாயத்தைத்தொட நிற்கின்ற அளவில்லாத யானைகள், கொண்டல்கள் சூழி போல் குலவச் சென்றவே - மேகங்கள் முகபடாங்கள் போலப் பொருந்தச் சென்றன. எ - று.

இபங்கள் ஐராவதயானையாதிய அட்டகஜங்கள். தாங்குவான் வானீற்றுவினையெச்சம். படைத்தது என எனற்பாலது படைத்தென வெனத்தொகுத்தது; படைத்தாலென வெனற்பாலதெனினுமமையும். இங்ஙனம் மேல்வருவனவற்றையு முய்த்துணர்க. விண் ஈண்டு கருநிறமாத்தோன்றுமாகாயம். ஆகாயத்திற் செல்லும் மேகங்களினுள் அவ்யானைகளின்றலைகள் மறைந்தனவென்பார் கொண்டல்கள் சூழிபோற்குலவ என்றார். (63)

வால்கிளர் கற்றையு மதர்வை நோக்கமும்
பால்கிளர் செவிகளும் பழிப்பில் சென்னியுங்
கால்கிளர் செலவுமாய்க் கால்கள் சென்றென
மேல்கிளர் புரவியின் வெள்ளஞ் சென்றவே.

இ-ள். வால் கிளர் கற்றையும் - வால் (ஆகிய) நிறைந்த (மயிர்த்) தொகுதியும், மதர்வை நோக்கமும் - மதர்ப்பாகிய பார்வையும், பால் கிளர் செவிகளும் - குணமாக விளங்குகின்ற காதுகளும், பழிப்பு இல் சென்னியும் - பழிக்கப்படுதலில்லாத சிரசும், கால் கிளர் செலவும் ஆய்க் கால்கள் சென்றென - கால்களாற் செல்லுஞ் செல்லுகையுமாகிக் காற்றுக்கள் சென்றதுபோல, மேல் கிளர் புரவியின் வெள்ளம் சென்றவே - மேலாக விளங்குகின்ற குதிரை வெள்ளங்கள் சென்றன. எ - று.

மதர்வு செழிப்பு. ஐ சாரியை. பால்கிளர்செவியென்றது கொம்புபோல் நீண்டகாதும் முறுகியகாதுமாகாது நல்ல இலக்ஷணமமைந்த காதுகளென்க. பழிப்பில் சென்னி நன்மை தருகின்ற இரண்டு சுழிகளையுமுடைத்தாய் இலக்ஷணமுற்ற சென்னி. கிளர்தல், பொருந்தல்; ஈண்டுச்செல்லல். வால்கிளர் கற்றையும்...பழிப்பில் சென்னியும் என்றதனுலே உத்தம லக்ஷணமுடையன என்பதும் கால்கிளர்செலவுமாய்க் கால்கள் சென்றென என்றதனுலே மிக்கவேகமுடையன என்பதும்பெற்ரும். ஏ அசை. (64)

ஐயிரு திசையினு மணிந்து செல்வன
கொய்யுளை வயப்பரிக் குழாங்கள் பூண்டன
வெய்யவ ருதித்தென விளங்கு காட்சிய
வையமெண் ணில்லன வையம் போந்தவே.

இ-ள். ஐயிரு திசையினும் அணிந்து செல்வன - பத்துத்திக்குகளிலும் அணிபடுத்திச்செல்வனவும், கொய்

உளை வயப் பரிக் குழாங்கள் பூண்டன - கொய்யப்பட்ட புறமயிரையுடைய வெற்றியைக்கொண்டகுதிரைக்கூட்டங்கள் பூணப்பட்டனவும், வெய்யவர் உதித்தென விளங்கு காட்சிய - சூரியர்கள் உதித்ததுபோல விளங்குகின்ற காட்சியையுடையனவுமாகிய, எண் இல்லன வையம் வையம் போந்தவே - அளவில்லாதனவாய இரதங்கள் மண்ணிற் சென்றன. எ - று.

பத்துத்திக்குகள் கிழக்குமுதலிய எட்டுத்திக்குகளோடு ஆகாயமும் பூமியுமென்க. ஐயிருதிசையினுமணிதல் இடைப் பக்கத்தால் எட்டுத்திக்குகளிலும் முடியினல் ஆகாயத்திலும் அடியினல் பூமியிலும் அணிபடுத்தல். உம்மை முற்றும்மை. இல்லனவென்னும் வினைக்குறிப்புமுற்றுப் பெயரெச்சமானது. ஏ அசை. (65)

வலிபுணர் யாக்கையர் வயங்கொள் வாகையர்
கொலைகெழு பல்படை கூட்டுண் வாட்கையர்
புலியுறழ் மானவப் பொருந ராயினர்
தலைவர்க டம்மொடு தழுவிப் போயினர்.

இ - ள். வலி புணர் யாக்கையர் - வலிமைசேர்ந்த தேகத்தையுடையவராயும், வயம் கொள் வாகையர் - வெற்றியைக் கொண்டமாலையைத்தரித்தவராயும், கொலை கெழு பல் படை கூட்டுண் வாள் கையர்-கொலைத்தொழிலைப் பொருந்திய பலபடைக்கலங்களைக் கொள்ளைகொண்ட வாட்கையினராயும், புலி உறழ் மானவப் பொருநராயினர் - புலியைநிகர்த்தமானவராகிய போர்வீரராயினவர், தலைவர்கடம்மொடு தழுவிப் போயினர் - (தந்தந்) தலைவர்களோடு சார்ந்து சென்றார். எ - று.

யாக்கையர் வாகையர் வாட்கையர் என்னுங்குறிப்புவினைமுற்றுக்கள் வினையெச்சமாகி உறழ் என்னும் வினைத்தொகை

யோடு முடிந்தன; அவற்றைப் பெயர்களெனக்கொண்டு பொருள் கூறினுமமையும். வாகை ஈண்டு மாலையென்னும் பொருட்டாநின்றது. கொலை ஆகுபெயர். வில்வீரர் வேல்வீரர் வாள்வீரர் ஆதிய பலவகை வீரருங்கூடிச்செல்லுதலின் கொலைகெழுபல் படை கூட்டுண்வாட்கையர் என்றார். கூட்டுண் என்னும் வினைத்தொகையை முக்காலவினைத்தொகை எனக் கொண்டுபொருள் கூறிக்கூட்டுணலை யாவர்க்குமாக்கினுமமையுமென்க. வாட்கை ஈண்டுக்கையென்னும் பொருள்பயந்து நின்றது. வீரர்க்குக் கொல்லுந் தொழிலும் உக்கிரகுணமு முண்மையின் அவற்றையுடைய புலி தொழிலுவமையும் பண்புவமையுமானதென்க. மானவப்பொருநர், இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மானவர், மானத்தையுடையவர். தலைவர், படைத்தலைவர். (66)

அடல்வலி மானவ ரங்கை யேந்திய
படைவகை மின்னுவ பல்லி யங்களு
மிடியொலி காட்டுவ வீண்டு தானையுட்
கொடி நிரை விசும்புதோய் கொண்ட லாயவே.

இ-ள். அடல் வலி மானவர் அங்கை ஏந்திய படைவகை மின்னுவ - பொருதல்வன்மையினையுடைய வீரர்கள் அகங்கையிலேந்திய படைக்கலவகைகள் மின்னுவன, பல்லியங்களும் இடி ஒலி காட்டுவ - பலவாத்தியங்களின் முழக்கங்களும் இடியொலியைக் காட்டுவன, (ஆதலினால்) ஈண்டு தானையுள்கொடி வகை விசும்பு தோய் கொண்டல் ஆயவே - நெருங்கிய அச்சேனையுட் கொடிவகைகள் ஆகாயத்திற்பொருந்திய மேகங்களாயின. எ - று.

அங்கை "அகமுனர்ச்செவிகைவரினிடையனகெடும்" என்றஒத்தின்படி இடையனகெட்டுநின்றது. இபம் ஆகுபெயர். சேனையுட்கொடிவகையை படைவகைமின்னுதலானும் பல்லியம் இடியொலிகாட்டுதலானும் மேகங்களாகச் சம்பாவனை செய்தமையின் தற்குறிப்பணி. படைவகையும் பல்லியமும் கொடிவகையின்

வேறுயினும் சேனையுளடங்கிய ஒற்றுமைபற்றிச் சம்பந்தமாக்கினு ரென்க. (67)

தாளுறு கழலினர் சரம்பெய் தூணியர்
தோளுறு வில்லினர் தொடையற் குஞ்சியர்
வாளுறு தடங்கணார் மருங்கு மன்மத
வேளென வொருசில வீர ரேகினர்.

இ - ள். தாள் உறு கழலினர் - காலிற்பொருந்திய வீரக்கழலினராயும், சரம்பெய் தூணியர் - அம்புகளையிட்ட கூட்டினையுடையராயும் - தோள் உறு வில்லினர் - கரத்திற் பொருந்தியவில்லினராயும், தொடையல் குஞ்சியர் - மாலையைத்தரித்த குஞ்சியினையுடையராயும், ஒரு சில வீரர் - சிலவீரர்கள், வாள் உறு தடம் கணார் மருங்கு மன்மத வேள் என ஏகினர் - வாள்போலும் பெரியகண்களையுடைய பெண்களுக்குப் பக்கத்தில் மதனவேளைப்போலச் சென்றார் கள். எ - று.

கழலினர் தூணியர் வில்லினர் என்னுங் குறிப்புவினைமுற்றுக் கள் வினையெச்சங்களாய் ஏகினர் என்னுந் தெரிநிலைவினைமுற் றேடுமுடிந்தது. போர்க்கோலத்தோடு தத்தம் மனைவியர் பக்கத் திற்செல்லும்வீரர் போர்க்கோலங்கொண்டு இரதிதேவிபக்கத்தில் வரப் போர்க்குச் செல்லும் மன்மதனையொத்தாரென்க; பிறர் பெண்களோடுகூடிப் போர்க்குச்செல்லுத லின்மையின் மன்மத வேளென ஏகினரென்றார். மன்மதவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (68)

கறுத்திடு பலகைவாட் கையர் சாலிகை
பொறுத்திடு மெய்யின ராகிப் போகுவார்
மறுத்தவிர் மதிமுக மாதர் நாட்டவே
லொறுத்திடு நம்மையென் றுன்னி னர்கொலோ.

இ - ள். கறுத்திடு பலகை வாள் கையர் - கறுத்த தோற்பலகையையும் வாளையும் ஏந்திய கரத்தினரும், சாலிகை பொறுத்திடு மெய்யினர் ஆகிப் போகுவார் - கவசத்தைத்தாங்கிய மார்பினையுடையவருமாகிச் செல்வார் (சிலவீரர்), மறுத் தவிர் மதி முக மாதர் நாட்ட வேல் நம்மை ஒறுத்திடும் என்று உன்னினர் கொலோ - களங்கம் நீங்கிய சந்திரன்போலும் முகத்தினையுடைய மகளிருடைய விழிகளாகிய வேல்கள் நம்மைக்கொல்லுமென்று (அவர்) கருதினரோ. எ - று.

மெய் ஆகுபெயர். மறுத்தவிர்மதிமுகம் என்னும் இல்பொருளுவமையணியும் நாட்ட வேல் என்னும் உருவக அணியும் ஒறுத்திடு நம்மையென்றுன்னினர்கொலோ என்னும் தற்குறிப் பணிக்கு உறுப்பாதலால் உறுப்பாகிய உவமையுருவகங்களுக்கும் உறுப்பியாகியதற்குறிப்பிற்கும் கலப்புண்மையின் உறுப்புறுப் பிக்கலவையணி. கொல் அசை. ஓவை அசையாக்கினுமமையும்.

அடைந்திடு துன்பெலா மாற்றி யம்புவி
மடந்தைமுன் செய்திடு மாத வத்தினாற்
றொடர்ந்திடு பிடியினந் தொலையப் பூமிசை
நடந்தனர் வரம்பிலா நகைமென் கொம்பனார்.

இ - ள். அடைந்திடு துன்பு எலாம் ஆற்றி அம் புவி மடந்தை முன் செய்திடு மா தவத்தினால் - சார்ந்த துன்ப மெல்லாவற்றையும்பொறுத்து அழகிய பூமியாகியபெண் முன்னரியற்றிய பெருமையாகிய தவத்தினாலே, தொடர்ந் திடுபிடி இனம் தொலையப் பூ மிசை நடந்தனர் வரம்பு இலா நகை மென் கொம்பு அனார்-தொடர்கின்றபெண்யானையினந் தொலைவுற நிலத்தின்மீது நடந்தார்கள் அளவில்லாத ஒளியையுடைய மென்மையாகிய பூங்கொம்பை நிகர்த்த பெண்கள். எ - று.

அடைந்திடுதுன்பெலா மென்றது வெயில் மழை பனி இவற்றால் வருந்துன்பமென்க. தவஞ்செய்வார் அவ்வெய்யிலாதியவற்றால் துன்புறாதபடி பன்னசாலை கட்டிக்கொள்ளுதல் வழக்கு; அன்றேல் பிறர்கட்டிக்கொடுத்தல் வழக்கு. அங்ஙனமின்றி அவற்றையெல்லாம் பொறுத்து திறலின் அடைந்திடு துன்பெலாமாற்றியென்றார். தந்நடையினால் அப்பெண்களது நடையை வெல்லவேண்டுமென்று கருதிப் பின் றொடர்வதென்பார் தொடர்ந்திடு பிடியினம் என்றார். மாதவத்தினால் பூமிசை நடந்தனரென்றும் வரம்பிலா கொம்பனாரென்றும் இயைக்க. தவஞ்செய்தவருக்கு வரும்பயன் சிறப்படைதலே யாதலின் அம்மங்கையர் நடத்தலினாலே பூமிக்குச் சிறப்புண்டாதல்பற்றி அம்புவிமடந்தை முன்செய்திடு மாதவத்தினால் நடந்தனரென்றார். அடைந்திடுதுன்பெலா மாற்றியம்புவி மடந்தைமுன்செய்திடு மாதவம் என்றது தற்குறிப்பணி. புவிமடந்தை என்றது உருவகவணி. மாதவத்தினால் நடந்தனரென்றது ஏதுவணி. தொடர்ந்திடுபிடியினம் என்றது தற்குறிப்பணி. பிடியினந்தொலைய என்றது தொலைதலாகிய காரியத்தினாலே மெல்லிய நடையழகாகிய காரணந் தோன்றியதாற் காரியப்புனைவிலி புகழ்ச்சியணி. நகைமென்கொம்பனார் என்றது உவமையணி. இவற்றுள் ஏதுவணி உறுப்பியாக ஏனையன உறுப்புக்களாதலால் உறுப்புறுப்பிக் கலவையணி. (70)

ஏரகன் மணந் தனக்கெய்து மாசையால்
வாரச முலையுடை மடந்தை மார்பலர்
பாரக மலிதரப் பரவிப் போயினர்
தாரகை விண்ணெறி படருந் தன்மைபோல்.

இ-ள். வார் அக முலை உடை மடந்தை மார் பலர் - கச்சினுட் (பொருந்திய) தனங்களையுடைய மகளிர்பலர், ஏரகன் மணந்தனக்கு எய்தும் ஆசையால்—திருவேரகமென்னுந் திருப்பதியையுடையராகிய சுப்பிரமணியப் பெருமானது திருமணத்துக்குச்சாரும் ஆசையினாலே,

தாரகை விண் நெறி படரும் தன்மைபோல் - விண்மீன்கள் விண்ணெறியிற் செல்லுந்தன்மைபோல, பார் அகம் மலிதரப் பரவிப் போயினார் - பூமியினிடத்துப் (பிரகாசம்) நிறையப்பரவிச்சென்றார்கள். எ - று.

உடைய என்றது உடையெனத் தொகுத்துநின்றது. மடந்தை ஈண்டுப்பருவங்குறியாது பெண்ணென்னும் பொருளி னின்றது. விண்மீன்கள் விண்வழியே ஒளிநிறைந்து பரவிச் செல்வதுபோலப் பெண்களும் மண்ணிலே பிரகாசநிறைந்து பரவிச்சென்றார்களென்க. இது பண்புவமையுந் தொழிலுவமையு மாம். ஆசையால் பாரகம்போயினாரென்றியைக்க. (71)

இடையிடை கால்களும் யாறுஞ் சேர்தலிற்
படிமிசை நடந்திடு பாவை மார்களை
விடலைக ளேந்தியே மெல்ல வேகினர்
கடலினும் பெரியதாங் காம மூழ்குவார்.

இ-ள். இடை இடை கால்களும் யாறும் சேர்தலின் - (வழியின்) இடையிடையே நீர்வாய்க்கால்களும் யாறுகளும் பொருந்துதலால், விடலைகள் - காளையர்கள், கடலினும் பெரியது ஆம் காமம் மூழ்குவார் - கடலினும் பெரியதாகிய காமசமுத்திரத்தில் மூழ்குபவராய், படிமிசை நடந்திடு பாவைமார்களை ஏந்தியே மெல்ல ஏகினார் - நிலத்தின்மீது நடக்கின்ற மகளிரை ஏந்திக்கொண்டு மெள்ளச்சென்றார்கள். எ - று.

இடையிடை என்னும் அடுக்குவழியினிடையே பலவிடங் களினுமென்றபடி. பாவை, சித்திரப்பாவை; ஈண்டு உவமவாகு பெயராய் மகளிருக்கானது. ஏகாரம் அசைநிலை. காளையர்கள் மகளிர்மீதுகொண்ட அன்பினாலே அவர்களையேந்தித் தமக்குரிய இயல்பாகிய ஆண்சிங்கம்போலும் பெருமிதநடையாகச்செல்லின் அம்மகளிருடைய பூவினும் மெல்லிய மேனிகுலுங்கி வாடுமே

யென்றுகருதி அவருக்கு அவ்வாட்டம் வாராது சென்றனரென்பார் விடலைகளேந்தியே மெல்லவேகினுர் என்ருர். மூழ்குநத்தினையக் காமம் காமசமுத்திரமென்று பொருளுரைக்கப்பட்டது. மூழ்குவார் என்னும் வினைமுற்றுவினையெச்சமானது. (72)

தந்திக ளின்மிசைத் தைய லாருடன்
மைந்தர்க ளேகினுர் மாநி லந்தனி
லந்தமில் சீரயி ராணி தன்னொடு
மிந்திரர் போவதோ ரியற்கை போலவே.

இ - ள். தந்திகளின்மிசைத் தையலாருடன் மைந்தர்கள் - யானைகளின்மீது மகளிர்களோடு (அவர்களுடைய தலைவர்களாகிய) ஆடவர்கள், மாநிலந்தனில் அந்தம் இல் சீர் அயிராணிதன்னொடும் இந்திரர் போவதோர் இயற்கை போலவே ஏகினுர் - பெருமையாகிய பூமியிலே (ஐராவத யானையின்மீது) முடிவில்லாத சிறப்பினையுடைய இந்திராணியோடும் இந்திரர்கள் செல்லுதலாகிய தன்மைபோலச் சென்ருர்கள். எ - று.

தையலாருக்கு உவமைப்பொருளாகிய அயிராணியின் விசேஷணத்தை வருவித்துக் கூறினுமமையும். உவமேயத்திற்கேற்ப உவமையில் ஐராவதயானை வருவிக்கப்பட்டது. ஒவ்வொரு யானையிலே ஒவ்வோரிந்திராணியோடு ஒவ்வோரிந்திரர்செல்வது போல என்பதே கருத்தாதலின் அயிராணிதன்னொடுமிந்திரர் என்று ஒருமைபன்மை மயக்கமாகக்கூறப்பட்டது. இது வழூவமைதியின்பாற்படும். தன்னொடும் என்றதிலும்மை சிறப்பு. ஏகாரம் அசைநிலை. (73)

அதிர்தூரற் றேர்களி லிவை மாருடன்
கதுமெனப் போயினர் கணிப்பில் காளையர்
மதிமுகத் தாருடன் வரம் பில் வெய்யவர்
முதுவரைச் சிகரமேன் முடுகிச் சென்றென.

இ - ள். மதி முகத்தாருடன் வரம்ப இல் வெய்யவர் முது வரைச் சிகரம் மேல் முடுகிச் சென்றென - சந்திரன் போலு முகத்தையுடையாராகிய பெண்களோடு அளவில்லாதசூரியர்கள் பெருமையாகிய மலைச்சிகரத்தின்மேல் விரைந்துசென்றதுபோல, அதிர் குரல் தேர்களில் அரிவை மாருடன் கணிப்பு இல் காளையர் கதுமெனப் போயினர் - அதிர்கின்ற சத்தத்தையுடைய தேர்களின்மீது பெண்க ளோடு அளவில்லாத காளையர்கள் விரைவிற்சென்றார்கள். எ - று.

தேரிலேறுவார் தேர்த்தட்டிலேறுவதன்றி முடியிலேறுவ தின்றாதலின் வரைச்சிகரம் ஈண்டுத்தேருக்குவமையன்று. முதுமை, பழமை, ஈண்டுப்பெருமை. சூரியர் உதயகிரிச்சிகரத் தில் தேரிலேயேறிச் செல்வதேயன்றி ஏறாதுசெல்லுதலின்மை யின் சூரியர் சென்றென எனவே தேரிலேறியென்றது தானே பெறப்படுதலின் வாளா கூறினரென்க. தேரிலேறிச்செல்லுந் தொழிலினாலும் ஆபரணத்தோடு கூடிய தேககாந்தியாகிய பண்பினாலும் காளையர்க்குச் சூரியருவமை யாயினரென்க. (76)

கூற்றினை வென்றிடுங் கொலைக்க ணார்சில
ரேற்றமில் பிடிமிசை யேறிப் போந்தன
ராற்றல தின்மையா லவர்ந டைக்குமுன்
றோற்றன நாணியே சுமத்தல் போன்றவே.

இ - ள் கூற்றினை வென்றிடும் கொலைக் கணார் சிலர் ஏற்றம் இல் பிடி மிசை ஏறிப் போந்தனர் - இயமனையும் வென்றிடுகின்ற கொலைத்தொழிலைப்புரியுங் கண்களையுடைய மகளிர் சிலர் உயர்ச்சியில்லாத பெண்யானைகளின்மீது இவர்ந்துசென்றார்கள், (அதனை நோக்கும்வழி) அவர் நடைக்குமுன் தோற்றன ஆற்றலது இன்மையால் நாணியே சுமத்தல் போன்றவே - அம்மகளிருடைய நடைக்கு

முன்னே தோற்றனவாகிய அப்பிடிகள் ஆற்றுமையினால் நாணமுற்று (அவரைச்) சுமத்தல்போன்றன. எ - று.

எச்சத்தோடு உயர்வு சிறப்புமாகிய உம்மை விகாரத்தாற் றொக்கது. ஆண்யானைகளினின்றுயரங் குறைவாதலின் எற்றமில்பிடியென்றார். ஏகாரங்கள் அசைகள். நாணியே என்றதி லேகாரம் பிரிநிலையெனினுமமையும். (75)

காமரு கொங்கையாற் கரிம ருப்பினை
யேமுற வென்றுளார் யானைக் கோடுகண்
மாமருங் கடைதலு மருண்டங் கோடினர்
தாமுதற் செய்வினை தம்மைச் சூழ்ந்தென.

இ - ள். காமரு கொங்கையால் கரி மருப்பினை ஏம் உற வென்றுளார் - அழகையுடைய தனங்களினாலே யானையினது கொம்புகளை மயக்கமுறவென்ற மகளிர்கள், யானைக் கோடுகள் மா மருங்கு அடைதலும் தாம் முதல் செய் வினை தம்மைச் சூழ்ந்தென அங்கு மருண்டு ஓடினார் - யானைக்கொம்புகள் பெருமையாகிய தம்பக்கத்துச்சார்தலும் தாம்முன்னே (ஒருயிர்க்குச்) செய்தவினை (அவ்வுயிரினால்) தம்மைச் சூழ்ந்ததுபோல அங்ஙனம் மருண்டு ஓடினார்கள். எ - று.

உ சாரியை. எம்ம என்பது எம் என இடைக்குறையானது. யானைகளடைதலைக்கூறுது அவற்றினுறுப்புக்களி லொன்றாகிய கொம்புகளைத் தாமேயடைதலுமென்றது மரபுவழுவமைதி. (76)

விரிதரு சேனையில் விண்ணிற் பாய்தரு
பரிகளின் மடந்தையர் பலரங் கேகினர்
கரையறு மமரர்கள் கடைந்த பாற்கடற்
றிரைதனில் வருபல திருவைப் போலவே

இ - ள். கரை அறும் அமரர்கள் கடைந்த பால் கடல் திரைதனில் வரு பல திருவைப் போலவே - எல்லையற்ற தேவர்கள் கடைந்த திருப்பாற்கடலிடத்துள்ள திரைகளிலே தோன்றுகின்ற பல இலக்குமிகளைப்போல, விரிதரு சேனையில் விண்ணில் பாய்தரு பரிகளில் மடந்தையர் பலர் அங்கு ஏகினார் - பரந்தசேனையினுள் ஆகாயத்திற் பாய்கின்ற குதிரைகளிலே பெண்கள் பலர் அங்ஙனஞ்சென்றார்கள். எ - று.

போர்ப்படைகளுக்குள் மகளிர்செல்லுத லில்லையாதலின் சேனை ஈண்டுமாந்தர்கூட்டம். கரை அறும் என்றது ஈண்டு அனேகம் என்னும்பொருட்டு. திரை சாதியொருமை. ஏ அசை.

மேகம துற்றிடு மின்னின் மீமிசைப்
போகிய சிலையொடும் போந்த தன்மைபோற்
பாகினை யன்னசொற் பாவை யார்நர
வாகன மவைகளின் மருவி யேகினார்.

இ - ள். மேகமது உற்றிடு மின் இல் மீ மிசைப் போகிய சிலையொடு போந்த தன்மை போல் - மேகத்திற் பொருந்திய மின்னல் (தானிருக்கும்) இடத்தின்மீது (தங்கிய) இந்திரதனுவோடுசென்ற தன்மைபோல, பாகினை அன்ன சொல் பாவைமார் நரவாகனமவைகளில் மருவி ஏகினார் - பாலைநிகர்த்த மொழியினையுடைய பெண்கள் (சிலர்) சிவிகைகளிற் பொருந்திச் சென்றார்கள். எ - று.

மேகம் சிவிகைக்கும், இந்திரதனு சிவிகையினுறுப்புளொன்றாகி மேலேவளைந்தமூங்கிலுக்கும், மின்னல் மகளிருக்கும் உவமையாயின. சிவிகைக்குமேலேயுள்ள வளைந்தமூங்கிலுக்கு இயல்பாகவே மேகத்தினுள்ளிடத்திடப்பட்ட இந்திரதனு உவமையாகாதாதலின் இல்மீமிசைப்போகியசிலை யென்றார்; இதனைக்

குறித்தே மேகமதற்றிடுமின்னன்மீமிசை என்று பாடமருவிச் செய்திலர்போலும். இது இல்பொருளுவமை. மேகத்தை உவமையாக்கினமையில் நீலநிறச்சிவிகையென்க. போகியசிலே இந்திரனுடையவில்லு. போகிய என்றது பெயரடியாகப் பிறந்தபெயரெச்சம். மீமிசைப்போகிய என்றதற்கு மேலேவளைந்த என்று பொருளுரைப்பினு மமையும். (78)

அவிகையின் முழுமதி யளிப்பப் பல்பொறி
குவிகையி லம்புயங் குலவிச் சென்றெனக்
கவிகையி லாதபங் கரப்ப மூடுபொற்
சிவிகையி லேகினர் தெரிவை மார்சிலர்.

இ - ள். பல் பொறி - பல இலக்குமிகள், அவிகையில் முழுமதி அளிப்ப - (வெய்யிலினுற்றிருமேனி) அவிதலானபொழுதில் பூரணசந்திரன் (வந்துவெய்யிற்படாது) காக்க, அம்புயம் குவிகையில் - (அதனாலே உறைவிடமாகிய) தாமரைமலர்கள் குவிதலானபொழுது, குலவிச் சென்றென - (அத்தாமரை மலர்களுள்) விளங்கிச் சென்றாற்போல, தெரிவை மார் சிலர் கவிகையில் ஆதபம் கரப்ப பொன் மூடு சிவிகையில் ஏகினர் - பெண்கள் சிலர் குடைகளினாலே வெய்யில் (மேற்படாது) மறையப்பொன்னாலாகிய மூடு சிவிகைகளின்மீது சென்றார்கள். எ - று.

அவிகை உஷ்டணித்தல். அவிகை குவிகை அம்புயம் ஆகுபெயர்கள். வெய்யில் மூடுசிவிகையின்மேற்படினும் உள்ளிருப்பார்க்கு வெப்பந்தாக்குமாதலின் மேலே குடைகட்டப்பட்டதென்க. மூடுசிவிகை சிவிகைகளிலேனொர்பேதம்; அதனைப்பல்லாக்கு என்று வழங்குப. குவிகையிலம்புயம் என்றதற்கு, குவிதலில்லாத தாமரைமலரென்று பொருளுரைத்து கவிகையிலாதபங்கரப்ப மூடுபொற்சிவிகை என்றதற்கு குடையினாலே வெய்யில்மறைய மூடிய பொற்சிவிகை என்று பொருளுரைத்தலுமொன்று. (79)

வேறு

பரதனங் கவரு மல்குற் பரத்தையர் தம்மைப் பாரா
விரதநன் முனிவர் தாமும் வேதியர் பலரு மீண்டிச்
சுரதநண் புடைய ராகுங் கணிகையர் தோளாற் ருளா
லுரதனந் தன்னாற் ருக்க வுளைந்துளைந் தொதுங்கிப் போனார்.

இ-ள். பரதனம் கவரும் அல்குல் பரத்தையர் தம்மைப் பாரா விரத நல்முனிவர் தாமும் வேதியர் பலரும்-பிறருடையபொருளைக் கவரும் அல்குலினையுடைய கணிகையரைப் பாராத விரதத்தையுடைய நல்லமுனிவர்களும் மறையவர்பலரும், சுரதம் நண்பு உடையர் ஆகும் கணிகையர் ஈண்டி தோளால் உர தனந்தன்னால் தாக்க உளைந்து உளைந்து ஒதுங்கிப்போனார் - புணர்ச்சியில் நேசமுடையராகிய வேசிகள் கரத்தினாலும் பதத்தினாலும் உரத்ததனத்தினாலுந்தாக்க (நெஞ்சம்) நொந்துநொந்து ஒதுங்கிச்சென்றார்கள். எ-று.

அல்குல்காரணமாகப் பரத்தையர் கவர்தலை அல்குல்கவர்தலாக வுபசரிக்கப்பட்டது. அல்குல்பரதனம்கவரும் பரத்தையர் என்றியைத்து, அல்குலினாலேபரதனத்தைக் கவரும்பரத்தையர் என்றுரைப்பினுமமையும். பாராவிரதம் என்றது பாராதிருத்தலை விரதம்போலக்கொண்ட என்றபடி. (80)

வேண்டியமாற்றங்கொள்ளாள் வெகுண்டுசென்றிடுவாண்முன்னை
மாண்டொரு மதமால் யானை யடர்த்துவந் திடலு மஞ்சிப்
பூண்டிடு புலவி நீங்கிக் கணவனைப் புல்லிக் கொண்டா
ளுண்டரு தோளி னனு மிபத்தினைத் தொழுது நின்றான்.

இ-ள். வெகுண்டு வேண்டிய மாற்றம் கொள்ளாள் சென்றிடுவாள் முன்னம் - (தன்றலைவனோடு) பிணங்கிக்கொண்டு (அவன் அப்பிணக்கை நீக்குமாறு) வேண்டிக்

கொண்ட வார்த்தைகளைக் கொள்ளாதவளாகிச் செல்பவ ளுக்குமுன்னே, ஆண்டு ஒரு மால் மத யானை அடர்த்து வந்திடலும் - அங்ஙனம் ஒரு பெரிய மதயானை நெருக்கி வருதலும், அஞ்சி பூண்டிடு புலவிநீங்கிக் கணவனைப் புல்லிக் கொண்டாள் - அச்சமுற்றுத் (தான்) கொண்டவூடனீங்கி அத்தலைவனைத் தழுவிக்கொண்டாள் (அத்தலைவி), தூண் தரு தோளினனும் இபத்தினைத் தொழுது நின்றான்-தூணை யொத்த தோளினையுடையனாகிய அத்தலைவனும் அவ் யானையைத் தொழுதுநின்றான். எ - று.

தருதல் ஈண்டு ஒத்தல். தலைவன்றான் செய்யத்தொடங்கிய காரியமாகிய ஊடனீக்குதல் அவ்யானையினுதவியால் எளிதின் முடிந்ததுபற்றி அதனைத்தொழுது நின்றான் என்க. இது எளிதின் முடிபணி. (31).

ஏமருங் கலாப மஞ்ஞை யினமெனச் செல்லு மாதர்
மாமருங் கிறங்கோ லிற்றன் மதனர சிறக்கு மென்றே
காமருங் கவற்சி கொள்ளக் கரத்தினு லவரைப் புல்லித்
தாமருங் காகப் போனர் தார்முடி யிளைய ரானேர்.

இ - ள். ஏம் மரும் கலாப மஞ்ஞை இனம் எனச் செல்லும் மாதர் மா மருங்கு இறுங்கோல் - இன்பம் பொருந்திய தோகையையுடைய மயிலினம்போலச் செல் லும் பெண்களுடைய அழகிய இடைமுரியும், இற்றால் மதன் அரசு இறக்கும் என்றே - முரிந்தால் மன்மதனுடைய அரசிருக்குமிடமாகிய அல்குலும் அழியுமென்று, தார்முடி இளையரானோர் - மாலையையணிந்த முடியினையுடைய காளை யர்கள், காமரும் கவற்சிகொள்ளக் கரத்தினுல் அவரைப் புல்லித் தாம் மருங்கு ஆகப் போனர் - மன்மதனுங் கவலை கொள்ளக் கையினலே அம்மகளிரைத்தழுவிக்கொண்டு தாம் (அவர்கள்) பக்கமாகச் சென்றார்கள். எ - று.

எம் எமம் என்பது இடைக்குறைந்தின்றது. மருமென்றது "செய்யுமெனெச்சவீற்றுயிர் மெய்சேறலும்" என்றபடி மருவும் என்னும் செய்யும் என்னும் வாய்பாட்டெச்சத் தீற்றயலுயிர் மெய் கெட்டுநின்றது. கொல் அசை; ஐயப்பொருளினின்றதெனினு மமையும். ஏ அசை. உம்மை உயர்வு சிறப்பு. யாவர்க்குங் காமத்தை எழுப்புகின்றமன்மதனும் இச்செயலைக்காணிற் காம மேலிட்டுச் சலிலயுறுவானென்பார் காமருங்கவற்சிகொள்ள என்றார். (82)

கணவன்றன் பிழையை யுன்னிக் கனன்றிடுங் கணவன் றோளை
யணைவுரு நீர்மை யுன்னி யழுங்குறு மமல மூர்த்தி
மணவினை தன்னை யுன்னி மகிழ்ந்திடு மிவ்வா றுகிப்
புணர்கயிற் றூசல் போலும் புந்திகொண் டொருத்தி போனாள்.

இ - ள். ஒருத்தி கணவன்றன் பிழையை உன்னிக் கனன்றிடும் - ஒருபெண் தனது தலைவனது பிழையை நினைத்து (ஒருகால்) வெகுளுவாள், கணவன் தோளை அணைவுறு நீர்மை உன்னி அழுங்குறும் - (அத்) தலைவனது தோளைச் சேராததன்மையைநினைந்து (ஒருகால்) வருந்து வாள், அமலமூர்த்தி மணவினை தன்னை உன்னி மகிழ்ந்திடும் - நின்மலமூர்த்தியாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கல்யாணஞ் செய்தருளலாகிய தொழிலைக்கருதி (ஒரு கால்) மகிழ்வாள், இவ்வாறு ஆகிப் புணர் கயிற்று ஊசல் போலும் புந்தி கொண்டு போனாள் - இத்தன்மையாகிக் கட்டப்பட்ட கயிற்றூஞ்சல்போலு மனங்கொண்டு சென்றாள். எ - று.

கணவன்றன்பிழை காமக்கிழத்திய ராதியரிடத்து மனம் வைத்தலாதியவை. மணம் ஆகுபெயர். மணவினை, திருக்கல் யாணஞ் செய்தலெனினுமமையும். ஊசல் ஒருநிலையினிற்றலின்றி அங்குமிங்குந்திரிதலின் ஒருநிலையினில்லாத மனத்துக்குவமை யானதென்க. (83)

கையிலார் கைகள் பெற்றுங் காலிலார் கால்கள் பெற்று
மொய்யிலார்மொய்கள்பெற்றா மூங்கைகண்மொழியைப்பெற்று
மையல்சேர் குருட ரானோர் வாள்விழி பெற்றுஞ் சென்று
ரையன்மே லுள்ளம் வைத்தார்க் கனையதோ வரிது மாதோ.

இ - ள். கை இலார் கைகள் பெற்றும் - கைகளில்லாதவர்கள் கைகளைப்பெற்றும், கால் இலார் கால்கள் பெற்றும் - கால்களில்லாதவர்கள் கால்களைப்பெற்றும், மொய் இலார் மொய்கள் பெற்றும் - வன்மைகளில்லாதவர்கள் வன்மைகளைப்பெற்றும், மூங்கைகள் மொழியைப்பெற்றும்- ஊமர்கள் பேசுதலைப்பெற்றும், மையல் சேர் குருடரானோர் வாள் விழி பெற்றும் சென்றார் - மயக்கஞ்சேர்ந்த குருடர்கள் ஒளியையுடைய கண்களைப்பெற்றுஞ் சென்றார்கள், ஐயன் மேல் உள்ளம் வைத்தார்க்கு அனையதோ அரிது மாதோ - சுப்பிரமணியப்பெருமான்மீது உள்ளம்வைத்தவர்களுக்கு அத்தன்மையோ அரிது. எ - று.

ஒவ்வொருவர்க்குமுள்ள வன்மைகளைநோக்கி மொய்கள் என்று பன்மையாகக்கூறினார். மொழி முதனிலைத்தொழிற்பெயர். கண்ணொளியில்லையாயின் அவர்களுக்கு எல்லாம் இருளாகியிருத்தல்பற்றி மையல்சேர்குருடர் என்றார். ஓகாரம் எதிர்மறை. (84)

விடந்தரு வேற்க ணல்லாள் வெளிப்படு கொங்கை தன்னைப்
படந்தனின் மறைத்த லோடும் பாங்கிலோர் காணா பாராத்
தொடர்ந்தன ளவள்பின்போனான் றணைமுலைப் படந்திற்சிக்கிக்
கிடந்ததன் மதியை மீட்கக் கிலேசமோ டேகு வான்போல்.

இ - ள். விடம் தரு வேல் கண் நல்லாள் வெளிப்படு கொங்கைதன்னைப் படந்தனில் மறைத்தலோடும்-விஷத்தை பூட்டிய வேல்போலும் விழியினையுடைய (ஒரு) மாது

(உத்தரியத்தினின்று) வெளிப்பட்டதனத்தை அவ்வுத்தரியத்தால் மறைத்தலும், பாங்கில் ஓர் காளை பாரா - (அவளுக்குப்) பக்கத்தில் ஒரு காளையானவன் (அதனைப்) பார்த்து, துணை முலைப்படத்தில் சிக்கிக்கிடந்த தன்மதியை மீட்கக் கிலேசமோடு ஏகுவான்போல் அவள்பின் தொடர்ந்தனன் போனான் - (அவளுடைய) இரண்டாகிய தனங்களிலிடப்பட்ட அவ்வுத்தரீயத்திற் சிக்கிக்கிடந்த தனதுமனத்தை மீட்டுக்கொள்ளக் கிலேசத்தோடு செல்பவன் போல அவளுக்குப்பின்னே தொடர்ந்துசென்றான். எ - று.

தருதல் ஈண்டு ஊட்டுதல். தொடர்ந்தனன் என்னும் வினைமுற்றுவினையெச்சமானது. வெளிப்பட்ட கொங்கையைக் கண்ணுற்ற காளையானவன் காமமயக்கங் கொண்டு நாண்டுறந்து அவள் பின்சென்றதை துணைமுலைப்படத்திற் சிக்கிக்கிடந்ததன்மதியை மீட்கக்கிலேசமோடேகுவான்போல் என்று சம்பாவனைசெய்தமையின் தற்குறிப்பணி. (35)

நெய்தலுங் கமலப் போது நீலமு நெடுநீர்ப் பொய்கை
கொய்தனர் குமர ரானோர் கொடுங்குழை மடந்தை மார்தங்
கைதனிற் கொடுத்துச் செல்வார் கன்னிமீ ரிவையோ நுங்கண்
மைதிகழ் விழிக்குத் தோற்ற மலரெனக் காட்டு வார்போல்.

இ - ள். குமரரானோர் - காளையரானவர்கள். கன்னிமீர் நுங்கள் மை திகழ்விழிக்குத் தோற்ற மலர் இவையோ எனக் காட்டுவார் போல் - கன்னியர்களே உங்களுடைய மைவிளங்குகின்ற கண்களுக்குத்தோற்ற மலர்கள் இவையோ வென்று காட்டுவார் போல, நெடு நீர்ப் பொய்கை நெய்தலும் கமலப்போதும் நீலமும் கொய்தனர் கொடும் குழை மடந்தைமார்தம் கைதனில் கொடுத்துச் செல்வார் - நெடிய நீர்ப்பொய்கைகளிலே நெய்தற் பூக்களையும் தாமரைப்பூக்களையும் நீலப்பூக்களையுங் கொய்து

வளைந்த குண்டலத்தையணிந்த மாதர்களுடைய கைகளிற் கொடுத்துச் செல்வார்கள். எ - று.

செய்தல் நிலம் ஆகுபெயர்கள். கொய்தனர் என்னும் வினைமுற்றுவினையெச்சமானது சோடும் என்பது கொடும் எனக்குறுகியது. மை கருமையெனினு மமையும். (86)

அரிசன மேனி நல்லா ளணிதுகி லசைவின் சீராற்
கரிசன மன்ன கொங்கை காண்டலுந் தளர்ந்தோர் காளை
தெரிசனந் தன்னி லீதென் சிந்தையைப் பிணித்த தென்றாற்
பரிசனந் தனிலென் னாமோ வென்றுயிர் பதைத்து நின்றான்.

இ - ள். அரிசனம் மேனி நல்லாள் அணி துகில் அசைவின் சீரால் கரிசனம் அன்ன கொங்கை காண்டலும் - மஞ்சளையணிந்த மேனியினையுடைய (ஒரு) தையல் தரித்த உத்தரீயத்தினது அசைவின்றன்மையினாற் (றோன்றிய) யானைக்கொம்பை நிகர்த்த (அவளது) முலையைக் காண்டலும், ஓர் காளை தளர்ந்து - ஒருகாளையானவன் சோர்ந்து, ஈது தெரிசனந்தன்னில் என் சிந்தையை பிணித்தது என்றால் பரிசனந்தனில் என் ஆமோ என்று உயிர் பதைத்து நின்றான் - இம்முலை காட்சியில் எனதுள்ளத்தைப் (பிறவழிச் செல்லவிடாது) கட்டியது என்றாற் பரிசித்தலில் (இதனால்) யாதாகுமோ வென்று உயிர் பதைத்து நின்றான். எ - று.

நல்லாள் கொங்கை என இயைப்பினும் அமையும். இல் இரண்டும் ஏழனுருபுகள். (87)

கற்பக வல்லி யன்னா ளொருத்திதன் காதன் மூழ்கி
யற்பக லேவல் செய்வா னங்கவள் செல்லும் போதிற்
பொற்புறு படாத்தி னீங்கிப் பூண்முலை சிறிது தோன்றப்
பற்பக னேற்ற வேண்டும் பரிசில்பெற் றுரை யொத்தான்.

இ - ள். கற்பக வல்லி அன்னாள் ஒருத்திதன் காதல் மூழ்கி அல் பகல் ஏவல் செய்வான் - கற்பக வல்லியிற் படரும் காமவல்லியை நிகர்த்தவ ளொருத்தியினது ஆசையின் மூழ்கி இரவும் பகலும் (அவளுக்கு) ஏவலைச் செய்பவன் (ஒருவன்), ஆங்கவள் செல்லும் போதில் பொற்பு உறு படாத்தின் நீங்கிப் பூண் முலை சிறிது தோன்ற - அவள் செல்லும் பொழுதில் அழகுபொருந்திய உத்தரீயத்தினின்று நீங்கி ஆபரணத்தை யணிந்த முலை சிறிது தோன்ற, (அதனைக்கண்டு), பற்பகல் நோற்று வேண்டு பரிசில் பெற்றாரை ஒத்தான் - பல நாட்டவஞ் செய்து (தான்) விரும்பியபரிசைப்பெற்றவரை நிகர்த்தான். எ - று.

ஒருத்திகாரணமாக உண்டாகிய காதலைக் காரணகாரியங்களின் ஒற்றுமைபற்றி ஒருத்திதன் காதலெனப்பட்டது. ஆங்கவள் ஒருசொல். பரிசில் பிறர் கொடுக்கக் கொள்ளும் பொருள். காட்சியும் ஐவகையின்பத் தொன்றாகலின் வேண்டும் பரிசில் பெற்றாரை யொத்தான் என்பது. (83)

ஒப்பிலா வொருவேற் காளை யொள்ளெயிற் றூறு தாங்கித்
துப்புறு பவளச் செவ்வாய் திறக்கலள் சொல்லு மாடா
ளப்படி யொருத்தி செல்ல வநங்கவே ளமுதம் வைத்த
செப்பினிற் குறியுண் டாங்கொ றிறக்கவீர் சிறிது மென்றான்.

இ - ள். ஒருத்தி - ஒருதையல், ஒப்பு இலா வேல் ஒரு காளை ஒள் எயிற்று ஊறு தாங்கித் துப்பு உறு பவளச் செவ்வாய் திறக்கலள் சொல்லும் ஆடாள் அப்படி செல்ல - உவமை யில்லாத வேற்படையைத்தரித்த ஒருவிடலையினுடைய ஒள்ளிய தந்தத்தாலாகிய ஊற்றினைத்தாங்கிச் செம்மைமிகுந்தபவளம் போன்ற செவ்வாயைத் திறவாதவளாகியும் உரையுமாடாளாகியும் அவ்வாறு செல்ல, சிறிதும்

திறக்கலீர்-(வாயைச்) சிறிதுந்திறக்கின்றிலீர், அநங்கவேள் அமுதம் வைத்த செப்பினில் குறி உண்டாங்கொல் என்றான் - மன்மதன் அமிர்தத்தைவைத்த செப்பிலே குறியுண்டோவென்றான் (அவ்விடலை) எ - று.

இலாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்திறுதிகெட்டது. திறக்கலலீர் ஆடாள் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. அநங்கவேளமுதம், மன்மதனது அமிர்தமெனினுமமையும். ஆம் கொல் அசைகள். உம்மைகள் இரண்டில் முன்னையது எச்சம்; பின்னையது இழிவுசிறப்பு. (89)

**புடைதனி லொருத்தல் புல்லப் போவதோர் பிடியின் மேவு
மடவரல் வெருவ லோடு மற்றது கண்டோர் வள்ள
லிடையக றேரு மாவும் யானையும் படையுங் கொண்டீர்
கடகரி யொன்றற் கஞ்சுங் காரணம் யாதோ வென்றான்.**

இ - ள். போவது ஓர் பிடியின் மேவும் மடவரல் - செல்வதாகிய ஒரு பெண்யானையிற்பொருந்தியிருக்கின்ற (ஒரு) தையல், படைதனில் ஒருத்தல் புல்ல வெருவலோடும் - பக்கத்தில் (ஒரு) ஆண்யானையடைய அஞ்சுதலும், ஓர் வள்ளல் மற்றது கண்டு - ஒரு தலைவன் அதனைக் கண்டு, இடை அகல் தேரும் மாவும் யானையும் படையும் கொண்டீர் கட கரி ஒன்றற்கு அஞ்சும் காரணம் யாதோ என்றான் - நடுவகன்ற இரதத்தையுந் துரகத்தையும் யானையையும் படைக்கலத்தையும் கொண்டிருக்கின்றீர் மதயானை ஒன்றற்கு அஞ்சுங் காரணமென்னோ வென்றான். எ - று.

போவது தொழில்காரணமாக வந்தபெயர். மற்று ஓ அசைகள். மா என்னும் பலபொருளொருசொல் ஈண்டுத் துரகம் என்று இனத்தால் விளங்கிற்று. கொண்டீர் வினையாலணையும் பெயர். காரணம் ஈண்டுத் தன்மையென்னும் பொருட்டு. இரதம் அல்குலுக்கும் முலைக்கும் யானைத்துதிக்கை தொடைக்கும்

வேற்படை விழிக்கும் உவமையாதலின் இடையக றேருமாவும் யானையும் படையுங் கொண்டனர் என்றுனென்க; சிந்தாமணியில் இரதக் குதிரையை முலைக்குவமை கூறியிருக்கின்றார், அச்சார்பு பற்றி ஈண்டுத் தாரகத்தை உவமையாகக் குறித்து அங்ஙன முரைக்கப்பட்டதென்க. பெண்களுடைய வயிற்று மடிப்புக்குத் தாரகத்துக்கும் நீர்த்திரை உவமையாதலின் ஒருவாறு ஒப்புச் சம்பந்தமுற் றிருத்தல்பற்றி வயிற்று மடிப்பைத் தாரகமென்று கூறினு மமையும். அங்ஙனங் கூறுமிடத்து முலையை யானை யென்க. படை வாட்படை யெனினுமமையும். (90)

ஆழியி லமுதம் பொங்கி யலையெறிந் தொழுகிற் றென்ன
வேழிசை நரம்பு கொண்ட மகரயா ழிசையப் பண்ணி
வேழமுந் தேரு மூர்ந்து விறலிய ரோடு பாணர்
நீழலும் பருந்து மென்ன நெறிப்பட விசைத்துப் போனார்

இ-ள். ஏழ் இசை நரம்பு கொண்ட மகர யாழ் - ஏழிசையையுடைய நரம்புகளைக் கொண்ட மகரயாழை, ஆழியில் அமுதம் பொங்கி அலை எறிந்து ஒழுகிற்று என்ன இசையப் பண்ணி - பாற்கடலில் அமுதம் பொங்கித் திரையெறிந்து ஓடுகின்றது போல இசையப்பண்ணி, வேழமும் தேரும் ஊர்ந்து விறலியரோடு பாணர் பருந்தும் நீழலும் என்ன நெறிப்பட இசைத்துப் போனார் - யானைகளையுந் தேர்களையு மூர்ந்து கொண்டு பாடுவிச்சிகளோடு பாணர்கள் பருந்தினதுபறத்தலையும் நிழலையும்போல முறைமையிற் பொருந்தப்பாடிச்சென்றார்கள். எ-று.

சுவைமிகுதிபற்றி இசையொலிக்கு அமுதத்தை உவமையாக்கி அவ்வொலி நரம்புகளசைய அவ்வழியே செல்லுதல்பற்றி அலையெறிந்தொழுகிற்றென்ன வென்றார். ஏழிசை சரிகமபதநி என்னும் அட்சரங்களிற் றோன்று மேழிசை இசையப்பண்ணல் பாடவேண்டு மிசைக்கேற்ப முறுக்காணியால் நரம்புகளை முறுக்குதல். நீழலும் பருந்து மென்னநெறிப்பட விசைத்தும்

போனர் என்றதனானே மிடற்றிசையோடு யாழிசையொப்பப் பாடிச்சென்றாரென்பது பெற்றாம். மிடற்றிசைக்குப் பருந்தினது பறத்தலும் யாழிசைக்கு அதனது நிழலு முவமையென்க. (91)

வெங்கரி நுதலி லப்பும் வீரசிந் தூரம்வில் வீச
மங்கையர் மைந்தர் பூணும் படைகளும் வயங்க மாடே
தொங்கலும் கவிகைக் காடுந் துவசமு மிருளைச் செய்யக்
கங்குலும் பகலு மாலைக் காலமும் போலு மாதோ.

இ - ள். வெம் கரி நுதலில் அப்பும் வீர சிந்தூரம் வில் வீச - ஒருபாலில் கொடுமையாகிய யானைகளின் நெற்றிகளிலப்பிய வீரத்தைக் குறிக்குஞ் சிந்தூரத்திலகம் ஒளியை வீச, மாடே மங்கையர் மைந்தர் பூணும் படைகளும் வயங்க - (ஒரு பாலில் மகளிர் ஆடவர் இவர்களுடைய ஆபரணங்களும் படைக்கலங்களும் ஒளியினைச் செய்ய, தொங்கலும் கவிகைக் காடும் துவசமும் இருளைச் செய்ய - பீலிக்குஞ்சங்களுங் குடைக்காடுங் கொடிகளும் இருளைச்செய்ப, கங்குலும் பகலும் மாலைக் காலமும் போலும் மாதோ - இராவும் பகலும் மாலைக்காலமும்போலும். எ-று.

பூணை மங்கையர் மைந்தரென்னும் இருபாலினர்க்கும், படையை "எற்புழிக்கோட"லால் மைந்தருக்கும் உடைமையாகக் கொள்க. ஏ அசை, திரள்பற்றிக் காடென்றார். சிந்தூரத் திலகம் ஒளிவீசுதல் செவ்வானத்தொளியையுடைய மாலைக் காலத்தையும் பூண்களும் படைகளும் விளங்குதல் பகற்காலத்தையும் தொங்கலுங் கவிகைக்காடுந் துவசமும் இருளைச்செய்தல் இராக்காலத்தையும் நிகர்த்ததென்க. இது எதிர்நிரனிறை. (92)

கொக்கரை படகம் பேரி குடமுழாக் கொம்பு காளந்
துங்கைதண் ணுமைத டாரி சல்லரி நிசாளந் தாள
மெய்க்குழ றுடியே பம்பை வேறுபல் லியமுந் தாங்கி
மைக்கடல் வாய்விட் டென்ன வரம்பிலா வியம்பிப் போனர்.

இ - ள். வரம்பு இலோர் - அளவில்லாத மாந்தர்கள், கொக்கரை - சங்குகளையும், படகம் - இரணபேரிகளையும், பேரி - பேரிகைகளையும், குடமுழா - குடமுழாக்களையும், கொம்பு - கொம்புகளையும், காளம் - சிறுசின்னங்களையும், தக்கை - தக்கைகளையும், தண்ணுமை - உறுமிமேளங்களையும், தடாரி - மத்தளங்களையும், சல்லரி - சல்லரிகளையும், நிசாளம் - நிசாளங்களையும், தாளம் - தாளங்களையும், மெய்க்குழல் - வடிவிற் றுளையையுடைய கருவிகளையும், துடியே - உடுக்கைகளையும், பம்பை - பம்பைகளையும், வேறு பல் இயமும் தாங்கி மைக் கடல் வாய்விட்டென்ன இயம்பிப் போனார் - (இவற்றின்) வேறாகிய பலவாச்சியங்களையுந் தாங்கிக் கருமையாகிய கடல் வாய்விட்டொலித்தாற்போல முழக்கிச் சென்றார்கள். எ - று.

குழல் ஆகுபெயர். ஏ அசை. (93)

ஆரண முனிவர் தாமு மமரரு மகல்வான் செல்வார்
சீரணி முசுகுந் தன்மேற் றிருமலர் சிதற லுற்றார்
காரண மில்லா வள்ளல் கடிமணந் தாமுங் காண்பான்
றாரணி தன்னிற் செல்லுந் தாரகா கணங்கொ லென்ன.

இ - ள். (மலர்களின் வீழ்ச்சியைக் கண்டவர்கள்) காரண மில்லா வள்ளல் கடிமணம் தாமும் காண்பான் தாரணி தன்னிற் செல்லும் தாரகா கணங்கொல் என்ன - (தாமே யாவற்றுக்குங் காரணரா யிருத்தலன்றித் தமக்கோர்) காரணமில்லாத வள்ளலாகிய சுப்பிரமணியப் பெருமானுடைய சிறந்த திருக்கல்யாணத்தைத் தாமுங் காணும்வண்ணம் (விண்ணினின்று) மண்ணிற் செல்லும் விண்மீன் கூட்டமோ என்றுசொல்ல, அகல் வான் செல்வார் ஆரண முனிவர் தாமும் அமரரும் சீர் அணி முசுகுந்தன்

மேல் திருமலர் சிதறலுற்றார்-அகன்ற ஆகாயத்திற் செல்வாராகிய வேதத்தையுணர்ந்த முனிவர்களுந் தேவர்களுங் கீர்த்தியை (அணியாகத்) தரித்த முசுகுந்தன்மீது அழகிய மலர்களைச் சிதறலுற்றார். எ - று.

செல்வார் வினையாலணையும்பெயர். (94)

இன்னன சனங்க ளீண்டி யெங்குமா யேகு மெல்லைத்
தன்னுறு கிளைஞர் தாமுந் தந்திரக் கிழவர் யாரு
முன்னொடு பின்னும் பாங்கு மொய்த்துடன் செல்லத் தானோர்
பொன்னெடுந் தேர்மேல் கொண்டு முசுகுந்தன் போத லுற்றான்.

இ - ள். இன்னன சனங்கள் ஈண்டி எங்கும் ஆய் ஏகும் எல்லைத் தன் உறுகிளைஞர்தாமும் தந்திரக் கிழவர் யாரும் - இத்தன்மைய வாகிய சனங்கள் நெருங்கி எவ்விடத்துமாகிச் செல்லும்பொழுதிற் றன்னுடைய சுற்றத்தவருஞ் சேனையாகிய உரியவர் யாவரும், முன்னொடு பின்னும் பாங்கும் மொய்த்து உடன் செல்ல - முன்னரும் பின்னரும் பாங்கருஞ் செறிந்து உடன் செல்ல, தான் ஓர் பொன் நெடும் தேர் மேல்கொண்டு போதலுற்றான் முசுகுந்தன்-தானொரு பொன்னாலாகிய நெடிய இரதத்தி லிவர்ந்து கொண்டு செல்லலுற்றான் முசுகுந்தராசன். எ - று.

இன்னன இன்ன என்பதன் மரூஉ. சனங்கள் ஈண்டு மாந்தர்கூட்டம். கிளைஞருள் மந்திரிக ளாதிய அரசியலுக் குரியவர்களுமடங்குமென்க. ஒடு எண்ணொடு. முன்னொடு என் றுரைப்பினுமாம். (95)

வேறு

அடவியு மிகந்தன னகனி காட்டுட
னிடையிடை யடுக்கலும் யாறு நீங்கினன்
படர்தலு மவன்வழிப் பரிதி நாயக
னடுவுறு முச்சிமே னண்ணி னனரோ.

இ - ள். அடவியும் இகந்தனன் - காடுகளையுங் கடந்து, அணி நாட்டுடன் இடை இடை அடுக்கலும் யாறும் நீங்கினன் படர்தலும் - மருதநில மாகிய நாடுகளுடன் இடையிடையே (உள்ள) மலைகளையும் யாறுகளையும் நீங்கி (அவ்வரசன்) செல்லவும், அவன் வழி நாயகன் பரிதி நடு உறும் உச்சிமேல் நண்ணினனரோ - அவனுடைய குலத்துக்குத் தலைவனாகிய சூரியன் (வானத்தின்) நடுவே பொருந்திய உச்சியிற் சார்ந்தான். எ - று.

இகந்தனன் நீங்கினன் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. இடையிடை என்பது அடுக்குமொழியன்று வழியினிடையே பலவிடங்களில் என்னும் பொருளினின்றது. அரோ அசை. (96)

அண்ணலம் படைகளு மளப்பின் மாக்களு
முண்ணெகி ழுவகையோ டொல்லை வந்திடத்
தண்ணிழல் வெண்குடைத் தரணி காவலன்
பண்ணவன் மேவுறு பரங்குன் றெய்தினன்.

இ - ள். அண்ணலம் படைகளும் அளப்பு இல் மாக்களும் - பெருமையாகிய சேனைகளும் அளத்தலில்லாத மாந்தர்களும், உள் நெகிழ் உவகையோடு ஒல்லை வந்திட - உள்ளம் நெகிழ்கின்ற சந்தோஷத்தோடு விரைவில் (உடன்) வர, தண் நிழல் வெண்குடைத் தரணி காவலன் - குளிர்மையாகிய வெண்கொற்றக் குடையினையுடைய பூமிக்கரசனாகிய முசுகுந்தன், பண்ணவன் மேவுறு பரங்குன்று எய்தினன் - சுப்பிரமணியப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற திருப்பரங் குன்றை யடைந்தான். எ - று.

அம் அல்வழிச்சாரியை. அளத்தல் இவ்வளவென்று கணக்கிடுதல். தண் நிழல் ஒருபொருட் பன்மொழி; தண்ணிய நிழலைச் செய்கின்ற எனினுமமையும். (97)

முசுமுக முடையவன் முன்னர் வந்துழி
வசுமதி யிறைபுரி மன்ன ரேவரு
மசைவறு திருவொடு மனிகந் தன்னொடுந்
திசைதொறுந் திசைதொறுஞ் சென்றங் கெய்தினர்.

இ - ள். முசுமுக முடையவன் முன்னர் வந்துழி — முசுகுந்தராசன் முன்னர் வந்தவிடத்து, வசுமதி இறைபுரி மன்னர் எவரும் - பூமியை அரசுபுரிகின்ற அரசர்கள் யாவரும், அசைவு அறு திருவொடும் அனிகந்தன்னொடும் திசைதொறும் திசைதொறும் சென்று அங்கு எய்தினர் - சோர்தலில்லாத செல்வத்தோடும் சேனைகளோடும் திசைதோறுந் திசைதோறுஞ் சென்று அங்ஙனம் அடைந்தார்கள். எ - று.

சுப்பிரமணியப் பெருமானுடைய திருமணத்தைக் காணத் தக்க தெய்வத் தன்மையுடைய அரசர்களது செல்வம் நீங்காது நிலைமையுறுதல் பற்றி அசைவறு திருவொடும் என்றார். திரு ஈண்டு வெண்கொற்றக்குடை கொடி கவரி ஆதியன. திசை தோறுமுள்ள பலதேசங்களிலுமிருந்து சென்றங் கெய்தினரென்பார் திசைதொறுந் திசைதொறுஞ் சென்றங்கெய்தினரென்றார். (98)

முறைநெறி யாற்றிடு முசுகுந் தன்முத
லிறையவர் யாவரு மீண்டு தானையுங்
குறைதவிர் சனங்களுங் குன்றஞ் சூழ்ந்துற
நிறுவின ரொன்றிய நெஞ்சங் கொண்டுளார்.

இ - ள். நெறி முறை ஆற்றிய முசுகுந்தன் முதல் இறையவர் யாவரும் - நீதியாகிய முறையினை (உயிர்களுக்குச்) செய்கின்ற முசுகுந்தன் முதலாகிய அரசர்கள் யாவரும், ஒன்றிய நெஞ்சம் கொண்டுளார் - (அன்பினால்)

ஒன்றிய உள்ளங் கொண்டுளராய், ஈண்டு தானையும் குறை தவிர் சனங்களும் குன்றம் சூழ்ந்து உற நிறுவினர் - நெருங்கிய சேனைகளையுங் குறைதலில்லாத மாந்தர் கூட்டத்தையும் அத்திருப்பரங்குன்றத்தைச் சூழ்ந்து தங்கும்படி நிறுத்தினார்கள். எ - று.

குறை முதனிலைத்தொழிற்பெயர். குறைதவிர், குற்றம் நீங்கிய எனினுமாம். கொண்டுளார் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (99)

புழையுறு கரங்களாற் போதகஞ் சில
வுழைவரு பிடிதனக் கும்பர் தாருவின்
குழைகளை முறித்தன கொடுத்துக் கோட்டினுன்
மழைமுகில் கீறியே வாரி நல்குவ.

இ - ள். சில போதகம் - சில ஆண்யானைகள், உழை வரு பிடிதனக்கு - (தத்தம்) பக்கத்து வருகின்ற பெண் யானைகளுக்கு, புழை உறு கரங்சளால் உம்பர் தாருவின் குழைகளை முறித்தன கொடுத்து - துளைபொருந்திய துதிக்கைகளால் தேவர்களுடைய (பஞ்ச) விருக்ஷங்களி லுள்ள தளிர்களை முறித்துக்கொடுத்து, கோட்டினுல் மழை முகில் கீறியே வாரி நல்குவ - கொம்புகளாலே மழையைப் பெய்யும் முகில்களைக் கிழித்து நீரைக் கொடுக்கின்றன. எ - று.

சில ஆண்யானைகள் ஒவ்வொன்றும் தத்தம் பிடியானைக ளொவ்வொன்றற்கும் தனித்தனியே கொடுத்தல்பற்றி போதகஞ் சில பிடிதனக்கு என்று பன்மையொருமை மயக்கங்கூறினார். அது இடவழுவமைதியின் பாற்படும். கொடுத்தன என்னும் வினைமுற்று வினையெச்சமானது. ஏ அசை. (100)

படர்சிறை நீங்கிய பராரை வெற்பெலா
மடிகளி னொற்றியே யசைந்து போந்தெனக்
கடிகமழ் மும்மதக் கரிக ளோர்சில
விடலருந் தளையொடு மெல்லச் சென்றவே.

இ - ள். படர் சிறை நீங்கிய பராரை வெற்பு எலாம் அடிகளின் ஒற்றியே அசைந்து போந்தென - பரந்த சிறைகள் நீங்கிய பருத்தவடியினையுடைய மலைகளெல்லாங் கால்களாலொற்றி அசைந்து சென்றாற்போல, கடி கமழ் மும்மதக் கரிகள் ஓர் சில விடல் அரும் தளையொடு மெல்லச் சென்றவே - மணம் நாறுகின்ற மும்மதங்களையுடைய யானைகள் சில நீங்குதலில்லாத விலங்குகளோடு மெள்ளச் சென்றன. எ - று.

பரு அரை பராரை என மரீஇயது. எல்லாம் எலாம் எனத் தொகுத்தது. ஒற்றல், நடக்கும் வழக்கப்படி நீட்டி வைக்காது சமீபத்தில் அடிபெயர்த்து வைத்தல். ஏ இரண்டும் அசைகள். மும்மதம்: கன்னமதம் கைம்மதம் கோசமதம். ஓர் அசை. அருமை "அறவாழியந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற் பிறவாழி நீந்தலரிது" என்றதிற்போல இன்மை என்னும் பொருடந்து நின்றது. (101)

மூடுறு கணமுகின் முழக்க றாததோர்
கோடுயர் குன்றினைக் குறித்து நோக்கியே
யீடுறு திசைக்கரி யீதென் றுன்னியே
யோடுவ ததன்மிசை யொன்றொர் யானையே.

இ - ள். ஒன்று ஓர் யானையே - ஒரு யானையானது, மூடு உறு கணம் முகில் முழக்கு அறாதது ஓர் கோடு உயர் குன்றினைக் குறித்து நோக்கியே - (மேலே) மூடிய கூட்டமாகிய மேகத்தின் முழக்கம் நீங்காததாகிய கொடுமுடி

யுயர்ந்த ஒருமலையைக் குறித்துப் பார்த்து, ஈடு உறு திசைக் கரி ஈதென்று உன்னியே அதன் மிசை ஓடுவது - வலிமைபொருந்திய திக்கிலுள்ள யானை ஈதென்று கருதி அக்கிரிமேலோடுகின்றது. எ - று.

மூடுறு, மூடுதலுற்ற எனினுமாம். ஏகாரம் மூன்றனுள் முன்னைய இரண்டும் தேற்றம்; பின்னையது அசை. ஒன்று ஓர் ஒருபொருட்பன்மொழி. திசைக்கரியீதென்றுன்னி என்றது தற்குறிப்பணியின்பாற்படும். (102)

வேறு

கலையக லல்கு லார்பாற் காதலான் முயங்கி வல்லே
யுலைவுறு சேக்கைப் போரி லுடைந்திடு குமர ரேபோன்
மலைபொரு பிடிக ளோடு மலைந்துதன் மதநீர் சிந்தி
நிலையழி வெய்தி வெள்கி நின்றதோர் நெடுநல் வேழம்.

இ-ள். கலை அகல் அல்குலார்பால் காதலால் முயங்கி உலைவு உறு சேக்கைப் போரில் வல்லே உடைந்திடு குமரரே போல் - மேகலையையணிந்த அகன்ற அல்குலினையுடைய மகளிர்மாட்டு ஆசையினாலே தழுவி (பின்னர்) வருந்துத லுறுஞ் சேக்கைப்போரிலே விரைவில் உடைந்தகாளையர் (நிலையழிந்து நாணமுறுதல்) போல, நெடு நல் ஓர் வேழம் - நெடிய நல்ல ஒரு ஆண்யானையானது, மலை பொரு பிடிக ளோடும் மலைந்து தன் மத நீர் சிந்தி நிலை அழிவு எய்தி வெள்கி நின்றது - மலையை நிகர்த்த பெண்யானைகளோடு (கலவிப்போர்) பொருது தனதுமதநீரைச்சொரிந்து நிலை யழிவடைந்து நாணிநின்றது. எ - று.

மேகலை, எண்கோவைமணி; "எண்கோவை மேகலை காஞ்சி யிருகோவை" என்னும் பழம்பாட்டினுட்காண்க; எழுகோவை மணியென்பாருமுளர். சேக்கை, மக்கட்படுக்கை; ஈண்டு அப் படுக்கையிற் புணரும் புணர்ச்சிமேனின்றது. ஏகாரம் பிரிநிலை

மலைபொருபிடிகள், மலையொடுபொரும்பிடிகள் எனினுமமையும். மதநீர், ஈண்டுக்கோசமதநீர். மதநீர் சிந்துதலால் நிலையழிவெய்தலும் அப்பெண்யானைகட்குத் தோற்றமையால் நாணுதலுமடைந்தனவென்க. சேக்கைப்போரிலுடைதல், அம்மகளிருடையபோக முடியமுன்னர்த் தம்போகமுடிதல். (103)

உடம்பிடி புரையு மொண்கண் மோகினி யொருத்திக் காகத்
திடம்படு மவுணர் யாருந் திரண்டுடன் சென்ற வாபோல்
மடம்படு பிடியொன் றேக மையன்மேல் கொண்டு மாடே
கடம்படு மொருத்தல் வேழங் கணிப்பில படர்ந்த வன்றே.

இ - ள். உடம்பிடி புரையும் ஒண்கண் மோகினி ஒருத்திக்கு ஆகத் திடம் படும் அவுணர் யாரும் திரண்டு உடன் சென்றவா போல்-வேற்படையை நிகர்த்த ஒள்ளிய விழியினையுடைய மோகினி ஒருத்திகாரணமாக வலிமை பொருந்திய அசுரர்கள் யாவருந் திரண்டு ஒருசேர (அவண் மாட்டுச்) சென்றவாறுபோல, மடம் படு பிடி ஒன்று ஏக - மடைமைபொருந்திய பெண்யானையொன்றுசெல்ல, மாடே கடம் படும் ஒருத்தல் வேழம் கணிப்பு இல மையல் மேல் கொண்டு படர்ந்தவன்றே - (அதன்) மாட்டு மதம் பொருந்திய ஆண்யானைகள் அளவில்லாதன (காம) மயக்க மேல்கொண்டு சென்றன. எ - று.

ஒருத்தி காரணமாகச்சென்றதை ஒருத்திக்காகச் சென்றதென்றார். சென்றவாறு எனற்பாலது சென்றவா எனத் தொகுத்துநின்றது. அமரரும் அசுரருங்கூடிப் பாற்கடலைக் கடைய அமுதந்தோன்றியகாலையில் அதனை அவ்விருபாலாருந் தங்களது தங்களது என்று வாதிட்டுப் போர்புரியத் தொடங்கும் வேளை விஷ்ணுமூர்த்தி ஒரு மோகினியாகி வந்து ஒருபாலார் அமுத்தையும் ஒருபாலார் என்னையுங் கொள்கவென்ன அமரர்கள் அமுதத்தைக்கொள்ள அசுரர்கள் அம்மோகினியைக் கொள்ள இசைந்து பின்னர் ஒவ்வொருவருங் காமாசைமேலிட்டுத்

திரண்டு அம்மோகினிமாட்டுச் சென்றதை மகாசாத்தாப்படலத்திற்காண்க. அன்றும் ஏ இரண்டும் அசைகள். ஒருத்தல் ஈண்டு ஆண் என்னும் பொருளின்றது. ஒருத்தல்வேழம், ஒருத்தலாகிய வேழமெனினுமாம். (104)

காழுற்ற தந்த மின்னக் கபோலத்து மதநீர் விழ
வூழிப்பே ருருமுத் தன்னை யுமிழ்ந்தென வொலிமீக் கொள்ளக்
கேழுற்ற மணிவில் லென்னக் கிளர்நுத லோடை பொங்க
வேழத்தி னிரைக ளெல்லா வேகப்போ லுலாவு கின்ற.

இ - ள். காழ் உற்ற தந்தம் மின்ன - வைரம்பொருந்திய கொம்புகள் (மின்னுதலைப்போல) ஒளியினைச்செய்ய, கபோலத்து மத நீர் விழ - கன்னத்தினின்று மதமாகிய நீர் (மழைபெய்தல்போலச்) சொரிய, ஊழிப் பேர் உருமுத் தன்னை உமிழ்ந்தென ஒலி மீக்கொள்ள - உறைகாலத்திலே பெரிய இடியைக்கக்குகின்றதுபோல முழக்கம் அதிகரிக்க, கேழ் உற்ற மணி வில் என்னக் கிளர் நுதல் ஓடை பொங்க- ஒளிமிகுந்த அழகாகிய வானவில்லைப்போல விளங்குகின்ற நெற்றிப்பட்டம் பொலிவுற, வேழத்தின் நிரைகள் எல்லாம் மேகம் போல் உலாவுகின்ற - யானைநிரைகளெல்லா மேகங்கள்போல உலாவுகின்றன. எ - று.

ஒலிமீக்கொள்ளுதற்கும் நுதலோடைபொங்குதற்குங் குறித்த உவமைகள்போலத் தந்தம் மின்னுதற்கும் மதநீர்வீழ்தற்கும் உவமைகள் வருவிக்கப்பட்டன. மின்ன வீழ மீக்கொள்ள பொங்க என்னுஞ்செயவென் வாய்பாட்டெச்சங்கள் காரணப்பொருட்டாகின்றன. (105)

இருநெடு விசும்பிற் செல்லு மெழிலியை யெயிற்றாற் பாய்ந்து
சொரிதரு புனலை வாரித் துதிக்கையால் வீசு கின்ற
பருமணி யோடை யானை பாய்திரைப் பரவை யேழுங்
கரதல மெடுத்துச் சிந்துங் கண்ணுதற் களிறு போலும்.

இ - ள். விசும்பில் செல்லும் இரு நெடு எழிலியை எயிற்றாற் பாய்ந்து சொரிதரு புனலை துதிக்கையால் வாரி வீசுகின்ற பரு மணி ஓடை யானை - ஆகாயத்திற் செல்லுகின்ற பெருமையாகிய நெடிய மேகத்தைத் தந்தத்தாற் கிழித்து (அதனுள்ளிருந்து) சொரிகின்ற மழைநீரைத் துதிக்கையால் வாரி வீசுகின்ற பருத்த அரதனங்களை வழுத்திய நெற்றிப்பட்டத்தினையுடை (ஒரு) யானையானது, பாய் திரைப் பரவை ஏழும் கரதலம் எடுத்துச் சிந்தும் நுதல் கண் களிறு போலும் - பரம்புகின்ற திரைகளையுடைய கடல்களேழையுந் துதிக்கையால் வாரிச் சிதறுகின்ற நெற்றிக்கண்ணையுடைய யானைமுகக்கடவுளை நிகர்க்கும். எ - று.

கண்ணுதல், கண்ணையுடைய நெற்றியையுடைய எனினுமமையும். உறுப்புக்களிற் சிறந்தமுகம் யானைமுகம்போலு முகமாதல்பற்றி விநாயகக்கடவுளைக் களிறு என்றார். (106)

கன்றோடு பிடிகள் சூழக் கடாம்படு கைம்மா வொன்று
நின்றிடு கந்திற் சேர்ந்து நிகளத்தோ டமர்ந்த நீர்மை
குன்றுகள் புடையிற் சுற்றக் குருமணி நீலப் பொற்றை
யொன்றொரு தமிய தாகி யுற்றவா றொத்த தம்மா.

இ - ள். கன்றொடு பிடிகள் சூழக் கடாம் படு கைம்மா ஒன்று நின்றிடு கந்தில் சேர்ந்து நிகளத்தோடு அமர்ந்த நீர்மை - கன்றுகளோடு பெண்யானைகள்சூழ மதசலம் பொருந்திய ஆண்யானையொன்று (அங்ஙனம்) நிற்கின்ற தறியிற்சார்ந்து விலங்கோடுநிற்கின்றதன்மை, குன்றுகள் புடையில் சுற்றக் குருநீல மணிப் பொற்றை ஒன்று ஒரு தமியது ஆகி உற்ற ஆறு ஒத்ததம்மா - சிறுமலைகள் பக்கத்திற்சூழ நிறத்தினையுடைய நீலமணிமலை யொன்று தனியதாகிப் பொருந்தியதன்மையை நிகர்த்தது. எ - று.

கடாம்படுகைம்மா, மதம் உண்டாகின்ற துதிக்கையினை யுடையயானை எனினுமமையும். நிகளம், சங்கிலியுமாம். நிகளம் அமர்தற்கு விசேஷணமாதலால் ஒடு அடைமொழிப் பொருளி னின்றது. அமர்தல், ஈண்டுநிற்றல். ஒருதமி ஒருபொருட் பன்மொழி. அம்மா அசை. (107)

எருத்தமே லிடிக்கும் பாக ரிசைக்குறி கொள்ளா தாகி
மருத்தினும் விசைமேற் கொண்டு வன்கரித் தண்ட நோக்கி
யுருத்திடு கொடுஞ்சொற் றுய ரோறுக்கவு மொருவன்மாட்டே
கருத்துறு கணிகை நெஞ்சிற் போவதோர் கடுங்கண் வேழம்.

இ - ள். ஓர் கடுங்கண் வேழம் - ஒரு கொடுமையாகிய யானை, எருத்தம் மேல் இடிக்கும் பாகர் இசைக்குறி கொள்ளாது ஆகி - பிடரின்மீது (இருந்து) உரப்புகின்ற பாகரது ஒலிக்குறியைக்கொள்ளாததாகி, மருத்தினும் விசை மேற் கொண்டு - வாயுவினின்றும் வேகமேற்கொண்டு, வல் கரித் தண்டம் நோக்கி - வன்மையாகிய யானைகள் செல்லும் வழியைநோக்கி, உரித்திடு கொடும் கொல் தாயர் ஒறுக்கவும் ஒருவன்மாட்டே கருத்து உறு கணிகை நெஞ்சில்போவது - வெகுளுகின்ற கொடுஞ்சொற்களையுடைய தாயர்கள் அதட்டுதலும் (அதனை யுள்ளத்திற்கொள்ளாது பொருள் கொடுக்காத) ஒருவன்மாட்டே (புணர்ச்சிக்) கருத்துறு கின்ற வேசியினுடையமனத்தைப்போலச் செல்லுகின்றது. எ - று.

பாகர் என்றும் தாயர் என்றும் பலபாற்சொற்கள் புணர்த் தமையின் ஒருபாகனுக்கு அடங்காத மத்தயானை என்பதும் ஒரு தாய்க்கடங்காது மீறுகின்ற வேசியென்பதும் பெறப்படுமென்க. பலதாயர், தன்றாயோடுடன் பிறந்தவரும் கைத்தாயராதியரு மென்க. கொள்ளாததி எனற்பாலது கொள்ளாது எனத் தொகுத்தது. உம்மை உயர்வுசிறப்பு. உருத்திடுதாயர் என இயைக்க. எகாரம் பிரிநிலை. (108)

தூவகங் கொண்ட செங்கே ழங்குசந் தூண்டு பாகர்
நாவகங் கொண்ட சொல்லா னவிற்றுமந் திரத்தால் வாக்காற்
பாவகங் கொண்ட பைங்கட் பாரிடம் வழிப்பட் டாங்குச்
சேவகங் கொண்ட பொங்கர் சேர்ந்தன சிலகைம் மாக்கள்.

இ - ள். சில கைமாக்கள் - சில யானைகள், தூ அகம் கொண்ட செம் அங்குசம் தூண்டு பாகர் நா அகம் கொண்ட சொல்லால் - தூய்மையைத் (தன்கட்) கொண்ட செம்மையாகிய நிறத்தினையுடைய தோட்டியைத் தூண்டுகின்ற பாகர்களது நாவானது (தன்கட்) கொண்டசொல்லினாலே, வாக்கால் நவிற்று மந்திரத்தால் பாவகம் கொண்ட பைங்கண் பாரிடம் வழிப்பட்டாங்கு சேவகம் கொண்ட பொங்கர் சேர்ந்தன - வாயினாலுச்சரிக்கின்ற மந்திரத்தினாலே கொலையைத் (தங்கட்) கொண்ட பசுமையாகிய கண்ணினையுடைய பூதங்கள் வழிச்சென்றாற்போலத் துயிலிடம் (ஆகக்) கொண்ட சோலையிற் சேர்ந்தன. எ - று.

தூய்மை, ஈண்டுக்கறையுறாது விளக்கமாதல். தூண்டுதல் ஈண்டுச்செவியிற் கொழுவல். மந்திரத்தால் வாக்கால், என்றதற்கு மந்திரத்தோடுகூடிய சொல்லினால் எனினுமமையும். வழிப்பட்டாலாங்கு எனற்பாலது வழிப்பட்டாங்கு எனத் தொகுத்தது. (109)

அந்தமி லாத செல்வத் தவுணருக் கரசன் முன்னம்
வெந்திறற் கால்க டம்மை வியன்சிறைப் படுத்தி யென்னக்
கந்திடைப் பிணிக்கப் பட்ட கடுநடைப் புரவி யெல்லாம்
பந்தியி லொழுங்கு கொண்டு நின்றன பாங்க ரெங்கும்.

இ - ள் அந்தம் இலாத செல்வத்து அவுணருக்கு அரசன் முன்னம் வெம்திறல் கால்கடம்மை வியன் சிறைப் படுத்தி என்ன - முடிவில்லாத வளத்தினையுடைய அசுரர்கட்கரசனாகிய சூரபன்மன் பண்டுவெய்ய வலியினையுடைய

வாயுக்களைப் பெரிய சிறைப்படுத்தியதுபோல, பாங்கர் எங்கும் - பக்கங்கள் எவ்விடத்தும், கந்திடைப் பிணிக்கப் பட்ட கடு நடைப்புரவி எல்லாம் பந்தியில் ஒழுங்குகொண்டு நின்றன - கட்டுத்தறிகளிற் கட்டப்பட்ட வேகமாகிய நடையினையுடைய குதிரைகளெல்லாம் பந்தியிலே வரிசை யாகிநின்றன. எ - று.

இவ்வளவென்று அளவிடமுடியும் நூற்றெட்டுகெங்காறும் அழிவும் இல்லாமைபற்றி அந்தமிலாத செல்வமென்றார். படுத்தி யது எனற்பாலது படுத்தி என நின்றது. கடுமை ஈண்டு வேகம். பந்தி, குதிரைகள் கட்டப்படுமிடம். வாயுக்களை வரிசையாக விலங்குபூட்டிச் சிறைப்படுத்த அவை நின்றதுபோல நின்றன வென்க.

வீரவேற் றடக்கை வள்ளல் விழாவினைக் காண விண்ணோ
ரூரொடு திசையு மேனை யுலகமு மொருங்குற் றென்னக்
காரினு மொலிமேல் கொண்ட கலினவாம் புரவி பூண்ட
தேர்நிரை யநந்த கோடி செறிந்தன திசைக ளெங்கும்.

இ - ள். வீர வேல் தடக்கை வள்ளல் விழாவினைக் காண விண்ணோர் ஊரொடு திசையும் ஏனை உலகமும் ஒருங்கு உற்றென்ன - வீரமாகிய வேற்படைக்கலத்தைத் தரித்த பெருமையாகிய திருக்கரத்தினையுடைய சுப்பிரமணி யப்பெருமானது (திருமணச்) சிறப்பைக்காணத் தேவ லோகத்தோடு திக்குகளிலுள்ள நகரங்களும் மற்றைய உலகங்களும் ஒருசேரச் சார்ந்ததுபோல, காரினும் ஒலி மேல்கொண்ட கலின வாம் புரவிபூண்ட அனந்தகோடி தேர் நிரை திசைகள் எங்குஞ் செறிந்தன - முகில் முழக் கத்தினின்றும் முழக்கத்தை மேற்கொண்ட கடிவாளத்தை யுடைய தாவுகின்ற குதிரைகள்பூண்ட அனந்தகோடி தேர் நிரைகள் திக்குகளெவ்விடத்துஞ்செறிந்தன. எ - று.

திசை கார் ஆகுபெயர்கள். காரினும் என்றதனும்மை உயர்வு சிறப்பு. வாவும் என்னுஞ் செய்புமெனெச்சத்து இடையுயிர் மெய்கெட்டது. (111)

விடங்கெழு வேற்க ணநம் வெலற்கரும் வீரர் தாமுந்
தடங்கெழு தானை வெள்ளத் தலைவரு மேனை யோரு
மிடங்கெழு துளைத்துன் னூசி யிழைதொடுத் திசைக்கப் பட்ட
படங்கெழு மாட கூடத் தாவணம் பரவிப் புக்கார்.

இ - ள். விடம் கெழு வேல் கணாரும் வெலற்கு அரும் வீரர் தாமும் தடம் கெழு தானை வெள்ளத் தலைவரும் ஏனையோரும் - நஞ்சுபொருந்திய வேல்போலுங் கண்ணினையுடைய மகளிரும் (பிறரால்) வெல்லுதற்கரிய வீரர்களும் பெருமைபொருந்திய சேனைவெள்ளத்தையுடைய தலைவர்களும் மற்றையோர்களும், இடம் கெழு துளைத் துன்னூசி இழை தொடுத்து இசைக்கப்பட்ட படம் கெழு மாட கூடத்து ஆவணம் பரவிப் புக்கார் - அவ்விடத்திற்பொருந்திய துளையையுடைய துன்னூசியிலே நூலைத்தொடுத்துத் தைக்கப்பட்ட ஆடையாலாகிய மாடகூடங்களையுடைய வீதிகளில் பரவிச்சேர்ந்தார்கள். எ - று.

(தலைவர் அரசரெனினுமாம். ஏனையோர்மந்திரிமார் முதலானவர்களுங் குடிசனங்களாகிய ஆடவர்களுமென்க. துன்னூசி தையலூசி. மாடம் கூடம் இல்விகற்பங்கள். (112)

கன்னெடுந் தாரை கான்ற கார்முகில் வளைப்பச் செங்கண்
முன்னவ னிரையைக் காத்த முதுவரை நிலைய தென்னப்
பன்னிறப் பசுங்காய் சிந்தும் பழுமரக் காமர் காவுட்
பொன்னவிர் புனைமாண் கோயில் புரவலற் கமைந்த தன்றே.

இ - ள். நெடும் கல் தாரை கான்ற கார் முகில் வளைப்பச் செம் கண் முன்னவன் நிரையைக் காத்த முது

வரை நிலையது என்ன - நெடிய கன்மழையைப் பெய்கின்ற கருமையாகிய முகில்சூழச் செம்மையாகிய கண்ணினையுடைய விஷ்ணுமூர்த்தி (ஒருவிரலாலேந்திப்) பசுக்களைக் காத்த பெருமையாகிய கிரியின்றன்மைபோல, பல் நிறப் பசுங்காய் சிந்தும் பழுமரக் காமர் கா உள்பொன் இவர் புனை மாண் கோயில் புரவலற்கு அமைந்ததன்றே - பல நிறங்களையுடைய செவ்விக்காய்களைச் சிந்துகின்ற ஆலமரங்களையுடைய அழகிய சோலையினுள்ளே பொன்னிறஞ் செறிந்த அலங்கரிக்கப்பட்ட பெருமையாகியகோயில் (ஒன்று) முசுகுந்தராசனுக்கு அமைக்கப்பட்டது. எ - று.

நிலைமை ஈண்டுத்தன்மை. காய் தோன்றியகாலந்தொட்டுப் பழமாம்வரையிற் பலநிறமமையுமாதலிற் பன்னிறப்பசுங்காயென்றார். பழுமரம், பருத்தமரமெனினு மமையும். பொன் ஆகுபெயர். அமைந்தது படுவிகுதிதொக்க வினைமுற்று. அன்றும் ஏயும் அசைகள். (113)

முத்தமுந் துகிரும் பொன்னு முழு மணிக் கலனுஞ் சந்துஞ்
சித்திரப் படமு மற்றுந் தெற்றிமே னிரைத்துச் சீர்சா
லுத்தம வணிக ருற்று ருணர்ச்சியுங் கற்புந் தூக்கி
யத்தகு பொருளை யார்க்கு மளித்திடுங் கொடையி னர்போல்.

இ - ள். முத்தமும் துகிரும் பொன்னும் முழு மணிக் கலனுஞ் சந்தும் சித்திரப் படமும் மற்றும் தெற்றி மேல் நிரைத்து - முத்துக்களையும் பவளங்களையும் பொன்களையும் முற்றும்மணிகளையழுத்திய ஆபரணங்களையும் சந்தனத்தையுஞ் சித்திரமாகிய ஆடைகளையும் பிறவற்றையுந் திண்ணைகளின்மீது நிரைத்துக்கொண்டு, உணர்ச்சியும் கற்பும் தூக்கி அத்தகுபொருளை யார்க்கும் அளித்திடும் கொடையினர்போல் சீர் சால் உத்தம வணிகர் உற்றார் -

அறிவினையுங் கற்ற கல்வியையும் ஆராய்ந்து அத்தகுந்த பொருள்களை யாவர்க்குங்கொடுக்குங் கொடையினுர் போலச் செல்வம்நிறைந்த உத்தமமாகிய வணிகர்களிருந் தார்கள். எ - று.

கற்பு ஆகுபெயர். உணர்ச்சியுங் கற்புநூக்குதல் அறிவுக்குங் கற்றகல்விக்குந்தக்க தக்கபடி கொடித்தற்கென்க. (114)

மடப்பிடி மான்றேர் நீங்கி வானிடைத் தவறி மின்னின்
கொடித்திரள் செல்லு மாபோற் குவலயம் படர்ந்து பொங்க
ரிடத்தினி லொதுங்கு வெற்பி னெதிரெதிர் கூவி மஞ்ஞை
நடித்திடு மாட னோக்கித் திரிந்தனர் நங்கை மார்கள்.

இ - ள். நங்கைமார்கள் - தையன்மார்கள், மடப்பிடி மான் தேர் நீங்கி - மடமையையுடைய பெண்யானைகளிலும் குதிரைகளையுடைய தேர்களிலும் (இருத்தலை) நீங்கி, மின்னின் கொடித் திரள் வான் இடைத்தவறிச் செல்லுமா போல் குவலயம் படர்ந்து - மின்னினது கொடிக்கூட்டம் மேகத்தினின்றுதவறி (வீழ்ந்து நிலத்திற்) செல்லுமாறு போல நிலத்தில்நடந்து, பொங்கரிடத்தினில் ஒதுங்கி - சோலையினிடத்துச்சார்ந்து, வெற்பின் எதிர் எதிர்கூவி - மலைகளுக்கெதிரேகூவி, மஞ்ஞை நடித்திடும் ஆடல் நோக்கித் திரிந்தனர்-மயில்களாடுகின்ற ஆடலைப் பார்த்துத் திரிந்தார்கள். எ - று.

மடப்பிடிமான்றேர்நீங்கி என்றதற்கு மடப்பிடிகளினின்றும் நீங்கி எனினுமமையும். மின்னின்கொடித்திரள் என்றதில் ஆறும் வேற்றுமைப் பொருளாகிய குறைப்பொருள் இராகுத்தலை என்றதிற்போல ஒற்றுமையானதென்பது. மின்னின் கொடித் திரள், மின்னலாகிய கொடித்திரளெனினுமமையும். செல்லு மாறு எனற்பாலது செல்லுமா என இறுதிகுறைந்து நின்றது.

ஒதுங்கல், ஈண்டுச்சார்தல். எதிரெதிர் என்ற பன்மைகுறித் தடுக்கியது. (115)

கோலொடு வில்லும் வாளுங் குந்தமும் வயங்கப் பாத
சாலமுங் கழலு மார்ப்பத் தபனிய மணித்தார் தாழச்
சோலையி னுலவிச் சார லருவியுஞ் சுனையுங் கண்டு
மால்கரி மலைவு நோக்கி மடங்கலிற் றிரிந்தார் மைந்தர்.

இ - ள். மைந்தர் - ஆடவர்கள், கோலொடு வில்லும் வாளும் குந்தமும் வயங்க - அம்போடு (கூடிய) வில்லும் வாளும் வேலுங் (கரத்தில்) விளங்கவும், பாதசாலமும் கழலும் ஆர்ப்ப - பதத்தணிகளும் வீரக்கழல்களும் (கால்களில்) ஆரவாரிக்கவும், மணித் தபனியத் தார் தாழ - அழகிய பொன்னரியமாலை (மார்பிற்) றாங்கவும், சோலையின் உலவிச் சாரல் அருவியும் சுனையும் கண்டு மால் கரி மலைவு நோக்கி மடங்கலில் திரிந்தார் - சோலைகளிலுலாவி மலைச்சாரலிலுள்ள அருவி நீர்களையுஞ் சுனைகளையுங்கண்டு பெருமையாகிய யானைகள் (போர்) பொருதலைப்பார்த்துச் சிங்கங்கள்போலத் திரிந்தார்கள். எ - று.

பாதசாலம் தண்டைச்சிலம்புகள். தபனியமணித்தார், பொன்னாலும் மணியாலுமாகிய மாலைகள் எனினுமமையும். (116)

தாரிடைப் படிந்த வண்டு தடமலர்க் குவளை சேர
வாரிடைப் படிந்த கொங்கை மாதரு மைந்தர் தாழ
மூரிடைப் படிந்த செங்கே ழாதவ னுநப்பந் தீர
நீரிடைப் படிதல் வேட்டு நெடும்புனற் றுறையில் வந்தார்.

இ - ள். வார் இடைப் படிந்த கொங்கை மாதரும் மைந்தர் தாமும் - கச்சினுளமர்ந்த தனங்களையுடைய மங்கையர்களும் ஆடவர்களும், ஊர் இடைப் படிந்த செம்

கேழ் ஆதவன் உருப்பம் தீர நீர் இடைப் படிதல் வேட்டு - பரிவேடத்தின் நடுவேயமர்கின்ற செம்மையாகிய நிறத்தினையுடைய சூரியனாலுண்டாகிய வெப்பம் நீங்க நீரினுள்ளே மூழ்கவிரும்பி, தாரிடைப் படிந்த வண்டு தடகுவளை மலர் சேர நெடும் புனல் துறையில் வந்தார் - (தாங்கள் தரித்திருக்கின்ற) மாலைகளிடத்துப் பொருந்திய வண்டுகள் பெருமையாகிய குவளைப்போதுகளிற்சேர நெடிய நீர்த்துறையில் வந்தார்கள். எ - று.

தடாகத்தின்கண்ணே தாமரைமலர்களுமுளவாகவும் தாரிடைப்படிந்தவண்டு தடமலர்க்குவளைசேர என்றது என்னையெனின், தாமரைமலர் காலைப்பொழுதில் மலர்வது ஆதலின் அக்காலையிலே அம்மலரிடத்து வண்டுகள் வீழ்ந்து தேனையுண்டுவிடத் தேனில்லாத மலராகி யிருக்குமாகலின் தாரிடைப்படிந்த வண்டு அம்மலரைச் சாராது மாலையின் மலரும் பருவத்தனவாய்க் குமிழ்ப்பு வடிவமாகி மணநாறுங் குவளைப் போதுகளிற் சாருமாதலி னென்பது. தீர என்னுஞ்செயவெனெச்சங் காரியப் பொருட்டாகின்றது. (117)

வெண்ணிற முகிலி னும்பர் விஞ்சையர் வேந்தர் தாமு
மொண்ணுத லணங்கி னோரு மொருங்குடன் றிரண்ட தென்னக்
கண்ணகன் றடாகம் புக்க கனங்குழை மகளிர் மைந்தர்
தண்ணறு புனல்பாய்ந் தாடித் தலைத்தலை திரித லுற்றார்.

இ - ள். விஞ்சையர் வேந்தர்தாமும் ஒள் நுதல் அணங்கினோரும் - விஞ்சையராசர்களும் ஒள்ளிய நெற்றியினையுடைய விஞ்சைய ஸ்திரீகளும், வெள் நிற முகிலின் உம்பர் உடன் ஒருங்கு திரண்டது என்ன-வெண்மையாகிய நிறத்தினையுடைய மேகத்தின்மீது உடனே ஒருசேரத் திரண்டதுபோல, கண் அகன் தடாகம் புக்க கனம் குழை மகளிர் மைந்தர் - இடமகன்ற தடாகத்திற்சேர்ந்த பார

மரகிய குண்டலத்தையணிந்த மங்கையர்களும் ஆடவர் களும், தண் உறு புனல் பாய்ந்து ஆடித் தலைத் தலை திரித லுற்றார் - தண்மைபொருந்திய நீரிற்பாய்ந்து மூழ்கி இட மிடந்தோறுந் திரிதலுற்றார்கள். எ - று.

திரண்டது தொழிற்பெயர். திரண்டதுபோலத் தடாகம் புக்கவென்க. தலைத்தலை அடுக்கியது. தடாகத்திலே ஓரிடத்தி னன்று பலவிடத்துமென்று குறித்தற்கென்க. திரிதலுற்றார் திரிந்தாரென்றபடி. (118)

கழியுண்ட வுவரிக் கானற் கடைசியர் நாட்ட மஞ்சிப்
பழியுண்டு மறைந்த வாபோ லொருசிறை பயிலு நெய்தற்
குழியுண்ட போதை நோக்கிக் குரைபுனற் றடத்துக் கம்மா
விழியுண்டு கொல்லோ வென்றே கொழுநரை வினவு கின்றார்.

இ - ள். கழி உண்ட உவரிக் கானல் கடைசியர் நாட்டம் அஞ்சி பழி உண்டு மறைந்தவா போல் ஒரு சிறை பயிலும் குழி உண்ட நெய்தல் போதை நோக்கி - உப்ப ளத்தையுட்கொண்ட கடற்கரைச்சோலையில் விளையாடும் நெய்தனிலப்பெண்களுடைய கண்ணிற்கஞ்சிப் பழியைப் பட்டு ஒளித்தவாறுபோல (அத்தடாகத்தில்) ஓரிடத்துப் பொருந்திய குழியையுட்கொண்ட நெய்தற்பூக்களை (மகளிர்கள்) பார்த்து, குரை புனல் தடத்துக்கு அம்மா விழி உண்டு கொல்லோ என்றே கொழுநரை வினவுகின்றார் - ஒலிக்கின்ற நீரையுடைய தடாகத்துக்குங் கண்ணுண்டோ வென்று கணவரைக்கேட்கின்றார்கள். எ - று.

நாட்டமஞ்சி என்றதற்கு நாட்டத்தையஞ்சி எனினுமமையும். மறைந்தவாறு என்பாலது மறைந்தவா என இறுதிகுறைந்தது. அம்மா வியப்புக்குறிப்பு. ஓவும் எவும் அசைகள். (119)

பங்கயம் வதன மென்பார் பாசியைக் கூந்த லென்பார்
செங்கிடை யதர மென்பார் புள்ளொலி செப்ப லென்பார்
சங்கினைக் களமே யென்பார் தடாகமு மொருத்தி யல்ல
மங்கையர் பலரே யென்பார் திரைகளை மணித்து சென்பார்.

இ - ள். பங்கயம் வதனம் என்பார்-தாமரைமலர்களை முகங்களேயென்று சொல்லுவார், பாசியைக் கூந்தல் என்பார் - பாசிகளைக் கூந்தல்களேயென்று சொல்லுவார், செங்கிடை அதரம் என்பார் - செங்கிடைகளை அதரங்களேயென்று சொல்லுவார், புள் ஒலி செப்பல் என்பார் - பறவைகளினொலியை மொழிதலேயென்று சொல்லுவார், சங்கினைக் களமே என்பார் - சங்குகளை மிடறுகளேயென்று சொல்லுவார், திரைகளை மணித் தூசு என்பார் - திரைகளை அழகிய ஆடைகளேயென்று சொல்லுவார், தடாகமும் ஒருத்தி அல்ல மங்கையர் பலரே என்பார் - இத்தடாகமும் ஒருத்தியன்று பெண்கள்பலரே என்று கூறுவார் (அத் தடத்திலாடுமகளிர்). எ - று.

அத்தடாகத்தினீராடுமகளிர் அத்தாமரைமலர்களாதியவற்றைப் பார்த்து இவைகள் முகங்களே இவைகள் கூந்தல்களே யென்று இங்ஙனங் கூறினரென்பது. ஏகாரங்கள் தேற்றப் பொருள. களமே என்றதனேகாரத்தை ஏனையவற்றிற்குங் கூட்டியுரைத்துக்கொள்க. பங்கயமாதியவை பலவாதலின் தடாகமுமொருத்தியல்ல, மங்கையர் பலரேயென்பாராயினரென்க. பங்கயமாதியனவற்றை முகமாதியனவாக உணர்தலால் இது மயக்கணி. (120)

தத்தையை யனைய சொல்லா ளொருத்திதன் வீழ நன்னை
யத்தடந் தன்னி னேக்கி யளியனை யறியா தீண்டோர்
மைத்தடங் கண்ணி னுனை மருவினை யென்று கேள்வன்
கைத்தலந் தன்னை விட்டு வெகுண்டனள் கரையிற் போனாள்.

இ - ள். தத்தையை அனைய சொல்லாள் ஒருத்தி தன் னீழறன்னை அத்தடந் தன்னில் நோக்கி - (தன்றலைவனுடைய கரத்திற் பற்றிக்கொண்டு நீரிலாடுங்) கிளிமொழி போலு மொழியினையுடையளாகிய ஒரு தையல் தனது நிழலை அத்தடாகத்திலே (தமக்கு அணித்தாகக்) கண்டு, அளியனை அறியாது ஈண்டு ஓர் மைத்தடம் கண்ணினளை மருவினை என்று வெகுண்டனள் கேள்வன் கைத்தலந் தன்னை விட்டு கரையில் போனாள் - அளியேனையறியாமல் இங்ஙனம் ஒரு கரிய பெரிய கண்ணினையுடையாளைப் புணர்ந்தாயென்று கூறிக் கோபித்து அத்தலைவனுடைய கரத்தினை விட்டுக் கரையிற்சென்றாள். எ - று.

தத்தை ஆகுபெயர். தான் அணித்தாக நிற்கவுந் தன்னை மதியாது மற்றொருத்தியைக் கூடினனெனில் தான் தலைவியின் பாற்படுவேனல்லேனென்னுங் கருத்தால் தன்னை அளியனென்றாள். வெகுண்டனள் என்னும் வினைமுற்று வினையெச்சமானது.

(121)

குளத்திடைப் புனல்வாய்ப் பெய்து கொப்பளித் திடுவான் றன்
னுளத்திடை வெகுளி யெய்தி யூடின ளொருத்தி யேகி [மே
முளைத்திடு கமலக் கானின் முகமலர் வுறுப்பு முற்று
மொளித்தன ணிற்ப நாடிக் காண்கல னுலைத லுற்றான்.

இ - ள். குளத்திடைப் புனல் வாய்ப் பெய்து கொப்பளித்திடுவான் றன்மேல் ஒருத்தி உளத்திடை வெகுளி எய்தி ஊடினள் ஏகி முளைத்திடு கமலக் கானில் முகம் அலர் உறுப்பு முற்றும் ஒளித்தனள் நிற்ப - அத்தடத்திலுள்ள நீரை வாயில்விட்டுத் (தன்மீது) கொப்பளித்திட்டவனாகிய தலைவன்மீது ஒரு தலைவி உள்ளத்திற் சினமடைந்து பிணங்கிக் கொண்டு (அவனுக்கு அணித்தாகா தப்பாற்)

சென்று (அத்தடத்தின்) முளைத்த தாமரைக்காட்டிலே (தன்) முகமல்லாத உறுப்புக்கள் யாவற்றையும் (நீரினுள்) மறைத்துநிற்க, நாடிக் காண்கலன் உலைதல் உற்றான் - (அத்தலைவியை அத்தலைவன்) தேடிக்காணாது உலைதலுற்றான். எ - று.

புனல்வாய்ப்பெய்து குளத்திடைக் கொப்பளித்திடுவான்றன் மேல் எனச்சொல்வகுத்து நீரை வாய்ப்பெய்து தன்னெற்றியிலே கொப்பளித்திடுவான்மேல் என்று பொருள் கூறினுமமையும். பலர்குழீஇபவிடத்துக் கொப்பளித்தமைபற்றி நாணமேலிட்டுச் சினந்தாளென்க. ஊடினள் ஒளித்தனள் காண்கலன் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. தலைவியினுடைய முகத்தை தாமரைமலராகவுணர்ந்து அவளைக்காணாது நிற்றலால் இதுவும் மயக்கவணி. (122)

தாம்பெறு கொழுநர் தம்மைத் தந்தமக் குரிய புத்தே
ளாம்பரி சுன்னுந் தன்மை யையம தில்லை யென்னக்
காம்புறழ் தடந்தோ ணல்லார் கணவர்மேற் கரத்தா லள்ளிப்
பூம்புனல் விசுகின்றார் பூசனை புரிகு வார்போல்.

இ - ள். தாம் பெறு கொழுநர்தம்மைத் தத்தமக்கு உரிய புத்தேள் ஆம் பரிசு உன்னும் தன்மை ஐயமது இல்லை என்ன - தமக்குக்கிடைத்த நாயகரைத் தத்தமக்குரிய கடவுளாகும்பண்பு (ஆகப்பெண்கள்) நினைக்குந்தன்மை ஐயமில்லையென்று (கண்டோர்) சொல்ல, காம்பு உறழ் தடந்தோள் நல்லார்பூம் புனல் கரத்தால் அள்ளிப் பூசனை புரிகுவார்போல் கணவர் மேல் வீசுகின்றார் - மூங்கிலை நிகர்த்த தோளினையுடைய மகளிர்கள் பொலிவாகிய நீரைக் கைகளாலள்ளித் (தெய்வத்துக்குப்) பூசனையைச் செய்பவர்போலத் தலைவர்மீது தூவுகின்றார்கள். எ - று.

தம் தாமெனநீண்டது. தாம்பெறு என்றதற்கு மாலையிடுதலாதியவற்றாற் பெண்களாகவரித்தலு முண்மையின் தாம் பெற்றுக்கொண்ட என்று பொருளுரைப்பினுமமையும். அது பகுதிப் பொருள்விகுதி. (123)

ஞெண்டொடு வராலுஞ் சேலும் யாமையு நிலாவெண் சங்கும்
புண்டரீ கத்த டாகங் குடைந்திடும் பூச லஞ்சித்
தெண்டிரை யமுதச் சொல்லார் சிற்சில வுறுப்புத் தன்னைக்
கண்டுகண் டிரிவ தென்னத் திரிவன கலக்க மெய்தி.

இ - ள். ஞெண்டொடு வராலும் சேலும் யாமையும் நிலா வெண் சங்கும் - ஞெண்டுகளோடுவரான் மீன்களுஞ் சேன்மீன்களும் ஆமைகளும் நிலாவினையுடைய வெண்மையாகிய சங்குகளும், புண்டரீகத் தடாகம் குடைந்திடும் பூசல் அஞ்சி - அத்தாமரைத்தடாகத்தை (மகளிரும் ஆடவரும்) குடைந்தாடுகின்ற ஆரவாரத்துக்கு அஞ்சி, தெள் திரை அமுதச் சொல்லார் சிற்சில உறுப்புத்தன்னைக் கண்டு கண்டு இரிவது என்னக் கலக்கம் எய்தித் திரிவன - தெளிய திரையையுடைய கடலிற்றோன்றிய அமிர்தம்போலுஞ் சொல்லினையுடையராகிய அம்மகளிருடைய சிலச்சில உறுப்புக்களைக் கண்டுகண்டு (தாமவற்றுக்கு நிகராகாமையால் தோல்வியுற்று எதிர்நிற்கலாற்றாது) ஓடுவதுபோலக் கலக்கமடைந்து திரிவன. எ - று.

ஞெண்டுகள் பெண்களுடைய முழந்தாளையும் வரால்கள் கணைக்காலையும் சேல்கள் விழியையும் யாமைகள் புறவடியையும் சங்குகள் மிடற்றினையுங் கண்டுகண்டு இரிவதுபோலவென்க. ஞெண்டு முதலியவை பலவாதலின் ஒருமுறையில் அவையெல்லாங் காண்டல்கூடாவாகலின் பலமுறையிற்கண் . என்பதைக் குறிக்கக் கண்டுகண்டு என்றடுக்கியதென்க. (124)

ஏந்திழை மகளிர் தாமு மைந்தரு மிருநீர் தன்னுட்
பாய்ந்தன ராடு மெல்லைப் பங்கய விலைக டோறுஞ்
சேர்ந்திடு திவலை யீட்டஞ் சிறந்தவர் சேர்த லாலே
பூந்தடம் பொய்கை யாக்கை பொடித்தன போலு மன்றே.

இ - ள். ஏந்து இழை மகளிர் தாமும் மைந்தரும் இரு நீர் தன்னுள் பாய்ந்தனர் ஆடும் எல்லை - ஏந்துகின்ற ஆபரணத்தினையுடைய மகளிர்களும் ஆடவர்களும் பெருமையாகிய (அத்தடத்து) நீரினுட்பாய்ந்து ஆடுங்காலையில், பங்கய இலைகள்தோறும் சேர்ந்திடு திவலை ஈட்டம் - தாமரையிலைகடோறுஞ் சேர்ந்த திவலைக்கூட்டம், சிறந்தவர் சேர்தலாலே பூம் தடம் பொய்கை யாக்கை பொடித்தன போலும் மன்றே - சிறந்தவர்கள் (தன்னைச்) சேர்தலாலே பொலிவாகிய பெரிய அத்தடாகம் மெய்புளகமடைந்ததுபோலும். எ - று.

பாய்ந்தனர் என்னும்வினைமுற்று வினையெச்சமானது. ஏகாரங்களிரண்டும் அன்றும் அசைகள். (125)

நோக்கினு நுழைகு ருத நுண்டுகின் மறைத்த வல்கு
றேக்குதண் பொய்கை யாடுஞ் செவ்வியிற் றெரியத்தோன்ற
நீக்கரும் பெருநாண் கொண்டு நின்றிடா தொருத்தி யோடித்
தாக்கணங் கென்னப் போய்த்தன் கொழுநனைத் தழுவிக்
கொண்டாள்.

இ - ள். நோக்கினும் நுழைகுருத நுண் துகில் மறைத்த அல்குல் தேக்கு தண் பொய்கை ஆடும் செவ்வியில் தெரியத் தோன்ற - பார்வையினுள்ளும் நுழையாத நுண்மையாகிய ஆடையினால் மறைத்த அல்குலானது (நீர்) நிறைந்த குளிர்மையாகிய தடாகத்திலே முழுகும் பொழுதில் (யாவர்க்குந்) தெரியத்தோன்ற, நீக்கரும் பெரு நாண்

கொண்டு நின்றிடாது ஒருத்தி தாக்கணங்கு என்ன ஓடிப் போய்த் தன் கொழுநனைத் தழுவிக் கொண்டாள் - நீக்குதற்கரிய பெரியநாணங்கொண்டு (தான் நின்றவிடத்தில்) நில்லாது ஒருதையல்தாக்கும் அணங்குபோல ஓடிச்சென்று தன்னுடைய தலைவனைத் தழுவிக்கொண்டாள். எ - று.

உம்மை உயர்வுசிறப்பு; எச்சவும்மையுமாம். நுழைதுதல் இறுதிகுறைந்தது. தேங்கு தேக்கு எனவலித்தது. தாக்கணகு, மக்களைக்காணின் விரைந்தோடிவந்து பிடித்துக்கொள்ளுந் தெய்வப்பெண். அல்குல் பிறர்க்குத் தெரியாதிருத்தற்பொருட்டுத் தழுவிக்கொண்டாளென்க. (126)

உட்டெளி வில்லா நங்கை யொலிபுனற் றடத்தி னாடுங்
கட்டழ குளவோர் காளை கவிரிதழ் வெளுப்பு நோக்கிக்
கிட்டியா னிற்க வன்றன் கேழ்கிள ரதரத் தெச்சி
லிட்டனள் யாரிங் கென்று வெகுளிகொண் டிகலிப் போனாள்.

இ - ள். உள் தெளிவு இல்லா நங்கை - மனந்தெளிதவில்லாத ஒருதையல், ஒலி புனல் தடத்தின் ஆடும் கட்டழகு உள ஓர் காளை கவிர் இதழ் வெளுப்பு நோக்கி - ஒலிக்கின்ற நீரினையுடைய தடாகத்தில் மூழ்கின்ற கட்டழகுள்ள ஒரு விடலையினது முருக்கமலர்போலு மிதழின் வெளுப்பைப் பார்த்து, யான் கிட்டி நிற்க உன்றன் கேழ் கிளர் அதரத்து எச்சில் இட்டவள் இங்கு யார் என்று வெகுளி கொண்டு இகலிப் போனாள் - (நின்னை) யான் கிட்டிநிற்க (என்னை யறியாது) நினது (செம்மை) நிறம்விளங்குகின்ற இதழிலே எச்சிலிட்டாள் இங்கியாரென்று சினங்கொண்டு சண்டையிட்டுக் (கரையிற்) சென்றாள். எ - று.

தன்றலைவனது பேரழகைக்குறித்து அவனைப் பிறபெண்டிருந் தன்னையறியாது தம்வசப்படுத்திவிடுவாரென்று எப்பொழுதுஞ் சந்தேகங்கொண்டு நிற்பவளென்பார் உட்டெளிவில்லா

கங்கை யென்றார். கட்டழகு, பேரழகு. எப்பொழுதும் ஐயமுடைய ளாதலினாலே நீரினுள் முழுகினாலும் இதழ் வெளுக்குமென்பதைக் கருதாது தான் நீரினுள் முழுகுஞ்சமயம்பார்த்து யாரோ ஒருத்தி அதரபானஞ்செய்தாளென்று கருதிச் சண்டையிட்டுச் சென்றாளென்க. (127)

வேறு

வெளுத்தன சேயிதழ் விழிசி வந்தன
வளித்தொகை யெழுந்தன வளகஞ் சோர்ந்தன
குளித்திடு மலர்த்தடங் கொடிய னார்க்கெலாங்
களித்திடு கணவருங் கள்ளு மொத்ததே.

இ - ள். சேயிதழ் வெளுத்தன - செம்மையாகிய இதழ்கள்வெளுத்தன, விழி சிவந்தன - கண்கள் சிவந்தன, அளித்தொகை எழுந்தன - வண்டின்கூட்ட மெழுந்தன, அளகம் சோர்ந்தன - கூந்தல்கள்சோர்ந்தன, (ஆதலால்) கொடி அனார்க்கு எலாம் - கொடியைநிகர்த்த பெண்களுக் கெல்லாம், குளித்திடு மலர்த் தடம் களித்திடு கணவரு கள்ளும் ஒத்ததே - (அவர்கள்) நீராடுகின்ற மலர்த்தடாக மானது பெருமகிழ்வுறுகின்ற நாயகரையுங் கள்ளையும் நிகர்த்தது. எ - று.

கணவரோடு புணரினும் கள்ளைப்பருகினும் நீரில் மூழுகினும் இதழ் வெளுத்தலாதியவை ஒப்ப நிகழ்தல்பற்றிக் குளித்திடு மலர்த்தடங் கொடியனார்க்கெலாங் களித்திடு கணவருங் கள்ளு மொத்ததே என்றார். இம்மூன்றிடத்தும் அளித்தொகையெழுத லெவ்வனமெனின் நீரில் முழுகுமிடத்துக்கூந்தல் நீரிலாழும் போதும் கணவரோடு புணருமிடத்துப் புல்லுதல் முதலிய தொழிலாற் கூந்தலசையும்போதும் கள்ளினைக்குடிக்கும்போது கூந்தலிலுள்ள மலர்மணத்தினின்று அக்கள்ளின்மணம் வீசவே அதனிடத்துச் செல்லுதற்கும் கூந்தலினின்று அளித்தொகை எழுமென்க. ஏ அசை. (128)

பையர வல்குலார் படியும் பான்மையாற்
றுய்யதோர் குமிழிகள் செறிந்து தோன்றுவ
வையபூந் தடமெலா மவரை நோக்குவான்
மெய்யெலாம் விழிகளாய் விழித்தல் போன்றவே.

இ - ள். அரவு பை அல்குலார் படியும் பான்மையால் செறிந்து தோன்றுவ துய்யதோர் குமிழிகள் - அரவின் படம்போலும் அல்குலினையுடைய மகளிர்கள் மூழ்குந் தன்மையால் நெருங்கித் தோன்றுவனவாகிய தூய்மையை யுடையவாய குமிழிகள், ஐய பூந் தடம் அவரை எலாம் நோக்குவான் மெய் எலாம் விழிகள் ஆய் விழித்தல் போன்றவே - அழகினையுடைய அம்மலர்த் தடாகமானது அவர்களை யெல்லாம் நோக்கும்வண்ணம் மெய்ம்முழுதுங் கண்களாகி நோக்குதல்போன்றன. எ - று.

துய்யது குமிழிகள் ஒருமைபன்மை மயக்கம். ஓரும் ஏயும் அசைகள். தோன்றுவ என்பதைத் தொழிற்பெயராகக்கொண்டு பொருள்கூறினுமமையும். நோக்குவான் வானீற்றுவினையெச்சம்.

மன்னரு மகளிரும் படிந்த வாசநீர்
செந்நிறக் குங்கும நானஞ் சேர்தலான்
மின்னொடு கூடிய முகிலு மெல்லியற்
பொன்னொடு கூடிய மாலும் போலுமால்.

இ - ள். மன்னரும் மகளிரும் படிந்த வாச நீர் - தலைவர்களுந் தலைவியர்களும் மூழ்கிய வாசத்தையுடைய நீர், செம் நிறக் குங்குமம் நானம் சேர்தலால் - செம்மையாகிய நிறத்தினையுடைய குங்குமமுங் கத்தூரியுஞ் சேர்தலினாலே, மின்னொடு கூடிய முகிலும் மெல் இயல் பொன்னொடு கூடிய மாலும் போலுமால் - மின்னலோடுகூடிய மேகத்தை

யும் மென்மையாகிய சாயலினையுடைய திருமகளோடுகூடிய திருமாலையும் நிகர்க்கும். எ - று.

கத்தூரி குங்குமத்தினின்று கனமுடைத்தாதல்பற்றி நீரோடு கலந்து கீழேயுறக் குங்குமங்கனமில்லாமைபற்றி மேலேயுறத லாலே மின்னொளி மேலேகூடிய முகிலையும் திருமகள் மார்பின் மீது பொருந்திய திருமாலையும் நிகர்த்ததென்க. ஆல் அசை. ()

வேறு

பூசு சாந்தமு நானமும் பொய்கையில்
வாச நீரெங்கு மாகி மணங் கமழ்ந்
தாசை யெங்கு முலாவியவ் வானவர்
நாசி யூடு மடுத்து நடந்தவே.

இ - ள். பூசு சாந்தமும் நானமும் - (ஆடவர்களும் மகளிர்களும் தங்களுடைய மேனிகளிற்) பூசியசாந்தும் கத்தூரியும், பொய்கையில் வாச நீர் எங்கும் ஆகி மணம் கமழ்ந்து ஆசை எங்கும் உலாவி - அத்தடாகத்திலுள்ள வாசத்தையுடைய நீரிலெவ்விடத்துமாகி நறுமணங்கமழ்ந்து திசைக ளெவ்விடத்தும்பரந்து, அவ் வானவர் நாசி ஊடு மடுத்து நடந்தவே - அத்தேவர்களது நாசித்துவாரத்தினூடு நிறைந்து சென்றன. எ - று.

வாசனைக்கும் வாசனைப்பண்டத்துக்குமுள்ள ஒற்றுமைபற்றி வாசனைசென்றதை வாசனைப் பண்டஞ்சென்றனவென்றார். அவ்வானவர், அத்திசைகளிலுள்ளவானவர். நாசி ஆகுபெயர். மடுத்தல் ஈண்டு நிறைதல். ஏ அசை. இங்ஙனம் உலகொழுக் கிறப்பப்புகழ்வது காந்தம் என்னுங் குணவலங்காரத்திற் கௌட நெறியார் கொள்கை என்பது. (131)

இன்ன தன்மையி லேர்கெழு மைந்தரு
மன்ன மென்னடை யார்களு மத்தடந்
தன்னி னுடித் தடங்கரை யேறியே
பொன்னின் மாண்கலை பூணொடு தாங்கினர்.

இ - ள். இன்ன தன்மையில் வர் செழு மைந்தரும் அன்ன மெல் நடையார்களும் அத்தடந்தன்னின் ஆடி - இத்தன்மையாக அழகுபொருந்திய ஆடவர்களும் அன்ன நடைபோலும் மென்மையாகிய நடையினையுடைய மகளிர்களும் அப்பொய்கையிலே மூழ்கி, தடம் கரை ஏறியே பொன்னின் மாண் கலை பூணொடு தாங்கினர் - பெருமையாகிய கரையிலேறிப் பொன்னாலாகிய பெருமையையுடைய ஆடைகளை ஆபரணங்களோடு தரித்தார்கள். எ-று.

இன்ன இகரச்சுட்டின்மரூஉ. அன்னம் ஆகுபெயர். ஏ அசை. பொன்னின்கலை பீதாம்பரம்; அது பொன்னினாலே மிகமென்மையாகிய தகடியற்றிப் பட்டுநூலிலே நூல்தெரியா வண்ணஞ்சுற்றி அந்நூலாலிபற்றப்பட்ட ஆடையென்க. பொன்னைப்பூணொடு மியைத்துரைப்பினுமமையும். (132)

வெளிறு மென்னகைக் மெல்லியன் மாதரு
மொளிறு மேனி யுவாக்களு மொன்றியே
பிளிறு மையற் பிடியும் பெருமதக்
களிறு மென்னக் கடிபொழி லேகினர்.

இ - ள். வெளிறு மெல் நகை மெல் இயல் மாதரும் ஒளிறு மேனி உவாக்களும் ஒன்றியே - வெண்மையாகிய சிறியமுறுவலையும் மென்மையாகிய இயலினையுமுடைய மகளிர்களும் ஒளிகொண்டமேனியினையுடைய காளையர்களுங்கூடி, பிளிறும் மையல் பிடியும் பெரு மதக் களிறும் என்னக் கடி பொழில் ஏகினர் - ஆரவாரிக்கின்ற மையலையுடைய பெண்யானைகளும் பெருமையாகிய மதத்தினையுடைய ஆண்யானைகளும் போல நறுமணத்தினையுடைய சோலையின்கண்ணே சென்றார்கள். எ - று.

மென்னகை என்றதில்மென்மை ஈண்டுச்சிறுமை; வன்மையுள்ளதேகத்தினையுடைய ஆடவர்க்குப்போலாது மென்மையான

மூறவலெனினுமமையும். ஏ அசை. பிளிறுதலையும்மையலையும் ஆண்யானைகளுக்குக்கூட்டுக. மையல் பெண்யானைகளுக்குக்காம மயக்கம் ஆண்யானைகளுக்கு உன்மத்தமென்க. கடி, சிறப்புமாம்.

ஏகி னார்க்கவ் விரும்பொழின் மீச்செறி
மேக சாலமு மீன்றொகை யீண்டிய
மாக நாடுமவ் வானவர் வந்துசேர்
போக பூமிப் பொதும்பரும் போன்றதே.

இ - ள். ஏகினார்க்கு அ இரும் பொழில் - சென்றவர்களுக்கு அப்பெருமையாகிய சோலை, மீச் செறி மேக சாலமும் - வானத்தின்கட்பொருந்திய முகிற்கூட்டத்தையும், மீன் தொகை ஈண்டிய மாக நாடும் - விண்மீன்கூட்டம் நெருங்கிய வானிடத்தையும், அவ்வானவர் வந்து சேர் போக பூமிப் பொதும்பரும் போன்றதே - அத்தேவர்கள் வந்துசேரும் போகபூமியிலுள்ள சோலையையும் போன்றது. எ - று.

மேலேயுள்ள ஆகாயந்தோன்றாமல் மறைத்து மறைத்தவிடங் கருமையுற்றுத்தண்மை செய்தலால் மேகசாலத்தையும், கருமையுற்றிருத்தலோடு மலர்கள்நெருங்கி அழகுசெய்தலால் மீன்றொகையீண்டியமாகநாட்டையும், மிக்க இன்பத்தைவிளைத்தலாற்போகபூமிப்பொதும்பரையும் போன்றதென்க. ஏ அசை. (134)

பளிங்க டுத்திடு பாங்கரின் வேங்கைவீ
விளங்கு சாயையை மெய்யென நோக்கியிக்
குலங்கொள் பூமலர் கொய்துநல் கீரெனத்
தளர்ந்தொ ருத்தி தலைவனை வேண்டினாள்.

இ - ள். பளிங்கு அடுத்திடு பாங்கரின் வேங்கை வீ விளங்கு சாயையை நோக்கி மெய் என - பளிங்குப்பாறை சார்ந்த இடத்திலே (அயலிலுள்ள) வேங்கைமரத்தின் மலர்கள் விளங்குகின்ற நிழலைப்பார்த்து மெய்ம்மையாகிய

மலர்களென்று, ஒருத்தி இக்குளம் கொள் பூ மலர் கொய்து நல்கீர் எனாத் தளர்ந்து தலைவனை வேண்டினாள் - ஒருதையல் இக்குளந் (தன்னுட்) கொண்ட பொலிவாகிய மலர்களைக் கொய்து (எனக்குத்) தருவீரென்றுவாடித் (தன்னுடைய) நாயகனைவேண்டினாள். எ - று.

பளிங்கு ஆகுபெயர். பளிங்கடுத்திடுபாங்கரின் வேங்கைவீ என்றதற்குப் பளிங்குப்பாறையினுள் அதனையடுத்த பக்கத்தி னுள்ள வேங்கைமலர் என்றுரைப்பினுமமையும் மெய் ஆகுபெயர். பூவின்நீழலை மெய்ப்பூவென்று அவற்றின்மீது ஆசையுண்டாக அது தன்னாற் கொய்தல் கூடாமையினாலும் தலைவனைத்தான் வேண்டினும் அவன்கொய்து நல்கானோ என்னுமையத்தினாலுந் தளர்ந்து வேண்டினாளென்க. (135)

அங்கோ ருத்தியை நோக்கியோ ரண்ணலுன்
கொங்கை யொத்திடாக் கோங்கலர் கொள்கென
வெங்கை தன்முலைக் கொப்பதென் றெண்ணியோ
செங்கை யாற்பறித் தீரென்று சீறினள்.

இ - ள். ஓர் அண்ணல் - ஒருதலைவன், (கோங்கரும் பினைக்கொய்து கொண்டுவந்து) அங்கு ஒருத்தியை நோக்கி- அங்ஙனம் ஒருதலைவியைப் பார்த்து, உன் கொங்கை ஒத்திடாக் கோங்கு அலர் கொள்கென—நினது முலைக்கு நிகராகாத இக்கோங்கரும்பினைக்கொள்ளுக வென்றுகூற, (அவள்) எங்கைதன் முலைக்கு ஒப்பது என்று எண்ணியோ செம் கையால் பறித்தீர் என்று சீறினாள் - எங்கையாகிய (நமது) காமக்கிழத்தியின்முலைக்கு நிகராகுவது என்று கருதியோ செம்மையாகியகரத்தினால் (இதனைக்) கொய்தீ ரென்று சொல்லிவெகுண்டாள். எ - று.

ஒருதலைவன் தலைவியைப்பார்த்து கோங்கரும்பை முலைக் குவமையென்பர் நினது முலை மார்புமுழுவதையு மிடங்கொண்டு

திரண்டு அண்ணாந்து விம்மிச் சுணங்குபரந் திருப்பதாதலின் அத்தனத்துக்கு ஒப்பாகாது தோற்றகோங்கரும்பு என்பான் உன்கொங்கையொத்திடாக் கோங்கலரென்றுகூற; அத்தலைவி அக்கோங்கரும்பு தன் முலைப்பருமையின் மிகச்சிறியதாதலின் அச்சிறுமைபற்றி உன்கொங்கை யொத்திடாக் கோங்கலர் என்று கூறினனெனவுட்கொண்டு அவன் அதனைக் கொய்யும்போது தன் காமக்கிழத்தியின் முலைக்கு ஒப்பென்றே கொய்தானென்று துணிந்து எங்கைதன் முலைக்கொப்பதென் றெண்ணியோ செங்கையாற் பறித்தீரென்று சீறினள் என்க. காமக்கிழத்தியை எங்கையென்ற முறைகொண்டாடுதல் "போயேதெருவிற் றனி விளையாடும் புதல்வற்புல்ல நீயேதிலையலைகின் மகனேயிவனீயு மிவன் றாயேவருகெனச் சேயன்னவாணன் றமிழ்த்தஞ்சைமா னேயேயென சிற்றலானறிந்தேன் றன்னையெங் கையென்றே" என்ற "காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்" என்னுங் கிளவியினுலுணர்க. காமக்கிழத்தி தலைவனாற் பின்னர் வரையப் பட்டுத் தன்னினும் இளமைப்பருவமுடையளாதலின் அவளுக்கு முலைசிறிதாகுமென்று அங்ஙனகூறினளென்பது. எங்கை, பின் முறைவதுவைப் பெருங்குலக்கிழத்தி யெனினுமமையும். ஒத்தி டாத என்றபாலது இறுதிகுறைந்துநின்றது. அலர் ஈண்டு அரும்பு. கொள்க என்றபாலதும் இறுதி அகரங்குறைந்தது. ()

வேறு

மலர்ந்த வாண்முக மங்கையர் நோக்கலும் வறிதாய்ப்
புலர்ந்து நின்றிடு தருக்களும் பொலிவினை யெய்தி
யலர்ந்த வேயெனி னுடவர் தங்களை யன்னார்
கலந்த போதுற மின்பமார் கட்டுரைத் திடுவார்.

இ-ள். மலர்ந்த வாள் முக மங்கையர் நோக்கலும் வறிது ஆய்ப் புலர்ந்து நின்றிடு தருக்களும் பொலிவினை எய்தி அலர்ந்தவே எனின் - மலர்ச்சியுற்ற ஒள்ளிய வதனத்தையுடைய மகளிர்கள் பார்த்தலும் வறிதாகிப்

புலர்ந்து நிற்கின்ற மரங்களும் பொலிவடைந்து அலர்ந்தனவேயெனின், அன்னார் ஆடவர் தங்களைக் கலந்தபோது உறும் இன்பம் ஆர் கட்டுரைத்திடுவார் - அம்மகளிர்கள் ஆடவர்களைக் கூடியபோது (அவ்வாடவர்களுக்கு) வருமின்பத்தை (இவ்வளவென்று) யாவர் கூறுவார். எ - று.

மலர்ச்சியுறுதல், பொலிவுறுதல். வறிதாதல், ஈண்டு இலை தளிர்முதலிய இல்லையாதல். சிறந்தமகளிர் நோக்குதலான் மலரு மரங்கள் மராமரங்கள். பொலிவினை எய்தல் ஈண்டுத் தளிர்த்துச் சிறப்புறுதல். ஏகாரம் தேற்றம். கட்டுரைத்தல், ஈண்டுக் கூறுதல். (137)

மேற்ற லத்தெழு தாரகை மேதினி வரைப்பிற்
றோற்று காட்சியோ விங்கிவை யென்னவோர் தோன்றல்
கூற்ற மன்னவேற் கண்ணிநின் கூரெயிற் றிற்குத்
தோற்ற முல்லையி னரும்புகா ணிவையெனச் சொன்னான்.

இ - ள். இங்கிவை மேல் தலத்து எழு தாரகை மேதினி வரைப்பில் தோற்று காட்சியோ என்ன - (ஒரு தையல்) இவை விண்ணிடத்தெழுகின்ற விண்மீன்கள் மண்ணிடத்துத் தோன்றுகின்ற தன்மையோ என்று கேட்க, ஓர் தோன்றல் - ஒரு தலைவன், இவை கூற்றம் அன்ன வேல் கண்ணி நின் கூர் எயிற்றிற்குத் தோற்ற முல்லையின் அரும்பு காண் எனச் சொன்னான் - இவைகள் கூற்றுவனை நிகர்த்த வேற்கண்ணையுடையாய்! நின்னுடைய கூர்மையாகிய முறுவலுக்குத்தோற்ற முல்லையரும்புகளே யென்றுகூறினான். எ - று.

காட்சி ஈண்டுத்தன்மை. இங்கிவை ஒருசொல். வேற்கண்ணில் வேல் ஈண்டு உவமைகுறியாது நின்றது. காண் அசை. (138)

மலையும் வேற்கணு ளொருத்திசொல் வினவிமற் றொருத்தி
முலையின் மேல்விழி வைத்தவன் முறிகளு முகையு
மிலையு மாப்பறித் துதவலு முமக்குமா லீந்தா
டலையின் மேலிவை சூட்டுமென் றெறிந்தன டரியாள்.

இ - ள். மலையும் வேல் கணுள் ஒருத்தி சொல் வினவி - பொருகின்ற வேல்போலுங் கண்களையுடையளாகிய ஒருத்தி (தன்றலைவனை நோக்கிச் சில மலர்களைக் காட்டி அம்மலர்களைக் கொய்து தருகவென்று கூற) அச்சொல்லைக்கேட்டு, (அம்மலர்களைக் கொய்யத் தொடங்கும்போழ்து) மற்று ஒருத்தி முலையின்மேல் விழி வைத்தவன் - மற்றொருத்தியினது (முலை கச்சினின்று தோன்ற) அம்முலையின்மீது கட்பார்வையை வைத்தவன், (கட்பார்வையோடு தன் மனமும் அம்முலையிடத்துச் சென்றமையால் அம்மலர்களென்று) முறிகளும் முகையும் இலையும் ஆப் பறித்து உதவலும் - தளிர்களும் அரும்புகளும் இலைகளுமாகப் பறித்துக் கொடுத்தலும், தரியாள் உமக்கு மால் ஈந்தாள் தலையின்மேல் இவை சூட்டும் என்று எறிந்தனள் - (அஃதெல்லாவற்றையுங் கண்டு நின்ற அத்தலைவி) பொறுக்காதவளாகி உமக்கு மயக்கத்தைத் தந்தவளுடைய தலையின் மீது இவற்றைச் சூட்டுமென்றுசொல்லி எறிந்தாள். எ-று.

விழி ஆகுபெயர். ஆக என்பது ஆ என இறுதிகுறைந்தது. உதவலும் உம்மீற்று வினையெச்சம். தரியாளென்னும் வினைமுற்று வினையெச்சமானது. (139)

காதன் மங்கைபால் வைத்தசிந் தையன் கரவீரப்
போது கொய்யல னிலைகொய்து பொற்கரத் தளிப்ப
வேதி லாளைநிற் சேர்தலி னிங்கிவை நுகர்ந்து
சாத லேதலை யெனச்சினத் தாளொரு தையல்.

இ - ள். காதல் மங்கை பால் வைத்த சிந்தையன் - ஆசையைத் தருகின்ற (வேறொரு மங்கையினிடத்து வைத்த மனத்தையுடையனாகிய தலைவன் (ஒருவன்), கரவீரப் போது கொய்யலன் இலை கொய்து பொன் கரத்து அளிப்ப - அலரிப்பூவைக் கொய்யாது இலைகளைக்கொய்து (தன்றலைவியினது) அழகிய கரத்திற்கொடுக்க, ஒரு தையல் - அந்த ஒப்பற்ற தலைவியானவள், எதிலாள நின் சேர்தலின் இங்கிவை நுகர்ந்து சாதலே தலை என்றனள் - அயலவனே! நின்னைச்சேர்தலினின்றும் இவ்விலைகளைப் பொசித்து இறந்துபோதலே முதன்மையென்று வெகுண்டாள். எ - று.

அலரிப்பூக்களைக் கொய்யாது இலைகளைக் கொய்துகொடுக்க அவள் வெகுண்டதனாலே, அவள் அவ்வலரிப் பூக்களைக் கொய்து தரும்படி முன்னர் வேண்டிக்கொண்டன ளென்பதும், அவன் தான் வேண்டிக்கொண்ட மலர்களைக் கொய்து தராது இலைகளைக் கொய்து தந்தது அவனுடைய சிந்தை வேறொரு மங்கைமாட்டுச் சென்றமையானென்ப துணர்ந்தாளென்பதும் பெறப்பட்டன. கொய்யலன் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. தன்மீது சிறிதும் அன்பில்லாதவனென்பாள் எதிலாள என்றாள். அலரியிலை நச்சுப்பதார்த்தமாதலின் இங்கிவை நுகர்ந்துசாதலே தலையென்றாள். இங்கிவை ஒருசொல். (140)

வேறு

இங்குன் முலைநேர் குரும்பையிவை யாய்கு யம்போற்
றங்கும் மிளநீ ருவையன்னவ டன்னை யீன்றாள்
கொங்கை நிகரு மடற்பாளைக் குழுவி தென்றோர்
மங்கை நகைப்ப வவைகாட்டியோர் வள்ள லீன்றான்.

இ - ள். ஓர் வள்ளல் - ஒரு தலைவனானவன், (தன் றலைவியைப் பார்த்து) உன் முலை நேர் குரும்பை இங்கு

இவை-உன்னுடைய முலைகளை நிகர்த்த தென்னங் குரும்பைகள் இன்னமுள்ள இவையே, ஆய் குயம் போல் தங்கும் இளநீர் உவை - (நின்னுடைய) அன்னையின் முலைகளை நிகர்த்த இளநீர்க ளுவையே, அன்னவ டன்னை ஈன்றாள் கொங்கை நிகரும் மடல் பாளைக் குழு இது என்று - அவ்வன்னையைப் பெற்றவளது முலைகளை நிகர்த்த மடலாகிய பாளைக்கூட்ட மிதுவேயென்று, ஓர் மங்கை நகைப்ப அவை காட்டி நின்றான் - அவ்வொரு மங்கையானவள் முறுவலிக்க அவற்றைக் காட்டிநின்றான். எ - று.

இச்செய்யுளிலுள்ள இவை உவை இது அவை என்னுஞ் சுட்டுப்பெயர்களிலுள்ள சுட்டெழுத்துக்கள் சேய்மை அண்மையைக் குறித்துச்சுட்டாது ஒருதன்மையாக நின்றன. பிரிநிலையேகாரங்கள் விகாரத்தாற்றொக்கன. அன்னவள் அவளென்னுஞ் சுட்டுப்பெயரின்மரூஉ. மடற்பாளை இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மடல், விரியாதபூ. மங்கை ஈண்டுப் பருவங்குறித்து நின்றது. (141)

ஓவாத தெங்கின் விளம்பாளையி னொன்று தன்னைத்
தாவா வொருவன் கொடுவந்தொரு தையன் முன்போய்ப்
பாவாய் தமியே னுயிரேநின் பணைமு லைக்காங்
கோவாத முத்தத் தொடையிங்கிது கொள்க வென்றான்.

இ-ள். ஒருவன் தெங்கின் ஓவாத இளம் பாளையின் ஒன்று தன்னைத் தாவா கொடு வந்து - ஒருவன் தென்னமரத்தில் ஒழியாத இளையபாளையிலுள்ள ஒரு மலர்க் காம்பைத் தாவிக் (கொய்து) கொண்டுவந்து, ஒரு தையல் முன் போய் - ஒரு நங்கைக்கு முன்சென்று, பாவாய் தமியேன் உயிரே நின் பணைமுலைக்கு ஆம் கோவாத முத்தத் தொடை இங்கிது கொள்க என்றான் - பாவையே! தமியேனதுயிரே! நின்னுடைய பருத்தமுலைகளுக்கு (ஏற்ற

அணி)யாகிய கோக்கப்படாத முத்தமணிமாலையாகிய இதனை ஏற்றுக்கொள்ளுக என்றான். எ - று.

மாதந்தோறும் இடையறாது ஒவ்வொன்று தோன்றுதல் பற்றி ஓவாதபாளையெனப்பட்டது. ஒன்று ஆகுபெயர். பாவை உயிர் உவமவாகுபெயர்கள். பாவை, சித்திரப்பாவை. முத்து மாலைபோறலின் முத்தத்தொடை யென்றான். இங்கிது ஒரு சொல். (142)

மின்னார் தமக்கோ ரரசேவெறி வேங்கை வீயும்
புன்னாக வீயுங் கொணர்ந்தேன்புனை கிற்றி யென்ன
மன்னா வுனக்குப் பலருண்டுகொன் மாத ரென்னாத்
தன்னாவி யன்னான் றனைச்சீறியோர் தையல் போனாள்.

இ - ள். மின்னார் தமக்கு ஓர் அரசே வெறி வேங்கை வீயும் புன்னாக வீயும் கொணர்ந்தேன் புனைகிற்றி என்ன - (ஒரு தலைவன் றலைவியைப் பார்த்து) மின்னலை நிகர்த்த நங்கையர்க்கு ஓர் அரசியே! நறுமணத்தையுடைய வேங்கைப் பூவும் புன்னைப்பூவும் (கொய்து) கொணர்ந்தேன் (இவற்றைச்) சூடுவாயென்று சொல்ல, ஓர் தையல் - அந்த ஒரு தலைவியானவள், மன்னா உனக்கு மாதர் பலர் உண்டுகொல் என்னாத் தன் ஆவி அன்னான்றனைச் சீறிப் போனாள் - தலைவனே! நினக்குப் பெண்கள் பலருளர்போலுமென்று கூறித் தனது உயிரை நிகர்த்த அத்தலைவனை வெகுண்டு (அவனுக்கு அணியளாகாதப்பாற்) சென்றாள். எ - று.

தலைவன் உலகத்திலுள்ள பெண்களினின்று மிகுந்தவழகினையுடையாயென்பான் மின்னார் தமக்கோரரசேயென்றுகூற அத்தலைவி அவன் பண்டுதானே தன்னை அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கிற்குங் காரணமாகத் தனதில்லத்துக்குரிய இல்லாளாகக் கொண்டதுபற்றிப் பின்னர் காமமொன்றே காரணமாகத் தன்னால் விரும்பப்பட்ட பெண்களுக்கு அரசியென்று கூறினு

னெனவுட்கொண்டு அவன் கொணர்ந்த மலர்களை ஏற்காது வெகுண்டுசென்றாளென்க. கண்டுகேட்டுண்டுயிர்த் துற்றறிந்தாலன்றிப் பெண்டிருடைய இயல் முழுதுமறிதல்கூடாது இவன் அங்ஙனம் பெண்டிரை அறிந்தே மின்னூர்தமக்கோரரசே என்று தன்னை விளித்தானென்று மன்னவுனக்குப் பலருண்டுகொன் மாத ரென்னச்சிறிப் போனாளெனினு மமையும். அரசு, தலைமை; ஈண்டுத் தலைமையுடையாளென்னும் பொருடந்தது. (143)

பொன்பெற்ற மார்ப னொருவன்சில போது கொய்து
கோன்பெற்ற வேற்கண் மடவார்கைக் கொடுத்தலோடும்
பின்பெற்ற நங்கை வெகுண்டாள்பழு தென்று பேசி
முன்பெற் றவளு மவைசிந்தி முனிந்து போனாள்.

இ - ள். பொன் பெற்ற மார்பன் ஒருவன் சில போது கொய்து கொன் பெற்ற வேல் கண் மடவார் கைக் கொடுத்தலோடும் - (இரண்டு மனைவியரையுடைய) அழகினைப்பெற்ற மார்பினையுடையனாகிய ஒரு தலைவன் சிலமலர்களைப் பறித்துப் பெருமைபெற்ற வேல்போலும் விழிகளையுடைய (அவ்விரண்டு) மகளிர்களுடைய கரங்களிற் கொடுத்தலும், பின் பெற்ற நங்கை வெகுண்டாள் - (அம்மலரைப்) பின்னர்ப் பெற்ற தையல் சினத்தாள், முன்பெற்றவளும் பழுது என்று பேசி முனிந்து அவை சிந்திப் போனாள் - முன்னர் (அம்மலரைப்) பெற்றவளும் (அவை) பழுதுடையன வென்று சொல்லிக் கோபித்து அவற்றைச் சிந்திச் சென்றாள். எ - று.

பொன்பெற்றமார்பன், இலக்குமிதங்குதலைப் பெற்றமார்பனெனினுமமையும். பின்பெற்றவள் தனக்குமுன்னே தராமையானல் தலைவன் தன்னினின்றும் அவள் மீது மிக அன்புவைத்தானென்று சினத்தாள். முன்பெற்றவள் அவள் நிலத்திற்சிந்திய மலர்களையுந் தனதுகையிலுள்ள மலர்களையும் நோக்க அவை சிறந்தனவாகத் தன்கைமலர் சிறப்பின்மையன வாகக்கண்டு

அவளுக்குச் சிறந்தவற்றைக் கொடுத்தலால் அவன் தன்னினின் றும் அவள்மீது மிக்கவன்புவைத்தானென்று வெகுண்டு அவற்றைச் சிந்தினாளென்க. (144)

அப்பூர் விழியா ளொருமூவகைத் தாய பூவு
மைப்பூங் குழலிற் புனைந்தாளதோர் வள்ள னோக்கி
மெய்ப்பூவை யன்னாய் மருங்குன்முடி வெய்த மென்கார்
மூப்பூ விளைந்த படியென்கொன் மொழிக வென்றான்.

இ - ள். அப்பு ஊர் விழியாள் ஒரு மூவகைத்து ஆய பூவும் மைப் பூங் குழலில் புனைந்தாள் - அம்பின்றன்மை யேறிய விழியினையுடையளாகிய (ஒருதையல்) மூவகைத்தாகிய மலரையுங் கருமையாகிய பொலிவினையுடைய கூந்தலிற் சூடினாள், அது ஓர் வள்ளல் நோக்கி - அதனை ஒரு தலைவன்பார்த்து, மெய்ப்பூவை அன்னால் மருங்குல் முடிவு எய்த மெல் கார் முப்பூ விளைந்த படி என்கொல் மொழிக என்றான் - மெய்ம்மை (ஆக) நாகணவாயை நிகர்த்தவளே! இடையானது இறுதியடைய (நினதுகூந்தலாகிய) மெல்லிய மேகத்தில் மூவகைப்பூ விளைந்தவாறென்னை கூறுகவென்றான். எ - று.

அப்பு ஆகுபெயர். மூவகைப்பூ ஈண்டு நால்வகைப்பூக்களுள் நீர்ப்பூ ஒழிந்த கோட்டுப்பூ கொடிப்பூ புதற்பூ என்க. உம்மை முற்று; சோலையினுள் அம்மூவகைப் பூவேயுளவாதலினென்பது. விளைதல், ஈண்டு அதிகமாகவிருத்தல் கார் முப்பூ விளைந்தபடியென்கொல் என்றதற்கு சிலேடையால் கார்காலத்திலே (பனிக்காலத்தில் விளையும்) முப்பூ என்னுஞ்சரக்கு விளைந்தவாறென்னையென்று அற்புதந்தோன்ற உரைத்தானென்பது, மேகத்திற் (அப்புவிளைவதன்றி) மூப்பூவிளைந்தவாறென்னை என்று அற்புதந் தோன்ற வுரைத்தானென்பதும் ஒன்று. இச்சிலேடை அர்த்தங்களில் விளைதல் உண்டாதல். (145)

இத்தன்மை மைந்தர் பலரும்மிகல் வேற்க ணரு
மெய்த்தண் மலர்க்கா வுலவாவிளை யாடி மீண்டு
தத்தம் படமா ளிகைபுக்கனர் தானு மாங்கே
யத்தம் மயவெற் படைந்தான்கதி ராயி ரத்தோன்.

இ - ள். இத்தன்மை மைந்தர் பலரும் இகல் வேல் கணரும் மெய்த் தண்மலர்க் கா உலவா விளையாடி மீண்டும் தத்தம் பட மாளிகை புக்கனர் - இத்தன்மை (ஆக) ஆடவர் பலரும் போர்த்தொழிலை யுடைய வேல்போலும் விழியினை யுடையமகளிரும் மெய்ம்மையாகிய குளிர்ந்தமலர்ச்சோலையி லுலாவி விளையாடித் திரும்பித் தந்தம்முடைய ஆடையா லியற்றப்பட்ட மாளிகைகளிற் சார்ந்தார்கள், தானும் ஆங்கே அத்தமய வெற்பு அடைந்தான் கதிர் ஆயிரத் தோன் - தானும் அத்தமயனகிரியை யடைந்தான் கிரண மாயிரத்தையுடையனாகிய சூரியன். எ - று.

பலரும் என்றதை வேற்கணரோடுங் கூட்டுக. இகல் ஆகு பெயர். தானுமென்றதிலும்மை எச்சம். ஆங்கும் ஏயும் அசை கள். ஆங்கே என்றதற்கு அங்ஙனமென் றுரைப்பினுமமையும். பலருமிகல் எனற்பாலது பலரும்மிகல் எனவும் அத்தமய எனற் பாலது அத்தம்மய எனவும் மகரங்கள் விரிக்கும்வழி விரித்தன.

வேறு

ஏலக் காவின் மாக்கள் புகுந்தே யினிதாடுங்
கோலச் செவ்வி நோக்கின னங்கோல் குடபாலின்
மாலைச் செக்கர் வானம தாகு மலிதண்பூஞ்
சோலைக் குள்ளே தானு மடைந்தான் சுடர்வெய்யோன்.

இ - ள். ஏலக் காவின் மாக்கள் புகுந்தே இனிது ஆடும் கோலச் செவ்வி நோக்கினன் அங்கோல் - ஏலமரங்களை யுடைய சோலையினுள்ளே மனிதர் புகுந்து இனிதாக விளை

யாடிய அழகை நோக்கினனோ, குடபாலில் மாலைச் செக்கர் வானமது ஆகும் மலி தண் பூஞ் சோலைக்குள்ளே தானும் அடைந்தான் சுடர் வெய்யோன் - மேற்றிசையில் மாலைக் காலத்திற்றோன்றுஞ் செவ்வானமாகிய நிறைந்த குளிர்மை யாகிய பூஞ்சோலைக்குள்ளே தானும் புகுந்தான் சுடரினை யுடைய சூரியன். எ - று.

எகாரங்களும் ஆழும் அசைகள். கோலச்செவ்வி ஒரு பொருட்பன்மொழி. கொல் ஐயப்பொருடந்து நின்றது. அது பகுதிப்பொருள்விகுதி. உம்மை எச்சம். வழக்கப்படி பட்ட சூரியனை அங்ஙனம் விளையாடுதற்காக அடைந்தானென்றது தற்குறிப்பு. (147)

முந்தைச் செக்க ராகிய புத்தேண் மொய்ம்பிற்சூழ்
தந்திப் போர்வை போலிரு ளீட்டஞ் சார்வெய்த
வந்தத் தேவன் மீமிசை யண்டத் தவர்வீசுங்
கந்தத் தண்போ தொப்பன தாரா கணமெல்லாம்.

இ - ள். முந்தைச் செக்கர் ஆகிய புத்தேள் மொய்ம்பில் சூழ் தந்திப் போர்வை போல் இருள் ஈட்டம் சார்வு எய்த - பெருமையையுடைய செவ்வானமாகிய தெய்வம் புயத்திற்போர்த்த யானைத்தோற்போர்வைபோல இருட் கூட்டஞ் சார்தலுற, தாரா கணம் எல்லாம் - (அவ்வாகாயத்திலுள்ள) விண்மீன் கூட்டமெல்லாம், அந்தத் தேவன் மீமிசை அண்டத்தவர் வீசும் கந்தத் தண்போது ஒப்பன- அத்தெய்வத்தின் மீது தேவர்கள் தூவுகின்ற நறுமணத்தை யுடைய குளிர்மையாகிய மலர்களை ஒக்கின்றன. எ - று.

முந்தை, பழமை; ஈண்டுப்பெருமை. தந்தி ஆகுபெயர். போர்வை, தோல் எனினுமமையும். மீமிசை ஒருபொருட் பன் மொழி. வீசுதல் ஈண்டுத்தூவுதல். (148)

படையா நேமிப் பண்ணவ னூர்பாற் கடலுக்கோர்
தடையா யுற்ரு ரென்றிமை யோர்தண் டயிர்வேலை
கடையா நிற்ப வேதிரள் வெண்ணெய் கடிதேவந்
தடையா நிற்றல் போல வுதித்திட் டதுதிங்கள்.

இ-ள். படை ஆம் நேமிப் பண்ணவனூர் பால் கடலுக்கு ஓர் தடை ஆய் உற்ருர் என்று - படைக்கலமாகிய சக்கரத்தையுடைய விஷ்ணுமூர்த்தி திருப்பாற்கடலைக் கடைதற்கு ஒருதடையாகி (அதில்) இருக்கின்ருரென்று, இமையோர் தண் தயிர் வேலை கடையா நிற்பவே - தேவர்கள் தண்மையாகிய தயிர்க்கடலைக்கடைய, திரள் வெண்ணெய் கடிதே வந்து அடையா நிற்றல்போல திங்கள் உதித்திட்டது - திரளுகின்ற வெண்ணெயானது விரைவில் வந்து அடைதல்போல நிலவு தோன்றியது. எ-று.

பண்ணவனூர் என்றதில் ஆர் உயர்வுப்பொருட்டுமோரிடைச்சொல். பாற்கடலுக்கு என்பதின் நடுவில் கடைதலென்னுஞ் சொற் பெய்துரைக்கப்பட்டது. கடையாநிற்ப என்பவையும் அடையாநிற்றல் என்பவையும் ஒருசொன்னீர்மைப்பட்டு முறையே கடைய என்னும்பொருளும் அடைதல் என்னும்பொருளுந் தந்து நின்றன. ஏகாரங்கள் அசைகள்; தேற்றமெனினுமாம். (149)

காணப் பட்டான் விண்மதி யென்னக் காமத்திற்
பூணப் பட்ட மாமதி தோன்றப் புலர்வெய்தி
யாணர்க் கிண்ணத் துண்ணிறை தேற லினிதட்டிப்
பாணிக் கொண்டே மேவுத லுற்ருர் பலமாதர்.

இ-ள். பல மாதர் - பல மகடூஉக்கள், விண் மதி காணப்பட்டான் என்னக் காமத்திற் பூணப்பட்ட மா மதி தோன்ற - விண்ணிடத்துள்ள மதி (மண்ணிடத்துள்ளார்) காணவுதித்தானென்னவே காமவேட்கையிற் பூணப்பட்ட பெரியமதி (தம்முள்ளத்தைத்) தோன்ற, புலர்வு எய்தி

யாணர்க் கிண்ணத்துள் நிறை தேறல் இனிது அட்டிப் பாணிக் கொண்டே மேவுதல் உற்றார் - வாடுதலடைந்து அழகிய கிண்ணங்களினுள்ளே நிறையுங்கள்ளினை நன்றாக நிறைத்துக் கரங்களிற்கொண்டு அடைதலுற்றார்கள். எ-று.

காணப்பட்டான் என்பதை ஒரு சொல்லாகக்கொண்டு பொருளுரைப்பினுமமையும். மதி இரண்டனுள் முன்னையது சந்திரன் எனையது புத்தி. செப்பமாகவடித்து அட்டி என்பார் இனிதட்டி என்றார். பாணிக்கொண் டென்பதிற் ககரம் விரிக்கும் வழி விரிந்தது. எ அசை. (150)

வேறு

தூயதன் றாகிய புனலெலா நல்கியே சூழ்ந்த தெங்கின்
காயின்வந் திடுபயன் கொள்ளுவார் போறசில காளை மார்க
ளாயதண் டேறலை யரிவைமார் நுகருவா னருளி யன்னார்
வாயின்வந் தூறுமெல்லமிர்தினைக்கொள்வதற்குள்ளம்வைத்தார்.

இ - ள். தூயது அன்று ஆகிய புனல் எலாம் நல்கியே தெங்கின் சூழ்ந்த காயின் வந்திடு பயன் கொள்ளுவார் போல் - சுத்தமுடையதன்றாகிய நீர் முழுவதையும் (தெங்க மரத்துக்குமுன்னர்) நல்கிப் (பின்னர்) அத்தெங்கிற்சூழ்ந்த காய்களின்கண் வந்தடைந்த இளநீரை (உட்) கொள்ளுவார் போல, சில காளைமார்கள் - சில காளையர்கள், தண் ஆய தேறலை அரிவைமார் நுகருவான் அருளி - குளிர்மையாகிய மதுவினைத் தையலார்கள் குடிக்க (முன்னர்க்) கொடுத்து, அன்னார் வாயின் வந்து ஊறு மெல் அமிர்தினைக் கொள்வதற்கு உள்ளம் வைத்தார் - அவர்களுடைய அதரத்தின் கண் வந்தூறுகின்ற மென்மையாகிய அமிர்தத்தை (உட்) கொள்வதற்கு மனம்வைத்தார்கள். எ - று.

எ அசை. தெங்கின்றலையிற் சுற்றுமுற்றுங் காயிருத்தல் பற்றிச் சூழ்ந்ததெங்கின் காயென்றார். ஆயதண்டேறல், பனை

முதலியவற்றினீராலும் பிறவாலுமுண்டாகிய மதுவெனினுமாம். நுகர என்னுஞ்செயவென்வாய்பாட்டு வினையெச்சம் நுகருவான் என்னும் வானீற்றுவினையெச்சமாகத் திரிந்தது. வாய் ஆகுபெயர்.

தெள்ளுபே ரமிர்தநேர் சொல்லினர் தேறல்பெய் கின்ற வெள்ளி
வள்ளமா னவையெலாம் பொலிவன வானகத் திடையு தித்த
வொள்ளிதா கியமதி யொன்றினை நோக்கியொண் புவியி னூடே
கொள்ளையாய் மதிபல மாறுமா றாயெழுங் கொள்கை போலும்.

இ - ள். தெள்ளு பேர் அமிர்தம் நேர் சொல்லினர் தேறல் பெய்கின்ற வெள்ளி வள்ளமானவை எலாம் பொலிவன - தெளியச்செய்த பெருமையாகிய அமிர்தத்தை நிகர்த்த மொழியினையுடைய நங்கையர்கள் மதுவினைப் பெய்கின்ற வெள்ளிக்கிண்ணங்களானவை யெல்லாம் மிகுவன, வானகத்திடை உதித்த ஒள்ளியது ஆகிய மதி ஒன்றினை நோக்கி விண்ணிடத்துத் தோன்றிய ஒளியுடையதாகிய சந்திரனொன்றைப்பார்த்து, ஒள் புவியினூடே கொள்ளை ஆய் மதி பல மாறு மாறு ஆய் எழும் கொள்கை போலும் - சிறந்த மண்ணினிடத்துக் கூட்டமாகிய மதிகள் பல (அதற்கு) மாறுமாறாகித் தோன்றுந் தன்மைபோலும். எ - று.

பெய்தல்; இடுதல்; ஈண்டு வாக்குதல். பொலிவன தொழிற் பெயர். புவியினூடு என்பதற்குப் பூமியினுள்ளிருந்து என்று பொருள்கூறினுமமையும். ஏ அசை. மாறுமாறாய் என்பது தனித்தனிமாறாகி என்னும் பொருளினின்றது. (152)

அளியினுக்குணவதாந்தேறல்வாய்க் கொண்டதோ ரரிவையாற்ற
களிமயக் கெய்துவா ளிந்துவை நோக்கியிக் கடிய தேறற் [க்
றுளியினைக் கோடியே னுனதுமா சுள்ளதுந் தொலையு மின்னு
மொளியினைப் பெறுதிநின் னுளமுந் தவிர்தியென் றுரைசெய்
கின்றாள்.

இ - ள். அளியினுக்கு உணவது ஆம் தேறல் வாய்க் கொண்டது ஓர் அரிவை ஆற்றக் களி மயக்கு எய்துவாள் - வண்டுகளுக்கு உணவாகியமதுவினை வாய்க்கொள்ளுதலையுடைய ஒருமாது மிகவும் வெறிமயக்கு அடைந்து, இந்துவை நோக்கி - சந்திரனைப் பார்த்து, இக்கடிய தேறல் துளியினைக் கோடியேல் உனது மாசு உள்ளதும் தொலையும் - இந்த மணத்தினையுடைய மதுத்துளிகளை (உட்) கொள்ளுவையாயின் நினது களங்கம் (ஆகி) உள்ளதுந் தொலைந்து விடும், இன்னும் ஒளியினைப் பெறுதி - (இயல்பாகிய ஒளியையன்றி) இன்னமும் ஒளியினைப்பெறுவாய், நின் ஊனமும் தவிர்தி என்று உரைசெய்கின்றாள் - நினதுகுறைபாடும் நீங்குவாயென்று கூறுகின்றாள். எ - று.

வண்டுகளுக்கு மதுவே உணவாதலின் அளியினுக்குணவதாந் தேறல் என்றார்; மலர்த்தேனும் அவைக்குணவெனின் அதுவும் மயக்கஞ் செய்தலின் மற்றை மதுவினின்றும் வேறுபாடில்லையென்க. கொண்டது தொழிற்பெயர். எய்துவாள் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. உம்மை எச்சம். ஊனம் அபரபக்கத்திற் கலைகள்குறைதல். (153)

கருதியா னுண்டிடு நறவினைக் கண்டுகா மித்து நாளுந்
திரிதியான் மதியமே நாண்முற் றாய்கொலோ செப்பு கில்லாய்
பரிதியார் தம்மின்வி றெய்துவா யன்னதைப் பகர்வ னிங்ஙன்
வருதியா லென்றன டேறலாற் றெளிவிலா மையல் பெற்றாள்.

இ - ள். தேறலால் தெளிவு இலா மையல் பெற்றாள் - (உட்கொண்ட) மதுவினாலேதெளிதலில்லாதமயக்கத்தைப் பெற்றவள் (ஒருத்தி,) மதியமே - சந்திரனே! கருதி யான் உண்டிடும் நறவினைக் கண்டு காமித்து நாளும் திரிதியால் - விரும்பி யானுண்கின்ற மதுவைப்பார்த்து இச்சித்து எந்நாளுந்திரிகின்றாய், செப்புகில்லாய் நாணம் உற்றாய்

கொலோ - (அம்மதுவினைத் தருகவென்று) கேட்கின்றிலை (கேட்டுக்கொள்ளுதற்கு) நாணமுற்றுப்போலும், (ஆயினும் யான்) அன்னதைப் பகிர்வன் பரிதியார்தம்மின் வீறு எய்துவாய் இங்ஙன் வருதியால் என்றனள் - அம்மதுவினை (நினக்கும்) பங்கிட்டுத்தருவேன் (அதனை யுட்கொள்ளுவை யாயிற்) சூரியனினும் வீறுப்படைவாய் (ஆதலால்) இங்ஙனம் வருவாயென்றுள். எ - று.

கருதல் ஈண்டு விரும்பல். ஆல் இரண்டும் ஓவும் அசைகள். பரிதியார் என்பது உயர்வினுல் ஒருமைப்பால் பன்மைப்பாலாயிற்று. இங்ஙன் இங்ஙனம் என்பதன்மரூஉ. வருதி ஏவல் வினைமுற்று. (154)

என்னெடே தோன்றினு யானெனுந் தன்மையா யாதும் வேண்டாய்
பின்னரு முன்னுமாய் வைகலுந் திரிதவாய் பிரிகிலாதா [டாய்
யின்னரு வுண்கென வுதவினுங் கொள்கிலா யென்றொருத்தி
தன்னதா நீழலோ டுடினுள் வாடினு டளர்த லுற்றுள்.

இ - ள். ஒருத்தி - (கள்வெறிமயக்கடைந்த) ஒருத்தி, என்னெடே தோன்றினுய் - என்னோடு உற்பவித்தாய், யான் எனும் தன்மையாய் - (வடிவத்தில்) யானே என்று சொல்லுந் தன்மையினையுடையாய், யாதும் வேண்டாய் - (என்னிடத்து) ஒன்றையும் வேண்டுகின்றிலை, பின்னரும் முன்னும் ஆய் வைகலும் திரிகுவாய் - (எனக்குப்) பின்னும் முன்னுமாகி எந்நாளுந் திரிவாய், பிரிகிலாதாய் - (என்னை ஒருக்காலும்) பிரிதல் செய்கின்றிலை இன நறு உண்கென உதவினும் கொள்கிலாய் என்று - (இந்த) இனிமையாகிய மதுவினை யுண்கவென்று (யான்) உதவினலுங் கொள்கின்றிலை (நின்செயலிருந்தவாறென்னை) யென்று, தன்னது ஆம் நீழலோடு ஊடினுள் வாடினுள் தளர்தல் உற்றுள் -

தன்னுடையதாகிய நிழலோடு பிணங்கி வாடிச் சோர்த லுற்றாள். எ - று.

ஏ அசை. நிழல்வீழுந் திசையை நோக்கிச் செல்லும்போது அந்நிழல்முன் செல்லுதலை முன்றிரிவாயென்றும் அத்திசைக்கு எதிர்த்திசையை நோக்கிச் செல்லும்போது அந்நிழல் பின் வருதலைநோக்கிப் பின்றிரிவாயென்றுங் கூறினாள். (155)

அங்கைவள் ளந்தனின் மதுவையுண் டயருவா ளன்ன தற்குட்
செங்கயல்விழி யையும் வாலிதழ்ப்பொலிவையுந் தெரியநோக்கி
யிங்கெனைக் கூடியே கணவர்போ யினர்கொலா மென்றொருத்தி
பொங்குசீற் றத்தளா யோடினா ணடினாள் புலர்த லுற்றாள்.

இ-ள். ஒருத்தி-ஒருதையல், அங்கை வள்ளந்தனில் மதுவை உண்டு அயருவாள் - அகங்கையிற்பொருந்திய கிண்ணத்திலுள்ள மதுவினைக்குடித்துச்சோர்ந்து, அன்னதற்குள் தெரிய செம் கயல் விழியையும் வால் இதழ்ப் பொலிவையும் நோக்கி - அக்கிண்ணத்தினுள்ளே தோன்றச் செம்மையாகிய கயன்மீன்போலும் விழியினையும் வெண்மையாகிய அதரத்தின் பொலிவினையும் பார்த்து, இங்கு கணவர் எனைக் கூடியே போயினர் கொலாம் என்று - இங்ஙனம் நாயகர் (யானறியாமல்) என்னைப்புணர்ந்து சென்றார் போலுமென்று, பொங்கு சீற்றத்தளாய் ஓடினாள் நாடினாள் புலர்தலுற்றாள் - மிகுகின்ற கோபத்தினளாகியோடித்தேடி வாடுதலுற்றாள். எ - று.

அங்கை அகங்கை என்பதிற் ககரவுயிர்மெய் கெட்டது. அயருவாள் ஓடினாள் நாடினாள் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. அயருவாள் வினையாலணையும்பெயரெனக் கொண்டு அயருவாள் ஒருத்தியென இயைப்பினுமமையும். அன்னது அது எனபதன்மரூஉ. ஏ அசை; தேற்றமெனினுமாம். கொல் கொலாம் என விகாரமானது. மதுநுகர்ந்தார்க்கும்கணவ

ரோடு புணர்ந்தார்க்கும் விழிசிவத்தலும் அதரம் வெளுத்தலு முண்மையாதலின் அவள் தான் மதுநுகர்ந்ததாலாகிய விகாரத்தை அம்மதுவெறி மயக்கத்தாற்கணவர் புணர்ந்தமையாலுண்டான விகாரமென்றெண்ணினளென்க. (156)

வேறு

திருந்திழை மார்சிலர் செவ்வித் தேறலை
யருந்தினர் வெறுத்தன ரமுதந் தன்னையும்
பொருந்திடு கணவரைப் புணரு மாசையாற்
வருந்தினர் தழலென மதியை யுன்னுவார்.

இ - ள். திருந்து இழைமார் சிலர் செவ்வித் தேறலை அருந்தினர் - திருந்திய ஆபரணத்தையுடையராகிய மகளிர் சிலர் நல்லமதுவினையுண்டு, பொருந்திடு கணவரைப் புணரும் ஆசையால் - (தம்மைக்) கூடுகின்ற தலைவரைப் புணருமாசையினாலே, அமுதந்தன்னையும் வெறுத்தனர் - உணவையும் வெறுத்து, மதியை தழல் என உன்னுவார் - சந்திரனை அக்கினியென்று நினைப்பவராய், வருந்தினர் - வருந்தினார்கள். எ - று.

திருந்தல், செப்பமாதல். திருந்திழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. களிப்பைத் தருதலிற் செவ்வித்தேறலெனப்பட்டது. அருந்தினர் வெறுத்தனர் உன்னுவார் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. உம்மை எச்சத்தோடு உயர்வுசிறப்பு. காமநோயுற்றார்க்குத் தண்மையுடையனவெல்லாம் வருத்தஞ்செய்தலின் தழலெனமதியையுன்னுவாராயினரென்க. (157)

வாடுகின் றார்சிலர் மகிழ்நர் வந்திட
வூடுகின் றார்சில ருவக்கின் றார்சிலர்
பாடுகின் றார்சிலர் பணிகின் றார்சில
ராடுகின் றார்சிலர் நறவ மார்ந்துளார்.

இ - ள். நறவம் ஆர்ந்துளார் சிலர் வாடுகின்றார் - மதுவினையுண்ட மகளிர் சிலர் (காமநோய்கொண்டு கணவர் சமீபத்திலில்லாமையால்) வாடுகின்றார், சிலர் மகிழ்நர் வந்திட ஊடுகின்றார் - சிலர் (தம்மிடத்துத்தங்) கணவர்வர (நீர் இதுகாறும் யாரிடத்துச் சென்றீரென்று) பிணங்குகின்றார், சிலர் உவக்கின்றார் - சிலர் (தாங்காமவேட்கை கொண்டசமயத்தில் வந்ததுபற்றி) மகிழுகின்றார், சிலர் பாடுகின்றார் - சிலர் (அக்கணவருக்குங் காமவேட்கையுண்டாகும்படி) பாடுகின்றார், சிலர் பணிகின்றார் - சிலர் (தம் வேட்கையைத் தீர்க்க முயலும்படி அவரை) வணங்குகின்றார், சிலர் ஆடுகின்றார் - சிலர் (பெருங்களிப்பினாலே) ஆடுகின்றார். எ - று.

நறவமார்ந்துளார் என்பதை மற்றைச்சிலர் என்பவைக்கு முன்னும் கணவர்வந்திட என்பதை ஊடுகின்றாராதியவற்றோடுங் கூட்டுக; கணவர்வந்திடஎன்பதைக் கூட்டாதுரைப்பினுமமையும். நறவமார்ந்துளார் என்பதற்கு மதுவினையுண்டமகளிர்களுள் என்றுரைப்பினுமமையும். (158)

அந்தரப் புள்ளொடு மளிக டம்மொடும்
வந்தடுத் தவரொடு மடந்தை மார்சிலர்
சுந்தரத் தேறலைத் துய்த்து வாமமாந்
தந்திரக் கிளைஞர்போற் றம்மி லீண்டினர்.

இ - ள். மடந்தைமார் சிலர்-பெண்கள் சிலர், அந்தரப் புள்ளொடும் அளிகடம்மொடும் வந்தடுத்தவரொடும் - ஆகாயத்திற் பறக்கும் பறவைகளோடும் வண்டுகளோடும் (அப்பொழுது) வந்து சார்ந்தவர்களோடும், சுந்தரத் தேறலைத் துய்த்து வாமம் ஆம் தந்திரக் கிளைஞர் போல் தம்மில்

ஈண்டினார் - அழகிய மதுவினையுண்டு வாமமாகிய சமய நூலையனுசரிக்குங் கூட்டத்தார்போலத் தம்மிற் கூடினார் கள். எ - று.

வாமசமயிகள்பலர் குலவேறுபாடு கருதாதுகூடிக் கள்ளினை யுண்டு களித்துத் தம்மிற்சேர்தல்பற்றி பறவைகளோடும் வண்டுக ளோடும் ஆண்டுவந்து சார்ந்தவர்களோடும் கள்ளினையுண்டு தம்மிற்கூடும் பெண்களுக்கொப்பாயினரென்பது. (159)

விள்ளுறு நாணினர் வீழுந் தூசின
ருள்ளுறு களிப்பின ருரைம யங்கினர்
தள்ளுறு தம்முணர் வின்றிச் சாம்பினர்
கள்ளினு முளதுகொல் கருத்த ழிப்பதே.

இ - ள். விள்ளுறு நாணினர் - (மதுவினையுண்ட அம் மாதர்கள்) நீங்குதலுற்ற நாணத்தினையுடையராகியும், வீழும் தூசினர் - (அரையினின்று அவிழ்ந்து) வீழும் ஆடையினையுடையராகியும், உள் உறு களிப்பினர் - உள் ளத்திற்பொருந்திய வெறிமயக்குடையராகியும், உரை மயங்கினர் - உரைதடுமாற்றமுடையராகியும், தள்ளுறு தம் உணர்வு இன்றிச் சாம்பினர் - (தம்மை நன்னெறியில்) நடத்துகின்ற தம்முணர்வில்லாது வாடினார்கள், கருத் தழிப்பதே கள்ளினும் உளது கொல் - எண்ணத்தை அழிக்கவல்ல (தொன்று) கள்ளினும் (பிறிது) உள்ளதோ. எ - று.

நாணினர் வீசினர் களிப்பினர் மயங்கினர் என்னுங் குறிப்பு வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. மயக்கல் ஈண்டுத் தடுமாறுதல். கொல் ஈண்டு எதிர்மறைப்பொருடந்து நின்றது. ஏ அசை. (160)

இத்திற மதுவினை யினிதின் மாந்தினோர்
மத்தரின் மயங்கினர் மனந்தெ ளிந்துழித்
தத்தம திறைவருந் தாமுங் கூடியே
யத்தலை முயங்கின ரார்வ மிக்குளார்.

இ-ள். இத்திறம் மதுவினை இனிதின் மாந்தினோர் மத்தரின் மயங்கினர் மனம் தெளிந்துழி - இவ்வாறு மதுவினையினிதாக உண்டமகளிர்கள் உன்மத்தர்போல மயங்கிப் (பின்னர்) மனந்தெளிந்த சமயத்தில், ஆர்வம் மிக்குளார் - ஆசை மிகுந்தவராகி, தத்தமது இறைவரும் தாமும் கூடியே அத்தலை முயங்கினர் - தத்தங் கணவருந் தாமுங் கூடி அங்ஙனம் புணர்ந்தார்கள். எ - று.

இத்திறம் மயங்கினரென இயைக்க. மயங்கினர் மிக்குளார் என்னும் வினைமுற்றுக்கள் வினையெச்சங்களாயின. தெளிந்த உழிஎனற்பாலது தெளிந்துழி என அகரந்தொகுத்தது. உழி ஈண்டுச்சமயம். ஏ அசை. (161)

ஏயுறு பரிசன மினைய தன்மையான்
மேயின விங்கிது விளம்பி னுமினி
யாயிடை வந்திடு மரசர் செய்கையு
நாயகன் வதுவையு நவிலு வாமரோ.

இ-ள். ஏயுறு பரிசனம் இனைய தன்மையால் மேயின - (ஆண்டுப்) பொருந்திய பரிசனங்கள் இத்தன்மையாக இருந்தார்கள், இங்கிது விளம்பினும் - இதனைக் கூறினேம், இனி ஆயிடை வந்திடும் அரசர் செய்கையும் நாயகன் வதுவையும் நவிலுவாமரோ - இனி அங்ஙனம் வந்த அரசர்களுடைய செயலையும் சர்வலோகைகநாயக

ராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருமணத்தையுங் கூறுவேம். எ - று.

இனைய இகரச்சுட்டின் மரூஉ. பரிசனம் உயர்திணைகுறித்த அஃறிணைச்சொல்லாதலின் மேயின என்னும் அஃறிணைப் பன்மைவினைகொண்டது; இது வழுவமைதியின்பாற்படும். இங்கிது ஒரு சொல். அரோ அசை. (162)

கொன்னுனை வேன்முசு குந்த னாதியா
மன்னவர் யாவரும் வைய நீங்கியே
தன்னிக ரிலாததோர் தலைவன் மேவிய
பொன்னிவர் குடிமியம் பொருப்பி லேறினர்.

இ - ள். கொன் நுனை வேல் முசுகுந்தன் ஆதி ஆம் மன்னவர் யாவரும்-அச்சத்தைத் தருகின்ற வேற்படையை யுடைய முசுகுந்தராசன் முதலாகிய அரசர்கள் யாவரும், வையம் நீங்கியே - இரதத்தினின்று நீங்கி, தன் நிகர் இலாததோர் தலைவன் மேவிய பொன் இவர் குடிமியம் பொருப்பில் ஏறினர் - (ஒருவிதத்தாலுந்) தமக்குச் சமானமின்மையாதலையுடைய இறைவராகிய சுப்பிரமணியப் பெருமா னெழுந்தருளியிருக்கின்ற அழகு ஏறிய சிகரத்தினையுடைய திருப்பரங்குன்றத்திலேறினார்கள். எ - று.

கொல் நுனை வேல் எனச் சொல்வருத்துக் கொல்லுகின்ற நுதியினையுடையவேல் எனினும் அமையும். உம்மை முற்று. ஏ அசை. இலாதது தொழிற்பெயர். பொன்னிவர் என்றதற்குப் பொன் றங்கிய எனினுமாம். வையநீங்கியே என்றதற்குப் பூமியினின்று நீங்கி என்று பொருள் கூறுவாருமுளர். அவ்வரசர்கள் இரதத்தினின்றிறங்கியது முன்னர்க் கூறியிருத்தலின்மையானும் பிறவாற்றானும் அது சிறப்பின்மையாதலுணர்க. (163)

ஏறினர் வெற்பின்மே லெவருந் தெய்வத
நூறெரி கம்மிய னுனித்துச் செய்திடு
மாறகல் திருநகர் வளங்கண் டிந்திரன்
சாறயர் வதுவையஞ் சாலை நண்ணினார்.

இ - ள். எவரும் வெற்பின் மேல் ஏறினர் - (அவ்வரசர்கள்) யாவரும் அம்மலையின்மேலேறி, நூல் தெரி தெய்வத கம்மியன் நுனித்துச் செய்திடும் மாறு அகல் திருநகர் வளம் கண்டு - (சிற்ப) நூலையறிந்த தேவகம்மியன் நுண்மையாக ஆராய்ந்து இயற்றிய ஒப்பில்லாத திருநகரத்தினது சிறப்பைத் தரிசித்து, இந்திரன் சாறு அயர் வதுவையஞ்சாலை நண்ணினார் - இந்திரன் (சுப்பிரமணியப் பெருமானுடைய திருமண) விழாவைச் செய்கின்ற சாலையைச் சார்ந்தார்கள். எ - று.

உம்மை முற்று. ஏறினர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. நுனித்தல், நுண்மையாக ஆராய்தல். (164)

அம்முசு குந்தனை யாதி யாகிய
வெம்முடி மன்னரு மிமைய வர்க்கிறை
செம்மல ரடிகளைச் சென்னி சேர்த்தினார்
கைம்முறை தொழுதனர் களிப்பின் மேலுளார்.

இ - ள். அம்முசுகுந்தனை ஆதி ஆகிய முடி எம்மன்னரும் - அந்த முசுகுந்தனை முதலிடத்து (உளர்) ஆகிய முடியினையணிந்த எவ்வகைப்பட்ட அரசர்களும், களிப்பின் மேல் உளார் - பெருமகிழ்ச்சியின்மீதுளராய், இமையவர்க்கு இறை செம் மலர் அடிகளைச் சென்னி சேர்த்தினார் கைம்முறை தொழுதனர் - தேவர்கட்கரசனாகிய இந்திரனுடைய செம்மையாகிய தாமரை மலர்போன்ற பாதங்களைத்

(தத்தஞ்) சிரசிற்சேர்த் திக்கரங்களால் (முறையே) வணங்கினார்கள். எ - று.

அம்முசுகுந்தனை யாதியாகிய என்றதற்கு அம்முசுகுந்தன் முதலாகிய எனினுமமையும்; ஈண்டு ஐ சாரியை. சேர்த்தினர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. கரங்களால் முறையே வணங்குதல், கரங்களைக் கூப்பி வணங்குதல். முறைவணங்கினர் என்றதற்கு முன்வணங்குபவரும் பின்வணங்குபவரும் தத்தமக் கேற்ற முறைப்படி வணங்கினரெனினுமாம். (165)

கயமலர் குவளையிற் கண்கள் மிக்குளா
னயலுறு மரசருக் கருளி யாங்கவர்
செயன்முறை வினவியே சிறப்பி னாகிய
நயமொழி பலவுட னவின்று மேவினன்.

இ - ள். கயம் மலர் குவளையில் கண்கள் மிக்குளான் - குளத்தின்கண்ணே மலர்ந்த குவளைமலர்களைப்போலக் கண்கள் அதிகரித்தவனாகிய இந்திரன், அயல் உறும் அரசருக்கு அருளி - (தன்) பக்கத்திற்சார்ந்த அவ்வரசர் களுக்கு அருள்புரிந்து, ஆங்கவர் செயல்முறை வினவியே - அவர்களுடைய செயன்முறையை வினாவி, சிறப்பின் ஆகிய நயமொழி பல உடன் நவின்று மேவினன் - சிறப்புடனாகிய முகமன் வார்த்தைகள் பலவற்றை உடனே சொல்லியிருந் தான். எ - று.

ஆங்கவர் ஒருசொல்; ஆங்கு அசைநிலையெனினுமாம். செயன் முறை, அரசுநெறி. முறை வினவி என்றதற்கு முறையே வினாவி யெனினுமாம். ஏ அசை. (166)

மேதகு கதியராய் விசும்பிற் சென்றிடு
மாதவன் மதிமுத லமரர் யாவரு
மாதிர விறைவரு மாநு வத்தரும்
பாதல வாணரும் பரங்குன் றெய்தினர்.

இ - ள். மேதகு கதியராய் விசும்பில் சென்றிடும் ஆதவன் மதி முதல் அமரர் யாவரும் - மேலாகிய கதியினர்களாகி ஆகாயத்திற் செல்லுகின்ற சூரியன் சந்திரன் இவர் முதலாகிய தேவர்கள் யாவரும், மாதிர இறைவரும்-திக்குகளிலுள்ள தலைவர்களும், மாதவத்தரும் - முனிவர்களும், பாதல வாணரும் - பாதலத்தில் வாழ்பவர்களும், பரங்குன்று எய்தினர் - திருப்பரங்குன்றத்தை அடைந்தார்கள். எ - று.

தேவகதி மனிதகதி நரககதி விலங்குகதி என்னும் நாற்கதிகளுள் மேலானகதியினராதலின் சூரிய சந்திரர் முதலாகிய அமரரை மேதகுகதியரென்றார். மாதிரவிறைவர், சுப்பிரமணியப் பெருமானோடு கூடி வந்திருக்கின்ற திக்குப்பாலகர் ஒழிந்த பிறதலைவர்களென்க. (167)

விண்டொடர் பிறங்கலின் மிசையி வர்ந்துபோ
யண்டரும் பிறருமா யமரர் கோன்றனைக்
கண்டனர் தொழுதனர் களிப்பின் மாதவ
ரெண்டகு மாசிக ளியம்பி யெய்தினர்.

இ - ள்.. அண்டரும் பிறருமாய் விண் தொடர் பிறங்கலின் மிசை இவர்ந்து போய் - (அங்ஙனம் வந்த) தேவர்களும் பிறருமாகி ஆகாசத்தைத் தொடர்ந்த அத் திருப்பரங்குன்றத்தின்மீது ஏறிச்சென்று, அமரர் கோன்றனைக் கண்டனர் தொழுதனர் - தேவர்கட்கரசனாகிய இந்திரனைக்கண்டு வணங்கினார்கள், களிப்பின் மாதவர் எண்தகும் ஆசிகள் இயம்பி எய்தினர் - பெருமகிழ்ச்சியினாலே முனிவர்கள் உறுதிபொருந்திய ஆசிர்வாதங்களை அவ்விந்திரனுக்குச் சொல்லிக்கொண்டு சார்ந்தார்கள். எ - று.

தொடர்தல், சண்டுச்சார்தல். பிறர் மாதிரவிறைவரும் பாதலவாணரும். கண்டனர் என்னும் வினைமுற்று வினையெச்ச

மானது. முனிவர்கள் ஆசிகளியப்பியெய்துதல், இந்திரனைத் துரத்தே கண்டபொழுதிற்றனே ஆசீர்வாதங்கூறிக்கொண்டு அணித்தாகச்செல்லுதல். எய்தி இயம்பினர் என விகுதியைப் பிரித்துக்கூட்டிப் பொருளுரைப்பினுமமையும். (168)

விறல்வரை மாதரும் விண்ணின் மாதருஞ்
செறிபுனன் மாதருந் திசையின் மாதரு
முறுதவ மாதரு முரக மாதரு
மறுவகல் புலோமசை வயின்வந் தீண்டினர்.

இ - ள். விறல் வரை மாதரும் - பெருமையாகிய மலைகளிலுள்ள தெய்வமகளிரும், விண்ணின் மாதரும் - விண்ணிடத்துள்ள தெய்வமகளிரும், புனல்செறி மாதரும் - நீரிற்செறிந்த தெய்வமகளிரும், திசையின் மாதரும் - திக்குகளிலுள்ள தெய்வமகளிரும், உறு தவ மாதரும் - மிகுதியாகிய இருடி பத்தினிகளும், உரக மாதரும் - நாகஸ்திரீகளும், மறு அகல் புலோமசை வயின் வந்து ஈண்டினர் - குற்றமில்லாத இந்திராணியிடத்து வந்து சார்ந்தார்கள். எ - று. (169)

சூரர மங்கையர் தொல்லை விண்ணமர்
பேரர சியற்றிய பிரான்றன் காதலி
சீரடி வந்தனை செய்து தெய்வத
வாரண மென்பவண் மருங்கி லெய்தினர்.

இ - ள். சூர் அரமங்கையர் தொல்லை விண்ணவர் பேர் அரசு இயற்றிய பிரான்றன் காதலி சீர் அடி வந்தனை செய்து - தெய்வமகளிர்கள் பழைமையாகிய தேவர்களது பெருமையாகிய அரசினை நடத்திய இந்திரனுடைய மனைவியாகிய இந்திராணியினுடைய அழகிய பாதங்களை வணங்கி,

தெய்வதவாரணம் என்பவள் மருங்கில் எய்தினர் - தெய்வ யானையம்மையா ரென்பவரது பக்கத்திற் சார்ந்தார்கள். எ - று.

சூரமங்கையர், சூராகிய அரமங்கைபரென்க; இது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. சூரபன்மனால் நெடுங்காலம் அரசியலை யிழந்திருக்கின்றாளாதலின் விண்ணவர் பேரரசியற்றிய என்று இறந்தகாலத்தாற் கூறினர். (170)

தெய்வத யானைகே ளைய சூருயிர்
வவ்விய வேலினன் மனைவி யாதியா
லெவ்வுல கிற்குநீ யிறைவி யாமென
வவ்வவ ரடிபணிந் தன்பொ டேத்தினர்.

இ - ள். தெய்வத யானை கேள் தீய சூர் உயிர் வவ்விய வேலினன் மனைவி ஆதி யால் - தெய்வயானையம்மையே கேள் (நீ சிறுமியாயினும்) கொடிய சூரபன்மனுடைய உயிரைக்கவர்ந்த வேற்படையையுடையராகிய சுப்பிரமணியப்பெருமானுக்கு மனைவியாகின்றாய் (ஆதலின்), எவ்வுலகிற்கும் நீ இறைவி ஆம் என - எந்தவுலகத்திற்கும் நீ தலைவியாகுமென்று சொல்லி, அவ்வவர் அடி தொழுது அன்பொடு ஏத்தினர் - அத்தெய்வமகளிர்கள் (அவ்வம்மையாருடைய) திருவடிகளை வணங்கி அன்போடு துதித்தார்கள். எ - று.

சூர் என்னும் பண்புச்சொல் பண்பிபை யுணர்த்திநின்றது; இது ஆகுபெயர். ஆல் அசை. எவ்வுலகிற்கு மென்றதற்கு சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதிமாயை இவற்றாலாகிய எல்லாவுலகங்களுக்குமென்க. ஆகும் என்றது ஆமெனக் குறைந்து நின்றது. அவ்வவர் ஒருசொல். (171)

கயற்புரை நோக்குடைக் கடவுள் யானைபா
லியற்படு திருநல னிருக்கப் பின்னருஞ்
செயற்படு கோலமுஞ் சிறிது செய்திட
மயற்பட வுன்னினர் மடநல் லாரெலாம்.

இ-ள். மட நல்லார் எலாம் - மடமையையுடைய அத்தெய்வ மகளிரெல்லாம், கயல் புரை நோக்கு உடைக் கடவுள் யானைபால் இயல் படு திரு நலன் இருக்க - கயன் மீனை நிகர்த்த விழியினையுடைய தெய்வயானையம்மையாரிடத்து இயற்கையிற்பட்ட திருவழகு இருக்க, பின்னரும் செயல் படு கோலமும் சிறிது செய்திட மயல் பட உன்னினர் - (அவ்வியற்கையழகின்) மேலும் செயலிற்பட்ட அழகைச் சிறிதுசெய்ய ஆசையிற் (றம்முள்ளம்) படநினைத்தார்கள். எ - று.

கயல் விழிக்குப் பிறழ்ச்சியாலும் வடிவினாலும் ஒத்தலின் தொழிலுவமையும் பண்புவமையுமாமெனக். மானுடமகளிருக்கு அன்னையரால் உறுப்புக்களைப் பிடித்தலாதிய செயல்களாற் றிருத்தப்பட்ட செயற்கையழகுபோலாது தானேயுண்டாகிய அழகென்பார் இயற்படுதிருநலன் என்றார். திரு மகிமைப் பொருட்டருமொருசொல். பின்னரும் என்றதில் உம்மை எச்சம். இயற்படுநலன், இயற்கையழகு. செயற்படு கோலம், செயற்கையழகு. கோலமும் என்றதிலும்மை இழிவு சிறப்போடு எச்சமுமெனக் (172)

பொன்னக மதனிடைப் புராரி சேயினைத்
தன்னக மிசைகொடு தவத்தை யாற்றினாள்
பின்னக மயிர்முடிப் பிணையற் சூழலை
மென்னக விரல்களான் மெல்ல நீக்கினார்.

இ-ள். பொன் நகமதனிடைப் புராரி சேயினைத் தன் அகமிசை கொடு தவத்தை ஆற்றினாள் - பொன்னாகிய

இமயகிரியினிடத்து (இருந்து) சிவபெருமானுடைய புத்திரராகிய சுப்பிரமணியப்பெருமானைத் தமது திருவுள்ளத்தில் (இருத்திக்) கொண்டு தவத்தினைச் செய்தவராகிய அத்தெய்வயானையம்மையாரது, பின்னகம் மயிர்முடிப் பிணையல் சூழலை மெல் நக விரல்களால் மெல்ல நீக்கினர் - பின்னகமாகிய மயிர்முடியிலுள்ள மலர்மாலைச் சூழலை மென்மையாகிய நகத்தினையுடைய விரல்களாலே மெல்லநீக்கினர்கள். எ - று.

இமயமலையும் பொன்மலையாதலின் பொன்னகம் என்றார். சரவணதடாகம் இமயமலைச்சாரலின்கண்ணதாதலின் அத்தடாகத்திலிருந்து தவமியற்றிய அவ்வம்மையாரைப் பொன்னகமதனிடைத் தவத்தை யாற்றினள் என்றார். ஆற்றினள் தெரிநிலை வினையாலணையும் பெயர். பின்னகமயிர்முடி இருபெயரொட்டு.

காசறை விரவிய கடிமென் கூந்தலிற்
பூசினர் நாவிநெய் புதிய சாந்தமு
மாசறு பனிதமு மற்று நீவியே
நேசமொ டொண்பனி நீர்கொண் டாட்டினர்.

இ - ள். காசறை விரவிய கடிமெல் கூந்தலில் - மயிர்ச்சாந்து பொருந்திய நறுமணத்தையுடைய மென்மையாகிய கூந்தலிலே, நாவி நெய் பூசினர் - நாவியினெய்யைப் பூசி, புதிய சாந்தமும் மாசு அறு பனிதமும் மற்றும் நீவியே - புதிய சந்தனத்தையுங் குற்றமற்ற கருப்பூரத்தையும் பிறவற்றையுந் தடவி, நேசமொடு ஒள் பனி நீர் கொண்டு ஆட்டினர் - அன்போடு ஒள்ளிய பனிநீரினாலே ஆட்டினர்கள் (அத்தெய்வமகளிர்கள்). எ - று.

பூசினர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. நாவி செய், புனுகு. பிற கத்தூரியாதியன. ஏ அசை. ஒடு அடைமொழிப் பொருளினின்றது. நாவி நெய்யைப்பூசி அதனைப்

போக்குதற்காகச் சாந்தமாதியவற்றைத் தடவிப் பின்னர்ப் பனி நீரினாலே ஆட்டினாரென்க. (174)

சேந்ததோர் வெம்பணி சீற்றத் தாற்கரும்
பாந்தளை வாய்க்கொடு பற்று மாறெனப்
பூந்துகிற் கிழிகொடு புனல்வ றந்திடக்
கூந்தலை யொற்றினர் குழைமென் கொம்பனார்.

இ - ள். குழை மெல் கொம்பு அனார் - தளிர்களை யுடைய மென்மையாகிய வஞ்சிப்பூங்கொம்பை நிகர்த்த அத்தெய்வ மகளிர்கள், சேந்தது ஓர் வெம்பணி சீற்றத்தால் கரும் பாந்தளை வாய்க் கொடு பற்றும் ஆறு என - சிவந்ததாகிய ஒரு வெய்யபாம்பானது கோபத்தினாலே (ஒரு) கரும்பாம்பை வாய்க்கொண்டு கவ்வுமாறுபோல, பூந் துகில் கிழி கொடு புனல் வறந்திடக் கூந்தலை ஒற்றினர் பொலிவாகிய ஆடைத்துண்டுகொண்டு நீர்வற்ற அவ்வம்மை யாருடைய) கூந்தலையொற்றினார்கள். எ - று.

சேந்தது வினையாலணையும் பெயர். சிவந்தபாம்பு உவமை யாதலின் செந்துகிற் கிழியென்பது பெறப்படும். குழைதல், வாடுதலெனினுமாம். (175)

மாந்தளி ரேயென வனப்பு மென்மையுங்
காந்தியு மெய்தியே கடவுட் டன்மையாற்
றேய்ந்திட லின்றியுந் துப்பின் வண்ணமாம்
பூந்துகி லொன்றினைப் புனைந்து டீஇனார்.

இ - ள். மாந்தளிரே என வனப்பும் மென்மையும் காந்தியும் எய்தியே - மாந்தளிரைப்போல அழகும் மென் மையுங் காந்தியுமடைந்து, கடவுள் தன்மையால் தேய்ந் திடல் இன்றியும் துப்பின் வண்ணம் ஆம் பூந் துகில் ஒன்றி னைப் புனைந்து உடீஇயினார் - தெய்வத்தன்மையினாலே

(செயற்கைநிறந்) தோய்தலின்றியும் பவனத்தின் வண்ண மாகிய பொலிவாகிய ஆடையொன்றை அலங்கரித்து உடுத்தினார்கள். எ - று.

எகாரம் இரண்டனுள் முன்னையது தேற்றம்; பின்னையது அசை. மாந்தளிரேயென என்றதற்கு மாந்தளிரேயென்றுசொல்ல என்று பொருள்கூறினுமமையும். கடவுட்டன்மையாற் றோயந் திடலின்றியுந் துப்பின்வண்ணமாதல் செய்வத்தினுணையினாலே செந்நிறத்தைத்தரும் பொருள்சலந்த நீர் முதலியவற்றிற் றோய்க்கப்படுதலின்றியும் தானே பவளவண்ணமாதல். புனைதல், ஆடையின்கோடி அழகாகிற்பச் செய்தலாதியவை. (176)

ஈரறு கதிர்களு மிம்பர் சேர்தலி
னாரிருள் யாவையு மஞ்சி யவ்வைதன்
வாரொலி கூந்தலின் மறைபுக் காலெனக்
காரகி னறும்புகை கமழ வூட்டினர்.

இ - ள். ஈராறு கதிர்களும் இம்பர் சேர்தலின் - பன்னிரண்டு சூரியர்களும் (சுப்பிரமணியப்பெருமானுடைய திருமணத்தைத் தரிசித்தற்கு) இங்ஙனஞ் சேர்தலினால், ஆர் இருள் யாவையும் அஞ்சி அவ்வைதன் வார் ஒலி கூந்தலின் மறை புக்கால் என - (உலகத்தில்) நிறைந்த இருளெல்லாமஞ்சி அவ்வம்மையாருடைய நெடுமையாகிய தழைத்த கூந்தலிலே ஒளித்தாற்போல, கார் அகில் நறும் புகை கமழ ஊட்டினர் - கருமையாகிய அகிலினது நறிய புகையைக் கமழும்படி ஊட்டினார்கள். எ - று.

உம்மைகள் முற்று. மறை புகுதல் ஒளித்தல். அகிற்புகை யூட்டுதல் நீராட்டியபின்னர்க் கூந்தலிலுள்ள ஈரம் போக்குதற் காகக் குடத்தினுள்ளே அகிற்கட்டைகளையிட்டு அக்கினிமூட்டிப் புகையெழச்செய்து அப்புகையைக் கூந்தலிற்படும்படி பிடித்த லென்க. (177)

பொலம்புரி யுத்தியும் பொருத மஞ்ஞையும்
வலம்புரி மகரமு மரபில் வானவர்
குலம்புரி தவம்புரை கொம்பின் கூழையி
னலம்புரி மங்கல நவின்று சாத்தினர்.

இ - ள். பொலம் புரி உத்தியும் - பொன்னாற் செய்யப்பட்ட சிதேவியென்னுந் தலைக்கோலத்தையும், பொருத மஞ்ஞையும் - போர்புரிகின்ற மயில் வடிவாகச் செய்யப்பட்ட தலைக்கோலத்தையும், வலம்புரி - வலம்புரிச் சங்குவடிவாகச் செய்யப்பட்ட தலைக்கோலத்தையும், மகரமும் - சுறுவினதங்காந்தவாய்போலச் செய்யப்பட்ட தலைக் கோலத்தையும், வானவர் குலம் புரி தவம் புரை கொம்பின் கூழையில் - தேவர்குலஞ்செய்த தவப்பயனை நிகர்த்த வஞ்சிப்பூங் கொம்பையொத்த தெய்வயானையம்மையாருடைய கூந்தலிலே, நலம் புரி மங்கலம் நவின்று மரபில் சாத்தினர் - நன்மையைத் தருகின்ற மங்கல வசனங்கூறி முறைமையாக அணிந்தார்கள். எ - று.

பொன் என்னும் பெயரே பொலம் என விகாரமடைந்த தென்று தொல்காப்பியங் கூறுகின்றது; இதனைப் பிற்காலத்து நிகண்டாசிரியர்கள் பொன்னின் பரியாய நாமங்களுள் ஒன்றாகச் சேர்த்தனர். ஆடகம் கிளிச்சிறை. சாதரூபம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொன்களுள் உயர்ந்தது சாம்பூநதமாதலின் ஈண்டுப் பொலம் சாம்பூநதப்பொன்னென்க. வலம்புரியும் என்றதி லும்மை தொக்கது. மகரத் தலைக்கோலம் நெற்றியிலே தங்கும் படி யணிவதென்பது "திலதர்தை இயதேங்கமழ் திருநுதன் மகரப்பகுவாய் தாழமண்ணுறுத்து" என்பதினாலுணர்க. தவம் ஆகுபெயர். மரபிற்சாத்துதல் அவ்வணிகளை வைக்கவேண்டிய விடத்துவைத்துச் சாத்துதல். கொம்பு உவமவாகுபெயர். (178)

விரியிணர்க் கோங்கமும் வெட்சியுஞ் சேரீஇ
மருமல ரிதழிடை வைத்து வாசமார்
தெரியலுந் தொடையலுஞ் செறியச்சூட்டியே
சுரிகுழன் முடித்தனர் சுழியற் றன்மையால்.

இ - ள். விரி இணர்க் கோங்கமும் வெட்சியும் சேரீஇ - விரிந்ததாதினையுடைய கோங்கையும் வெட்சியையுஞ் செருகி, மரு மலர் இதழ் இடை வைத்து - நறுமணத்தை யுடைய மலர்களினிதழ்களை இடையிடையேயிட்டு, வாசம் ஆர் தெரியலும் தொடையலும் செறியச் சூட்டியே - வாசம் நிறைந்த கோத்தமாலையையுந் தொடுத்தமாலையையும் பொருந்தச்சூட்டி, சுரிகுழல் சுழியல் தன்மையால் முடித்தனர் - சுரித்தகூந்தலைச் சுருண்முடியாக முடித்தார்கள் (அத் தெய்வமகளிர்கள்). எ - று.

கோங்கம் என்றதில் அம் சாரியை. கோங்கு வெட்சி ஆகு பெயர். ஏ அசை. சுருண்முடி குழல் கொண்டை சுருள் பனிச்சை முடி என்னும் ஐவகை மயிர்முடியுளொன்றென்க. (179)

ஒருமுயன் முழுமதி யுள்புக் காலென
விருவிழி புருவமா மினைய வற்றொடு
கருநிறங் கண்டிடக் காமர் சாந்தினற்
றிருநுத லதனிடைத் திலகந் தீட்டினர்.

இ - ள். ஒரு முயல் முழு மதி உள் புக்கால் என - ஒரு முயல்போலுங்களங்கம் பூரணசந்திரனுட் சேர்ந்தாற் போல, இரு விழி புருவம் ஆம் இனையவற்றொடு - இரண்டு விழியும் (இரண்டு) புருவங்களும் ஆகிய இவற்றோடு, திரு நுதலதனிடைக் கரு நிறம் கண்டிடக் காமர் சாந்தினால் திலகம் தீட்டினர் - திருநெற்றியின்கண்ணே கருமைநிறக்

தோன்ற அழகிய சாந்தினாலே திலகத்தைத் தீட்டினார்கள் (அத்தெய்வ மகளிர்கள்). எ - று.

முயல் உவமவாகுபெயர். இரு என்பதைப் புருவத்தோடுங் கூட்டுக. இனைய இவை என்பதன் மரூஉ. சாந்து ஈண்டுக் கருமைநிறமுடைய கத்தூரியாதியவை கலந்தசாந்து. (180)

ஊட்டிய நறும்புகை யோதி நின்றோரீஇத்
தீட்டிய திருநுதற் றிலகம் சேர்தரப்
பூட்டினர் சுட்டியைப் புயங்க மொன்றுநா
நீட்டிநஞ் சுமிழ்தரு நிலைமை யீதென.

இ - ள். புயங்கம் ஒன்று நா நீட்டி நஞ்சு உமிழ்தரு நிலைமை ஈது என - சர்ப்பமொன்று நாவைநீட்டி நஞ்சினைக் காலுகின்றதன்மை இதுவேயென்ன, நறும் புகை ஊட்டிய ஓதி நின்று ஓரீஇத் திரு நுதல் தீட்டிய திலகம் சேர்தரச் சுட்டியைப் பூட்டினர் - (அகிலினது) நறியபுகையையூட்டிய கூந்தலினின்று நீங்கித் திருநுதலிற்றீட்டிய திலகத்திற் சேரச்சுட்டியென்னும் நுதலணியைப்பூட்டினார்கள். (அத்தெய்வமகளிர்கள்). எ - று.

ஓதி நின்று ஒருவுதல் ஈண்டு அச்சுட்டியின் பின்கடை கூந்தலினிற்க எஞ்சியபாக மெல்லாம் நெற்றியைநோக்கி எழுந்துவளைந்து ஆடிநிற்றல். சுட்டி சர்ப்பத்தையும், அச்சுட்டியின்முகப்பிற்றூங்கும்மணி சர்ப்பத்தின்நாவையும் நெற்றியிற்றிலகம் நஞ்சுத்துளியையும்போலிருந்தனவென்க. (181)

கோல்வளை யந்நலார் குழையில் வல்லியஞ்
சூல்வளை மிடற்றிலிற் றோடையன் முத்தணி
கால்வளை கஞ்சநேர் கரத்துந் தோளினும்
வால்வளை தொடியிவை வயங்கச் சேர்த்தினர்.

இ - ள். கோல் வளை அம் கலார் - கோலியவளையலை யணிந்த அழகிய அத்தெய்வமகளிர்கள், குழையில் வல்லியம் - (அவ்வம்மையாருடைய) காதிற்காதணிகளை யும், சூல் வளை மிடற்றினில் தொடையல் முத்து அணி - சூலினையுடைய சங்குபோன்ற கழுத்திலே மாலையாகிய முத்தமணியணியையும், கால் வளை கஞ்சம் நேர் கரத்தும் தோளினும் வால் வளை தொடி இவை வயங்கச் சேர்த்தி னர் - கால்வளைந்ததாமரைமலரை நிகர்த்த முன்கையிலுந் தோளிலும் வெண்மையாகிய வளையலையுந்தொடியும் விளங்க அணிந்தார்கள். எ - று.

கோலம் என்பது இறுதிகுறைந்து நின்றதெனக்கொண்டு கோல்வளை என்பதற்கு அழகியவளையலென்றுபொருள்கூறினு மமையும். அக்கலார் என்பதற்கு அத்தெய்வமகளிரெனினுமாம். காதணி தோடுமுதலியபலவாபரணமென்க. தொடையல் முத் தணி; இருபெயரொட்டுப்பண்புத்தொகை. தோள் ஈண்டு முன் கைக்கு மேலிடம். வால்வளை சங்கவளையல். தொடி ஈண்டுப் பொன்னாற் செய்யப்பட்ட வளையல். (132)

கொட்டினர் கலவைகள் கொங்கை யின்மிசை
மட்டிமிர் பிணையலு மணியின் கோவையு
மட்டினர் படாமுமொன் றதன்கட் சேர்த்தின
ரிட்டிடை யிடைதனக் கிரக்கம் வைக்கிலார்.

இ - ள். இட்டிடை இடை தனக்கு இரக்கம் வைக் கிலார் - (அவ்வம்மையாருடைய) சிறுமையாகிய இடைக்கு இரக்கம் வைக்கிலாராய், கொங்கையின்மிசைக் கலவைகள் கொட்டினர் - ஸ்தனங்களின்மீது கலவைச்சாந்துகளை அப்பினர்கள், மட்டு இமிர் பிணையலும் மணியின் கோவை யும் அட்டினர் - தேன்பொருந்திய மலர்மாலைகளையும் அரதனவடத்தையும் (அவைகளில்)அணிந்தார்கள், ஒன்று

படாமும் அதன்கண் சேர்த்தினர் - ஒருத்தரீகத்தையும் அம்முலைகளிடத்துச் சேர்த்தினர்கள் (அத்தெய்வமகளிர்கள்.) எ - று.

கருப்பூரக்கலவை கத்தூரிக்கலவை முதலாகக் கலவைகள் பலவாதலிற் கலவைகள் என்று பன்மையாற்கூறினர். மட்டு வாசமுமாம். இமிர்தல், எறுதல் ஈண்டுப் பொருந்துதல். அதன் கண் என்றது சாதியொருமை. வைக்கிலார் என்னும் வினைமுற்று வினையெச்சமானது தனங்களே சிறிய இடைக்குப்பெரும்பாரமாகவும் அவற்றின்மீது கலவைகளையப்பியதமையாது மேலும் மேலும் அணிந்து சேர்த்தலின் இட்டிடை யிடைதனக் கிரக்கம் வைக்கிலார் என்றார். (133)

மாடக யாழ்புரை மழலைப் பெண்பிளை
யாடக விரைமல ரனைய தாள்களிற்
பாடகம் பரிபுரம் பாத சாலங்கள்
சூடக முன்கையார் தொழுது சூழ்வித்தார்.

இ - ள். சூடக முன்கையார் - வளையலையணிந்த முன்கையினையுடைய அத்தெய்வமகளிர்கள், மாடக யாழ்புரை மழலைப் பெண்பிளை விரை ஆடகமலர் அனைய தாள்களில் - முறுக்காணியையுடைய வீணையினிசையை நிகர்த்தமழலைச்சொற்களைப் பேசுகின்ற பெண்பிள்ளையாகிய தெய்வயானையம்மையாருடைய நறுமணம் (பொருந்திய) பொன்மலரை நிகர்த்த திருவடிகளிலே. பாடகம் பரிபுரம் பாதசாலங்கள் தொழுது சூழ்வித்தார் - பாடகத்தையும் பரிபுரத்தையும் (மற்றுமுள்ள) காலணிகளையும் (அவரை) வணங்கிச் சூழ்வித்தார்கள். எ - று.

யாழ் ஆகுபெயர். ஆடகவிரைமலர் இல்பொருளுவமம். பிற பதத்தணிகள் தண்டை சதங்கைகளாதியன. சூழ்வித்தல், அவ்வணிகள் திருவடியிற்சூழ்ந்திருக்கும்படி கடைப்பூட்டுக்களைப்

பூட்டுதல். சூழ்வித்தார் என்னும் பிறவினை ஈண்டுத் தன்வினைப் பொருடந்து நின்றதெனக்கொண்டு சூழ்ந்தாரென்று பொருள் கூறினுமமையும். (184)

தெய்வத மடந்தையர் திருவின் செல்விபா
லிவ்வகை யொப்பனை யியற்றி யேத்தலு
மைவிரி குவளைநேர் வடிவக் கண்ணினு
னவ்விடை செய்திடு மமைதி கூறுவாம்.

இ - ள். தெய்வத மடந்தையர் திருவின் செல்வி பால் இவ்வகை ஒப்பனை இயற்றி ஏத்தலும் - தெய்வமெல்லியர்கள் திருமகளுடைய மகளாகிய தெய்வயானையம்மையாரிடத்து இவ்வாறு ஒப்பனை செய்துபோற்றுதலும், மை விரி குவளை நேர் வடிவக் கண்ணினுன் அவ்விடை செய்திடும் அமைதி கூறுவாம் - கருமைபரந்த குவளைமலர்களை நிகர்த்ததேகத்தில் (ஆயிரங்) கண்களையுடையனாகிய இந்திரன் அங்ஙனஞ் செய்ததன்மையை யுரைப்பாம். எ - று.

திருவின்செல்விபால் என்றது தெய்வயானையம்மையாருடைய திருமேனியிடத்து என்றவாறு. குவளைநேர்வடிக் கண்ணினுன் என்றதற்கு குவளைமலர்போலும் வடிவத்தினையுடைய கண்களையுடையவனெனினுமாம். அமைதி ஈண்டுத் தன்மை. (185)

வேறு.

மேலை வானவர்க் கிறையவன் விரிஞ்சனை நோக்கிச்
சாலை யாகிய தெவ்வெலாத் தேவருஞ் சார்ந்தார்
மாலை தாழ்முடி யெம்பெரு முதல்வற்கு மணஞ்செய்
காலை நாடியே யிஃதெனக் கழறுதி யென்றுன்.

இ - ள். மேலை வானவர்க்கு இறையவன் விரிஞ்சனை நோக்கி - மேலாகிய அமரர்கட்கரசனாகிய இந்திரன் பிரம

தேவரைப்பார்த்து, சாலே ஆகியது - திருமணச்சாலே இயற்றப்பட்டது, எவ்வெலாத் தேவரும் சார்ந்தார்— எவ்வகைப்பட்ட எல்லாத்தேவர்களும் (ஈண்டுவந்து) சேர்ந்தார்கள், மாலே தாழ் முடி எம்பெரு முதல்வற்கு மணம் செய் காலே நாடியே இஃது எனக் கழறுதி என்றுன்— மாலேதங்கிய முடியிண்யுடைய எமதுபெரிய தலேவராகிய சுப்பிரமணியப்பெருமானுக்குத் திருமணஞ்செய்யு முகூர்த்தத்தை ஆராய்ந்து ஈதென்று கூறுவீரென்று சொன்னுன். எ - று.

எழுவகைத்தோற்றத்தினுட் புண்ணியமேலீட்டாற் ரேன்றுந் தோற்றத்தினராதலின் மேலவானவரென்ருர். தேவகணத்தவருமடங்க எவ்வெலாத் தேவருமென்ருர். தேவரும் என்றதில் முற்றும்மை தேவரும் வந்தார் முசுகுந்தனுகிய மானுடஅரசரும் வந்தாரென்று பொருள்படுதலின் எச்சப்பொருட்டானதென்க. அவ்வரசர்கள் தெய்வத்தன்மையுடையாரதலின் தேவரிலடக்கினுரெனினுமாம். காலே ஈண்டு முகூர்த்தம். எ அசை. ()

அப்பு ரந்தரன் மொழிதனே யம்புயன் வினவிச்
செப்பு கின்றதென் னறுமுகப் பரன்மணஞ் செய்தற்
கெப்பெ ரும்பக லாயினு மினியதே யெனினு
மொப்ப கன்றிடு முகூர்த்தமிவ் வெல்லேயென் றுரைத்தான்.

இ - ள். அப்புரந்தரன் மொழிதனே அம்புயன் வினவி - அவ்விந்திரனுடைய சொல்லேப் பிரமதேவர் கேட்டு, அறுமுகப் பரன் மணம் செய்தற்குச் செப்புகின்றது என் எப்பெரும் பகல் ஆயினும் இனியதே எனினும் - ஆறுதிருவதனங்களேயுடைய சுப்பிரமணியப்பெருமான் திருமணஞ்செய்தருளுதற்குச் சொல்லுவதென்னே எப்பெருமுகூர்த்தமாயினும் நன்றே எனினும், இவ்வெல்லே ஒப்பு அகன்றிடு முகூர்த்தம் என்று உரைத்தான் - இம்முகூர்த்தம் (தனக்குச்

சமானம் பிறிதொன்று மில்லையாதலின்) ஒப்பகன்ற முகூர்த்தமேயென்று சொன்னார். எ - று.

எவன் என்னும் வினாவினைக் குறிப்பு என்னெனத் திரிந்து ஈண்டு இல்லை யென்னும் பொருடந்துநின்றது. செப்புகின்றதென் என்றது சொல்லவேண்டுவ தில்லையென்றவாறு. பகல் எல்லை ஆகுபெயர்கள். ஏகாரம் தேற்றம். (187)

ஈவ தேமுறை யாயுளா யிப்பகல் சிறந்த
தாவ தேயெனின் யான்பெறு மணங்கையீண் டளிப்பான்
றேவ தேவனு மறுமுகச் செம்மலைக் கொணரப்
போவ தேகட னெமக்கெனப் புரந்தரன் புகன்றான்.

இ - ள். ஈவதே முறை ஆய் உளாய் - சிருட்டித்தலே (செய்யுஞ் செயன்) முறையாகியுள்ள பிரமதேவரே, இப் பகல் சிறந்தது ஆவதே எனின் - இம்முகூர்த்தஞ் சிறந்ததாகியதேயெனின், யான் பெறும் அணங்கை ஈண்டு அளிப்பான் - யான்பெற்ற தெய்வயானையை இங்ஙனங் (கன்னிகாதானமாகக்) கொடுத்தற்கு, தேவ தேவன் ஆம் அறுமுகச் செம்மலைக் கொணரப் போவதே கடன் எமக்கு எனப் புரந்தரன் புகன்றான் - தேவர்களுக்குந் தேவராகிய ஆறு திருவதனங்களை யுடைய சுப்பிரமணியப்பெருமானை அழைக்கச் செல்வதே கடனெமக்கென்று அவ்விந்திரன் கூறினான். எ - று.

ஈவதே என்றதில் ஏகாரம் பிரிநிலை. பகல் ஈண்டும் முன்னையது. ஆவதே என்றதில் ஏகாரம் தேற்றம். பானீற்றுவினையெச்சம் போவது என்னுந் தொழிற்பெயரோடு முடிதலின் அது பிரமவிஷ்ணுவாதிய பலருடைய வினையாயினும் அவ்விந்திரனும் போதலுண்மையின் அவ்வெச்சம் வினைமுதல்வினைகொண்டதே என்க. போவதே என்றதில் ஏகாரம் பிரிநிலை. (188)

அனைய காலையி லச்சுதக் கடவுளு மயனு
மினிது போதுமென் றிந்திரன் றன்னொடு மெழுந்து
முனிவர் யாவருந் தேவருஞ் சூழ்ந்துமுன் படரப்
புனித நாயக னாலய நோக்கியே போனார்.

இ - ள். அனைய காலையில் அச்சுதக் கடவுளும் அயனும் - அச்சமயத்தில் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும், இனிது போதும் என்று இந்திரன்றன்னொடும் எழுந்து - (நீ கூறியது) நன்று (அங்ஙனஞ்) செல்வேமென்று அவ்விந்திரனோடுமெழுந்து, முனிவர் யாவரும் தேவரும் சூழ்ந்து முன் படரப் புனித நாயகன் ஆலயம் நோக்கியே போனார் - முனிவர்கள் யாவருந் தேவருஞ் சூழ்ந்து முன்னர்ச்செல்லப் பரிசுத்தராகிய சுப்பிரமணியப்பெருமானது திருக்கோயிலை நோக்கிச் சென்றார்கள். எ - று.

அனைய அகரச்சுட்டின் மரூஉ. இனிதுபோதும் என்றதற்கு இனிதாக (அங்ஙனஞ்) செல்வேமென்றுரைப்பினுமாம். யாவரும் என்றதைத் தேவரோடு மொட்டியுரைக்க. புனிதன் நாயகன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; புனிதம் எனச்சொல் வகுத்துப் பரிசுத்தமுடைய என்றுரைப்பினுமமையும். ஏ அசை.

போந்து மற்றவர் பொலன்மணிக் கோயிலுட் புக்குச்
சேந்தன் மாமல ரடிகளை முடிகளிற் சேர்த்திக்
காந்தன் மெல்விரன் மடந்தைபாற் கடிமணம் புரிய
வேந்த னீயவண் வந்திட வேண்டுமென் றிசைத்தார்.

இ - ள். மற்றவர் போந்து பொலன் மணிக் கோயில் உள் புக்கு - அவர்கள் (அங்ஙனஞ்) சென்று பொன்னாலும் மணியாலுமாகிய ஆலயத்தினுட்புகுந்து, சேந்தன் மா மலர் அடிகளை முடிகளில் சேர்த்தி - சுப்பிரமணியப் பெருமானுடைய பெருமையாகிய தாமரைமலர்போலுந் திருவடி

கனைத் (தங்கள்) முடிகளிற் சேர்த்து, ஏந்தல் காந்தள் மெல் விரல் மடந்தை பால் கடி மணம் புரிய அவண் நீ வந்திட வேண்டும் என்று இசைத்தார்-(எங்கள்) தலைவரே காந்தண் மலர்போலும் மென்மையாகிய விரலினையுடைய தெய்வ யானையிடத்துச் சிறந்த திருமணஞ்செய்தருள அங்ஙனந் தேவரீர் வந்தருள வேண்டுமென்று கூறினர்கள். எ - று.

மற்று அசை. புரியவென்னுஞ் செயவெனெச்சங் காரியப் பொருட்டு. ஏந்தல் அண்மைவிளியாதலின் இயல்பானது. (190)

இன்ன வாசகம் வினவலு மிராறுதோ ளுடையோ
னன்ன தாகவென் றருள்செய்து மடங்கலே றாற்றும்
பொன்னின் மாமணி யணையினும் பொருக்கென வெழுந்தான்
றுன்னு வீரரும் பாரிட முதல்வருந் துதிப்ப.

இ - ள். இன்ன வாசகம் வினவலும் இராறு தோள் உடையோன் அன்னது ஆக என்று அருள் செய்து - இவ் வார்த்தையைக் கேட்டலும் பன்னிரண்டு திருப்புயங்களை யுடையராகிய சுப்பிரமணியப்பெருமான் அது ஆகுக வென்று திருவாய்மலர்ந்தருளி, துன்னு வீரரும் பாரிட முதல்வரும் துதிப்ப ஏறு மடங்கல் ஆற்றும் மாமணி பொன்னின் அணையினும் பொருக்கென எழுந்தான் - நெருங்கிய (இலக்கத்தொன்பது) வீரர்களும் பூதப்படைத் தலைவர்களும் போற்ற ஆண்சிங்கங்கள் தாங்குகின்ற பெருமையாகிய அரதனங்களையழுத்திய பொன்னுசனத்தி னின்று விரைவிலெழுந்தருளினர். எ - று.

இன்ன இகரச்சுட்டின் மரூஉ. வினவலும் உம்மீற்று வினை யெச்சம். அன்னது அது என்பதன் மரூஉ. அன்னதாக என்றது நீவிர்வேண்டியவாறு செய்வோமென்றபடி. ஆசனத்தின் கால் களிலே ஆண்சிங்கத்தின் றலைவடிவாக அவ்வாசனத்தைத் தாங்கு

வதுபோல வியற்றி யிருத்தல்பற்றி மடங்க லேறூற்றும் என்றார். மாமணி மாணிக்கம் எனினுமாம். பொருக்கென விரைவுக் குறிப்பு. (191)

எழுந்து முன்னுறு மஞ்சையஞ் சேவன்மே லேறிச்
செழுந்த விக்கம லத்தய னுதியாந் தேவர்
விழுந்து முன்பணிந் தேத்தியே விரைமலர் மாரி
பொழிந்து பாங்கராய் வந்திட வீதிவாய்ப் போந்தான்.

இ - ள். எழுந்துமுன்உறுசேவல் மஞ்ஞைமேல்ஏறி - (அங்ஙனம்) எழுந்து திருமுன்னிலையினிற்கின்ற ஆண்மயி லின் மேலேறி, செழும்தனிக் கமலத்து அயன் ஆதி ஆம் தேவர் முன் விழுந்து பணிந்து ஏத்தியே விரை மலர் மாரி பொழிந்து பாங்கர் ஆய் வந்திட வீதி வாய்ப் போந்தான் - வளவிய ஒப்பில்லாத தாமரைப் பூவிலிருக்கின்ற பிரம தேவர் முதலாகிய தேவர்கள் முன்னர் (நிலத்தில்) விழுந்து வணங்கித் துதித்து நறுமணத்தையுடைய மலர் மழையைப் பொழிந்து பக்கத்தினராகிவர வீதியினிடத்துச் சென்றரு ளினார் (அச்சுப்பிரமணியப்பெருமான்). எ - று.

முன்னுறும் என்றதற்கு திருவுள்ளக்குறிப்பை யுணர்ந்து முன்னேவருகின்ற என்றுரைப்பினு மமையும். ஏறிப்போந்தான் என இயையும். ஏ அசை. (192)

கொற்ற வெண்குடை யெடுத்தனர் குளிர்பனிக் கவரிக்
கற்றை வீசின ராலவட் டங்கொள்கா லசைத்தா
ரொற்றை வாட்படை யேந்தின ருடுபதிக் கடவுண்
மற்றை யாதவன் மருத்துவன் சலபதி மறலி.

இ - ள். உடுபதிக் கடவுள் மற்றை ஆதவன் மருத்து வன் சலபதி மறலி - சந்திரனும் மற்றைச் சூரியனும் வாயு வும் வருணனும் இயமனும் - வெள் கொற்றக்குடை எடுத்த

னர் குளிர் பனிக்கற்றைக்கவரி வீசினர் ஆலவட்டங்கொள் கால் அசைத்தார் ஒற்றை வாள் படை ஏந்தினர் - ஆலவட்டந் தன்னுட்கொண்ட காற்றை அசைத்தார் குளிர்மையுடைய திரளாகிய சாமரத்தை வீசினர் சிற்றாலவட்டம் பேராலவட்டங்களாற் காற்றையசைத்தனர் ஒப்பற்றவாட் படையையேந்தினர். எ - று.

சந்திரன் முதலிய ஐவரும் முறையே வெண்கொற்றக்குடையெடுத்தலாதிய தொழில்களை இயற்றினாரென்க. (ஆலவட்டங்கள் என்றதனானே சிற்றாலவட்டம் பேராலவட்டமென்னும் இரண்டுமென்பது பெற்றாம்) சந்திரன் முதலிய ஐவரும் வெண்கொற்றக் குடையெடுத்தலாதிய தொழில்களைத் தனித்தனி முறையே இயற்றும் வழி அவர்கள் ஒவ்வொருவரும் இயற்றுந் தொழில்கள் இடையீடுபடாமல் அவ்வைவருமொத்து நிற்கும் வழிகளினின்று அவற்றை இயற்றுதல்பற்றி ஒவ்வொருவர் செய்யுந்தொழிலை ஏனையருஞ் செய்வதாக்கிப் பன்மைவினைகொடுத்து முடித்தாரென்க. ஆலவட்டங்களாற் காலசைத்தது சந்திரனுஞ் சூரியனும் என்னும் இருவராகவே அவர்கள் வினையை ஒரு முடியாக்கும் வழிப் பன்மைவினைகொடுத்து முடிக்கவேண்டியபடியே ஆலவட்டங்கள்காலசைத்தார் என்று முடித்திருத்தலின் அம்முடிபுக்கு மேற்கூறிய கொள்கை இயைவதெங்ஙனமெனின் அதனையும் அவ்விருவர் வினைபற்றி வந்தபன்மை வினையெனக்கொள்ளாது ஏனையருமொத்து நிற்கும் வழிகளினின்று இயற்றுதல்பற்றிவந்த அவ்வைவருடைய வினையெனக் கொள்ளினியையுமென்க. குளிர்பனிஒருபொருட்பன்மொழி. முன்னர்ச்சந்திரனைக்கூறிப் பின்னர் ஆதவனைக் கூறும்வழி மற்றையாதவனென்றார், அவ்விருவருஞ் சுடர்களென்னு மோரினமாதலின். (193)

ஆழி மாலய னுவணமு மன்னமு மழியா
வூழி நாயக னூர்தியி னொலிகொலென் றுட்கக்
கேழி லாமலர்க் கிஞ்சுகச் சூட்டொடுங் கிளர்ந்து
கோழி நீள்கொடி யார்த்ததேவ் வண்டமுங் குலுங்க.

இ - ள். ஆழி மால் அயன் உவணமும் அன்னமும் அழியா ஊழிநாயகன் ஊர்தியின் ஒலிகொல் என்று உட்க - சக்கரப்படையையுடைய விஷ்ணுமூர்த்தியினதும் பிரமதேவரதும் வாகனங்களாகிய கருடனும் அன்னமும் அழியாத ஊழிநாயகராகிய சிவபெருமானுடைய இடபவாகனத்தினது சத்தமென்று அஞ்ச, கேழ் இலா கிஞ்சுக மலர்ச் சூட்டொடும் கிளர்ந்து நீள் கொடிக் கோழி எவ்வண்டமும் குலுங்க ஆர்த்தது - உவமையில்லாத முருக்கம்பூவை நிகர்த்த சூட்டோடுமுயர்ந்து நீண்டகொடியாகிய கோழியானது எவ்வகைப்பட்ட அண்டங்களுங் குலுங்க ஆரவாரித்தது. எ - று.

அழியா ஊழிநாயகனென்றதனனே சிவபெருமான் தத்தமக்குரிய வயதுமுடிந்த காலையிலழிவடையும் பிரம விஷ்ணுக்கள் போலாது நித்தியரானவரென்றும், ஊழிகாலங்களிலும் தந்தொழிற்றலைமை குறைவுபடாதிருப்பவரென்றும் தொனித்தலுணர்க. அழியாத இலாத எனற்பாலன இறுதிகுறைந்து நின்றன. கொல் அசை. ஒலிகொலென்று என்றதற்கு ஒலியோவென்று என்றுரைப்பினுமமையும். (194)

வேத ரார்த்தனர் வேதமு மார்த்தன விண்ணோர்
மாத ரார்த்தனர் மாதவ ரார்த்தனர் வயவெம்
பூத ரார்த்தனர் பூதமைந் தார்த்தன புடவி
நாத ரார்த்தனர் நாதமிக் கார்த்தன நகமே.

இ - ள். வேதர் ஆர்த்தனர் - பிரமதேவரும் ஆரவாரித்தார், வேதமும் ஆர்த்தன - வேதங்களும் ஆரவாரித்தன, விண்ணோர் மாதர் ஆர்த்தனர் - தேவஸ்திரீகளும் ஆரவாரித்தார்கள், மாதவர் ஆர்த்தனர் - முனிவர்களும் ஆரவாரித்தார்கள், வய வெம் பூதர் ஆர்த்தனர் - வெற்றியையுடைய வெய்ய பூதர்களுமாரவாரித்தார்கள், ஐந்துபூதம் ஆர்த்தன-

பஞ்சபூதங்களும் ஆரவாரித்தன, புடவி நாரதர் ஆர்த்தனர்-பூமிக்கு அரசர்களாயினவர்களும் ஆரவாரித்தார்கள், நகமே நாதம் மிக்கு ஆர்த்தன - (இவ்வொலிகளாலே அத்திருப்பரங்குன்றமாதிய) மலைகள் ஒலிமிகுந்து ஆரவாரித்தன. எ - று.

வேதர் உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி. வேதமும் என்றதிலும்மை முற்றும்மை. ஏ அசை. (195)

திண்டி பேரிகை தண்ணுமை சல்லரி திமிலை
பண்டி யிற்பெயர் குடமுழாக் காகளம் படகந்
தொண்ட கந்துடி துந்துபி வலம்புரித் தொகுதி
யண்டம் விண்டிட வியம்பினர் பூதரி லநேகர்.

இ - ள். திண்டி - தம்பட்டங்களையும், பேரிகை - பேரிகைகளையும், தண்ணுமை - ஒருகட்பறைகளையும், சல்லரி - சல்லரிகளையும், திமிலை - பம்பை மேளங்களையும், பண்டியில் பெயர் குடமுழா - பண்டியிற்செல்லுகின்ற குடமுழாக்களையும், காகளம் - எக்காளங்களையும், படகம் - இரணபேரிகைகளையும், தொண்டகம் - குறிஞ்சிப்பறைகளையும், துடி - பாலைப்பறைகளையும், துந்துபி - துந்துபிகளையும், வலம்புரித் தொகுதி - சங்குக்கூட்டத்தையும், பூதரில் அநேகர் அண்டம் விண்டிட இயம்பினர் - பூதர்களிலநேகர் அண்டமும் வெடிக்க முழங்கினார்கள். எ - று.

தாங்கக்கூடாத பெரும்பறையாதலின் பண்டியிலேற்றி யிருத்தல்பற்றிப் பண்டியிற்பெயர் குடமுழாவென்றார். (196)

அஞ்சி லோதியின் மேனகை யுருப்பசி யரம்பை
கிஞ்சு கச்செவ்வாய்த் திலோத்தமை முதலினோர் செழுமி
மஞ்ச மீதினு மானத்து நின்றுவாள் விழிக
ணஞ்சு மிழ்ந்திட வழுதெனப் பாடியே நடித்தார்.

இ - ள். அஞ்சில் ஓதியின் மேனகை உருப்பசி அரம்பை கிஞ்சுகச் செவ்வாய்த் திலோத்தமை முதலினோர் கெழுமி - அழகிய பொன்வட்டத் தகட்டணியை யணிந்த கூந்தலினையுடைய மேனகையும் உருப்பசியும் அரம்பையும் முருக்கம்பூப்போலுஞ் செம்மையாகிய வாயினையுடைய திலோத்தமையும் முதலான தேவவேசியர்கள் சேர்ந்து, மஞ்சம் மீதினும் மானத்தும் நின்று - மஞ்சங்களின்மேலும் விமானங்களின்மேலும் நின்று, வாள் விழிகள் நஞ்சு உமிழ்ந்திட அமுது எனப் பாடியே நடித்தார் - ஒளியையுடைய கண்கள் நஞ்சத்தை உமிழ் அமுதத்தைப்போலப் பாடிக் கூத்தாடினார்கள். எ - று.

வீதியில் வரும்போது மஞ்சத்தின்மீதுநின்று நடித்தலெங்ஙன மெனின் வீதியினிருபக்கத்தும் மஞ்சங்களை நிரைத்துவைக்க அவற்றின்மீதுநின்று நடித்தலென்க. அவர்களுடைய நோக்கத்தைக்கண்ட ஆடவர் யாவராயினும் மையல் தலைக்கேறப்பெருது நிற்குந் திறமுடையரிலரென்பார் வாள்விழிக ணஞ்சுமிழ்ந்திட என்றார். ஏ அசை. (197)

யாணர் வண்டினஞ் சுரும்புட னலமரும் யாழும்
வீணை யுங்கரம் பற்றியே விஞ்சையர் முதலோர்
சேண ரம்பையர் களிநடத் தோடுசீர் தூக்கும்
பாணி யும்மிசை வுற்றிட விசைத்தனர் பாடல்.

இ - ள். விஞ்சையர் முதலோர்-விஞ்சையர் முதலானவர்கள் - யாணர் வண்டு இனம் சுரும்பு உடன் அலமரும் யாழும் வீணையும் கரம் பற்றியே-அழகியபெண் வண்டினங்கள் ஆண்வண்டுகளோடு சுழலுகின்ற யாழ்களையும் வீணைகளையுங் கரங்களிற் பிடித்து, சேண் அரம்பையர் களி நடத்தோடு சீர் தூக்கும்பாணியும் இசைவு உற்றிட-வானுலகத்தி

லுள்ள தேவஸ்திரீகளது களிப்பினைத்தருகின்ற நடனத்தோடு ஒத்துப்பாடுகின்ற பாடலுக்குத் (தங்கள்பாடல்) இசைய, பாடல் இசைத்தனர்-இசைப்பாட்டைப் பாடினார்கள். எ - று.

பின்னர்ச் சுரும்பு என்றமையின் வண்டு பெண்வண்டு என்பது பெற்றாம். இனத்தைச் சுரும்போடுங் கூட்டியுரைத்துக் கொள்க. அவ்வண்டினங்கள் அவ்வியாழ்வீணைகளினிசையைத் தம்மினத்தினிசையென்று கருதிவந்து சுழலுமென்பார் யாணர் வண்டினஞ் சுரும்புடனலமரும் என்றார். யாழ் வீணையினோர் பேதம். ஏ அசை. சீர்தூக்கல், ஈண்டு ஒத்துப்பாடுதல். அரம்பையர்கள் நடனத்துக்கிசைய வாயார்பாடுகின்றபாடல்கள் தங்கள் பாடலுக்கிசைய விஞ்சையராதியர்கள் யாழ்வீணைகளாற்பாடினரென்க. பாணியும் என்றதிலும்மை சிறப்பு. பாணியும் என்றதற்குப் பாணிக்குமென்று குவ்வுருபுவிரித்துப்பொருள் கூறினுமமையும். (198)

பொருவில் வீரரும் பூதரும் புரந்தரன் முதலாஞ்
சுரரு மாதவர் யாவரும் பிறருமாய்த் துன்னி
யொருவர் மெய்யினை யொருவர்மெய் நெருக்கவுற் றிடலாற்
றெருவு முற்றமு மிடம்பெரு வாயின சிறிதும்.

இ - ள். பொருவு இல் வீரரும் பூதரும் புரந்தரன் முதல் ஆம் சுரரும் மாதவர்யாவரும் பிறரும் ஆய்த் துன்னி - ஒப்பில்லாத (இலக்கத்தொன்பது) வீரர்களும் பூதர்களும் இந்திரன் முதலாகிய தேவர்களும் முனிவர்கள் யாவரும் பிறருமாகி நெருங்கி, ஒருவர் மெய்யினை ஒருவர் மெய் நெருக்க உற்றிடலால் - ஒருவருடைய தேகத்தை ஒருவருடைய தேகம் நெருக்கச் செறிதலாலே, தெருவும் முற்றமும் சிறிதும் இடம் பெறு ஆயின - வீதியும் முன்றிலுஞ் சிறிதும் (வெளி) இடம்பெறுவாயின். எ - று.

பூதரும் என்றதில் பூதப்படைத் தலைவருமடங்கும். பிறர் சுரரொழிந்த பதினேழு கணத்தவர்களும் ஸ்திரீகள் யாவரும் என்க. (199)

வேறு

இன்ன தன்மைக ளியல வெல்லைதீர்
பொன்னின் வீதிவாய்ப் போந்து புங்கவர்
மன்ன னாற்றிய மணத்தின் சாலையின்
முன்னர் வந்தனன் முடிவின் முன்னையோன்.

இ-ள். இன்ன தன்மைகள் இயல - இத்தன்மையான சிறப்புக்கள்பொருந்த, முடிவு இல் முன்னையோன் - இறுதியில்லாதமுதல்வராகிய சுப்பிரமணியப்பெருமான், எல்லை தீர் பொன்னின் வீதி வாய்ப் போந்து - அளவு நீங்கிய அழகையுடைய வீதியிற்சென்று, புங்கவர் மன்னன் ஆற்றிய மணத்தின் சாலையின் முன்னர் வந்தனன்-தேவர்கட் கரசனாகிய இந்திரனால் இயற்றுவிக்கப்பட்ட திருமணச் சாலையின் முன்னர்வந்தருளினார். எ - று.

இன்ன இசுரச்சுட்டின்மரூஉ. தன்மைகள் ஆகுபெயர். ஆற்று வித்த என்றதில் பிறவினைப்பொருட்கும் விவ்விகுதி கெட்டு ஆற்றிய என்று நின்றது. ஏவுதலும் இயற்றுதலுக்குமுள்ள சம்பந்தம்பற்றி ஏவுதலை இயற்றுதலாகக் கூறினுரெனினுமாம். ()

ஆவ தாகிய வண்ண றன்மிசைத்
தாவில் கும்பமேற் றருப்பை தோய்த்தநீர்
தூவி யாசிகள் சொற்று மாதவ
ரேவருந் திரண் டெதிர்கொண் டேத்தினார்.

இ-ள். ஆவது ஆகிய அண்ணறன் மிசை - அங்ஙனம் வந்தருளிய சுப்பிரமணியப்பெருமான்மீது, மாதவர் எவரும் திரண்டு தாவு இல் கும்பம் மேல் தருப்பை தோய்த்த நீர்

தூவி - முனிவர்கள் யாவருங் கூடிக்கெடுதலில்லாத கும்பங்களின்மேலுள்ள தருப்பைகளிற் ஜேய்த்த நீரைத் தூவி, ஆசிகள் சொற்று எதிர்கொண்டு ஏத்தினர் - ஆசீர்வாதங்களைக்கூறி எதிர்கொண்டு துதித்தார்கள். எ - று.

ஆவது அது என்பதன்மரூஉ; அது ஈண்டு அங்ஙனம் வருதற்செயலை உணர்த்தியது. மங்கலத்துக்குரிய கும்பம் என்பார், தாவில் கும்பம் என்றார். (201)

செங்கை தன்னிடைத் தேவர் மாதவர்
நங்கை மாரெலா நாலி ரண்டெனு
மங்க லங்களு மரபி னேந்தியே
யெங்க ணாயகற் கெதிர்ந்து போற்றினர்.

இ - ள். தேவர் மாதவர் நங்கைமார் எலாம் - தேவர் முனிவர்களுடைய மனைவியர்களெல்லாம், நாலிரண்டு எனும் மங்கலங்களும் செம் கை தன்னிடை மரபின் ஏந்தியே - அட்டமங்கலப் பொருள்களையும் செம்மையாகிய கரங்களில் முறைமையாக ஏந்தி, எங்கள் நாயகற்கு எதிர்ந்து போற்றினர் - எங்களிறைவராகிய சுப்பிரமணியப் பெருமானுக்கு எதிர்வந்து வாழ்த்தினர்கள். எ - று.

அட்டமங்கலப் பொருள்: நிறைகுடம் விளக்கு கண்ணாடி மணி சாமரம் கொடி தோட்டி முரசு என்னுமிவை. மங்கலம் ஆகுபெயர். உம்மை முற்று. ஏ அசை. (202)

பஞ்சி தூயநெய் பளித நாவியாய்
விஞ்சு தீஞ்சுடர் மிளிர்பொற் றட்டைக
ளஞ்சி லோதிய ரங்கை யேந்தியே
செஞ்செவ் வேண்முனஞ் சிறப்பித் தாரரோ.

இ - ள். அம் சில் ஓதியர் - அழகிய கொன்வட்டத் தகட்டணியை யணிந்த கூந்தலையுடையமாதர்கள், பஞ்சி

தூய நெய் பளிதம் நாவி ஆய் விஞ்சு தீஞ்சுடர் மிளிர் பொன் தட்டைகள் அம் கை ஏந்தியே - செம்பஞ்சும் தூய்மையுடைய நெய்யுங் கருப்பூரமும் புனுகுஞ் (சேர்ந்தது) ஆகி மிகுந்த எரியும் விளக்குகளையுடைய விளங்குகின்ற பொன்னாலாகிய தட்டங்களை அழகாகிய கைகளிலேந்தி, செம் செவ்வேள் முனம் சிறப்பித்தாரரோ - செம்மையாகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருமுன்னிலையிற் சிறப்பித்தார்கள். எ - று.

தீயுஞ்சுடர் தீஞ்சுடரென இடையுயிர் மெய்கெட்டது. தீயல், ஈண்டு எரிதல். ஏயும் அரோவும் அசைகள். செவ்வேள் ஈண்டு வேள் என்னும் பெயர்மாத்திரையாக நின்றது. சிறப்பித்தல், சிறப்பாகச்சுற்றுதல். (203)

காலை யங்கதிற் காலை யங்கதிர்
மேலை விண்முகில் விட்ட கன்றெனக்
கோலஞ் செய்யநங் குமர நாயக
னீல மஞ்ஞைமே னின்று நீங்கினான்.

இ - ள். அங்கது காலையில் - அச்சமயத்தில், காலையம் கதிர் மேலை விண் முகில் விட்டு அகன்றென - உதயகாலத்துச் சூரியன் மேலாகிய ஆகாயத்திலுள்ள மேகத்தைவிட்டு நீங்கினாற்போல, கோலம் செய்ய நம் குமர நாயகன் நீல மஞ்ஞை மேல் நின்று நீங்கினான் - வடிவு செம்மையையுடைய எங்கள் சுப்பிரமணியப்பெருமான் நீலநிறத்தையுடைய மயில்வாகனத்தின்மேலிருந்து நீங்கியருளினார். எ - று.

அங்கது ஒருசொல். இல்லுருபு பிரித்துக் கூட்டப்பட்டது. காலையங்கதிர் என்றதில் அம்மும் மேலை என்றதில் ஐயும் சாரியைகள். அம் அழகெனினுமாம். சூரியன் இப்பூமியிலுள்ளார்க்கு

மேகத்தைவிட்டு நீங்குதல்போலத் தோன்றுதல்பற்றி கதிர்மேலை விண்முகில் விட்டகன்றன என்றார். அகன்றவென எனற்பாலது அகன்றென ஆல்கெட்டு நின்றது. செய்ய கோலம் என மாற்றிப் பொருள்கூறினு மமையும். குமரநாயகன், குமரனாகிய நாயகன். நிற்றல் ஈண்டு இருத்தல். (204)

ஏய மஞ்ஞைநின் றிழிந்து வேள்விசெய்
கோயின் முன்கடைக் குமரன் சேர்தலு
மாய போழ்தினி லரம்பை மாரொடுந்
தூய தோர்சசி தொழுதங் கெய்தினாள்

இ - ள். குமரன் ஏய மஞ்ஞை நின்று இழிந்து - சுப்பிரமணியப்பெருமான் ஊர்ந்துவந்த மயில்வாகனத்தி னின்றிறங்கி, வேள்வி செய் கோயில் முன் கடை சேர்தலும் - (திருமண) வேள்விசெய்யு மண்டபத்தின் றலைவாயிலிற்சார்ந்தருளவும், ஆய போழ்தினில் அரம்பைமாரொடும் தூயதோர் சசி தொழுது அங்கு எய்தினாள் - அச்சமயத்தில் தேவஸ்திரீகளோடும் தூய்மையுடையதாகிய குணத்தினையுடைய இந்திராணியானவள் தொழுது கொண்டு அங்ஙனஞ் சார்ந்தாள். எ - று.

சேர்தலும் உம்மீற்று வினையெச்சம். ஆய அகரச்சுட்டின் மரூஉ. ஆயபோழ்தினில் என்றதற்கு அங்ஙனமாகிய பொழுதில் என்றுரைப்பினுமமையும். நற்குணத்தைத் தூயது என்றார். (205)

எதிர்பு குந்திடு மிந்தி ராணிதன்
புதிய தோர்பசுப் பொழிந்த தீயபா
னிதியின் கொள்கல நிரப்பி வந்துவேள்
பதயு கங்களிற் பரிவோ டாட்டினாள்.

இ - ள். தன் பசுப் பொழிந்த புதியதோர் தீய பால் நிதியின் கொள்கலம் நிரப்பி வந்து - தனது தெய்வப்பசுப் பொழிந்த புதியதாகிய இனிய பாலைப் பொன்னாலாகிய

பாத்திரத்தில் நிறைத்து வந்து, எதிர் புகுந்திடும் இந்திராணி - சுப்பிரமணியப்பெருமானுக்கு எதிரிலெய்திய அவ்விந்திராணியானவள், பரிவொடு வேள் பதயுகங்களில் ஆட்டினாள் - அன்போடு அக்கடவுளுடைய திருவடிகளிரண்டிலும் அபிடேகித்தாள். எ - று.

ஓர் அசை. ஒடு அடைமொழிப்பொருளினின்றது. (206)

ஆட்டித் தீம்பய னலருங் கண்ணியுஞ்
சூட்டி மெல்லடி தொழுது பல்சுடர்
கூட்டி வைத்ததோர் கொள்க லந்தனைக்
காட்டி மும்முறை கடவுட் சுற்றினாள்.

இ - ள். தீம் பயன் ஆட்டி - இனிமையாகிய பாலினால் (அங்ஙனம்) ஆட்டி, அலரும் கண்ணியும் சூட்டி - மலர்களையும் மாலைகளையுஞ்சூட்டி, மெல் அடி தொழுது - அம் மென்மையாகிய திருவடிகளை வணங்கி, பல் சுடர் கூட்டி வைத்ததோர் கொள்கலந்தனைக் காட்டி மும்முறை கடவுள் சுற்றினாள் - பல விளக்குகளைச் சேர்த்துவைக்கப் பட்டதொரு தட்டத்தை (நீட்டிக்) காட்டி மூன்றுமுறை அச் சுப்பிரமணியப்பெருமானைச் சுற்றினாள் (அவ்விந்திராணி.) எ - று.

அலரைச்சூட்டுதல் திருவடிகளில் மலர்கள்வைத்தல். பல் சுடர்கூட்டி வைத்ததோர் கொள்கலம், அடுக்குத்தீபமெனினுமாம். கடவுட்சுற்றுதல் பிரதட்சணஞ் செய்தலன்று நின்ற நிலையினின்று தீபங்காட்டு முறைப்படி சுற்றுதல். (207)

இனைய தன்மைக ளியற்றி யிந்திரன்
மனைவி வெள்கியே மடமின் னாரொடுந்
தனது மந்திரந் தன்னிற் போதலு
மநகன் கண்டதற் கருள்செய் தேகினான்.

இ - ள். இனைய தன்மைகள் இயற்றி - இத்தன்மையான பூசனைக் கிரியைகளைச்செய்து, இந்திரன் மனைவி வெள்கியே மட மின்னாரொடும் தனது மந்திரந் தன்னில் போதலும் - அவ்விந்திராணியானவள் நாணமுற்று மடமையுடைய தேவஸ்ரீகளோடுந் தன்னுடைய கோயிலிற் செல்லுதலும், அநகன் கண்டு அதற்கு அருள் செய்து ஏகினான்-அச்சுப்பிரமணிப்பெருமான் திருநோக்கஞ்செய்து (அவள் செய்த) அப்பூசனைக்குத் திருவருள்செய்து (உட்) சென்றருளினார். எ - று.

இனைய இகரச்சுட்டின் மரூஉ. ஏ அசை. இந்திரன்மனைவி மடமின்னாரொடுங் கூடிவந்து பூசனைபுரிந்துசென்றது தனியே வந்து அங்ஙனஞ்செய்தற்கு நாணமுற்றன்று. அப்பூசனைக்கு வேண்டிய உபகரணங்களை உடன்கொண்டு வருதற்கென்க. போதலும் உம்மீற்று வினையெச்சம். (208)

கோல மாமணி குயிற்றிப் பொன்னரி
மாலை நாற்றியே வனப்புச் செய்திடுஞ்
சாலை புக்கனன் றனக்கு வேறொரு
மூல மில்லதோர் முதலின் வந்துளான்.

இ - ள். தனக்கு வேறு ஒரு மூலம் இல்லதோர் முதலில் வந்துளான் - தமக்குத் (தம்மின்) வேறொரு மூலமில்லதாகிய முதற்பொருளாகிய பரமசிவனிடத்துத் தோன்றிய அச்சுப்பிரமணியப்பெருமான், கோல மா மணி குயிற்றிப் பொன் அரி மாலை நாற்றியே வனப்புச் செய்திடும் சாலை புக்கனன் - அழகாகிய பெருமையையுடைய அரதனங்களை அழுத்திப் பொன்னரிய மாலைகளைத் தூக்கி அழகுசெய்யப்பட்ட திருமணச்சாலையுட் சார்ந்தருளினார். எ - று.

அரிய என்பது அரி என இறுதிகுறைந்துநின்றது. ஏயும் ஒரும் அசைகள். தாமே அநாதியாகியிருத்தலோடு வேறுவேறாகிய மூர்த்தங்கள் கொள்ளுமிடத்தும் தமதருளினாலே கொள்ளு முதல்வரென்பார் தமக்கு வேறொரு மூலமில்லதோர்முதல் என்றார். (209)

வேறு

பக்க மாயரி பங்கய னாதியோர்
தொக்கு வந்திடத் தொன்மணி மண்டபம்
புக்கு நம்பி புரந்தர னுய்த்திடு
மிக்க பீடத்தில் வீற்றிருந் தானரோ.

இ - ள். நம்பி - சுப்பிரமணியப்பெருமான், அரி பங்கயன் ஆதியோர் பக்கம் ஆய் தொக்கு வந்திட - விஷ்ணு மூர்த்தியும் பிரமதேவரும் முதலானவர்கள் பக்கத்திற் (சூழ்தல்) ஆகித் திரண்டுவர, தொல் மணி மண்டபம் புக்கு - பெருமையாகிய அரதன மண்டபத்துட்புக்கு, புரந்தரன் உய்த்திடும் மிக்க பீடத்தில் வீற்றிருந்தானரோ - இந்திரனாலிடப்பட்ட (அழகு) மிகுந்த ஆசனத்தின்மீது வீற்றிருந்தருளினார். எ - று.

ஆதியோர் தேவர்களும் முனிவர்களும் இலக்கத்தொன்பது வீரரும் பூதரும். தொல், ஈண்டுப்பெருமை. சுப்பிரமணியப் பெருமான் அத்திருமணச்சாலையினுள் வந்தருளியபோது கூடி வந்த இந்திரன் முற்சென்று அம்மண்டபத்திலே அக்கடவுளுக்காக இயற்றப்பட்டிருந்த ஆசனத்தை எடுத்து நிலையில்வைத்து இருந்தருளும்படி வேண்டிக்கொண்டானென்பார் புரந்தரனுய்த்திடுபீடமென்றார். (210)

வீற்றி ருந்தபின் வேதனு மாயனுந்
தேற்ற மிக்க முனிவருந் தேவரு
மாற்றல் வீரரு மண்ணற னேவலா
லேற்ற வேற்ற விடந்தொறும் வைகினர்.

இ - ள். வீற்றிருந்த பின் - (சுப்பிரமணியப்பெருமான் அங்ஙனம்) வீற்றிருந்தருளியபின்னர், வேதனும் மாயனும் தேற்றம் மிக்க முனிவரும் தேவரும் ஆற்றல் வீரரும் - பிரமதேவரும் விஷ்ணுமூர்த்தியும் தெளிதல் மிக்க முனிவர்களுந் தேவர்களும் வலிமையையுடைய இலக்கத்தொன்பது வீரர்களும், அண்ணறன் ஏவலால் ஏற்ற ஏற்ற இடந்தொறும் வைகினர் - அப்பெருமானுடைய ஏவலினாலே (தத்தமக்கு) ஏற்ற ஏற்ற இடந்தோறு மிருந்தார்கள். எ - று.

இருந்தபின் என்றதில் பெயரெச்சங் காலப்பெயரெஞ்சநின்றது. பின் ஈண்டு பிற்காலத்தை புணர்த்தியது. பிருதிவியாதி சிவாந்தமாகிய முப்பத்தாறு தத்துவஞானத்தெளிவு மிக்கவராதலின் தேற்றமிக்க முனிவரென்றார். ஏற்ற ஏற்ற இடந்தொறும் வைகுதல் சுப்பிரமணியப்பெருமானுக்கு அண்மையிலிருக்கத்தக்கவர் அண்மையிலுஞ் சேய்மையிலிருக்கத்தக்கவர் சேய்மையிலுமிருத்தலென்க. (211)

அந்த வெல்லை யவனியில் வாழ்முசு
குந்த னேமுதற் கொற்றவர் யாவரும்
வந்து வந்து வணங்கி வழுத்திடக்
கந்த னெந்தை கருணைசெய் தானரோ.

இ - ள். அந்த எல்லை - அச்சமயத்தில், அவனியில் வாழ் முசுகுந்தனே முதல் கொற்றவர் யாவரும் - மண்ணுலகத்தில் வாழ்கின்ற முசுகுந்தராசன் முதலாகிய அரசர் யாவரும், வந்து வந்து வணங்கி வழுத்திட எந்தை கந்தன் கருணைசெய்தனரோ - வந்துவந்து (தந்திருவடிகளை) வணங்கிவாழ்த்த எந்தையாகிய சுப்பிரமணியப்பெருமான் கிருபை செய்தருளினர். எ - று.

அந்த அகரச்சுட்டின்மரூஉ. எயும் அரோவும் அசைகள். வந்துவந்து என்றது அடுக்குமொழியன்று தனித்தனி முறையே வந்து என்னும் பொருளினின்றவென்க. எந்தை எமது தந்தை என்றதன்மரூஉ. (212)

ஆன காலை யரியய னுடொணு
ஞான நாயக னங்கையுந் தானுமோர்
மான மேல்கொண்டு மாயிருஞ் சாரதர்
சேனை சூழ்தரச் சேணிடைத் தோன்றினன்.

இ - ள். ஆன காலை - அச்சமயத்தில், அரி அயன் காடு ஒணு ஞான நாயகன் - விஷ்ணுமூர்த்தியாலும் பிரமதேவராலுந் தேடுதல்கூடாத ஞானநாயகராகிய சிவபெருமான், நங்கையும் தானும் ஓர் மானம் மேல் கொண்டு மா இரும் சாரதர் சேனை சூழ்தரச் சேணிடைத் தோன்றினன்- உமாதேவியாருந் தாமும் ஒரு விமானத்தின்மீது இவர்ந்து பெருமையாகிய பூதசேனை சூழ ஆகாயத்திற்றோன்றி யருளினர். எ - று.

ஆன அகரச்சுட்டின் மரூஉ. காடு முதனிலைத்தொழிற் பெயர்; காட என்பது இறுதி அகரந் தொகுத்ததெனினுமாம். ஒண்ணாத என்பதனிறுதி உயிர்மெய்யும் இடை ணகரமெய்யுங் குறைந்து ஒணு என நின்றது. ஞானநாயகன் நங்கையுந்தானுமோர்மான மேல்கொண்டு தோன்றினன் என்பது ஆண்பாலும் பெண்பாலும் விரவிச்சிறப்பினால் ஒரு முடிபேற்றது. மா இரும் ஒரு பொருட்பன்மொழி. (213)

அம்மை யுந்தன தத்தனும் வந்தது
செம்மல் கண்டு சிறப்புடை யோகையாய்
விம்மி தங்கொண்டு மேதகு மன்பினை
விம்மெ னக்கடி தேயெழுந் தானரோ.

இ - ள். தனது அம்மையும் அத்தனும் வந்தது செம்மல் கண்டு - தம்முடைய அன்னையாகிய உமாதேவியாரும் தந்தையாகிய சிவபெருமானும் வந்தருளியதைச் சுப்பிரமணியப்பெருமான்கண்டு, சிறப்பு உடை ஓகை ஆய் விம்மிதம் கொண்டு - மிகுதியினையுடைய மகிழ்ச்சியாகி அற்புதமடைந்து, மே தகும் அன்பினால் இம்மெனக் கடிதே எழுந்தானரோ - மேன்மையாகிய அன்பினாலே விரைவிலெழுந்தார். எ - று.

வந்தது இறந்தகால இடைநிலைபெற்ற தொழிற்பெயர். உடைய என்பது இறுதி குறைந்துநின்றது. இம்மென விரைவுக் குறிப்பு. இம்மெனக்கடிது என்றது மிக்க விரைவில் என்னும் பொருட்டது. எயும் அரோவும் அசைகள். (214)

கண்ணனாதிக் கடவுளர் யாவரு
மெண்ணிலாமுனி வோர்களு மெம்பிரா
னண்ணினானிங்கு நாமுய்ந் தனமெனாத்
துண்ணெனாவெழுந் தார்கை தொழுதுளார்.

இ - ள். கண்ணன் ஆதிக் கடவுளர் யாவரும் - விஷ்ணுமூர்த்தி முதலாகிய தேவர்கள் யாவரும், எண் இலா முனிவோர்களும் - அளவில்லாத முனிவர்களும், இங்கு எம்பிரான் கண்ணினான் - இங்ஙனம் எமதிறைவராகிய சிவபெருமான் வந்தருளினார், (அதனால்) நாம் உய்ந்தனம் எனா - யாங்களுய்ந்தோமென்று சொல்லி, கை தொழுது உளார் துண்ணெனா எழுந்தார் - கையாற்றொழுதுளராகி விரைவிலெழுந்தார்கள். எ - று.

இலாத என்பது இறுதி குறைந்தது. துண்ணென என்பதனிறுதியகரம் நீண்டது. கைதொழுதல், கைகூப்பி வணங்குதல். தொழுதுளார் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (215)

அனைய காலையி லாதியம் பண்ணவ
னினிது மானத் திழிந்து கணத்துடன்
புனித நீடு பொலன்மணிச் சாலையுள்
வனிதை யாளொடும் வந்துபுக் கானரோ.

இ - ள். அனைய காலையில் ஆதியம் பண்ணவன் மானத்து கணத்துடன் இனிது இழிந்து - அச்சமயத்தில் ஆதிகர்த்தாவாகிய சிவபெருமான் விமானத்தினின்று பூத சேனையோடு இனிதாக இறங்கி, புனிதம் நீடு பொலன் மணிச் சாலையுள் வனிதையாளொடும் வந்து புக்கானரோ - தூய்மைமிகுந்த பொன்னாலு மணியாலுமாகிய திருமணச் சாலையினுள்ளே உமாதேவியாரோடும் வந்து சார்ந்தருளினார். எ - று.

அனைய அகரச்சுட்டின்மரூஉ. அம் அல்வழிச்சாரியை. சிவபெருமான் விமானத்தினின்று உமாதேவியாரோடு இறங்கி மலையில்வரக் கணங்களும் ஆகாயத்தினின்று இறங்கி மலையிலுடன்வந்ததுபற்றிக் கணத்துடனிறங்கி என்றார். ஆதியம் பண்ணவன் வனிதையாளொடும் இனிது மானத்திழிந்து கணத்துடன் புனிதநீடுபொலன்மணிச் சாலையுள்வந்து புக்கான் என இயைத்துப் பொருளுரைப்பினுமமையும். அரோ அசை (216)

வேறு.

அதுகண் டுநடந் தறுமா முகவ
னெதிர்கொண் டுவிரைந் திருவோர் பதமு
முதிரன் போடுதன் முடிசூ டினனாற்
கதிருங் கமலங் களுமே வியபோல்.

இ - ள். மா அறுமுகவன் அது கண்டு நடந்து எதிர் கொண்டு - பெருமையாகிய ஆறு திருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் அதனைக்கண்டு (திருமுன்னிலை

யில்) நடந்து எதிர்கொண்டு, கதிரும் கமலங்களும் மேவிய போல் இருவோர் பதமும் முதிர் அன்பொடு விரைந்து தன் முடி சூடினனால் - சூரியனுஞ் செந்தாமரை மலர்களுஞ் சேர்ந்ததுபோல அவ்வுமா மகேசுவரராகிய இருவருடைய திருவடிகளையும் முதிர்ந்த அன்போடு விரைந்து தம்முடைய திருமுடியிற் சூடினார். எ - று.

பதமும் என்றதிலும்மை முற்றேடு உயர்வுசிறப்பு. ஆல் அசை. கதிர்முடிக்கும் கமலங்கள் திருவடிகளுக்கும் உவமை யென்க. மேவியது என்னுந்தொழிற்பெயரி னிறுதிகெட்டது.

வந்தஞ் சலிசெய் துவணங் கியதோர்
கந்தன் றனையங் கவர்கை கொடெடாத்
தந்தம் முரனு டுதழீஇ முறையே
முந்தன் பொடுயிர்த் தனர்முச் சியையே.

இ - ள். வந்து அஞ்சலி செய்து வணங்கியதோர் கந்தன்றனை - (எதிர்கொண்டு வந்து கைகூப்புதல்செய்து வணங்குதல் (புரிந்த) சுப்பிரமணியப்பெருமானை, அங்கவர் முந்து அன்பொடு கை கொடு எடா - அவ்வுமா மகேசுவரர் முதன்மையுற்ற அன்போடு திருக்கரங்களாலெடுத்து, முறையே தம் தம் உரனூடு தழீஇ முச்சியை உயிர்த்தனர் - முறையே தத்தமார்பூடு (அணைத்துத்) தழுவி உச்சியை மோந்தார்கள். எ - று.

வணங்கியது தொழிற்பெயர். ஒரும் ஏ இரண்டும் அசைகள். அங்கவர் ஒருசொல். (218)

முதுவா னவரும் முனிவோ ரெவரும்
மதுசூ தனனும் மலர்மே லயனுஞ்
சததவேள் வியனுஞ் சகமீன் றவர்தம்
பதமீ மிசைவந் துபணிந் தனரால்.

இ - ள். முது வானவரும் - பெருமையாகிய தேவர்களும், முனிவோர் எவரும் - முனிவர்யாவரும், மதுசூதனனும் - விஷ்ணுமூர்த்தியும், மலர் மேல் அயனும் - தாமரை மலர்மீதிருக்கின்ற பிரமதேவரும், சதவேள்வியனும் - இந்திரனும், சகம் ஈன்றவர்தம் பதம் மீமிசை வந்து பணிந்தனரால் - உலகத்தையீன்றருளிய அவ்வுமாமகேசுரருடைய திருவடிகளின்மேல் வந்து வணங்கினார்கள். எ-று.

முதுமை ஈண்டுப்பெருமை. வானவர், வானுலகத்துள்ளவர். முனிவர், காமாதியை வெறுத்தவர். மதுசூதனன், மதுவென்னு மசுரனைக் கொன்றவன். அயன், பிறப்பில்லாதவன். சதவேள்வியன், நூறியாகத்தைச் செய்தவன். சகம், ஈண்டு உலகத்தையும், உலகத்திலுள்ள உயிர்களையுமுணர்த்தி நின்றது. மீமிசை ஒருபொருட்பன்மொழி. ஆல் அசை (219)

தாழ்வுற் றிடுவோ ருமைசங் கரனைச்
சூழ்வுற் றுவலஞ் செய்துசூழ் வினையு
டாழ்வுற் றிடுபுன் மையகன் றடியேம்
வாழ்வுற் றனமென் றுவழுத் தினரால்.

இ - ள். தாழ்வுற்றிடுவோர் - (அங்ஙனம்) வணங்கியவர்கள் (யாவரும்), உமைசங்கரனைச் சூழ்வுற்று வலஞ்செய்து - அவ்வுமாமகேசுவரரைச் சூழ்ந்து வலப்பிரதட்சிணஞ்செய்து, அடியேம் சூழ்வினை யூடு ஆழ்வுற்றிடு புன்மை அகன்று வாழ்வு உற்றனம் என்று வழுத்தினரால் - அடியேங்கள் சூழ்ந்த வினையினுள்ளே ஆழ்ந்த எளிமைநீங்கிப் (பெரு) வாழ்வையடைந்தேமென்று துதித்தார்கள். எ-று.

அநாதியே பந்தித்த மும்மலத்துளொன்றாதலின் சூழ்வினை என்றார். வினை நல்வினை தீவினையென இரண்டுவகை. அது சஞ்சிதவினை பிராரத்துவவினை ஆகாமியவினையென மூன்று பிரிவாகும். ஆல் அசை. (220)

உன்னற் கரிதா கியுயிர்க் குயிராய்
மன்னுற் றவனை மலைமங் கையுடன்
பொன்னிற் புனையும் புதுமன் றன்மனை
தன்னிற் குமரன் கொடுசார்ந் தனனால்.

இ-ள். குமரன் - சுப்பிரமணியப்பெருமான், உன்னற்கு அரிது ஆகி உயிர்க்கு உயிர் ஆய் மன்னுற்றவனை— (மனத்தாலும்) நினைத்தற்கரிதாகியும் (எல்லா) உயிர்களுக்கும் உயிராகியும் நிலைபெற்றிருப்பவராகிய சிவபெருமானை, மலை மங்கையுடன் பொன்னில் புனையும் புது மன்றல் மனை தன்னில் கொடு சேர்ந்தனனால் - மலைமகளாகிய உமாதேவியாரோடு பொன்னினாற் செய்யப்பட்ட புதுமையாகிய திருமணச்சாலையுட்கொண்டு சேர்ந்தார். எ - று.

அநாதிமல முத்தனாகியும் நிஷ்களனாகியும் முதலிடைகடையில்லாதவனாகியும் அசலனாகியும் அவிகாரியும் அப்பிரமேயனாகியுமிருத்தல்பற்றி உன்னற்கரிதாய் என்றார். சடமாகிய உடலினுள்ளுயிர்நின்று அதனை ஆட்டுவதுபோலத் தாஞ்செறிந்து நிற்றல் இல்லையாயின் அசைவில்லாது சடம்போலக்கிடக்குந் தன்மைத்தாய் உயிரினுட்செறிந்து நின்று ஆட்டுதலால் உயிர்க்குயிராய் என்றார். ஆல் அசை. (221)

வேறு

ஆகியதொர் போழ்துதனி லாணைமுறை தன்னான்
மாகநெறி வந்தொரு மணித்தவிசு நண்ணத்
தோகையுடை மங்கையுட னேற்றமுடை மாதோர்
பாகமுற வாயிடை பராபர விருந்தான்.

இ-ள். ஆகியதொர் போழ்துதனில் ஆணைமுறை தன்னால் ஒரு மணித்தவிசு மாக நெறிவந்து நண்ண -

(அச்செயல்) நிகழ்ந்ததாகியகாலையில் ஆணைமுறையினாலே ஓரிரத்தினாசனம் ஆகாசவழியினால்வந்து (அத்திருமணச் சாலையுட்) சார, ஆயிடை பராபரன் தோகை உடை மஞ்ஞை உறழ் தோற்றம் உடை மாது ஓர் பாகம் உற இருந்தான் - அங்ஙனஞ் சிவபெருமான் தோகையினையுடைய மயிலைநிகர்த்த தோற்றத்தினையுடைய உமாதேவியார் ஒருபாகத்திற்பொருந்த வீற்றிருந்தருளினார். எ - று.

ஓர் அசை. ஆணை, சிவபெருமானதாணை. உடைய என்னு மிரண்டும் உடை என இறுதிகெட்டுநின்றன. ஓர்பாகம், ஈண்டு வாமபாகம். (222)

மங்கையுமை யுஞ்சிவனும் வள்ளறனை நோக்கி
யிங்குவரு கென்றுபி னெடுத்தினிது புல்லித்
தங்கள்வயின் வைத்துநனி தண்ணளி புரிந்தா
ரங்கது தெரிந்துதொழு தம்புய னிசைப்பான்.

இ - ள். உமை மங்கையும் சிவனும் வள்ளறனை நோக்கி இங்கு வருகென்று - உமாதேவியாருஞ் சிவபெருமானும் சுப்பிரமணியப்பெருமானைப் பார்த்து இங்குவருக வென்றழைத்து, பின் எடுத்து இனிது புல்லித் தங்கள் வயின் வைத்து நனி தண் புரிந்தார் - பின்னரும் எடுத்து இனிது தழுவித் தங்கள் ஆசனத்தின்கண் இருத்தி மிகவு மருள்புரிந்தார்கள், அங்கது அம்புயன் தெரிந்து தொழுது இசைப்பான் - அதனைப் பிரமதேவர் கண்டு வணங்கிக் கூறுவார். எ - று.

வருக என்னும் வியங்கோளி னிறுதி அகரங்கெட்டது இறந்தது தழீஇய எச்சவும்மை விகாரத்தாற்றொக்கது. வயின், இடம்; ஈண்டு ஆசனம். அங்கது ஒருசொல். (223)

முன்னமொரு வைகறனின் மூவிரு முகத்தோன்
றன்னையசு ரப்படை தடிந்திட விடுத்தா
யன்னபரி சேயவுண ராயுளரை வீட்டி
நென்னலிமை யோர்சிறையு நீக்கியருள் செய்தான்.

இ - ள். முன்னம் ஒரு வைகறனின் மூவிரு முகத்தோன்றன்னை அசுரப் படை தடிந்திட விடுத்தாய் - (எங்களிறைவரே) முன்னொருநாளில் ஆறுதிருவதனங்களையுடைய இச்சுப்பிரமணியப்பெருமானை அசுரப்படையை அழிக்கும்படி விடுத்தருளினீர், அன்ன பரிசே அவுணர் ஆய் உளரை வீட்டி நென்னல் இமையோர் சிறையு நீக்கி அருள் செய்தான் - அத்தன்மையாகவே (இப்பெருமான்) அசுரராகியுள்ளவரை அழித்து நெருநலிற்றேவரது சிறையையும் நீக்கியருள் புரிந்தார். எ - று.

படையைக்கூறவே படையையுடைய சூரனுதிய அரசரையுமென்பது பெற்றும். அன்ன அகரச்சுட்டின்மரூஉ. ஏ அசை. உம்மை எச்சம். (224)

நன்றியித னைக்கருதி நாங்கள்புரி கைம்மா
றொன்றுமிலை யென்னினு முளத்தெழும் விருப்பால்
வென்றியசு ரேசர்கிளை வீட்டுகும ரேசற்
கின்றுமக வான்மகளை யீந்திட நினைந்தான்.

இ - ள். நன்றி இதனைக் கருதி நாங்கள் புரி கைம்மாறு ஒன்றும் இலை என்னினும் - செய்ந்நன்றியாகிய இச்செயலை எண்ணி யாங்கள் செய்யும் பிரதியுபகாரமொன்றுமில்லையாயினும், வென்றி அசுரேசர் கிளை வீட்டு குமரேசற்கு மகவான் உளத்து எழும் விருப்பால் இன்று மகளை ஈந்திட நினைந்தான் - வெற்றியையுடைய (சூரனுதிய) அசுரத்

தலைவர்களையும் அவர்களுடைய சுற்றத்தையும் அழித்தருளிய இச்சுப்பிரமணியப்பெருமானுக்கு இந்திரனானவன் உள்ளத்தெழுந்த விருப்பினாலே இன்று (தன்) மகளாகிய தெய்வயானையம்மையைக் (கன்னிகாதானமாகக்) கொடுக்க நினைந்தான். எ - று.

முழுதுலகுடையவர்க்கு அவ்வுலகிலுள்ளார் கொடுப்ப தொன்றில்லையாதலின் நாங்கள்புரி கைம்மாறொன்றுமிலை என்றார். விஷ்ணுமூர்த்திமுதலிய பலரோடும் போர்புரிந்து வெற்றி கொண்டவராதலின் வென்றியசுரேசர் என்றார். (225)

அற்றமி லிரக்கமுட னாருயிர்கண் முற்று
நிற்றலு மளித்தருளு நேரிழையு நீயு
மற்றிது பகற்பொழுதில் வந்தனிர்க ளென்றாற்
சிற்றடிய ரேங்கள்செயல் சீருளதை யென்றான்.

இ - ள். அற்றம் இல் இரக்கமுடன் ஆர் உயிர்கள் முற்றும் நிற்றலும் அளித்தருளும் நேர் இழையும் நீயும் - சோர்தலில்லாத இரக்கத்தோடு (புவனத்தில்) நிறைந்த ஆன்மாக்கள் முழுவதையும் எந்நாளுங் காத்தருளுகின்ற நேர்மையாகிய ஆபரணத்தையணிந்த உமாதேவியாருந் தேவரீரும், மற்றிது பகல் பொழுது வந்தனிர்கள் என்றால்- இற்றைப்பொழுது (ஈண்டு) வந்தருளினீர்களென்றால், சிற்றடியரேங்கள் செயல் சீர் உளதை அன்றோ - சிறிய அடியேங்களுடைய செயல் சிறப்புளதன்றோ. எ - று.

ஆருயிர், அரிய வுயிரெனினுமாம். மற்று அசை. இது என்னுஞ் சுட்டுப்பெயர் ஈண்டுச் சுட்டுமாத்திரையா நின்றது. பகற்பொழுது இருபெயரொட்டு. ஐ சாரியை. ஓ எதிர்மறை. அன்றோ என்றது பலரறிதேற்றம். (226)

என்றினைய நான்முக னிசைத்திடலு மீச
னன்றென மகிழ்ச்சிகொடு நாமுமிது காண்பான்
மன்றன்மலர் கூந்தன்மலை மங்கையுட னிங்ஙன்
சென்றன மிதற்குரிய செய்கவினி யென்றான்.

இ - ள். என்று இனைய நான்முகன் இசைத்திடலும் - என்று இவற்றைப் பிரமதேவர் கூறுதலும், ஈசன் நன்று என மகிழ்ச்சி கொடு நாமும் இது காண்பான் மன்றல் மலர் கூந்தல் மலைமங்கையுடன் இங்ஙன் சென்றனம் - சிவபெருமான் நல்லதென்று மகிழ்ச்சிகொண்டு யாமும் இதனைக் காணுதற்கு (இயற்கை) வாசனைபரந்த கூந்தலையுடைய மலைமகளோடு ஈண்டுவந்தோம், இனி இதற்கு உரிய செய்க என்றான் - இனி இத்திருமணத்துக்குரியனவற்றைச் செய்யக்கடவீரென்று திருவாய்மலர்ந்தருளினார். எ - று.

இசைத்திடலும் உம்மீற்று வினையெச்சம். உம்மை எச்சம். காண்பான் பானீற்றுவினையெச்சம். மலர்க்கூந்தல் எனற்பாலது மலர்கூந்தலென விகாரத்தாற் ககரந் தொகுத்தது எனக் கொண்டு மலரை யணிந்த கூந்தலெனினுமாம். இங்ஙனம் எனற்பாலது இங்ஙன் எனநின்றது. (227)

நாதனிவை கூறுதலு நன்குமகிழ் வெய்தி
மாதவனு நான்முகனும் வாசவனை நோக்கி
வேதமுறை யான்முருகன் வேட்டருள வுன்றன்
கோதைதனை யன்பொடு கொணர்ந்திடுதி யென்றார்.

இ - ள். நாதன் இவை கூறுதலும் நன்கு மகிழ்வு எய்தி - சிவபெருமான் இவற்றைத் திருவாய்மலர்ந்தருளுதலும் இனிது மகிழ்வடைந்து, மாதவனும் நான்முகனும் வாசவனை நோக்கி - விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் இந்திரனைப்பார்த்து, முருகன் வேத முறையால் வேட்டு

அருள உன்றன் கோதைதனை அன்பொடு கொணர்ந்திடுதி என்றார் - சுப்பிரமணியப்பெருமான் வேதவிதிமுறையினால் திருமணஞ்செய்தருள நின்னுடைய மகளாகிய தெய்வயானையம்மையை அன்போடு கொணர்வாயென்று கூறினார்கள். எ - று.

கூறுதலும் உம்மீற்று வினையெச்சம். வேதம் ஆகுபெயர். முறையால் ஆலீற்றுவினையெச்சக்குறிப்பு. (228)

அந்தவமை யந்தனி லதற்கிசைவு கொண்டே
பைந்தொடிநல் லார்களமர் பாங்கர்தனி லேகி
நந்தமை யளித்தருளு நங்கைவரு கென்று
விந்திரன் விளித்திடலு மேந்திழை யெழுந்தாள்.

இ - ள். அந்த அமையந்தனில் - அச்சமயத்தில், இந்திரன் அதற்கு இசைவு கொண்டே பைந்தொடி நல்லார்கள் அமர் பாங்கர்தனில் ஏகி - இந்திரனுவன் (அரியும் அயனுங்கூறிய) அவ்வார்த்தைக் கிசைதல்கொண்டு பசுமையாகிய வளையலையணிந்த மகளிர்களிருக்கின்ற இடத்திற் சென்று, நந்தமை அளித்தருளும் நங்கை வருகென்று விளித்திடலும் - எம்மைக் காத்தருளுகின்ற நங்கையே வருக என்று அழைத்தலும், ஏந்திழை எழுந்தாள் - ஏந்துகின்ற ஆபரணத்தையணிந்த தெய்வயானையம்மையார் எழுந்தார். எ - று.

அந்த அகரச்சுட்டின்மரூஉ. ஏ அசை. நங்கை அண்மைவிளியாதலின் இயல்பானது. வருக என்னும் வியங்கோளினிறுதி கெட்டது. விளித்திடலும் உம்மீற்றுவினையெச்சம். ஏந்திழை வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. (229)

கல்லுயர் பொருப்பினிடை காமரடி செல்ல
வல்லனகொ லென்றுமணி நூபுர மரற்ற
மெல்லிடை வருந்துமென மேகலை யிரங்க
வெல்லவரு முண்மகிழ வெம்மனை நடந்தாள்.

இ - ள். கல் உயர் பொருப்பினிடை காமர் அடி செல்ல வல்லனகொல் என்று மணி நூபுரம் அரற்ற - அழகிய திருவடிகள் கல்லாகிய உயர்ந்த மலையின்கண்ணே செல்லுதற்கு வல்லனகொலென்று மணிச்சிலம்புகள் அரற்றவும், மெல் இடை வருந்தும் என மேகலை இரங்க - மென்மையாகிய இடையானது வருந்துமேயென்று எண் கோவைமணி இரங்கவும், எல்லவரும் உள் மகிழ - (கண்டோர்) யாவரும் மனமகிழவும், எம் அனை நடந்தாள் - எம்மன்னையாகிய தெய்வயானையம்மையார் நடந்தருளினர். எ - று.

வல்லனகொல் என்றது வல்லனவல்ல என்னும் பொருடந்து நிற்றலின் ஈண்டு எதிர்மறைப்பொருட்டு. மணி அழகு எனினுமாம். மேகலை அரையிலணியு மாபரணங்கள் எனினுமாம். அன்னை அனையென இடை குறைந்தது. அரற்றலும் இரங்கலும் ஒலித்தலுக்கும் அழுதலுக்கும் பெயராதலின் அச்சொற்களைப் புணர்த்தி நூபுரமும் மேகலையும் அடிக்கும் இடைக்குமாக அழுவனவாகச் சம்பாவனைசெய்து அடியின்மென்மையையும் இடையின்சிறுமையையும் விளக்கினரென்க. (230)

பஞ்சிதனின் மெல்லடி பனிப்பவரை யின்பாற்
குஞ்சரி நடந்த கூறுபுது மைத்தோ
செஞ்சுடர்வை வேலுடைய செம்மலடி தீயே
னெஞ்சக வடுக்கலினு நின்றுலவு மென்றால்.

இ - ள். செம் சுடர் வை வேல் உடைய செம்மல் அடி தீயேன் நெஞ்சு அகம் அடுக்கலினும் நின்று உலவும்

என்றால்-செம்மையாகிய சுடரினையுங் கூர்மையையுமுடைய வேற்படையைத்தரித்த சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடிகள் தீமையையுடையேனது மனமாகிய கல்லினிடத்தும் நிலைபெற்று உலாவுமென்றால், பஞ்சிதனில் மெல் அடி பனிப்ப வரையின்பால் குஞ்சரி நடந்த செயல் கூறு புதுமைத்தோ-பஞ்சியினும் மென்மையாகிய திருவடிகள் நடுங்க அம்மலையின்கண்ணே தெய்வயானையம்மையார் நடந்தருளிய செயல் சொல்லுகின்ற புதுமையினையுடைத்தாமோ. எ - று.

ஓகாரம் எதிர்மறை. நெஞ்சு அகம் இருபெயரொட்டு; நெஞ்சாகிய இடமெனினுமாம். பஞ்சிதனிலும் என்றதிலுள்ள உயர்வுசிறப்பும்மை விகாரத்தாற்றொக்கது. அடுக்கலினும் என்றதிலும்மை நெஞ்சைநோக்குமிடத்து இழிவுசிறப்பு. நிற்றலைநோக்குமிடத்து உயர்வுசிறப்பு. (231)

தந்திமுன் வளர்ப்பவரு தையன்மிக நொய்ய
செந்தளி ரொதுங்கமிளிர் சீறடி யொதுங்கி
யிந்திரையு நாமகளு மேனையரு மேத்தப்
புந்திகளி கூர்தரு புரந்தரன்முன் வந்தாள்.

இ - ள். தந்தி முன் வளர்ப்ப ஒரு தையல் - ஐராவதயானை முன்னர் வளர்க்க வளர்ந்த தெய்வயானையம்மையார், மிக நொய்ய செம் தளிர் ஒதுங்க மிளிர் சீறடி ஒதுங்கி - மிகவும் நொய்ய செம்மையாகிய தளிர்கள் (எதிர்நிற்கலாற்றாது) ஒதுங்கும்படி விளங்குகின்ற சிறிய திருவடிகளால் நடந்து, இந்திரையும் நாமகளும் ஏனையரும் ஏத்த - திருமகளும் நாமகளும் ஏனைய மகளிர்களுந் துதிக்க, புந்தி களி கூர்தரு புரந்தரன் முன் வந்தாள் - உள்ளங்களிப்பு மிகுகின்ற இந்திரனுக்கு முன்னே வந்தாள். எ - று.

வளரு என்பது இடைகுறைந்துநின்றது. தளிரினின்றும் நொய்ம்மையுஞ் செம்மையும் மிளிர்தலுமுடைய அடியென்பார் மிக நொய்யசெந்தளிரொதுங்கமிளிர்சிறடி என்றார். (232)

வேறு.

இன்ன வெல்லையி லிந்திரன் றெய்வதக்
கன்னி தன்னைக் கடிமணச் சாலையின்
முன்ன ருய்ப்ப முனிவருந் தேவரு
மன்னை வாழியென் றேயடி போற்றினர்.

இ - ள். இன்ன எல்லையில் - இச்சமயத்தில், இந்திரன் தெய்வதக் கன்னிதன்னைக் கடி மணச் சாலையின் முன்னர் உய்ப்ப - இந்திரனைவன் தெய்வயானையம்மையாரைச் சிறந்த திருமணச்சாலையின் முன்னே (கொணர்ந்து) விட, முனிவரும் தேவரும் அன்னை வாழி என்றே அடி போற்றினர் - முனிவர்களுந் தேவர்களுந் தாயே வாழ்கவென்று (அவருடைய) திருவடியைப் போற்றினார்கள். எ - று.

இன்ன இகரச்சுட்டின் மரூஉ. அன்னை அண்மைவிளியாதலின் இயல்பானது. எ அசை. மிகுதியாகிய உயர்ந்த முனிவருந் தேவரும் போற்றினரெனவே ஏனையரும் போற்றினரென்பது குறிப்பினானமையுமென்க. (233)

கணங்கொள் பேரவை கைதொழ வாண்டுறு
மணங்கு தன்னுட னாதியந் தேவனை
வணங்கி வேலுடை வள்ளலை நோக்கியே
சுணங்கு சேர்முலை துண்ணென வெள்கினள்.

இ - ள். சுணங்கு சேர் முலை - தேமல்சேர்ந்த முலையினையுடையராகிய அத்தெய்வயானையம்மையார், கணம் கொள் பேர் அவை கை தொழ ஆண்டு உறும் அணங்கு தன்னுடன் ஆதியந்தேவனை வணங்கி - கூட்டத்தைக்

கொண்ட பெரிய சபையிலுள்ளார் கை (கூப்பி) வணங்க அங்ஙனஞ் சார்ந்தருளிய பார்ப்பதிதேவியாரோடு முதற் கடவுளாகிய சிவபெருமானை வணங்கி, வேல் உடை வள்ளலை நோக்கியே துண்ணென வெள்கினாள் - வேற்படைக்கலத்தினையுடைய சுப்பிரமணியப்பெருமானைப் பார்த்து விரைவில் நாணமடைந்தார். எ - று.

அவை ஆகுபெயர். ஏ அசை. சுணங்குசேர்முலை வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. (234)

மங்கை தாழ்தலும் வாலிதி னோக்கியே
யங்க ணாத னருள்செய வண்ணலைக்
கொங்கை யாற்குழை வித்தவள் கோல்வளைச்
செங்கை யோச்சிச் சிறுபுற நீவினாள்.

இ - ள். மங்கை தாழ்தலும் - தெய்வயானையம்மையார் வணங்குதலும், அங்கண் நாதன் வாலிதின் நோக்கியே அருள் செய - அழகாகிய விழியினையுடைய சிவபெருமான் தூய்மையதாக நோக்கித் திருவருளைப்புரிய, அண்ணலைக் கொங்கையால் குழைவித்தவள் கோல் வளைச் செம் கை ஓச்சிச் சிறுபுறம் நீவினாள் - அச்சிவபெருமானைத் திருமுலையாற் குழையச்செய்த உமாதேவியார் கோலிய வளையலையணிந்த திருக்கரத்தை நீட்டி எருத்தத்தைத் தடவியருளினார். எ - று.

தாழ்தலும் உம்மீற்றுவினையெச்சம். ஏ அசை. பிறர்க்குப் போலாது நெற்றியிற்றனிக்கண்ணோடுகூடி முக்கணனாகி அழகு செய்தல்பற்றியும் உலகத்துக்கொளியினைச்செய்கின்ற சந்திராதித்தர் செந்தீக்கடவுளாகிய முச்சுடரும் முக்கண்ணாயிருத்தல் பற்றியும் அங்கண் என்றார். அருளினையுடைய நோக்கமாதல் பற்றி அங்கண் என்றாரெனினுமாம். (235)

திருத்த குந்திறற் சேயையுஞ் சேண்மிசை
யருத்தி பெற்ற வணங்கையு முற்படும்
பெருத்த பொன்மணிப் பீடிகை மீமிசை
யிருத்தி வைத்தனள் யாவையு மீன்றுளாள்.

இ-ள். யாவையும் ஈன்றுளாள் - எல்லாப் பொருள் களையு மீன்றருளியவராகிய உமாதேவியார், திருத்தகும் திறல் சேயையும் சேண் மிசை அருத்தி பெற்ற அணங்கை யும் - அழகு தகுந்த வலியினையுடைய (தம்) புத்திரராகிய சுப்பிரமணியப்பெருமானையும் (அப்பெருமான் மீது) மேலாகிய ஆசையைப்பெற்ற தெய்வயானையம்மையாரை யும், முன் படும் பெருத்த பொன் மணிப் பீடிகை மீ மிசை இருத்திவைத்தனள் - முன்னர்ப் பொருந்திய பெருத்த பொன்னும் மணியாலுமாகிய ஆசனத்தின்மீது இருத்தி வைத்தருளினர். எ - று.

சேண் மிசை ஒருபொருட்பன்மொழி. சேண் என்றதற்கு வானுலகத்துள்ள என்று பொருள் கூறினுமமையும். சேண்மிசை யருத்திபெற்ற வணங்கையும் என்றதற்கு வானுலகத்துள்ளார் மேலாகிய ஆசையைப்பெற்ற தெய்வயானையம்மையாரையும் என்று உரைப்பினுமமையும்; ஈண்டுச் சேண் ஆகுபெயர். மீமிசை ஒருபொருட்பன்மொழி. (236)

வேறு

அதிர்கழ லீசனே டம்மை யிருந்தாங்
கெதிரெதிர் விம்ப மிலங்கிய வாபோல்
வதுவை யணிந்திடு மைந்தனு மாதுங்
கதிர்மணி தோய்கன கத்தவி சுற்றுர்.

இ-ள். அதிர் கழல் ஈசனெடு அம்மை இருந் தாங்கு - ஒலிக்கின்ற வீரக்கழலைத் தரித்த சிவபெருமா

னோடு உமாதேவியாரெழுந்தருளி யிருந்த அவ்விடத்து, எதிர் எதிர் விம்பம் இலங்கியவா போல் - (அவர்களுக்கு) எதிரெதிரே (அவர்களுடைய) பிரதி விம்பம் விளங்கிய வாறு போல, வதுவை அணிந்திடு மைந்தனும் மாதும் கதிர் மணி தோய் கனகத் தவிசு உற்றார் - திருமணக் கோலத்தை யணிந்த சுப்பிரமணிப்பெருமானுந் தெய்வ யானையம்மையாருங் கிரணத்தையுடைய அரதனங்கள் அழுந்தப்பெற்ற பொன்னாசனத்தின்மீது இருந்தார்கள். எ - று.

இருந்த என்றதன் இறுதி அகரந்தொகுத்தது. இலங்கிய வாறு என்றது இலங்கியவா என இறுதிகுறைந்தது. வதுவை ஆகுபெயர். (237)

தெய்வத மாதொடு செங்கதிர் வேலோன்
வெவ்வரி யேற்றணை மேவுதல் காணு
வெவ்வெவ ருந்தொழு தேத்தின ரென்ற
வவ்வையு மத்தனு மாரருள் செய்தார்.

இ - ள். தெய்வத மாதொடு செம் கதிர் வேலோன் - தெய்வயானையம்மையாரோடு செம்மையாகிய கிரணத்தை யுடைய வேற்படைக் கலத்தைத் தரித்த சுப்பிரமணியப் பெருமான், வெவ்வரி ஏற்று அணை மேவுதல் காணு - கொடிய ஆண் சிங்கங்கள் (தாங்குகின்ற) ஆசனத்தி லிருத் தலைக்கண்டு எவ்வெவரும் தொழுது ஏத்தினர் - எவ்வெவ ரும் வணங்கித் துதித்தார்கள், என்ற அவ்வையும் அத்தனும் ஆர் அருள் செய்தார் - (அச்சுப்பிரமணியப்பெருமானைப்) பெற்றருளிய உமாமகேசுவரர்கள் நிறைந்த கிருபை செய் தருளினார்கள். எ - று.

எவ்வெவரும் என்றது எவ்வகைப்பட்ட மேன்மையையுடைய யாவரும் என்றபடி. (238)

அண்டர் தமக்கிறை யாங்கவர் கோலங்
கண்டு புகழ்ந்து கரந்தொழு துச்சி
கொண்டு மிளிர்ந்து குளிர்ந்திடு தேற
லுண்ட சுரும்பினு முண்மகிழ் வுற்றான்.

இ-ள். அண்டர் தமக்கு இறை ஆங்கு அவர் கோலம் கண்டு - தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் அங்ஙனம் அவருடைய திருமணக்கோலத்தைக் கண்டு, புகழ்ந்து - புகழ்ந்து, கரம் உச்சி கொண்டு தொழுது - கரங்களை உச்சி மேற்கொண்டு வணங்கி, மிளிர்ந்து குளிர்ந்திடு தேறல்உண்ட சுரும்பினும் உள்மகிழ்வு உற்றான் - விளங்கிக் குளிர்ந்த மதுவினையுண்ட வண்டினும் மனமகிழ்ச்சியுற்றான். எ-று.

ஆங்கு ஈண்டு அவ்வாசனத்திடம் ஆங்கவர் ஒருசொல்லெனினுமாம். தேறலுட்கொண்ட சுரும்பு மிக்க மகிழ்ச்சியொன்றே யுடைத்தாயிருத்தல்போல இந்திரனுடைய உள்ளமும் பிறவழிச் செல்லாது மகிழ்ச்சியொன்றின் கண்ணே தங்கியிருத்தல்பற்றித் தேறலுண்ட சுரும்பினுமுண் மகிழ்வுற்றானென்றார். (239)

நெஞ்ச மகிழ்ந்த நெடுந்தகை சொல்லான்
மஞ்சன மாமலர் மற்றுள முற்று
மெஞ்ச லிலாவகை யேந்தி யவைக்க
ணஞ்சமு மஞ்ச வருஞ்சசி வந்தாள்.

இ-ள். நெஞ்சம் மகிழ்ந்த நெடுந்தகை சொல்லால் - (அங்ஙனம்) மனமகிழ்ச்சியுற்ற பெருந்தன்மை யுடையனாகிய இந்திரனுடைய சொல்லினாலே, அரும் சசி - அருமையாகிய இந்திராணியானவள், மஞ்சனம் மா மலர் மற்றுஉள முற்றும் எஞ்சல் இலா வகை ஏந்தி - திருமஞ்சனத்தையும் பெருமையாகிய மலர்களையும் மற்றுமுள்ள பூசனைத்திரவியங்

கள் முழுவதையுங் குறைதலில்லாதபடி ஏந்திக்கொண்டு, அவைக்கண் அஞ்சமும் அஞ்ச வந்தாள் - சபையின்கண்ணே அன்னங்களும் அஞ்சும்படி வந்தாள். எ - று.

நெடுமை ஈண்டுப்பெருமை. மற்றுமுள்ளவை தூபதீபங்க ளாதியவை. அன்னத்தின் நடையினின்றுஞ் சிறந்த நடையுடைய ளென்பார் அஞ்சமுமஞ்ச வருஞ்சசி வந்தாள் என்றார். (240)

அன்னதோர் காலையி லந்தர நாதன்
பன்னிரு மொய்ம்பு படைத்திடு புத்தேண்
முன்ன ரிருந்து முறைப்பட வன்னோன்
பொன்னடி பூசை புரிந்திட லுற்றான்.

இ - ள். அன்னதோர் காலையில் அந்தர நாதன் - அச்சமயத்தில் சுவர்க்கலோகாதிபதியாகிய இந்திரனானவன், பன்னிரு மொய்ம்பு படைத்திடு புத்தேள் முன்னர் இருந்து - பன்னிரண்டு திருப்புயங்களைக்கொண்ட சுப்பிரமணியப்பெருமானது திருமுன்னிலையி லிருந்து, அன்னோன் பொன் அடி முறைப்பட பூசை புரிந்திடலுற்றான் - அப்பெருமானுடைய பொன்போன்ற திருவடிகளுக்கு முறைமையாகப் பூசைபுரியலுற்றான். எ - று.

அன்னது அது வென்பதன் மரூஉ; அது ஈண்டு அகரச்சுட்டு மாத்திரையா நின்றது. ஓர் அசை. அந்தரம் ஆகுபெயர். முறைமை-பூசனைவிதிமுறை. அன்னோன் அவனென்பதன் மரூஉ.

சொல்லரு நாறொடு தோகை மடந்தை
நல்லதோர் கன்ன னறும்புன லுய்ப்ப
வெல்லவ ரும்பக ழிந்திர னையன்
மெல்லடி பற்றி விளக்கின னம்மா.

இ - ள். சொல் அரு நாறொடு தோகை மடந்தை நல்லது ஓர் கன்னல் நறும் புனல் உய்ப்ப - சொல்லுதற்கரிய

நாணத்தோடு மயில்போலும் இந்திராணியானவள் நல்லதாகிய ஒருகரகத்தினின்று நறிய நீரைவிட, எல்லவரும் புகழ் இந்திரன் ஐயன் மெல் அடி பற்றி விளக்கினனம்மா - யாவரானும் புகழப்படுகின்ற இந்திரனானவன் சுப்பிரமணியப் பெருமானுடைய மென்மையாகிய திருவடிகளைத்தொட்டு விளக்கினான். எ - று.

சொல் முதனிலைத் தொழிற்பெயர். ஒடு அடைமொழிப் பொருளினின்றது. மடந்தை ஈண்டுப்பருவங் குறியாது பெண்ணென்னும் பொருடந்து நின்றது. இந்திரன் திரிலோகங்களுக்குந் தலைவனாதலின் எல்லவருமென்றது திரிலோகங்களிலுமுள்ள யாவருமென்க. பற்றல் ஈண்டுத்தொடுதல். அம்மா வியப்பின்கட் குறிப்பு; அசைநிலையெனினுமாம். (242)

செம்மல் பதங்கள் செழும்புன லாட்டிக்
கைம்மலி யுங்கள பந்தனை யூட்டி
யம்மலர் சூட்டி யகிற்புகை காட்டி
நெய்ம்மலி பூஞ்சுடர் நீட்டின னன்றே.

இ - ள். செம்மல் பதங்கள் செழும் புனல் ஆட்டி - அச்சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடிகளை வளவிய நீரினாலாட்டி, கை மலியும் களபந்தனை ஊட்டி - கையில் நிறைந்த கலவைச்சாந்தையப்பி, அம் மலர் சூட்டி - அழகாகிய மலர்மாலைகளைச்சூட்டி, அகில் புகை காட்டி - அகிலினாலாகிய தூபத்தைக்காட்டி, நெய் மலி பூம் சுடர் நீட்டினன் அன்றே-நெய்ந்நிறைந்த பொலிவாகிய தீபத்தை நீட்டினான் (அவ்விந்திரன்). எ - று.

கைநிறைய அள்ளியகளம் என்பார் கைம்மலியுங்களபமென்றார். ஊட்டுதல் ஈண்டு அப்புதல். மலர் ஆகுபெயர். அன்றும் ஏயும் அசைகள். (243)

இவ்வகை பூசை யியற்றுத லோடு
மவ்வயி ராணி யயிற்படை யோன்றாள்
செவ்விதி னாட்டிய தீர்த்திகை தன்னைக்
கைவகை யேந்தியோர் காப்பிடை யுய்த்தாள்.

இ - ள். இவ்வகை பூசை இயற்றுதலோடும் - இவ்வாறு இந்திரன் பூசைபுரிதலும், அவ்வயிராணி - அவ்விந்திராணியானவள், அயிற்படையோன் தாள் செவ்விதின் ஆட்டிய தீர்த்திகைதன்னைக் கை வகை ஏந்தி ஓர் காப்பிடை உய்த்தாள் - வேற்படைக்கலத்தை யுடையராகிய சுப்பிரமணியப்பெருமானுடைய திருவடிகளைச் செவ்விதாக ஆட்டிய தீர்த்தத்தைக் கைவகையாலேந்தி ஒருபாத்திரத்தில் விட்டாள். எ - று.

இயற்றுதலோடும் உம்மீற்று வினையெச்சம். கைகளாற் பலமுறையுமேந்தி யென்பார் கைவகையேந்தி என்றார். இந்திராணி கரகத்தினின்று நீரைவிட இந்திரன் மெல்லடிபற்றி விளக்கினனென்று மேற்கூறி ஈண்டு அவள் அயிற்படையோன்றாளாட்டிய தீர்த்திகை தன்னைக் கைவகையேந்தி என்று கூறியிருத்தலின் ஒரு கையால் நீரைவிட்டு மற்றைக்கையால் ஏந்தினளென்று கொள்ளவேண்டும். அங்ஙனம் ஒரு கையால் நீரைவிடுதலும் ஒரு கையாலேந்துதலு மரியாதையன்று: ஆதலினது பொருந்தாது. ஆதலின் இந்திரன் மெல்லடிபற்றி விளக்கும்பொழுது நீரைவிட்டாளென்றும் பின்னர் இந்திரன்றானே முறைப்படி செம்மல் பதங்கள் செழும்புனலாட்டினனென்றும் அப்பொழுது அவள் இரண்டுகைகளாலு மேந்தினளென்று முய்த்துணர்க. நீரைப் புறத்தேசெல்ல விடாதிருத்தலின் பாத்திரத்தைக் காப்பென்றார்.

அன்னுழி யிந்திர னாறு முகேசன்
றன்னொரு கையிடை தந்தியை நல்கி
நின்னடி யேனிவ ணேர்ந்தன னென்னாக்
கன்ன லமிழ்ந்த கடிப்புன லுய்த்தான்.

இ - ள். இந்திரன் அன்னுழி ஆறுமுகேசன் றன்னொரு கையிடை தந்தியை நல்கி - இந்திரனானவன் அப்பொழுது ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப் பெருமானது ஒரு திருக்கரத்தின் கண்ணே தெய்வயானையம்மையாரைக் கொடுத்து, நின் அடியேன் இவள் நேர்ந்தனன் என்னுக் கன்னல் உமிழ்ந்த கடிப் புனல் உய்த்தான்- தேவரீருடைய அடியனாகிய யான் இவளைத் தந்தேனென்று கூறிக் கரகமுமிழ்ந்த நறுமணத்தினையுடைய நீரைவிட்டான். எ - று.

அன்ன என்னும் அகரச்சுட்டின்மரூஉ இறுதிகுறைந்து நின்றது. உழி, இடம்; ஈண்டுக்காலம். ஆறுமுகேசன்றன்னொரு கையிடைதந்தியை நல்குதல், சுப்பிரமணியப்பெருமானது திருக்கரத்தின்கண்ணே தெய்வயானையம்மையாரது திருக்கரத்தை வைத்தல். (245)

மருத்துவன் மாமறை மந்திர நீரா
லொருத்தி பொருட்டினி லொண்புன லுய்ப்பக்
கரத்திடை யேற்றன னற்கழல் சேர்ந்தார்க்
கருத்திகொண் முத்தியு மாக்கமு மீவோன்.

இ - ள். கழல் சேர்ந்தார்க்கு அருத்தி கொள் முத்தியும் ஆக்கமும் ஈவோன் - (தம்முடைய) திருவடிகளைச் சேர்ந்தவர்க்கு ஆசைகொள்ளுகின்ற மோக்ஷத்தையும் சுவர்க்கமுதலாகிய செல்வத்தையுங் கொடுத்தருளுகின்ற சுப்பிரமணியப்பெருமான், மருத்துவன் மா மறை மந்திர நீரால் ஒருத்தி பொருட்டினில் ஒள் புனல் உய்ப்பக் கரத்திடை ஏற்றனனால் - இந்திரனானவன் பெருமையாகிய வேத மந்திர முறைமையினால் தெய்வயானையம்மையாரைக் (கொடுத்தல்) காரணமாக ஒள்ளிய நீரைவிடத் திருக்கரத்திலேற்றருளினார். எ - று.

மறைமந்திரநீர்மை-வேதமந்திரங்களைச் செபித்துக் கொடுக்குமுறை. ஆல் அசை. சேர்தல் ஈண்டு இடைவிடாதுநினைத்தல். அருத்திகொண்முத்தியு மாக்கமுமென்றது, முத்தியிச்சையுடையவர்க்கு முத்தியும் ஆக்கவிச்சையுடையவர்க்கு ஆக்கமுமென்க. ()

செங்கம லத்திறை சிந்தையி னுற்றி
யங்கையி னீந்திட வாண்டகை கொண்ட
மங்கல நாணை மணிக்கள மார்த்து
நங்கை முடிக்கொர் நறுந்தொடை சூழ்ந்தான்.

இ-ள். ஆண்டகை-ஆண்டகையாகிய சுப்பிரமணியப் பெருமான், செம்கமலத்து இறை சிந்தையின் ஆற்றி அம்கையின் ஈந்திட கொண்ட மங்கலநாணை - செம்மையாகிய தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமதேவர் மனத்தினுலியற்றி அழகிய கரத்தினுற்கொடுக்கக் கொண்ட திருமங்கலநாணை, நங்கைமணிக் களம் ஆர்த்து - தெய்வயானையம்மையாருடைய அழகிய கழுத்திற்கட்டி, முடிக்கு ஓர் நறும் தொடை சூழ்ந்தான் - (அவருடைய) முடியின் கண்ணே ஒரு நறியமலர்மாலையைச் சூட்டியருளினர். எ-று.

அங்கையினீந்திட என்றதற்கு சுப்பிரமணியப்பெருமானுடைய திருக்கரத்திற்கொடுக்க எனினுமமையும். குவ்வுருபு கண்ணுருபின்திரிபு (247)

மாவொடு வாழை வருக்கைகோள் பைங்காய்
தீவிய கன்னல் செறிந்திடு செந்தே
னுவருள் பாலிவை யண்டர்கள் செம்மன்
மூவிரு மாமுக னைநுகர் வித்தான்.

இ-ள். அண்டர்கள் செம்மல் - தேவராசனுகிய இந்திரனைவன், மாவொடுவாழை வருக்கை கொள் பைங்காய்-மாவும் வாழையும் பலாவுங்கொண்ட பழங்களும்,

தீவிய கன்னல் - இனிமையாகிய கருப்பஞ்சாறும், செறிந்திடு செம் தேன் - (இனிமை) செறிந்த செந்தேனும், ஆ அருள் பால் இவை - தெய்வப்பசுகொடுத்த பாலுமாகிய இவற்றை, மா மூவிரு முகனை நுகர்வித்தான் - பெருமையாகிய ஆறு திருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானைத் திருவமுதுசெய்வித்தான். எ - று.

பைங்காய் கன்னல் ஆகுபெயர்கள். சுப்பிரமணியப்பெருமானுக்கு ஆறுதிருமுகங்க ளுண்மையின் மாம்பழமுதலிய ஆறு பதார்த்தங்களையுந் திருவமுது செய்வித்தா னென்பாருமுளர். ()

வார்த்தொகை சூழ்தரு மத்தளி தக்கை
பேர்த்த வலம்புரி பேரி கலித்த
வார்த்தனர் வீர ரருங்கண நாதர்
தீர்த்தனை வந்தனை செய்து களித்தார்.

இ - ள். வார்த் தொகை சூழ்தரு மத்தளி தக்கை பேர்த்த வலம்புரி பேரி கலித்த - வார்க்கூட்டஞ் சூழப்பட்ட மத்தளியுந் தக்கையும் பெருமையுற்ற சங்கும் பேரியு மார வாரித்தன; வீரர் ஆர்த்தனர் - (இலக்கத்தொன்பது) வீரர்கள் (களிப்பினால்) ஆரவாரித்தார்கள், அரும் கண நாதர் தீர்த்தனை வந்தனை செய்து உகளித்தார் - அரிய பூதப்படைத் தலைவர்கள் தூயவராகிய சுப்பிரமணியப்பெருமானை வந்தனை செய்து குதித்தாடினார்கள். எ - று.

வார்களாலிறுக்கிக் கட்டப்பட்டிருத்தலின் வார்த்தொகை சூழ்தருமென்றார். பேர்த்த பெருமையென்னும் பண்படியாகப் பிறந்தபெயரெச்சம். வந்தனைசெய்துகளித்தார் எனச்சொல் வகுத்துப் பொருள் கூறினுமமையும். (249)

தண்டுள வண்ணல் சரோருக மேலோ
னெண்டிசை பாலக ரிந்திர னென்போ
னண்டர்க ளேனைய ராங்கவர் கோலங்
கண்டு சிறந்தது கட்புல மென்றார்.

இ - ள். தண் துளவு அண்ணல் - குளிர்மையாகிய துழாய்மாலையை யணிந்த விஷ்ணுமூர்த்தியும், சரோருக மேலோன் - தாமரைப்பூவின்மீதிருக்கின்ற பிரமதேவரும், எண்டிசை பாலகர் - எண்ணப்படுகின்ற திக்குப்பாலகர்களும், இந்திரனென்போன் - இந்திரனும், அண்டர்கள் - தேவர்களும், ஏனையர் - மற்றையரும், ஆங்கு அவர் கோலம் கண்டு கண் புலம் சிறந்தது என்றார் - அங்ஙனம் அச்சுப்பிரமணியப் பெருமானதும் தெய்வயானையம்மையாரதுந் திருமணக்கோலத்தைக்கண்டு (எங்கள்) கட்பொறியாலாகிய புலஞ்சிறந்தது என்று சொன்னார்கள். எ - று.

இந்திரனும் அட்டதிக்குப்பாலகர்களிலொருவனாதலின் எண்டிசைபாலக ரென்றதற்கு அட்டதிக்குப்பாலகரென்றல் பொருந்தாதென்க. ஏனையர், முனிவரும் தேவகணங்களும் பூலோகத்தரசருமென்க. (250)

ஆயது போழ்தினி லம்புய முற்றோன்
காயெரி தந்து கலப்பைகள் கூவித்
தூய மணம்புரி தொன்முறை வேள்வி
நாயகனைக் கொடு நன்றுசெய் வித்தான்.

இ - ள். ஆயது போழ்தினில் - அச்சமயத்தில், அம்புயம் உற்றோன் காய் எரி தந்து - தாமரைப் பூவிலிருக்கின்ற பிரமதேவர் சுடுகின்ற அக்கினியை மூட்டி, கலப்பைகள் கூவி - (வேண்டும்) உபகரணங்களை வரச்செய்து, தொல்

முறை தூய மணம் புரி வேள்வி நாயகனைக் கொடு நன்று செய்வித்தான் - பழைமையாகிய (வேத) முறைப்படி தூய்மையையுடைய திருமணஞ்செய்யும் வேள்வியைச் சுப்பிரமணியப்பெருமானைக் கொண்டு நன்றாகச் செய் வித்தார். எ - று.

ஆயது அதுவென்பதன்மரூஉ; அது ஈண்டு அகரச்சுட்டு மாத்திரையாகநின்றது. எரி வேள்விக்குரிய காருகபத்தியம் தக்ஷிணாக்கினியம் ஆகவனீயம் என்னும் முத்தீ. வேண்டுமுபகரணங்கள் சமிதைநெய் மலர் தளிராதியன. (251)

உலகருள் காரண னொண்ணுத லோடும்
வலமுறை யாக வயங்கனல் சூழ்ந்து
சிலையிடை யன்னவள் சீறடி தந்தான்
மலரய னுச்சியின் மேலடி வைத்தான்.

இ-ள். மலர் அயன் உச்சியின்மேல் அடி வைத்தான் - தாமரைப்பூவிலிருக்கின்ற பிரமதேவரது சிரத்தின் மீது திருவடியைவைத்தருளிய சுப்பிரமணியப்பெருமான், உலகு அருள் காரணன் ஒண்ணுதலோடும் வயங்கு அனல் வலம் முறை ஆக சூழ்ந்து அன்னவள் சீறடி சிலையிடை தந்தான் - உலகத்தைக்காக்குங் கடவுளாகிய விஷ்ணுமூர்த்திக்கு மகளாகிய ஒண்மையாகிய நெற்றியினையுடைய தெய்வயானையம்மையாரோடும் விளங்குகின்ற ஓமாக்கினியை வலமுறையாகச்சூழ்ந்து அவ்வம்மையாருடைய சிறிய திருவடியை அம்மியின்மீது தூக்கிவைத்தருளினர். எ - று.

மலரயனுச்சியின்மேலடிவைத்தான் உலகருள்காரணன் என இயைத்து பிரமதேவர்முடியிலடிவைத்தவரும் உலகத்துக்கருளுங் காரணருமாகிய சுப்பிரமணியப்பெருமா னெனினுமமையும்.

ஒண்ணுதல் பண்புத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. அன்னவள் அவளென்பதன் மரூஉ. தருதல் ஈண்டு இலக்கணை. (252)

மாலினி காளிகண் மாமல ராட்டி
பாலி னிறத்தி பராயினர் சூழச்
சாலினி மங்கலை தன்னொடு கண்டான்
வேலினின் மாலினை வீழ வெறிந்தோன்.

இ - ள். மாலினி காளிகள் மா மலராட்டி பாலின் நிறத்தி பராயினர் சூழ - கொற்றவையுங் காளிகளும் பெருமையையுடைய தாமரையாளாகிய இலக்குமியும் பால் போலும் வெண்ணிறமுடையளாகிய சரஸ்வதியுந் துதித்துச் சூழ, மங்கலைதன்னொடு வேலினின் மாவினை வீழ எறிந் தோன் - மங்கலையாகி தெய்வயானையம்மையாரோடு வேற் படையினாலே (சூரனாகிய) மாமரத்தை வீழும்வண்ணம் எறிந்தருளிய சுப்பிரமணியப்பெருமான், சாலினி கண் டான் - அருந்ததியைப் பார்த்தருளினார். எ - று.

மாலினி, கங்கை யெனினுமாம். பராயினர் என்னும் வினை முற்று வினையெச்சமானது. தெய்வயானையம்மையாருக்கு அருந் ததியைக் காட்டும் போழ்து தாமும் பார்த்தலின் காட்டுதலை மங்கலைதன்னொடு கண்டானென்றார். எறிந்தோன் வினையா லணையும்பெயர். (253)

இவ்வகை மன்ற லியற்றிய பின்னைத்
தெய்வத மாதொடு செங்கதிர் வேலோ
னவ்வையொ டத்தனை யன்பொடு சூழ்ந்து
செவ்விதின் முப்முறை சேவடி தாழ்ந்தான்.

இ - ள். இவ்வகை மன்றல் இயற்றிய பின்னை - இவ் வாறு திருமணச்சடங்கைச் செய்தருளியபின்னர், தெய்வத

மாதொடு செம் கதிர் வேலோன் - தெய்வயானையம்மையாரோடு செம்மையாகிய கிரணத்தையுடைய வேற்படைக் கலத்தைக்கொண்ட சுப்பிரமணியப்பெருமான், அவ்வையொடு அத்தனை அன்பொடு சூழ்ந்து செவ்விதின் மும்முறை சேவடி தாழ்ந்தான் - தாயாராகிய உமாதேவியாரோடு தந்தையாராகிய சிவபெருமானை அன்போடு பிரதக்கணஞ் செய்து செவ்விதாக மூன்றுமுறை செம்மையாகிய திருவடிகளை வணங்கினர். எ - று.

மன்றல் ஆகுபெயர். தெய்வதமாதொடு அவ்வையொடத்தனை என்றவற்றில் ஒடு உடனிகழ்ச்சிப்பொருளிலும் அன்பொடு என்றதில் ஒடு அடைமொழிப்பொருளிலும் நின்றன. (254)

வேறு.

அடித்த லத்தில்விழ் மக்களை யிருவரு மார்வத்
தெடுத்த ணைத்தருள் செய்துதம் பாங்கரி லிருத்தி
முடித்த லத்தினி லுயிர்த்துமக் கெம்முறு முதன்மை
கொடுத்து மென்றன ருவகையான் மிக்ககோள் கையினர்.

இ - ள். அடித்தலத்தில் வீழ் மக்களை இருவரும் ஆர்வத்து எடுத்து அணைத்து அருள் செய்து - (தங்கடிருவடிகளிற் றாழ்கின்ற மருமகளையும் மகனையும் அவ்வுமாதேவியாருஞ் சிவபெருமானும் ஆசையினாலே) எடுத்து அணைத்துத் திருவருள்செய்து, தம் பாங்கரில் இருத்தி - தத்தம் பக்கத்திலிருத்தி, முடித்தலத்தினில் உயிர்த்து - உச்சியின்கண்ணே மோந்து, உவகையால் மிக்க கொள்கையினர் - மகிழ்ச்சியான் மிக்கதன்மையினர்களாகி, உமக்கு எம் உறு முதன்மை கொடுத்தும் என்றனர் - நுமக்கு எங்களைச் சார்ந்த முதன்மையைத் தந்தேமென்று திருவாய்மலர்ந்தருளினார்கள். எ - று.

அடித்தலம் முடித்தலம் ஒருசொற்கள்; அடியிடம் முடியிடமெனினுமமையும். உமாதேவியார் தெய்வயானையம்மையாரையும் சிவபெருமான் சுப்பிரமணியப்பெருமானையும் எடுத்து அணைத்து அருள்செய்து இருத்தி உயிர்த்துக்கொடுத்துமென்றுசொள்க. கொள்கையினர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. ()

மலைம டந்தையு மிறைவனு மைந்தற்கு மகட்குந்
தலைமை செய்தருள் புரிதலுஞ் சாலையு ளிருந்த
வலர வன்முத லமரரு முனிவரு மணங்கின்
குலம டங்கலு மவரடி முடிமிசைக் கொண்டார்.

இ - ள். மலை மடந்தையும் இறைவனும் மகட்கும் மைந்தற்கும் தலைமை செய்து அருள் புரிதலும் - இமயோற் பருவத புத்திரியாராகிய உமாதேவியாருஞ் சிவபெருமானும் மருமகளாகிய தெய்வயானையம்மையாருக்கும் புத்திரராகிய சுப்பிரமணியப்பெருமானுக்குந் (தத்தம்) முதன்மை கொடுத்துத் திருவருளைச் செய்தலும், சாலை உள் இருந்த அலரவன் முதல் அமரரும் முனிவரும் அணங்கின் குலம் அடங்கலும் அவர் அடி முடிமிசைக் கொண்டார் - அத் திருமணச்சாலையுளிருந்த பிரமதேவர் முதலாகிய தேவர்களும் முனிவர்களும் தெய்வமடந்தையர் குலமுழுவதும் அவ்விருவருடைய திருவடிகளைச் சிரத்தின்மீது கொண்டார்கள். எ - று.

மலைமடந்தை தலைமைசெய்தது மகட்கும் இறைவன் தலைமை செய்தது மைந்தற்கு மாதலின் இது முறைநிரனிறை. அருள் செய்தது இருவர்க்குமென்க. அவர் - சுப்பிரமணியப்பெருமானும் தெய்வயானையம்மையாரும். அடிமுடிமிசைக்கொள்ளல், அடியின் முடிபட வணங்குதல். (256)

அறுமு கன்றனை யணங்கினை யவையுளோ ரெவரு
முறையில் வந்தனை செய்தலு முழுதருள் புரிந்து
கறைவி ளங்கிய கண்டனுங் கவுரியுங் கடிதின்
மறைத லுற்றனர் பரிசனந் தன்னொடு மன்னோ.

இ - ள். அறுமுகன்றனை அணங்கினை அவையுளோர் எவரும் முறையில் வந்தனை செய்தலும் - ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமானையுந் தெய்வயானையம்மையாரையும் அச்சபையுளிருந்தயாவரும் முறைமையினால் வழிபாடுபுரிதலும்; கறை விளங்கிய கண்டனும் கவுரியும் முழுது அருள் புரிந்து - ஆலாகலம் விளங்குகின்ற திருமிடற்றினையுடைய சிவபெருமானும் உமாதேவியாரும் பூரணகிருபைபுரிந்து, பரிசனந்தன்னொடு கடிதில் மறைதலுற்றனர் - (தங்களைச் சூழ்ந்துவந்த) பரிசனர்களோடு மறைந்தருளினர்கள். எ - று.

செய்தலும் உம்மீற்றுவினையெச்சம். மன்னும் ஓவும் அசைகள். (257)

மறைந்த காலையில் விம்மித ராய்மணச் சாலை
யுறைந்த தேவரு முனிவரு முயிர்களுக் குயிராய்
நிறைந்த மேலையோர் நிலைமையை நினைந்துதம் வாயா
லறைந்து கைதொழு தவர்பெய ரெடுத்தெடுத் தார்த்தார்.

இ - ள். மறைந்த காலையில் - (அங்ஙனம்) மறைந்தருளியகாலையில், மணச் சாலை உறைந்த தேவரும் முனிவரும் விம்மிதராய் - அத்திருமணச்சாலையுளிருக்கின்ற தேவர்களும் முனிவர்களும் அற்புதமுடையராகி, உயிர்களுக்கு உயிராய் நிறைந்த மேலையோர் நிலைமையை நினைந்து - (எல்லா) ஆன்மாக்களுக்கும் பரான்மாவாயிருக்

கின்ற மேலானவர்களாகிய உமாமகேசுவரர்களது தன்மையை நினைந்து, தம் வாயால் அறைந்து - (அதனைத்) தங்கள் வாயாற்கூறி, கை தொழுது - கைகளால் வணங்கி, அவர் பெயர் எடுத்து எடுத்து ஆர்த்தார் - அவர்களுடைய திருநாமங்களை எடுத்தெடுத்து (உரைத்து) ஆரவாரித்தார்கள். எ - று.

ஆன்மாக்களினுள்ளே சிவமுறைதலில்லையாயின் அவையுமுடல்கள்போல இயங்குதலின்மையின் உயிர்களுக்குயிராயென்றார். சிவமுஞ்சத்தியும் அபேதமாயிருத்தலின் உயிர்களுக்குயிராய்நிறைந்த மேலையோர் என்றார். நிலைமை, ஈண்டுத்தன்மை. (258)

வரைப டைத்தவர் மறைந்துழி வானவர் பலரு
நிரைப டைத்துள முனிவருங் கவன்றது நீத்தார்
திரைப டைத்துள வாழ்கடற் பட்டுளோர் சிறந்த
கரைப டைத்தென வணங்கொடு குமரனைக் கண்டு.

இ - ள். வரை படைத்தவர் மறைந்துழி - வரையீன்ற சிவபெருமானும் உமாதேவியாருமறைந்த காலையில், வானவர் பலரும் நிரை படைத்துள முனிவரும்-தேவர்கள் யாவரும் வரிசையைக்கொண்ட முனிவர்களும், கவன்று - கவலையுற்று, திரை படைத்துள ஆழ் கடல் பட்டுளோர் சிறந்த கரை படைத்தென - திரையினைக் கொண்ட ஆழ்ந்த கடலிடைப்பட்டவர்கள் சிறந்த கரையினைப்பெற்றாற்போல, அணங்கொடு குமரனைக் கண்டு அது நீத்தார்-தெய்வயானையம்மையாரோடு சுப்பிரமணியப்பெருமானைக்கண்டு அக்கவலையை யொழித்தார்கள். எ - று.

வரைபடைத்தவர், மூங்கிலீன்ற சிவபெருமானும் இமயமலையீன்ற உமாதேவியாருமென்க; கைலாசகிரியைத் தமக்கு உறை

விடமாகக் கொண்டவர் எனினுமமையும். உழி ஈண்டுக்காலம். பலரும், ஈண்டுயாவரும். (259)

உமையு மீசனு மிருந்திடு பீடிகை யும்பர்க்
குமர நாயகன் றெய்வதக் களிற்றொடுங் கூடி
யமர வன்னது காண்டலு மகிழ்சிறந் தன்னார்
கமல மெல்லடி தொழுதனர் வழுத்தினர் களிப்பால்.

இ - ள். உமையும் ஈசனும் இருந்திடு பீடிகை உம்பர்க் குமர நாயகன் தெய்வதக் களிற்றொடுங் கூடி அமர - உமா தேவியாருஞ் சிவபெருமானும் இருந்தருளிய ஆசனத்தின் மீது சுப்பிரமணியப்பெருமான் தெய்வயானையம்மையாரோடுங் கூடியிருந்தருள, அன்னது காண்டலும் - அதனைக் காண்டலும், மகிழ் சிறந்து - மகிழ்ச்சிமிகுந்து, களிப்பால் அன்னார் கமல மெல் அடி தொழுதனர் வழுத்தினர் - களிப்பினாலே அவர்களுடைய தாமரைமலர்போலு மென்மையாகிய திருவடிகளை வணங்கி வாழ்த்தினர்கள் (அத்தேவமுனிவர்கள்). எ - று.

குமரநாயகன், குமரனாகிய நாயகன்; அது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. அன்னது அது என்பதன்மரூஉ. அன்னார் அவரென்பதன்மரூஉ. தொழுதனர் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (260)

இனைய காலையி லரியணைப் பீடநின் றிழியா
வனைவ ருந்தொழு துடன்வர வாறுமா முகத்துப்
புனித நாயகன் மங்கல விசையொடும் போந்து
தனது கோயிலுட் புக்கன னிறைவியுந் தானும்.

இ - ள். இனைய காலையில் - அச்சமயத்தில், மா ஆறு முகத்துப் புனித நாயகன் - பெருமையாகிய ஆறுதிருவதனங்களையுடைய தூயவராகிய சுப்பிரமணியப்பெருமான்,

அரி அணைப் பீடம் நின்று இழியா - சிங்காசனமாகிய பீடத்தினின்றிறங்கி, அனைவரும் தொழுது உடன் வர - (அங்குள்ள) யாவரும் வணங்கி உடன்வர, இறைவியும் தானும் மங்கல இசையொடும் போந்து தனது கோயிலுள் புக்கனன் - தெய்வயானையம்மையாருந் தாமும் மங்கல வாத்திய முழக்கத்தோடு சென்று தமது திருக்கோயிலி னுட் சார்ந்தருளினார். எ - று.

இனைய இகரச்சுட்டின்மரூஉ; அது ஈண்டு அகரச்சுட்டுப் பொருடந்தது. அரியணைப்பீடம் புனிதநாயகன் இருபெய ரொட்டுப் பண்புத்தொகைகள். மங்கலவிசை ஆகுபெயர். (261)

வேலை யன்னதிற் குமரவேள் வேள்விநா யகற்கு
மால யன்முத லமரர்க்கு மற்றுளார் தமக்கு
மேல வேவிடை தந்துதன் பரிசன மெவையு
மால யந்தனிற் கடைமுறை போற்றுமா றளித்தான்.

இ - ள். அன்னது வேலையில் - அச்சமயத்தில், குமர வேள் - சுப்பிரமணியப்பெருமான், வேள்வி நாயகற்கும் மால் அயன் முதல் அமரர்க்கும் மற்றுளார் தமக்கும் ஏலவே விடை தந்து - யாகாதிபதியாகிய இந்திரனுக்கும் விஷ்ணு மூர்த்தியும் பிரமதேவருமுதலாகிய தேவர்களுக்கும் மற்று முள்ளவர்களுக்கும் முன்னர் விடைகொடுத்து, தன் பரி சனம் எவையும் ஆலயந்தனில் கடை முறை போற்றும் ஆறு அளித்தான் - தம்முடைய பரிசனங்களெல்லாந் திருக் கோயிலின் வாயிலை முறையே காக்கும்படி (விடை) கொடுத் தருளினார். எ - று.

அன்னது அது என்பதன்மரூஉ; அது ஈண்டு அகரச்சுட்டு மாத்திரையா நின்றது. இல்லுருபு பிரித்துக் கூட்டப்பட்டது. குமரவேள் இருபெயரொட்டுப் பண்புத்தொகை; குமரன் சிறப்

புப்பெயர். மற்றுளார் முனிவரும் தேவகணங்களும் பூலோகத் தரசரும். ஏ அசை. பரிசனம் உயர் திணைப்பொருட்கருமோ ரஃறிணைச் சொல்லாதலின் அதற்கியைய ஏவையுமென்றார். (262)

இன்ன தன்மைய தாகவே யெம்மையீன் றெடுத்த
வன்னை தன்னுட னறுமுக னுறையுளி னடைந்து
பொன்னின் மஞ்சமேற் படுத்துமெல் லமளியிற் புவன
மன்னு யிர்த்தொகை யுய்ந்திட முயங்கிவை கினனால்.

இ - ள். இன்ன தன்மையது ஆகவே எம்மை ஈன்று எடுத்த அன்னை தன்னுடன் அறுமுகன் உறையுளின் அடைந்து - இத்தன்மையதாக (ஆன்மாக்களாகிய) எங்களைப் பெற்றெடுத்த அன்னையாகிய தெய்வயானையம்மையாரோடு ஆறுதிருவதனங்களையுடைய சுப்பிரமணியப்பெருமான் திருக்கோயிலினுட்சார்ந்து, பொன்னின் மஞ்ச மேல் படுத்தும் மெல் அமளியில் புவன மன் உயிர்த் தொகை உய்த்திட முயங்கு வைகினனால் - பொன்னாலாகிய மஞ்சத்தின்மீது இடப்பட்ட மென்மையாகிய சயனத்தின்கண்ணே புவனங்களிலுள்ள நிலைபெற்ற உயிர்க்கூட்டம் உய்யும்படி (அவ்வம்மையாரைக்) கலந்து வீற்றிருந்தருளினார். எ - று.

இன்ன இகரச்சுட்டின்மரூஉ. ஏ அசை. சிவபெருமானுக்குஞ் சுப்பிரமணியப்பெருமானுக்கும் அபேதமுண்மையின் தெய்வயானையம்மையார் சுப்பிரமணியப்பெருமானுடைய சத்தியாதலின் எம்மையீன்றெடுத்த அன்னையென்றார். தெய்வயானையம்மையார் தவஞ்செய்து இவ்வாறு பெரும்பேறுபெற்றமையையுன்னி உயிர்கள் தவஞ்செய்தல் விருப்பமுறுதல்பற்றிப் புவன மன்னுயிர்த் தொகையுய்த்திடமுயங்கி வைகினன் என்றார்; கற்புக்கைகோள் உலகினிகழ்தற்குக் காரணமாதல்பற்றிஎனினுமமையும்; உயிர்கள் புணர்ச்சியின்பமுறுதல் காரணமாகவென்பாருமுளர். அதற்கு முன்னுயிர்கள் அவ்வின்பமுறாதிருந்ததில்லையாதலினது பொருந்தாதென்க. ஆல் அசை. (263)

சேணு தித்திடு தெய்வதக் களிற்றினைச் செவ்வே
ணாணி னிற்கட்டி நகரிடைத் தந்துநற் கலன்கள்
பூணு தற்றுறு மங்குசங் கைக்கொடு புயமாந்
தூணு றப்பிணித் தணைத்தன னருளெனுந் தொடரால்.

இ - ள். செவ்வேள் - செம்மையாகிய சுப்பிரமணியப் பெருமான், சேண் உதித்திடு தெய்வதக் களிற்றினை நாணி னில் கட்டி - தேவலோகத்திற் றோன்றிய தெய்வயானையை நாணினாற்கட்டி, நகரிடைத் தந்து - நகர்க்கட்கொணர்ந்து, நல் கலன்கள் பூணுதல் துறும் அங்குசம் கைக்கொடு - நல்ல ஆபரணங்களைப் பூணுதல் செறிந்த அங்குசத்தைக் கைக்கொண்டு, அருள் எனும் தொடரால் புயம் ஆம் தூண் உறப் பிணித்து அணைத்தனன் - திருவருளாகிய சங்கிலியினாலே புயமாகிய தூணிற் பொருந்தப் பிணித்து அணைத் தருளினார். எ - று.

தெய்வயானையென்னும் பெயருக்கியைய நாணினிற்கட்டி நகரிடைத்தந்து அங்குசங்கைக்கொடு தொடரால் தூணுறப் பிணித்தணைத்தன னென்றார். நாண், மங்கலநாண். நகர் கோயில். அங்குசம், அழகாகியதனம். (264)

மருந்து போன்மொழிக் குமரியுங் குமரனு மணந்தாங்
கிருந்த வெல்லையில் விரிஞ்சனு மாலுமே னையரும்
விரைந்து தத்தமக் கியன்றதொல் லிருக்கையின் மேவப்
புரந்த ரன்பரி சனரொடுந் தன்மனை புக்கான்.

இ - ள். மருந்து போல் மொழிக் குமரியும் குமரனும் ஆங்கு மணந்து இருந்த எல்லையில் - அமிர்தம்போலும் (இனிமையாகிய) மொழியினையுடைய தெய்வயானையம்மையாருஞ் சுப்பிரமணியப்பெருமானும் அங்ஙனம் புணர்ந்திருந் தருளியகாலையில், விரிஞ்சனும் மாலும் ஏனையரும் விரைந்து

தத்தமக்கு இயன்ற தொல் இருக்கையில் மேன் - பிரம தேவரும் விஷ்ணுமூர்த்தியும் மற்றையரும் விரைந்து தத்தமக்குப்பொருந்திய பெருமையாகிய இருப்பிடங்களிற் சார, புரந்தரன் பரிசனரொடும் தன் மனை புக்கான் - இந்திரனானவன் பரிசனர்களோடுந் தனது மாளிகையிற் சார்ந்தான். எ - று.

என்றும் இளமைப்பருவமுடையராதலிற் குமரிபுங்குமரனு மென்றார். ஏனையர் முனிவரும் இந்திரனொழிந்த ஏனைய திக்குப் பாலகர்களும். (265)

முகிலு யர்த்தவன் முசுகுந்த னேமுத லுள்ள
வகில மன்னர்க்குந் தேனுவின் பலபய னருத்தித்
துகிலு மாரமு மணிகளு மிருநிதித் தொகையும்
விகல மின்றியே கொடுத்தனன் யாரையும் விடுத்தான்.

இ - ள். முகில் உயர்த்தவன் - முகில்வாகனத்தை யெழுதிய கொடியையுயர்த்துகின்ற இந்திரன், முசுகுந்தனே முதல் உள்ள அகில மன்னர்க்கும் தேனுவின் பல பயன் அருத்தி - முசுகுந்தராசனையே முதலாகவுள்ள பூலோகத் தரசர்களுக்குந் தெய்வப்பசுவினது பலபயன்களையுமூட்டி, துகிலும் ஆரமும் மணிகளும் இரும் நிதித் தொகையும் விகலம் இன்றியே கொடுத்தனன் யாரையும் விடுத்தான் - ஆடைகளையும் மணிவடங்களையும் இரத்தினங்களையும் பெருமையாகிய பொற்றிரள்களையும் வேறுபாடின்றிக் கொடுத்து (அவர்கள்) யாவரையும் அனுப்பினான். எ - று.

முகில் ஆகுபெயர். முசுகுந்தனே என்றதில் ஏகாரம் தேற்றம். உம்மை தேவர்களாதியவர்களுக்கு வேண்டிய சிறப்புச்செய்து விடைகொடுத்ததன்றி என்றுபொருள்படுதலின் எச்சவும்மை. தேனுவின் பலபயன், தெய்வப்பசு உண்டாக்கிய அன்னமாதிய

புணவுகள். விகலமின்றியே என்றதில் எகாரம் அசை. கொடுத்தனன் என்னும் வினைமுற்று வினையெச்சமானது. (266)

எல்லை யன்னதின் முசுகுந்த னாதியா மிறைவர்
கல்ல கந்தனி லழிந்துதஞ் சேனையின் கடலை
யொல்லை கூடியே வேறுபல் புலந்தொறு மொருவித்
தொல்லை யூர்புகுந் திருந்தனர் விடுறுந் தொடர்பால்.

இ - ள். அன்னது எல்லையில் முசுகுந்தன் ஆதி ஆம் இறைவர் - அச்சமயத்தில் முசுகுந்தன்முதலாகிய அரசர்கள், கல்லகந்தனில் இழிந்து தம் சேனையின் கடலை ஒல்லை கூடியே - திருப்பரங்குன்றத்தினின்றிறங்கித் தத்தஞ்சேனா சமுத்திரத்தை விரைவிற்கூடி, வேறு பல் புலந்தொறும் ஒருவி - வேறாகியபல இடங்கடோறும் நீங்கி, தொல்லை ஊர் புகுந்து வீடு உறும் தொடர்பால் இருந்தனர் - பெருமையாகிய (தத்தம்) நகரங்களையடைந்து மோக்ஷத்தையடையும் பற்றினால் இருந்தார்கள். எ - று.

அன்னது அதுவென்பதன்பரூஉ; அது ஈண்டு அகரச் சுட்டுமாத்திரையாநின்றது இல்லுருபுபிரித்துக்கூட்டப்பட்டது. எ அசை. வேறுபல்புலம், தத்தமூர்க்குச்செல்லும் பலவழியிடம். தொல்லை ஈண்டுப்பழமை. தொடர்பு ஈண்டு சுப்பிரமணியப் பெருமான்மீது பற்றுவைத்தல். (267)

மன்னர் யாவரும் விடைகொடு போதலு மகவான்
றன்ன தாகிய கடிமனைக் கிழத்தியுந் தானு
மின்ன ரீர்தரு போகம தாற்றின னிருந்தா
னன்ன பான்மையிற் சில்பக லகன்றன வன்றே.

இ - ள். மன்னர் யாவரும் விடை கொடு போதலும் - (பூமியிள்ள) அரசர்கள்யாவரும் விடைபெற்றுக்கொண்டு செல்லுதலும், மகவான் தன்னது ஆகிய கடி மனைக்கிழத்தி

யும் தானும் இன்னல் தீர்தரு போகமது ஆற்றின ா இருந்தான் - இந்திரனானவன் தன்னுடையதாகிய சிறந்த மனைக்கு உரியவளாகிய இந்திராணியுந்தானுந் துன்பம் நீங்கிய போகத்தைச்செய்து கொண்டிருந்தான், அன்ன பான்மையில் சில் பகல் அகன்றனவன்றே - அவ்வாறாகச் சின்னாள்கள் கழிந்தன. எ - று.

போதலும் உம்மீற்றுவினையெச்சம். மகவான் கடிமனைக் கிழத்தியுந்தானும் ஆற்றினனிருந்தான் என்றது ஆண்பாலும் பெண்பாலும் விரவி உயர்வினுனொருமுடிபேற்றது. இன்னறீர் தருபோகம் இன்பத்தையுடைய காமப்புணர்ச்சி. ஆற்றினன் என்னும்வினைமுற்று வினையெச்சமானது. அன்ன அகரச்சுட்டின் மரூஉ. அன்றும் எயும் அசைகள். (268)

தெய்வயானையம்மை திருமணப்படலம்

மூலமும்-உரையும்

முற்றுப்பெற்றன.

கச்சியப்ப சிவாசாரியர் திருவடிவாழ்க.

பிரகடன பத்திரம்

திருவள்ளுவர் பரிமேலழகருரை — **விலை ரூ. 5.**

இதுவும் இராமநாதபுர சமஸ்தானாதிபதியின் விருப்பத்தின் படி முதல் முதல் (1869) நாவலரால் அச்சிடப்பட்டது. மற்றப் பதிப்புகளெல்லாம் பின்னர் வந்தனவே.

சிவஞானத் தெளிவுபதேசத்திரயம் — **விலை அணா 8.**

சிவஞானசுவாமிகளின் முதல் மாணவராகிய கச்சியப்ப முனிவர் பாடிய பேரூர்ப்புராணம், தணிகைப்புராணம், திருவானைக்காப்புராணம் முதலியவற்றில் அவர் விளக்கிய சைவசித்தாந்தக் கருத்துகளமைந்த பாக்களின் தொகுதி.

சமயாசாரியர் சந்தாநாசாரியர் சரித்திர சங்கிரகம் — **விலை அணா 8.**

இது எளியநடையில் சமயகுரவர் நால்வர் சரித்திரங்களையும் சந்தானகுரவர் சரித்திரங்களையும் சுருக்கமாகக் கூறுவது. இதனோடு நால்வர் நான்மணிமாலை யுரையும், சந்தானகுரவர் மாலைகளும் இணைக்கப்பட்டுள்ளன.

நன்னூற்காண்டிகையுரை — **விலை ரூ. 3 12.**

பல காண்டிகையுரை இருந்தும் இதுவே பி. ஏ. பாடபுத்தகமாக நியமிக்கப்பட்டிருப்பது இதன் சிறப்பைக் காட்டுகின்றது.

பாலபாடங்கள்—முதற்பாலபாடம் — **விலை அணா 3.**

இரண்டாம்பாலபாடம் „ 5.

மூன்றாம்பாலபாடம் „ 10.

நான்காம்பாலபாடம் ரூ. 1 12.

தமிழாயுள்ளவர் இந்நான்கு பாலபாட புத்தகங்களையும் படிப்பாராயின் தமிழ்ப்பற்றும் சைவப்பற்றும் ஓங்கிவளரும். நான்காம் பாலபாடம் மிகச்சிறந்தது தமிழ்வசன நடைக்கு ஏணிபோலுள்ளவை இவை யென்பதாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.

ஞாபத்திரம்

அபிராமியந்தாதியுரை — விலை அணா 6.

தேவியை உபாசிப்பவர்களுக்கு ஏற்ற அருமையான நூல். உரை மிகச் சிறந்தது. தத்துவார்த்தங்களை விளக்குவது.

நாவலர் பிரபந்தத்திரட்டு — விலை ரூ. 2.

நாவலர் தமிழ் வசனநடையை முதலில் உண்டாக்கியவராகலின் அவர் எழுதிய பல விஷயங்களை மறைந்துபோகாதபடி காப்பாற்றுவதற்காக இத்திரட்டு அவரது தமையனார் மகனாராகிய த. கைலாசபிள்ளையால் தொகுக்கப்பட்டது.

நீதிநூற்றிரட்டு — விலை ரூ. 1 8.

„ ஆப்பயிண்டு — „ 1 12.

ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, நல்வழி, நன்னெறி, நீதிநெறிவிளக்கம் முதலிய நூல்கள் உரைகளோடு புதிய முறையில் அமைந்துள்ளன.

ஆறுமுகநாவலர் சரித்திரம் — விலை ரூ. 1 4.

எழுபத்தாறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த நாவலர்பெருமான் சைவசமய பரிபாலனத்திற்கும் தமிழ் வளர்ச்சிக்கும் தமது உடல் பொருள் ஆவி மூன்றினையுந் தத்தஞ்செய்து பல அறநிலைகளை ஏற்படுத்தி அழியாப் புகழ்பெற்றிருப்பது யாவரும் அறிந்ததே. இத்தகைய பெருந்தகையாரின் சரித்திரத்தை எல்லா மாணவரும் மற்றவரும் படித்தறியவேண்டியது அவசியமே.

சைவ வினாவிடைகள்—*முதற்பாகம்* — விலை அணா 3.

„ *இரண்டாம் பாகம்* — „ 10.

இவ்விரண்டு சிறு நூல்களும் உருவத்தில் சிறியதாயினும் அவற்றுள் விளக்கப்பட்டுள்ள விஷயங்கள் எவரும் படித்து அறியத்தக்கவை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலனயந்திரசாலை,
நெ. 300, தங்கசாலைவீதி, சென்னை.